பக்கங்கள்: முப்பத்துஇரண்டு + VII

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 22 ஞாயிற்றுக்கிழமை (05.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 191



09

காடுகள் அழிக்கப்பட்டால் இக்கட்டு நிலை



17

மாயைகளுக்குள் சிக்காத போராட்டம்



25

யாழ். மக்கள் நாயணமானவர்கள்

## குடாநாட்டில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை

### ஓரிரு வருடங்களில் ஏற்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். குடாநாட்டில் அடுத்த ஓரிரு வருடங்களில் பெரும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும் என்ற அதிர்ச்சியூட்டும் தகவல் ஆய்வு முடிவில் தெரியவந்துள்ளது. தொடர்ச்சியாக நிலத்தடி நீரைப் பெருமெடுப்பில் உறிஞ்சுவது, மலக் கழிவுகள் வெளியேற்றப்படாமல் நிலத்துக்குள்ளேயே புதைக்கப்படுவது, தொடரும் மணல் அகழ்வுகள் என்பவற்றால் குடாநாட்டில் நிலத்தடி நீர் நச்சுத் தன்மையுடையதாக மாற்றமடைவதும் உவர் நீராக மாற்றம் அடைவதுமே குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படக் காரணமாகும் என்று அந்த ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சின் மத்திய சுற்றாடல் அதிகாரசபை (31 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைக்கல்லாறில் வள்ளம் கவிழ்ந்து ஐவர் மரணம்

மட்டக்களப்பு, ஜூன் 5

மட்டக்களப்பு கோட்டைக் கல்லாறு பகுதியில் நேற்று முன்தினம் மாலை வள்ளம் ஒன்று கவிழ்ந்ததில் ஐந்து பேர் பரிதாபமாக மரணமானார்கள்.

கோட்டைக் கல்லாறு கடற்கரையில் இருந்து கடல் நீரோடை (31 ஆம் பக்கம் பார்க்க)

# போர்க்குற்ற விசாரணை அதிகரிக்கிறது அழுத்தம்

### சனல் - 4 வீடியோவால் மீண்டும் சர்ச்சை

ஜெனீவா, ஜூன் 5

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 17ஆவது கூட்டத் தொடரில் 'சிறிலங்காவின் கொலைக்களம்' என்ற ஆவணப்படம் அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஏற்பாட்டில் காண்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று புதிய அழுத்தங்கள் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளன. மேற்கு நாடுகளின் பிரதிநிதிகளும் மனித உரிமை அமைப்புக்களும் இந்த அழுத்தங்களைக் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

இறுதிப் போரின் போது இடம்பெற்ற மனிதப் பேரவலத்தைப் பற்றி பிரிட்டனின் 'சனல்-4' தொலைக்காட்சி ஒரு மணி நேர ஆவணப்படத்தைத் தயாரித்திருந்தது. அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் இந்த ஆவணப்படம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் காண்பிக்கப்பட்டது. பல நாடுகளின் தூதர்கள் அதனைப் பார்த்துக் கண்ணீர் விட்டுக் கலங்கினர். அதில் இடம்பெற்றிருந்த பல காட்சிகளைத் தம்மால் பார்க்க முடியவில்லை என்று பலர் தெரிவித்தனர்.

ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்ட போது இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டிருந்த பிரதி சட்டமா அதிபர் ஏ.எம்.டி.நவாஸ், அந்தக் காட்சிகள் பொய்யானவை என்று பின்னர் கலந்துரையாடலில் மறுத்தார். அந்த வீடியோ நம்பகத்தன்மையற்றது என்றார்.

ஆனால், கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்த அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆசிய பிராந்திய பணிப்பாளர், போர்க் குற்றங்கள் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கக்கூடிய குற்றங்களில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது என்பதை இந்த ஆவணப்படம் உறுதிப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

''அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களும் மனிதாபிமானச் சட்டங்களும் மீறப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. வைத்தியசாலைகள் போன்ற இடங்கள் மீது மீண்டும் மீண்டும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒரு

(31 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு பக்கம் தாவினார் கூட்டமைப்பு ரெமீடியஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் முடியப்பு ரெமீடியஸ் நேற்று அரச தரப்பின் பக்கம் சேர்ந்து கொண்டார். சபையின் அரச தரப்பு உறுப்பினர்கள் மற்றும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் அமைப்பாளர்கள் நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்ட அவர், ஆளும் (31 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரச்சினை குறித்த அமெ. கொள்கை மாறவில்லை

நியூயோர்க், ஜூன் 5

விடுதலைப் புலிகளின் தலைவர்கள், போரின் இறுதி நேரத்தில் சரணடைய முன் வந்தனர் என்ற தகவல் நம்பகத்தன்மை குறைந்தது என்று தனது தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்த கருத்தை அமெரிக்கா மறுத்துள்ளது. இலங்கை தொடர்பான ஒபாமா அரசின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏதுமில்லை என்றும் அது தெரிவித்துள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற போர் அனுப (31 ஆம் பக்கம் பார்க்க)

### ஈழத்துச் சிதம்பரம் மகா கும்பாபிஷேகம்

காரைநகர் திண்ணபுரம் (ஈழத்துச் சிதம்பரம்) ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமான் தேவஸ்தான பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை அதிகாலை 6.32 மணி முதல் (31 ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியப் பயண சர்ச்சை;

## அமைச்சர் பீரிஸின் பதவி பறிபோகுமா?

கொழும்பு, ஜூன் 5

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அவரது பதவியில் இருந்து விரைவில் வெளியேற்றப்படுவார் என்று கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்கு கடந்த மாதம் அவர் மேற்கொண்டிருந்த பயணம் தோல்வியில் முடிந்ததை அடுத்து ஜனாதிபதி அவர் மீது கடும் சீற்றம் கொண்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

அமைச்சர் பீரிஸின் இந்தியப் பயணத்தின் இறுதியில் இரு நாடுகளும் இணைந்து (03 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் மூடப்பட்டுக் கிடக்கும்

## தொழிற்சாலைகளை மீள இயக்கும் சாத்திய ஆய்வுகளில் செக் குடியரசு

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். மாவட்டத்தில் செயலிழந்து போன தொழிற்சாலைகளை மீள இயக்குவதற்கான சாத்தியங்கள் குறித்து செக்குடியரசின் பிரதி அமைச்சர் தோமஸ்டப் தலைமையிலான குழு நேற்று யாழ்ப்பாணத்தில் ஆய்வு செய்தது.

இலங்கைக்கான செக் நாட்டு மிலோசவ் ஸ்டசெக், பிரதி அமைச்சரின் ஆலோசகர் ரூடோல்வ் ஹிக்கி ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர். இவர்களுடன் இலங்கையின் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

குழுவினர் முதலில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்தனர்.

(03 ஆம் பக்கம் பார்க்க)

## இந்த மாத நடுப்பகுதியில் வருகின்றது இந்தியக்குழு

கொழும்பு, ஜூன் 5

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் தலைமையில் மூவர் கொண்ட இந்தியக் குழு ஒன்று எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கை வரவுள்ளது. வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் நிருபமா ராவ் மற்றும் பாதுகாப்பு அமைச்சுச் செயலர் பிரதீப்குமார் ஆகியோரும் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த மாதம் 16ஆம் திகதி இந்தியா சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் எம்.எஸ்.கிருஷ்ணா ஆகியோ (03 ஆம் பக்கம் பார்க்க)

நவீன் செரமிக்
Naveen Ceramic
#212, பலாலி வீதி யாழ்ப்பாணம்
021 222 0033 - 021 222 0044
Metro Engineering (Pvt) Ltd



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான கால நிலை நாள் முழுவதும் நிலவும்.

# போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பினர் யாழ். கோட்டைக்கு அருகில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய உதவிகளை விரைந்து வழங்க வேண்டும் என்று கோரி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று யாழ்ப்பாணம், கோட்டை முனீஸ்வரன் கோயில் முன்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் அமைப்பு என்ற இந்த அமைப்பு அதன் பிரதம செயற்பாட்டாளர் வி.சகாதேவன் தலைமையில் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. அந்த அமைப்பின் எட்டு உறுப்பினர்களும் இதில் பங்கேற்கின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட 'மக்களுக்காக குரல் கொடுக்க வாருங்கள்' என்ற பதாகையைத் தாங்கியவாறு இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது.




போரினால் இழந்த உயிர்களைத் தவிர அனைத்தையும் பெற்றுத் தருவோம் என்று அரசு அடிக்கடி கூறிவருகிறது. எனினும் இதுவரை எமது மக்கள் இழந்த எதனையும் பெற்றுக்கொண்டதாக நடை முறையில் இல்லை. இவ்வாறு தெரிவித்தே அந்த அமைப்பு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தி, அவர்களின் தேவைகளை முன்னிலைப்படுத்தி தமிழ்த் தலைவர்களுக்கும் ஐக்கிய நாடுகள் அவைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் புலம்பெயர் உறவுகளுக்கும் தமிழக அரசியல் தலைவர்களுக்கும் தமிழகத்தின் புதிய முதலமைச்சருக்கும் இலங்கை அரசியல் தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் சில கோரிக்கைகளை முன் வைத்துள்ளோம். இவ்வாறு அந்த அமைப்பு தெரிவிக்கிறது.

எமது அமைப்பு வவுனியாவில் முதன்முறையாக 2009 ஆம் ஆண்டின் இறுதியில் நடத்திய கூட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் மல்க கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். இதில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மக்கள் இழந்த அனைத்தையும் சில மாதங்களில் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். ஆனால் அவர் இதுவரை மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்று அமைப்பின் பிரதம செயற்பாட்டாளர் குறிப்பிட்டார். (ஒ-14)

# நயினாதீவில் ஒதுங்கிய இந்திய மீனவர்கள்; விடுவிப்பதற்கு இரு தரப்புப் பேச்சுக்கள்

கொழும்பு, ஜூன் 5

நயினாதீவில் நேற்றுமுன் தினம் கரை ஒதுங்கிய நான்கு இந்திய மீனவர்களையும் விடுவிக்கப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

கடும் காற்றுக் காரணமாகப் படகு கவிழ்ந்ததை அடுத்து, படகின் பாகங்களின் உதவியுடன் நயினாதீவுக் கரையை வந்து சேர்ந்த நான்கு மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் விடுதலை தொடர்பாக இந்திய - இலங்கைத் தூதரக மட்டத்தில் நேற்றுப் பேச்சுப் பரிமாறல்கள் இடம்பெற்றன.

**சட்டமா அதிபரின் பதிலுக்காகக் காத்திருப்பு**

இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்குக் காத்திருப்பதாகவும் அறிவுறுத்தல் கிடைத்தவுடன் ஓரிரு தினங்களில் அவர்கள் விடுவிக்கப்படுவர் என்றும் இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-2)



கோட்டைக்கல்லாறில் வள்ளம் கவிழ்ந்து பலியான ஐவரின் சடலங்கள் மரண விசாரணைக்காக வாகனத்தில்...

## போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து

# யாழ். நகர் வங்கியில் வேறு நபரின் பணத்தை எடுக்க முயன்ற வவுனியாவாசி சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூன் 5

போலி ஆவணங்களைக் காட்டி யாழ். நகரிலுள்ள வங்கி ஒன்றிலிருந்து பதினொரு இலட்சம் ரூபா பணத்தை எடுத்துச் செல்ல முற்பட்ட வவுனியா வாசி ஒருவரை யாழ். குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரை யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 10 ஆம் திகதிவரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் வவுனியா, பூந்தோட்டம், அண்ணா நகரைச் சேர்ந்த சிவஞானம் முகுந்தன் என்பவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கண்டியில் உள்ள குறித்த வங்கிக் கிளையில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் சேமிப்புக் கணக்கு வைத்திருந்தார். அதில் பதினொரு இலட்சம் ரூபா பணம் இருப்பதை அறிந்து கொண்ட குறிப்பிட்ட நபர் போலி அடையாள அட்டை தயாரித்து வேறு ஆவணங்களுடன் யாழ். நகரிலுள்ள குறிப்பிட்ட வங்கியின் கிளைக்குச் சென்றுள்ளார். அங்கு பணம் பெறும் முயற்சியில் பணவரவுத் துண்டு (சிலிப்) எழுதிக் கொடுத்துள்ளார். அதில் காணப்பட்ட கையெழுத்தில் சந்தேகம் கொண்ட வங்கி அலுவலர்கள், அதுபற்றி யாழ். குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

வங்கிக் கிளைக்கு விரைந்த பொலிஸார் பிரஸ்தாப நபரைக் கைது செய்து விசாரணை செய்தனர். அதன்போதே அவர் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து பணம் எடுக்க முயற்சித்தமை தெரியவந்தது. (ஒ-4)

# புதிய வடிவில் தனியார் ஓய்வூதிய சட்டமூலம்

கொழும்பு,ஜூன் 5

உத்தேச தனியார் ஓய்வூதியச் சட்ட மூலத்தை சில திருத்தங்களுடன் மீளவும் நாடாளுமன்றத்தில் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது.

இலங்கையின் கடன்களைச் சமாளிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையை எதிர்கொள்வதற்காக அரசு இந்த முடிவை எடுத் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வருமானம் ஈட்டக்கூடிய வகையில் தனியாருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிபந்தனை விதித்தது.

இந்த நிபந்தனையை நிறைவேற்றும் நோக்குடன் இலங்கை அரசு தனியார் ஓய்வூதியச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது.

அந்த சட்டமூலத்துக்கு எதிராக கடும் எதிர்ப்புக் கிளம்பியதையடுத்து அதனை அரசு வாபஸ் பெற்றிருந்தது.

எனினும், சில திருத்தங்களுடன் அச்சட்ட மூலத்தை மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு முடிவு செய்துள்ளது என்று நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-ஐ)

# ஈழத்துச் சிதம்பர கும்பாபிஷேகத்துக்கு தமிழகத்தில் இருந்து சிவாச்சாரியார்கள்

காரைநகர், ஜூன் 5

சரித்திரப் பிரசித்திபெற்ற காரைநகர் ஈழத்துச் சிதம்பர மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 6.32 மணிமுதல் இடம்பெற உள்ளது. இந்தக் கும்பாபிஷேக நிகழ்வுக்காக தமிழகத்தில் இருந்து சிவாச்சாரியார்கள் வருகைதந்துள்ளனர்.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் கடந்த மாதம் 20 ஆம் திகதி முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

புணராவர்த்தனசம்புரோட்ஷண கிரியத் கிரிம்சத் (33) குண்டபட்ச உத்தம மகாயாக பிரதிஷ்டா கும்பாபிஷேகமாக இடம்பெறும் இந்தக் குடமுழுக்கு விழாவில் சர்வபோதகாச்சாரியராக இந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள காஞ்சிபுரம் ஏகாம்பர நாதேஸ்வரர் தேவஸ்தானம், ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி தேவஸ்தான பரமேஸ்வர பரம்பரை ஸ்தானிகர் சிவஸ்ரீ சாலவ. கே. ராயேப்பா சிவாச்சாரியார் கலந்துகொள்கிறார்.

சிதம்பர நடராஜர் கோயில் தீட்சிதர் சிவஸ்ரீ எஸ். கனகசபாபதி தீட்சிதர், பிரம்மஸ்ரீ சந்திரமௌலி கணபாடிகள் காஞ்சிபுரம் சச்சுவேஸ்வர் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சுகச்சபால சிவாச்சாரியார் ஆகியோர் கும்பாபிஷேக சர்வசாதக பிரயோகரத்னாவாகவும் கலந்துகொள்கின்றனர்.

சிவஸ்ரீக.ச.சோமாஸ்கந்தக்குருக்கள் தலைமையில் நடைபெறும் மகா கும்பாபிஷேகத்தில் நாளை திங்கட்கிழமை அதிகாலை 3 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி 6.32 மணிக்கு ஸ்தூபி அபிஷேகமும்தொடர்ந்து மஹா கும்பாபிஷேகமும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் சிவாச்சாரியார்கள் நல்லை ஆதீனமுதல்வர் உள்ளிட்ட சமயப் பிரமுகர்களின் ஆசிஉரை, வாழ்த்துரை என்பன இடம்பெறும்.

மாலை திருக்கல்யாணம் இடம்பெற்று பின் பஞ்சமூர்த்திகளின் திருவீதி உலா இடம் பெறும். தொடர்ந்து 25 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும். தினமும் முற்பகல் 10 மணி தொடக்கம் விசேட அபிசேக பூசையும் சுவாமி திருவீதி உலா வருதலும் இடம்பெறும்.

(ஐ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் அராஜகத்துக்குப் பலியானவரின் உடல் இராணுவத்தினரால் பலவந்தமாக அடக்கம்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது உயிரிழந்த ரோஷன் சாணக்கவின் இறுதிச் சடங்குகள் நேற்று ஏற்கனவே குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே இடம் பெறும் வகையில், அவரது பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து மினுவாங்கொடைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணிக்கு அவரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. குடும்பத்தினரும் அதற்கேற்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

ஆனால் அதற்கு முன்னரே பூதவுடல் வைக்கப்பட்டிருந்த அவரின் வீட்டுக்குச் சென்ற இராணுவத்தினர், குடும்ப அங்கத்தவர்களின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அவரின் பூதவுடலை முன்கூட்டியே நல்லடக்கம் செய்வதற்காக எடுத்துச் சென்றனர்.

இவருக்கு இறுதி மரியாதை செலுத்த சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் பயணம் செய்த பஸ்களுக்கும் இடை யூறுகள் ஏற்படுத்தப்பட்டதாக தெரியவருகின்றது.

# இலங்கைச் சிறையில் பிரிட்டிஷ் பிரஜை

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட பிரிட்டிஷ் குடியுரிமை பெற்ற நபர் ஒருவர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் கைதாகி இதுவரை சிறையில் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரிட்டிஷ் பிரஜை யாழ்ப்பாணத்தைப் சொந்த இடமாகக் கொண்ட 40 வயதான விஸ்வலிங்கம் கோபிதாஸ் என்ற குடும்பஸ் தவர் ஆவார். இவர் கடந்த 2007ஆம் ஆண்டில் கொழும்பு வந்திருந்தார்.

அப்போது, இலங்கை காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, இதுவரை எந்தவித நீதிமன்ற விசாரணைகளும் இல்லாமல் சிறையில் இருந்து வருகிறார் என்று Fair Trials International என்ற நியாயமான விசாரணைகளுக்கான சர்வதேச அமைப்பு கூறியிருக்கிறது.

இலங்கை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கடந்த 2007 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான அவரது நிலைமை குறித்து குடும்பத்தினரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர், அங்கிருந்து இடம்பெயர்ந்து தற்போது பிரிட்டிஷ் பிரஜா உரிமை பெற்று தனது மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் வசித்து வந்தார்.

இலங்கை வந்தபோதே இவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார். அன்று முதல் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

இவரது நிலைமை குறித்து பல தரப்பிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவரது சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கோபிதாஸின் விவகாரம் தமது கவனத்துக்கு வந்திருப்பதாகக் கூறியிருக்கும் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகம், அவருக்கு தூதரக மட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த விவகாரம் குறித்து தாம் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தூதரக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## இந்த மாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இரு நாடுகளும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தன. இதன் பின்னணியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து இந்தியக்குழு தனது பயணத்தின் போது ஆராயும் என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலான வழமையான பயணமே இது என்று இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

இந்தியாவுக்கு உறுதியளிக்கப்பட்ட ரயில்வே, வீடமைப்பு, சம்பூர் அனல் மின் நிலையம் போன்ற திட்டங்களில் உள்ள தேக்க நிலையை நீக்குவது தொடர்பாகவும் இந்தியக்குழு ஆராயும்.

இந்தப் பயணத்தின்போது இலங்கையும் - இந்தியாவும் இணங்கிக் கொண்ட விடயங்களைச் செயற்படுத்துவது குறித்து இரு தரப்பினரும் விரிவாக ஆராயவிருக்கின்றனர் என்றும் -

இரு நாடுகளுக்கும் இடையில் அமைக்கப்பட்ட ஒத்துழைப்புக் குழுக்கள் குறிப்பட்ட கால இடைவெளிக்குள் சந்திப்பது என்ற முடிவுக்கு அமைய இந்தியக் குழு இலங்கை செல்கின்றது என்றும் - இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்றுத் தெரிவித்தது. (உ-ஐ)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்ட கூட்டறிக்கையில், 'நேர்மையான நல்லிணக்கத் துக்கு இலங்கை அரசு தயார்' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதுவரை எந்த ஓர் அரச அறிக்கையிலும் 'நேர்மையான நல்லிணக்கம்' என்ற பதம் பாவிக்கவில்லை என்று சுட்டிக் காட்டும் ராஜதந்திர வட்டாரங்கள், அப்படி ஒரு பதம் பயன்படுத்தப்பட பீரிஸ் எப்படி அனுமதித்தார் என்று ஜனாதிபதி ஏனைய அமைச்சர்களிடம் சீறினார் என்கின்றன.

அமைச்சர் பீரிஸ் தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ளார். அவர் நாடு திரும்பியதும், வெளிவிவகார அமைச்சர் பதவியிலிருந்து நீக்க ஜனாதிபதி முடிவு செய்திருக்கிறார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க புதிய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-ஐ)

## தொழிற்சாலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் உள்ள நிலப் பயன்பாடு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக அப்போது கலந்துரை யாடப்பட்டது.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரையும் செக் குழுவினர் சந்தித்தனர். அரைமணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பின் போது, யாழ். மாவட்டத்தில் செயலிழந்துள்ள தொழிற்சாலைகளை மீள இயக்குவதுக்கான வாய்ப்புக் குறித்து ஆராயப்பட்டது. புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல், மாவட்டத்தின் மீள் குடியமர்வு நிலைமைகள், அபிவிருத்தி என்பன குறித்தும் வந்திருந்த குழுவினரால் கலந்துரையாடப்பட்டது.

''செக் குடியரசு அமைச்சரும் வந்திருந்தவர்களும் மாவட்டத்தில் தொழிற்சாலைகளை மீளவும் இயங்கச் செய்வதுக்கான சாத்தியங்கள் குறித்தே அதிக ஆர்வம் காட்டினர்'' என்று அரச அதியர் கூறினார்.

வீதி, மின்சாரம், நீர் விநியோகம் ஆகிய துறைகளில் அபிவிருத்திப் பணிகள் இன்னும் முழுமை அடையாததால் அவற்றை மேம்படுத்துவதற்கான உதவிகள் அவசர தேவையாக இருக்கின்றன என்று அரச அதிபர், குழுவினரிடம் வலியுறுத்தியுள்ளார்.



# சந்தியடிச் சோமு

## தாவத் தயாராயிந்நார்

''காயமே இது பொய்யடா. வெறும் காற்றடைத்த பையடா.''
''மாயனார் குயவன் செய்த மண்ணு பாண்ட ஓடடா!
உழுத்த நரம்பும் பழுத்த தோலும் இழுத்துக் கட்டின கூடடா''

என்னடா இது எண்டே கேக்கிறியள்? கொட்டில்ல சீனியர் சிற்றிசன் ஒருத்தர் பாடின பாட்டுத்தான் இது பாருங்கோ. சித்தர் பாட்டு எப்பவும் சிறப்புத்தானே..!

தத்துவங்கள், நியாயங்கள் எல்லாம் கொட்டில்லதான் நிறைய வருகுது. கொஞ்சம் உள்ள போனப்பறகுதான் உசாரா எல்லாரும் கதைக்கினமே அது ஏன்?

உந்த உளவியல், உளவியல் எண்டு பிழைப்பு நடத்துறவையளக் கேக்க வேணும் எண்டு நினைக்கிறனான்; ஆனால் கொட்டிலால வெளிக்கிட்டாப் பிறகு அது மறந்து போகும்.

அப்பிடியும் ஒருக்கா, உளவியல், சைக்கோ சோசல் எண்டு திரியிற ஒரு பெடியிட்ட அதப் பற்றி நான் கேக்கப் போக, அவன் என்னை வைச்சு அறு அறென்று அறுத்துப்போட்டான். போதாக்குறைக்கு என்னை ஒரு கேஸா எடுக்கப்போறன் எண்டும் சொன்னான். பலாப்பால போல அங்க தொட்டு இஞ்ச தொட்டு அவன் இழுத்த உளவியல் இழுவையில அவனிட்ட கேட்க வந்தது மறந்து, ஆள விட்டாக் காணும் எண்ட நிலைமை வந்திட்டுது.

சந்திச் சமாவும் கொட்டில் உளறலும் தான் மனப்பாரங்களை இறக்கி வைச்சு இத்தின வருசமா நாங்கள் உலாவித் திரிய உதவுது. அதை விட்டுட்டிட்டு அவனவன் பிழைப்புக்காக இறக்கி விக்கிற வியாக்கியானங்கள் எல்லாம் விழலுக்கிறைக்கிற வில்லங்கங்கள்தான் பாருங்கோ. ஊரோடையும் உறவோடையும் கிடந்து மனப்பாரம் இறக்கிற வித்தைகளுக்கு நிகரா உதுகள் ஒண்டும் வராது .

சந்தியில உந்த விசாரங்களுக்கு இடையில, நடேசண்ணை கேட்டார், ''எதிர்க் குரலுகளை நசுக்கிறதுக்கு ஆளும் தரப்பு கரணம் போடுறதுக்கு பதிலா எதிர்க் கட்சியில ஒருத்தர் எழுத்து மூலமா சவடால் விட்டிருக்கிறாராம் தெரியுமோ'' எண்டு.

''யாரண்ணை அந்தாள்?'' எண்டு நான் கேட்டன்.

''அதுவோ'' எண்டு போட்டு, அந்தாள் சொல்லிச்சு ''மாநகர சபை கூட்டமைப்பு உறுப்பினர்தான்'' எண்டு. ''அப்படியே..'' எண்டு நக்கலாக் கேட்ட கதிரண்ணை, சொன்னார் உதென்ன ஒரே 'ரெமடியா'க் கிடக்குது எண்டு. அவர் பழைய எஸ்.எஸ்.எல்.சி. அதால நல்லா இங்கிலீசு தெரியும் அந்தாளுக்கு. இதைக்கேட்ட பென்சனியர் சொன்னார், ''அதொண்டுமில்லை கட்சி தாவ ரெடியாயிட்டார். வேறஒண்டும் இல்லை'' எண்டு.

அப்ப நான் சொன்னன், ''நடேசண்ணை நீ விசயமில்லாமல் கதையத் தொடங்கியிருக்க மாட்டாய், முழுசாச் சொல்லு'' எண்டு.

''மாநகர சபை மெம்பராயிருக்கிற இந்தப் பிரக்கராசி. ஒழுங்கா கூட்டத்துக்கும் போறதில்லையாம். கேட்டா கோட்டில கேசிருக்கெண்டு கதைவிடுவாராம்'' என்றார் பக்கத்தில குந்தியிருந்த விதானையார். ''நான் மாதாந்தக் கூட்டத்துக்கு கட்டாயம் போக வேணுமெண்டு இல்லைத் தானே. அதைப்பற்றி உந்தப் பேப்பர்காரர் என்னத் தை எழுதுறது எண்டும் பல இடங்களில பப்ளிக்காவும் சீறினாராம்'' என்றார் கதிரண்ணை.

இதைக் கேட்ட விதானையார் கொஞ்சம் கோவமா, ''சனத்திட்ட வோட்டுக் கேட்டு வரேக்க, நீங்கள் தெரிவு செய்து விட்டாலும் நான் மீட்டிங்குகளுக்குப் போக மாட்டன் எண்டு சொல்லியிருக்க வேண்டியது தானே'' எண்டார் வேகமா.

''அப்ப வோட்டுப் போட்டு அனுப்பின சனம் எல்லாம் முட்டாள், சபைக் கூட்டங்களுக்குப் போகாமல் தங்கட சொந்த அலுவலுகளப் பாத்துக் கொண்டு அரசியலும் நடத்தின மாதிரியும் காட்டிக் கொள்ளலாம் எண்டு நினைச்சுக் கொண்டினமோ'' எண்டு நானும் கொஞ்சம் ஆவேசப் பட்டிட்டன். பிறகுதான் யோசிச்சன், ஆரும் உந்தக் கதையப் போய் மகளிட்டை சொன்னால் அவள் பிறகு இந்தப் பக்கமும் தலைவச்சுப் படுக்க விடமாட்டாள் எண்டு. அதால பிறகு நான் கப்சிப்.

நடேசண்ணை சொன்னார், ''எதிர்கருத்து விமர்சனம் எதையும் எதிர் கொள்ளத் தயாரா இல்லாதவர். சர்வாதிகார எதேச்சதிகாரக் கூட்டத்தோட தோள் குடுக்கப் போறார் எண்டதுக்கு கட்டியம் கூறுறார் போல'' எண்டார்.

''அமெரிக்காவில இருக்கிறது போல, தங்களுக்கு வேண்டியபடி நடக்கேல்லை எண்டால் பதவியில இருந்து திருப்பிக் கூப்பிடுற பவரை சனத்துக்குக் குடுக்க வேணும். உரிய காலத்துக்கு முன்னம் தாங்கள் அனுப்பனாக்களை திருப்பிக் கூப்பிடுற அதிகாரம் இருந்தா குரங்குகள் மாதிரி ஒருகட்சியிலயிருந்து தெரிவாகி இன்னொன்றுக்கு தாவிற விளையாட்டை யாராச்சும் இஞ்ச செய்யத் துணிவினமோ'' எண்டு மனிசன் ஒரே முழுக்கம்.


நான் எப்பவுமே அந்த மனிசனை படிச்சாள் எண்டுதான் சொல்லுறநான். ஏனென்டால் அந்தாள் சொல்லுறதுகள் ஒண்டும் எனக்கு விளங்கிறேல்ல. இப்பவும் அப்பிடித்தான். அனுப்புறது திருப்பிக் கூப்பிடிறது எண்டெல்லாம் மனிசன் சொல்லுது. எங்கட அரசியல்ல இதெல்லாம் 7 ஜென்மத்துக்குப் பிறகென்டாலும் நடக்கும் எண்டு நீங்கள் நினைக்கிறீங்களே.

உப்பிடி இல்லாத பொல்லாததுகளக் கதைக்கிறதாலதான் நான் [illegible] படிச்ச மனிசன் என்டுறநான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தொம்மைப்பிள்ளை கீதபொன்கலன்



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தொம்மைப்பிள்ளை கீதபொன் கலன் 30.05.2011 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தொம்மைப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பேதுறுப்பிள்ளை - மேரிஎல னம்மா (வேவி) தம்பதியரின் அன்பு மருமகனும், இருதயமலர் (பபா) அவர்களின் அன்புக் கணவரும், இருதயராஜ் (பழம் -இத்தாலி) லூட்ஸ் மரியகீதா (கீதா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரனிஸ் அருள்ராஜ் (சுகந்தன்-கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் கயித்தாம்பிள்ளை, திருச்செல்வம், காலஞ்சென்ற சவினம்மா மற்றும் யேசுரட்ணம், பொன்றோஸ், ராசசிங்கம், ராசம் (கனடா) அருள்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அருமைறாணி, வேவிநாயகம், வேவிரட்ணம் (கனடா) வேவிறாஜன் (கனடா), வேவிதாஸன் (கனடா), விஜி, க.நேசம், தி.நேசம், காலஞ்சென்ற செல்வர் மற்றும் ஜே.யசிந்தா, ஜே.புனிதம், அருமை(கனடா), நவம்(இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.06.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப் பட்டு, புனித தோ மையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக் கப்பட்டு, புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோமையார் வீதி,
மாதகல். (4893)

தொ.பே.இல.
0771123097

த்கவல்:
குடும்பத்தினர்.

---

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும்
London - UK ஐ தலைமையகமாகக் கொண்டு இயங்கும்
**London Metropolitan College இல்**

## உடனடி வேலைவாய்ப்புகள்

1. நிர்வாக முகாமையாளர்
   ★இருவருட கால வேலை செய்த அனுபவம்
   ★வயதெல்லை 22- 30
   ★மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல்

கடமைகளும் பொறுப்புகளும்
   ★ நிர்வாகத்தை செயற்பொறுப்புடன் நிர்வகிக்கும் ஆற்றல்
   ★ ஒருங்கிணைந்து வேலை செய்யக்கூடியவராக இருத்தல்

2. ஆங்கில விரிவுரையாளர்
   ★ IELTS/Advanced English/ General English Cambridge தரம் கற்பித்த முன்னனுபவங்கள் கட்டாயமாக இருத்தல் வேண்டும்.
   ★ வயதெல்லை கிடையாது

3. கணினி விரிவுரையாளர்
   ★ கீழ்க் கண்ட பாடநெறிகளை கற்பிக்கக்கூடியவர்கள் தேவை
      a. Programming Languages Visual Basic, VB Net, C, C++, Java
      b. Multimedia Applications
      c. Accounting Packages
      d. Hardware and Networking
   ★ வயதெல்லை 22- 28
   ★ ஆங்கில மொழித்தேர்ச்சி

4. வரவேற்பாளர் **Receptionist (Female)**
   ★ க.பொ.த. உயர்தர தரச் சித்தி
   ★ வயதெல்லை 22-28
   ★ தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சி
   ★ கணினி அறிவு அவசியம்

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்: Exponet Overseas Consultants
*(கிளைக்காரியாலயம் - யாழ்ப்பாணம்)*
102 - 2/2, நாவலர் வீதி, (Luxman Plaza Building), யாழ்ப்பாணம்.

06.06.2011 திங்கள் - 08.06.2011 புதன் வரை
நேரம்: மு.ப. 10 - பி.ப. 2

**தொடர்புகளுக்கு: 021 7538395**

தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்கள் கல்வித் தரச் சான்றிதழ்களுடனும் தங்களின் புகைப்படம் அடங்கிய சுயவிவரக்கோவையுடன் நேரடியாக சமுகமளிக்கவும்.

(சி-467) (48,27)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்:
18.08.1958



விண்ணில்:
07.05.2011

## அமரர்
## கிருஷ்ணபிள்ளை
## மகேஸ்வரன்
## (ராசா)

**(முன்னாள் காப்பாளர், க.தெ.ப.நோ.கூ.ச.களஞ்சியம்)**

கடந்த 07.05.2011 இல் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறிய உறவுகளுக்கும், தொலைபேசி ஊடாகத் துயரில் பங்குகொண்ட அன்பர்களுக்கும், துண்டுப் பிரசுரம் வெளியிட்ட நண்பர்கள் மற்றும் உறவுகளுக்கும் மின்னஞ்சல் மூலம் ஆறுதல் செய்தி தெரிவித்தவர்களுக்கும் மற்றும் வாகன உதவி புரிந்தவர்களுக்கும் நோயுற்றிருந்த வேளைகளிலும் வைத்தியசாலையிலும் பல வழிகளிலும் உதவியும், ஒத்துழைப்பும் நல்கியோருக்கும் இன்னும் பல வழிகளில் உதவிகளும் ஆதரவும் வழங்கியோருக்கும் மரண நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (06.06.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

சாந்தகம்,
இல.69, ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

(39) (சி/473)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வன்னியுடன் சார்ந்து உயர்ந்தெழும் கேள்வி!

வன்னிப் பிரதேசத்தில் போர்முடிவுற்று இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன, கடந்துவிட்டன. அங்கு வாழ்ந்த மக்கள் மீளக்குடியமரத் தொடங்கி ஒன்றரை வருடங்களாகின்றன. மிதி வெடிகள் மீட்கப்படுவதால், அதற்கான பணி முற்றாக நிறைவேறாததால் இன்னும் பல பிரதேசங்களில், பகுதிகளில் மீளக்குடியமர்வு முற்றுப்பெறவில்லை. குறிப்பிட்ட இடங்களைச் சொந்தப் பகுதிகளாகக் கொண்டவர்கள் இன்னமும் தமது உறவினர்கள் நண்பர்களுடன் இடம்பெயர்ந்து சென்ற வெளி மாவட்டங்களிலேயே பல கஷ்டங்களுடன் வசித்து வருகின்றனர்.

மெனிக் பாம் போன்ற முகாம்களில் வசித்தவர்கள் விடுவிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டபோதிலும் அது இன்னமும் நடந்தேறவில்லை. பதினாறாயிரம் பேர் இன்னமும் அங்கே கிடந்து ஒருவகைச் சிறைவாழ்வு நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்! மீளக்குடியமர்வின் நிலை இவ்வாறிருக்க, இதுவரை மீளக்குடியேற்றப்பட்டவர்களின் கதியோ பெரும்பாடாகிவிட்டது.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் அவர்களுக்குத் தேவைப்படும் பல பிரதான வசதிகள், வளங்கள் கைக்கு எட்டுவதாக இல்லை. பல வருடங்களாக அவர்கள் அனுபவித்த வாழ்க்கை வளங்கள் கைக்கெட்டும் நிலை தவறிப்போய்விட்டது; பறிக்கப்பட்டுவிட்டது. சுற்றிவளைக்காமல் நேரடியாகச் சொல்வதானால், அவை மறுக்கப்படுகின்றன. மக்களுக்குரிய சேவை நிலையங்களும், விவசாய நிலங்களும் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ளன என்பதே சுருக்கம்.

வைத்தியசாலை வளாகங்கள், பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்கள், நீர்வளங்கள் என்பனவற்றை இங்கே தொட்டுக்காட்டலாம் - உதாரணங்களாக.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளில் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்களை மாணவர்கள் தமது தேவைக்குப் பயன்படுத்த முடியவில்லை. பொது விளையாட்டு மைதானங்கள் பலவற்றுக்கும் அதே கதி தான். பாடசாலை மாணவர்களுக்குரிய விளையாட்டு மைதானங்களை படையினர் ''ஆக்கிரமித்து'' தமது தேவைகளை நிறைவேற்றிவருகின்றனர். அதே போன்று பல பொது விளையாட்டு மைதானங்களையும் சீருடைக்காரர்களே தமக்கெனக் ''கையகப்படுத்தி'' உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் எண்ணிக்கை சராசரியாக மிக உயர்ந்தே காணப்படுகிறது. அதனால் பல்வேறு வகையான விளையாட்டுகளில் பல மட்டங்களிலும் விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற ஆரம்பித்துள்ளன. ஆனால் அவற்றுக்கான பயிற்சிகளையும் போட்டிகளையும் உரிய வசதிகளுடனும் ஒழுங்கு முறையாகவும் பெறமுடியவில்லை, நடத்த இயலவில்லை. காரணம் அவை இப்போது படையினரின் விளையாட்டுக் களங்களாகிவிட்டன!

விளையாட்டு மைதானங்களுக்கு மட்டுமே அந்தக் கதி என்று நினைத்துவிடாதீர்கள். வைத்தியசாலை, பாடசாலைகள் என்பனவும் படையினரின் முகாம்களாக, தங்குமிடங்களாக இப்போதும் மாற்றப்பட்டே உள்ளன. உதாரணம்: பூநகரியின் வைத்தியசாலை இப்போதும் இராணுவத்தினரின் முகாமாகவே உள்ளது; படையினர் அங்கு நிரந்தரமாக முகாமிட்டுள்ளனர். அதனால் அங்குள்ள ஆதார வைத்தியசாலை, வசதிகள் நலிந்த ஒரு கட்டத்தில் இயங்குகிறது.

பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயமும் இப்போது படையினரின் முகாமாகவே பயன்படுத்தப்படுகிறது. அந்தப் பிரதேசத்துக்குரிய நல்ல தண்ணீர்க் கிணறும் அப் பாடசாலை வளவிலேயே உள்ளது. அதனால் அப்பிரதேச மக்கள் தமது குடிதண்ணீர்த் தேவையை நிறைவேற்ற முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலைக் கட்டடத்தையும் பாடசாலைப் பகுதியையும் மக்கள் தேவைக்குத் திருப்பித் தருமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் எவையும் சாதகமாகப் பரிசீலிக்கப்படவில்லை.

கிளிநொச்சிமாவட்டத்தின் இன்னொரு பிரதேசமான அக்கராயன்குளம் பகுதியில் உள்ள 250 ஏக்கர் கரும்புத் தோட்ட நிலத்தை - இருபத்தைந்து தனியாருக்குச் சொந்தமான இந்தப் பிரதேசத்தைப் - படைத்தரப்பு தனது தேவைக்குக் கையகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

பலாலியிலும் இயக்கச்சியிலும் உள்ள படையினரில் ஒரு பகுதியினரை அக்கராயன்குளம் பிரதேசத்துக்கு மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிட்ட விசாலமான கரும்புத் தோட்ட நிலம் தமக்குத் தேவை என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அங்கே ஏனைய பயிர்களைத்தாமே விளைவிக்க கரும்புத் தோட்டத்தை பயன்படுத்தப் படையினர் திட்டமிட்டுள்ளதாகவும் மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.

போர் முடிவடைந்துவிட்டது; மிகுந்த படை வலுவாலும், திறனாற்றலாலும் பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோம் என்று சர்வதேசத்துக்கு பறைசாற்றிவரும் - போதாக்குறைக்கு உலக நாடுகளுடன் போர் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் அளவுக்குப் பலமடைந்துள்ள - இன்றைய அரசு, நாட்டின் பல பகுதிகளிலும் 146 படை முகாம்களை அமைக்கத் திட்டமிட்டுவிட்டது. மிகக் குறிப்பாக தமிழ்ப் பகுதிகளிலேயே அவற்றில் பெரும்பாலான முகாம்கள் அமையும் என்றும் நம்பப்படுகிறது.

அந்தத் திட்டத்தின் கீழ், வன்னி மாவட்டத்தில் மிகப்பெரும் எண்ணிக்கையான படை முகாம்கள் அமையும் என எதிர்பார்க்கலாம். அந்தப் பிரதேச மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும், வாழ்வியல் தேவைகளுக்கும் இரண்டாம் இடமும் படையினரின் தேவைகளுக்கு பிரத்தியேகமான முன்னுரிமை நிலையும் வழங்கும் திட்டம் இப்போதே பல வடிவங்களில் ஆரம்பமாகிவிட்டது என்று கொள்ளலாம்.

தேசிய பாதுகாப்பு என்ற அங்கீகரிக்கப்பட்ட முத்திரையுடன், மக்களின் ஜனநாயக உரிமைகள் துவம்சம் செய்யப்படுவதற்கான அத்திபாரம் வன்னியில் ஆரம்பமாகிறதா என்ற பென்னம்பெரிய வினா ஒன்று [illegible] எழுந்து நிற்கிறது!

## வேட்பாளர்களுக்கு இலக்கம் வழங்கும் நடவடிக்கை அடுத்த வாரம் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூன் 5

தேர்தல் நடைபெறவுள்ள 67 உள்ளூராட்சிச் சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் வழங்கும் நடவடிக்கை அடுத்த வாரம் அளவில் பூர்த்தியடைய உள்ளது என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி.சுமணசிரி தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய ஒத்தி வைக்கப்பட்ட மற்றும் கண்ணிவெடி காரணங்களால் ஒத்திவைக்கப்பட்ட 67 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை இந்த மாதம் 23ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல்கள் செயலகம் கடந்த வாரம் தீர்மானித்தது.

கண்ணிவெடி காணப்படும் பகுதிகளில் 19 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களும், நீதிமன்ற உத்தரவின் பேரில் 48 உள்ளூராட்சி சபைத் தேர்தல்களும் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை தேர்தல் நடைபெறும் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கான இலக்கங்களை வழங்கும் நடவடிக்கைகள் 50 வீதம் பூர்த்தி அடைந்துள்ளன. இந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தி உள்ளனர் எனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

அத்துடன், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளின் போட்டியாளர்களுக்கான இலக்கங்கள் வழங்கும் நடவடிக்கைகள் நிறைவுபெற்றதன் பின்னரே தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-சி)

## வீடுகள், வீதிகளைத் துப்புரவு செய்ய வலி.வடக்கு மக்களுக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 5

வலி.வடக்கில் 2 ஆம் கட்டமாக மீளக்குடியர்வு செய்யப்பட்ட இடங்களில் மக்கள் தமது வீடுகளில் உள்ள பற்றைகளைத் துப்புரவு செய்யவேண்டும் வீதிகளை துப்புரவு செய்வதற்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின்கீழ் 24.371 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி 13 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்வு செய்யப்பட்டனர். இந்தப் பகுதிகளில் வீடுகளில் உள்ள பற்றைகளைத் துப்புரவு செய்வதற்கும் வீதிகளிலுள்ள மரங்களை வெட்டி வீதிகளை துப்புரவு செய்வதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதிகள் யாவும் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கே கையளிக்கப்பட்டுள்ளன அவற்றினூடாகவே இந்த நிதிகள் மக்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தெல்லிப்பழை கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 4.962 மில்லியன் ரூபாவும் குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 4.982 மில்லியன் ரூபாவும் கீரிமலை கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு 2.075 மில்லின் ரூபாவும் வித்தக புரம் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு 3.247 மில்லியன் ரூபாவும் மாவிட்ட புரம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 4.976 மில்லியன் ரூபாவும் பன்னாலை கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 4.128 மில்லின் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(த-15)

## இவ்வாண்டு வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் ஆரம்பம்

### வலி.வடக்கிலும் நடக்கும்

யாழ்ப்பாணம் ஜூன் 5

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு கடந்த 31 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது யாழ்.தேர்தல் திணைக்களத்தால் 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்போது வலி.வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட 13 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வாக்காளர் மீளாய்வு இடம்பெறும்.

இதேவேளை அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகளையும் யாழ். தேர்தல் திணைக்களம் தற்போது மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-9)

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகள்

### பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நிதியுதவி

யாழ்ப்பாணம், ஜூன் 5

வடக்கு, கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உட்கட்டுமான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பிபீ.ஜெயசுந்தர 86 மில்லின் அமெரிக்க டொலர்களை வடக்கு, கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சிச் சபைகளுக்கு செலவு செய்ய அனுமதி வழங்கியுள்ளார்.

முதற்கட்டமாக வடக்கில் 41 வேலைத் திட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 19 உள்ளூராட்சிச் சபைகளில் உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகள் இடம்பெறவுள்ளன.

இதற்கான கேள்வி நடைமுறைகள் அந்தப் பகுதி உள்ளூராட்சி சபை செயலாளர்களினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

பெரும்பாலான உள்ளூராட்சிச் சபைகளில் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வீதி அபிவிருத்திப் பணிகளே இடம்பெறவுள்ளன. மன்னார் பிரதேச சபையில் மட்டுமே கட்டட நிர்மாணம் மற்றும் வீதி அபிவிருத்திகள் இடம்பெறவுள்ளன.ஏனைய சபைகளில் வீதி அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதில் ஒரு கிலோமீற்றர் வீதி முழுமையாக புனரமைக்க 5.5 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவாகின்றது.

இதேவேளை- முதற்கட்டத்தில் கிளிநொச்சி முல்லைத் தீவு உள்ளூராட்சிச் சபைகள் உள்ளடக்கப்படவில்லையெனத் தெரியவருகின்றது. (த-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காணி விற்பனை**

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிக்கு சமீபமாக கோப்பாய் மத்தியில் 10 பரப்பு, 30 பரப்புக் காணிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0718175820

**காணி விற்பனைக்கு**

மீசாலை கேணியடிச் சந்தியில் விக்னேஸ்வரா பாடசாலைக்கு அருகில் 20 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும். தொடர்புக்கு: 0772-261690

## விபத்தில் காயம்

வீதியில் சென்று கொண்டிருந்த போது எதிரெதிரே மோட்டார் சைக்கிளும் - சைக்கிளும் மோதியதனால் அதில் சென்று கொண்டிருந்த இருவரும் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து நாயன் மார்க்கட்டுச் சந்தியில் இடம்பெற்றது. விபத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இதே இடத்தைச் சேர்ந்த ஆர். றோசினி (வயது 64) மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த செம்மணி வீதி, நல்லூரைச் சேர்ந்த ந.பரமநாதன் (வயது 50) ஆகியோரே காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-5)

## இறந்தவர் குடும்பத்துக்கு ரூ. ஒரு மில்லியன்

கொழும்பு, ஜூன் 5

கட்டுநாயக்க தாக்குதலில் கொல்லப்பட்ட ஊழியரின் குடும்பத்துக்கு நஷ்டஈடாக ஒரு மில்லியன் ரூபாவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ளார்.

இறுதிக் கிரியை மற்றும் செலவுக்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது என்றும் குடும்பத்தைப் பராமரிக்க மேலும் உதவிகள் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.


இதேவேளை இறந்தவரின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன.

இந்த இறுதிக் கிரியைகள் தொடர்பாக அவரது சகோதரன் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்த மனு மீது நீதிமன்றம் உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

இறந்தவரின் சடலங்களை நேரடியாக மயானத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும். வேறு எந்தவொரு இடத்திலும் வைத்து அஞ்சலி நிகழ்வுகளை நடத்தக் கூடாது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

எந்தவித அரசியல் லாபத்துக்கும் சம்பந்தப்பட்டவரின் மரணத்தை பயன்படுத்தக் கூடாது என்றும் அவரது சகோதரின் மனுமீதான தீர்ப்பில் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (உ-ஐ)

**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
முருகுப்பிள்ளை
விக்ரர் அரியரத்தினம்

அன்னை மடியில்
12 ★ 06 ★ 1927

ஆண்டவன் மகிமைக்குள்
05 ★ 06 ★ 2007

ஒளிசொரிந்த வதனமொடு உதடுகளில் புன்சிரிப்பு
தெளிவான பேச்சாற்றல் சிந்தனையோடு சிகரம்தான்
கனிவாகக் கற்பித்துக் கல்விக்கு உரம் சேர்த்தீர்
மனிதமதை நேசித்து மனங்களிலே உறைகின்றீர்
பிள்ளைகளைக் கல்விக்கே அர்ப்பணித்த பேறுடையீர்
வாடாமலராய் வாழும் வதனம் என்றும் மறையாதே!

நி.மு: ஆழியவளை, தாளையடி.
த.மு: தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை. **குடும்பத்தினர்.**

(சி/470)

**PROMOTIONAL T-SHIRT & CAP**



சகல விதமான பாவனைகளுக்குரிய Sports T- சேட்ஸ், கம்பனி T- சேட்ஸ், பாடசாலை T- சேட்ஸ் மற்றும் தொப்பியும், அவரவர் தேவைகளுக்கேற்ற லோகோவுடன் எம்பிறைடறி (Embroidery) பிறிண்ட் செய்து நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

★ எமது ஸ்தாபனம் துணி நெய்வதிலிருந்து ஆடை உற்பத்திவரை (லைடன் மாதிரி) உற்பத்தி செய்து இலங்கையிலும் வெளிநாடுகளிலும் முன்னணி நிறுவனங்களுக்கு விநியோகம் செய்பவர்கள்.

(49,21,25)

Skansco Trading Co.(Pvt) Ltd.
46D, Blumendhol Road,Colombo- 13
தொடர்புகளுக்கு:- சிவகாந்தன்
0777361973, 0112446193, 0112437159,
Fax: 0112437599, E-mail: skansco@eureka.lk



**STUDY MEDICINE**

லண்டன் A/L

எடுத்த
மாணவர்கள் அடுத்த
நாளே பயணமாக இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து ஒரு வருடத்தை வீணாக்காமல் 2011ஆம் ஆண்டு கல்வியாண்டிலேயே கல்வியைத் தொடரலாம்.

விண்ணப்பங்கள் சமர்ப்பித்து 20நாள்களில் பயணமாகலாம்

**பெலாறஸ்**
Eastern Europe
Bordering Poland, Russia, Latvia, Lithuania & One Day Travel Time To Germany By Train

MD Degree - 6 years. Full course FEE : 18000 USD*
Visit Germany, UK & other European Countries for summer vacations. Opportunities for migration to USA, Australia, UK directly after completion. Transfers guaranteed to Medical Universities in European Union/ Schengen countries. Date of Commencement - Aug / Sep

**நேபோல்**
South Asia

MBBS - 4 1/2 years Full course fee : 39000 USD*
BDS (Bachelor of Dental Surgeon) - 4 years
Full course fee : 22000 USD*
Date of Commencement - August

**பிலிப்பைபன்ஸ்**
South-East Asia

MD Degree - 5 1/2 years
Full course fee : 15000 USD*
Date of Commencement - July

**Specialisations** PhD programmes available in any field

இலங்கை மெடிகல் கவுன்சில் (SLMC) ஜெனரல் மெடிகல் (UK), ECFMC (USA) WHO அங்கீகாரம் பெற்ற பட்ட சான்றிதழ்.

- Programmes are conducted exclusively in English Medium*
- 0% interest FREE loans for one year by major credit cards*
- Special educational bank loans*
- Installment scheme available for paying course fees semester wise*

Come and join with the most trusted partner with more than 15 years experience in guiding prospective medical students to secure study opportunities. Contact details of past & present students available for reference, school wise as well as district wise!

Contact Director-International medical student placements on : 0773 017 883

LEADER IN MEDICAL EDUCATION
PATHE ACADEMY The People's Academy
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Overseas Student Placement Department.
111- 1/2, Maya Avenue, Kirulapone, Colombo- 06 Tel : 0773 017 883, 011-2502012 www.patheacademy.org
*Conditions apply

**ALTO MARUTI- LXI விற்பனைக்கு**

WPKC XXXX தொடரிலக்கமுடைய ALTO MARUTI கார் விற்பனைக்குண்டு. Caribean Blue)
தொடர்பு:-0776171474,0718724399
(தரகர் தேவையில்லை)

**மணமகள் தேவை**

யாழ்புலோலி இந்து உயர்குல வேளாள பெற்றோர் தமது 45 வயதான விவாகரத்து பெற்ற U.K. PR and British Citizenship கிடைத்த புத்திரனுக்கு அதே உயர்குலத்தில் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட அரசினர் இலிகிதர் ஆசிரியையாக தொழில் புரியும் பெண்ணை தேடுகின்றனர். ஜாதக குறிப்பு, தொழில் முகவரி, குடும்ப விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

S. Sithamparanathan
C/O Thamizh Malai
71/1, Manning Place
Colombo-06

**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் பிரபல வர்த்தக நிறுவனமொன்றுக்குப் பணியாளர்கள் தேவை.
1. கணக்காளர் (2 வருட அனுபவம்)
2. களஞ்சியக் காப்பாளர்
3. சிட்டை எழுதுநர் (பில் கிளாக்)
மேற்படி பதவிகளுக்கு அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். இல. 24, உருத்திரா மாவத்தை, கொழும்பு -06
தொ.பே. இல: 0777768835

**விற்பனையாளர் தேவை**

மின்சாரப் பொருள்கள் விற்பனையில் அனுபவமுள்ள (யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை) விற்பனையாளர்தேவை. நேரில் வரவும்.

யாழ்ப்பாண மின்னகம்,
94(6), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**இருபாலையில் இன்று ஆரம்பமாகிறது!**

JOHN'S HOSPITAL (05.06.2011)
கோண்டாவில் வீதி,
இருபாலைச் சந்தி.

யாழ். போதனா வைத்தியசாலையின்
முன்னணி வைத்தியரினால்
சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுவைத்தியம்,
இரத்த, சலப்பரிசோதனைகள்

பார்வையிடும் நேரம்: மாலை 4 மணி - 8 மணி வரை

நிர்வாகம்.

**சர்வதேச கட்டுமான கூட்டமைப்பு (தனியார்) நிறுவனம்**
International Construction Consortium (Pvt) Ltd.



**தொழில் வாய்ப்புகள்**

இன்ரநேஷனல் கொன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோர்ட்டியம் (PVT)Ltd. நிறுவனமானது பன்முகத்தன்மை கொண்ட CI தரம் ISO சான்று பெற்ற கட்டுமானத்துறை கம்பனியாகும். உத்வேகமும் பெறுபேறுகளில் அக்கறையும் கொண்டவர்கள் வடமத்திய மாகாணத்திலும் வடமாகாணத்திலும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அமைப்புத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள எமது அணியினருடன் பொறியியலாளர்களாகவும் உதவியாளர்களாகவும் இணைந்து பணியாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

**திட்டமிடும் பொறியியலாளர்**
★ துறைசார்ந்த (BSc. 2வருட அனுபவம்

**சுரங்கத்தொழில் பொறியியலாளர்**
★ துறைசார்ந்த BSc. 2வருட அனுபவம்

**கள பொறியியலாளர்**
★ துறைசார்ந்த BSc அனுபவத்தோடு அல்லது அனுபவம் இல்லாமல் அல்லது NDT/NDES துறைசார்ந்த 8வருட அனுபவத்தோடு.

**தொழில்நுட்பவியலாளர்**
★ NDT/NDES அல்லது NCT முடித்தவர்

**மேற்பார்வையாளர்**
★ பகுதிநேர தொழில் நுட்ப பொறியொன்றை மேற்கொள்பவர் விரும்பத்தக்கது

**பொருள் தொழில்நுட்பவியலாளர்**
★ சம்பந்தப்பட்ட விடயத்தில் துறைசார்ந்த 2வருட அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவம்

**பொருத்தமான பொது தேவைப்பாடுகள்**
★ வயது 25முதல் 50வரை ★ வீதி நிர்மாணம் மற்றும் கட்டுமானத்துறை அனுபவம்
★ நல்லாரோக்கியம் ★ அணியில் சேர்ந்து செயற்படும் தன்மை
★ பொறுப்பேற்கும் பணியில் அர்ப்பணிப்புடன் செயற்படுதல்

பொருத்தமான பணியாளர் அர்ப்பணிப்பும் தன்னிச்சையான உத்வேகமும், குறைவான மேற்பார்வையில் சுயேச்சையாக தொழில்படுபவராகவும் இருத்தல் வேண்டும்.

சரியான தெரிவாளருக்கு கவர்ச்சியான கொடுப்பனவுப் பொதியும் திறமான தொழில்துறை மேம்பாட்டு சந்தர்ப்பங்களும் காத்திருக்கின்றன.

விளம்பரம் பிரசுரமான 10 நாள்களுக்குள் விண்ணப்புங்கள் சுயவிவரக்கோவை தொடர்பு தொலைபேசி இலக்கம் உறவினர் அல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்கள் அவர்களின் தொலைபேசி இலக்கத்துடன் பின்வரும் முகவரிக்கு வந்து சேரவேண்டும்.

விண்ணப்பப் படிவத்திலும் விண்ணப்ப உறையிலும் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுக.

MANAGER - HUMAN RESOURCES DEVELOPMENT
INTERNATIONAL CONSTRUCTION CONSORTIUM (PVT) LTD.
70, S. DE S. JAYASINGHE MAWATHA, KOHUWALA, NUGEGODA
FAX : 011 4400241, E-mail: cv@icc-construct.com.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் குடியமர்ந்த மக்களை கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பர்

## இன்று காலை விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்5

வலி.வடக்கில் அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு இன்று ஞாயிற்றுக்கிழமை அங்கு விஜயம் செய்கிறது.

இந்தக் குழுவினர் வலி.வடக்கில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களை நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இன்று முற்பகல் 9 மணியளவில் தெல்லிப்பழை தந்தை செல்வா ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள கிராம அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலிலும் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு கலந்துகொள்ளவுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் செல்லும் இந்தக் குழு அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு, கொல்லங்கலட்டி, செல்வாபுரம், தெல்லிப்பழை, வீமன்காமம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களின் தேவைகள் குறித்தும் கலந்துரையாடவுள்ளது.

இதில் மாவிட்டபுரம் தெற்கு, கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், வலி.வடக்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், சம்பந்தப்பட்ட பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9-86)

# 34 மில்லியன் ரூபா செலவில் வலி.வடக்கில் கட்டுமானப் பணி

## பொருளாதார அமைச்சு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜூன்5

வலி.வடக்கில் மக்கள் மீள்குடியேறிய பகுதிகளில் பொதுக் கட்டடங்கள், பாடசாலைக் கட்டடங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் என்பவற்றைப் புனரமைப்பதற்கும் மீள் நிர்மாணம் செய்வதற்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் 62 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வசந்தபுரத்தில் உள்ள பனை உற்பத்தி நிலையத்தை மீள நிர்மாணிப்பதற்கு 3.74 மில்லியனும் வித்தகபுரத்தில் உள்ள பனை உற்பத்தி நிலையத்தை மீள நிர்மாணிப்பதற்கு 3.74 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மயிலங்கூடல் ப.நோ.கூ. சங்கக் கிளை, [illegible]ணாலை ப.நோ.கூ. சங்கக் கிளை, மாத்தனை ப.நோ.கூ. ச[illegible]கிளை, தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைமை அலு[illegible] என்பவற்றைப் புனரமைப்பதற்கு 9.63 மில்லியன் ரூபாவு[illegible]நளாதார அபிவிருத்தி அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள[illegible]

வயாவிளான் மத்திய மகா வித்தியால[illegible]ரை வேலைத் திருத்தத்துக்காக 6.10 மில்லியன் ரூப[illegible]ப்பட்டு அந்த வேலைகள் முடிவுற்றுள்ளன.

பன்னாலை சேர் கனகசபை வித்தியசாலையின் கூரை வேலைத் திருத்தத்துக்காக 1.35 மில்லியன் ரூபாவும் கீரிமலை நகுலேஸ்வரா பாடசாலைத் திருத்தத்துக்காக 10.6 மில்லியன் ரூபாவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நிதி ஒதுக்க[illegible]டு வேலைகள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-15)

# கனரக வாகனங்களின் அதிகரிப்பால் குடாநாட்டு வீதிகள் அடிக்கடி சேதம்

யாழ்ப்பாணம்,ஜூன் 5

யாழ்.குடாநாட்டில் உள்ள பெரும்பாலான வீதிகள் கனரக வாகனங்களின் போக்குவரத்தால் அடிக்கடி சேதமடையும் நிலைமை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இரண்டு மாதத்துக்கு ஒரு தடவை வீதியைப் புனரமைப்புச் செய்யவேண்டிய நிலைமை தோன்றியுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் கூறுகின்றனர்.

வீதிகள் அடிக்கடி சேதமடைவது தொடர்பாகக் கேட்டபோதே இவ்வாறு கூறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

வீதிகள் இதுவரை காலமும் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டே திருத்தம் செய்யப்பட்டு வந்தது. தற்போது 'காப்பெற்' மூலம் திருத்தம் செய்யப்படுகிறது. சில வீதிகள் முழுமையாகப் புனரமைக்கப்படுவதில்லை. வீதிகளில் ஏற்படும் குழிகளே தார்க் கலவைகள் மூலம் திருத்தப்படுகின்றன.

சிறிது நாள்களின் பின்னர் திருத்தம் செய்யப்பட்ட பகுதிகளைத் தவிர அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் உட்பட பல இடங்களில் மீண்டும் கிடங்குகள் உருவாகின்றன.

இதனால் ஒரு வீதி உட்பட பல வீதிகள் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை திருத்த வேலைகள் செய்யவேண்டிய நிலைமை காணப்படுகிறது.

தற்போது பிரதான வீதிகளான பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை வீதிகள் மற்றும் சில சிறு வீதிகளும் 'காப்பெற்' வீதிகளாக மாற்றப்படுகின்றன.

இந்த வீதிகள் சீன நிறுவனத்தினால் புனரமைக்கப்படுகின்றன. வல்லை - தெல்லிப்பழை - அராலி வீதி வட மாகாண இணைப்புத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படுகின்றன.

இவை 'காப்பெற்' வீதிகளாக மாற்றப்பட்ட பின்னர் நீண்ட காலத்துக்கு சேதமடையாமலிருக்கும். இதன்மூலம் மக்கள் போக்குவரத்தில் தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# புலோப்பளை மேற்கில் தும்பு உற்பத்தி நிலையம்

தென்மராட்சி,ஜூன்5

புலோப்பளை மேற்குப் பகுதியில் தும்பு உற்பத்திப் பொருள் பயிற்சி நிலையம் கடந்த 2ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புலோப்பளை மேற்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் வேண்டுகோளின் பிரகாரம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினால் பயிற்சி நிலையத்திற்கான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

பளை உதவி அரசாங்க அதிபர் சு.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் முதன்மை விருந்தினராகக்கலந்து கொண்டு பயிற்சி நிலையத்தைஆரம்பித்துவைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட கைத்தொழில் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (த-207)

# வாழ்க்கைச் செலவுப்படி வழங்க ஓய்வூதியர்கள் விவரம் திரட்டல்

தென்மராட்சி,ஜூன்5

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியர்களுக்கு எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் அதிகரிக்கப்படவுள்ள வாழ்க்கைச் செலவுப் படி வழங்குவதற்கு விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

இதற்கான படிவங்கள் ஜூன் மாத ஓய்வூதிய வவுச்சருடன் இணைக்கப்பட்டு ஓய்வூதியர்களுக்கு அனுப்பப்படவுள்ளன.

அதிகரித்த படி பெறுவதற்கு உரித்துள்ள அனைத்து ஓய்வூதியர்களும் படிவத்தைப் பூரணப்படுத்தி ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகளின் அடிப்படையில் ஓய்வூதியத்துடன் கடந்த ஜனவரி தொடக்கம் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் தலா 300 ரூபா அதிகரித்த படியாக வழங்கப்படல் வேண்டுமெனவும் -

எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் 2003 டிசெம்பர் மாதம் வரை ஓய்வூதியர்களுக்கு தலா 750 ரூபாவும், 2004 ஜனவரி தொடக்கம் 2005 டிசெம்பர் வரையான காலப் பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு தலா 250 ரூபாவும் அதிகரித்த படியாக வழங்கப்படல் வேண்டுமென வும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் இக்கொடுப்பனவு பெறுவதற்கு உரித்துடைய ஓய்வூதியர்களை விண்ணப்படிவங்களை பூரணப்படுத்தி நேரில் கையளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

# வடபகுதியின் விவசாயத் துறையில் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் அபிவிருத்தி

## அமைச்சர் சந்திரசேன உறுதி

யாழ்ப்பாணம்,ஜூன்5

அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்குள் வடபகுதியின் விவசாயத் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதே அரசின் பிரதான குறிக்கோளாகவுள்ளது.

இவ்வாறு விவசாய அபிவிருத்தி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்தார்.

60 லட்சம் ரூபா செலவில் கைதடியில் புனரமைக்கப்பட்ட கமநல சேவைகள் நிலையம் மற்றும் அதன் உரக் களஞ்சியம் ஆகியவற்றைத் திறந்துவைத்து உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டக் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் விவசாயிகளில் ஒருவனாக இருந்தே நான் இன்று விவசாய அபிவிருத்தி அமைச்சராகப் பதவியில் இருக்கிறேன். இதன் காரணமாக விவசாயிகளின் எதிர்பார்ப்புகள் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நான் அறிவேன்.

இலங்கையின் ஏனைய பகுதிகளை விட வடக்கு, கிழக்குப் பகுதி விவசாய அபிவிருத்திக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நானும் அதிக ஆர்வம் காட்டி வருகிறோம். 30 ஆண்டு காலமாக இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அந்தப் பகுதிகளின் விவசாய நடவடிக்கைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாகவே அந்தப் பகுதிகளின் அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டி ஏற்பட்டது.

அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளில் வடபகுதியின் விவசாயத் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதே எமது பிரதான குறிக்கோளாகும். - என்றார். (த-2-14)

# வீதியோரங்களை ஆக்கிரமிக்கும் கழிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.குடாநாட்டில் மீண்டும் தரம் பிரிக்கப்படாத திண்மக் கழிவுகள் வீதியோரமாகக் கொட்டப்படுவதால் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

டெங்கு அபாயத்திலிருந்து மக்களைக் காப்பதற்காக 2010 இலிருந்து உள்ளூராட்சி சபைகள் திண்மக்கழிவுகளைப் பெற்று அகற்றுவதற்கான நடவடிக்கையைத் துரிதப்படுத்தியது.

இதனையடுத்து ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் பெருந்தொகையான திண்மக் கழிவுகளை அகற்றி டெங்கு அபாயத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தது.

தற்போது மீண்டும் குடாநாட்டின் பல்வேறு வீதிகளிலும் திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டுக் காணப்படுகின்றது. இத்திண்மக் கழிவுகள் தரம் பிரிக்கப்படாது பொருத்தமற்ற பொதிகளில் பொதி செய்யப்பட்டுக் கொட்டப்பட்டு வருகிறது.

இவ்வாறு கொட்டப்பட்ட ரின்களில் மழைநீர் தேங்கி அங்கிருந்து டெங்குகள் மீண்டும் வெளிக்கிளம்பி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இக்கழிவுகளை உடன் அகற்றி மக்களை டெங்கு அபாயத்தில் இருந்து பாதுகாக்க வேண்டும் என சுகாதார சபையினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை, கல்லுண்டாய், காக்கைதீவு, நவாலி வெளிகளிலும் திண்மக் கழிவுகள் கொட்டப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிடின் அயற்கிராம மக்களுக்குப் பெரும் நோய்கள் வருவதற்கு வாய்ப்பு இருப்பதாகச் சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர். (த-302)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**தம்பிப்பிள்ளை ஈஸ்வரன்**



கடந்த (06.05.2011) அன்று சிவபதமடைந்த அன்புத் தெய்வமாகிய அமரர் தம்பிப்பிள்ளை ஈஸ்வரன் அவர்களின்

அந்தியேட்டிக் கிரியை இன்று (05.06.2011) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி,
வல்வெட்டி. (49,19,27)

குடும்பத்தினர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 5

யாழ்.மாவட்ட விவசாய விதை உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு கடந்த திங்கட்கிழமை திருநெல்வேலி விவசாய பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் விதை உற்பத்திப் பரிசோதகர் ரமணிசந்திரன் பயிற்சி வகுப்புக்களை நடத்தினார்.

தக்காளி, புடோல், பாவல், வெண்டி, கத்தரி, பயிற்றை ஆகிய பயிர் வகைகளின் விதை உற்பத்தி தொடர்பாகக் கருத்துரை வழங்கப்பட்டன.யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 30 ஒப்பந்தக் கமக்காரர்கள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர்.

பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டோருக்கு கால் ஏக்கர் நிலப்பரப்பில் விதைக்கக்கூடிய தூய விதைகள் விநியோகிக்கப்பட்டன. (ம-207)

### வேலை ஆள் தேவை

எலக்றோ பிளேற்றிங் - மொப்பிங் வேலையில் அனுபவமுள்ள வேலை ஆள்கள் தேவை.
தொடர்பு: செல்வா மோட்டோர்ஸ்
217, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021-2229793

### மணமகள் தேவை

1967 இல் பிறந்த,அனுஷம் 3ஆம் பாதம், கிரகபாவம் மூன்று சுற்றும் 23¾ உள்ள, சுயதொழில் செய்யும் மணமகனுக்கு சைவ மணமகள் தேவை.
தொடர்பு: 0777760663
Email : trajeshwaran@gmail.com

### வேலை ஆள் தேவை

266/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கோல்டன் இராசையா மோட்டோர்ஸ் எனும் கடையில் பெண் விற்பனையாளர் ஒருவர் தேவை.
தொடர்புக்கு: 0776141928

### வீடு வாடகைக்குண்டு

நல்ல சூழலில் 07 அறைகளையும், 02 குளியலறைகளையும், 01 சமையலறையை யும் கொண்டதுமான வீடு வாடகைக் குண்டு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. பூங்கனிச்சோலைக்கு அருகில்.
தொடர்புகளுக்கு:-0777207260, 0750406396.

### CAR FOR SALE

MARUTHI ZEN ESTILO 2010/10
Dusky Brown 2800 km Done Brand New Doctor Used Car. 0775025054

### லொறிகள் தேவை

Ten Wheels (பத்துச்சில்லு) லேயிலண்ட் (Leyland)அல்லது டாடா (TATA) லொறிகள் உடன் விற்க உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே:- 0777773975, 021 222 7304.

### FOR SALE

1. DOLPHIN Hiace. 251 xx, Manual, 3L 1995 model, JCXXX. Super custom, 1999 model. Turbo Engine
2. Mazda Crow Cap, PB XXX, 2002 Model

*Contact No.*
0772852780

### வீடு வாடகைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, அரசடி ஒழுங்கையிலும், கல்வியங்காடு வாசிகசாலை வீதியிலும் 3 அறைகள் கொண்ட பெரிய வீடுகள் வாடகைக்கு உண்டு. பெரிய குடும்பம் விரும்பத் தக்கது.
தொடர்பு: 0777 760663

### வீடு வாடகைக்குத் தேவை

ஒரு குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை. திருநெல்வேலிக்கும் உரும்பிராய்க்கும் இடைப்பட்ட பகுதியில் மேலும் கல்வியங்காடுக்கும் கோப்பாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் தேவை. விருப்பமுடையோர் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல: 0777789259

### தவறிவிட்டது

அல்வாய் மேற்கைச் சேர்ந்த வல்லிபுரம் அழகுராசா என்பவரது தேசிய அ.அ (562341900V) கைப்பை மற்றும் கைத்தொலைபேசி என்பன, திருகோணமலையிலிருந்து கொடிகாமம் வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்துடனோ அல்லது 0775564629, 0750386529 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

### காணி விற்பனைக்குண்டு

கச்சேரி- நல்லூர் றோட்டில் (மாநகர சபை அருகில்) சுற்று மதில், நன்னீர்க் கிணற்றுடன் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
021 2226944, 0772557605

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் வயது 56 விஞ்ஞானப் பட்டதாரி யாழ்.நகரில் கௌரவமான சுயதொழில். தேகாரோக்கியமானவர். முதலாம் திருமணத்தில் 5½வருடம் பிரிந்து வாழ்பவர். புரிந்துணர்வுடன் வாழக்கூடிய தகுந்த வாழ்க்கைத் துணைதேவை. வாழ்விழந்தோர், விதவைகளும் விரும்பத்தக்கது. நேரில் கதைப்பது விரும்பத்தக்கது.
தொடர்பு: 078 6168996

### ENGLISH LANGUAGE LEARNERS' ASSOCIATION

உங்கள் ஆங்கில மொழி வளர்ச்சிக்கு எங்களுடன் இணைவதன் மூலம் இலவச உள்நாட்டு வெளிநாட்டு வளங்களைக் கொண்டு உங்கள் ஆங்கில மொழி அறிவை வளர்ப்பதோடு அங்கத்துவத்தையும் பெற லாம். மேலதிக விவரங்களுக்கு.

**UNIFEC**
No.6/2/5, Sri Ratnapala Mw,
Katugastota. Tel: 081 4989736

### தொண்டர் சேவைச் சான்றிதழ்

நீங்கள் தொண்டர் சேவைத் துறையைச் சார்ந்தவராயின் அச்சேவைக்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழைப் பெற்றுப் பயனடையுங்கள். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள.

**UNIFEC Consultants,**
No.6/2/5, Sri Ratnapala Mw,
Katugastota. Tel: 081 4989736

# மரண அறிவித்தல்



## கந்தையா செல்லப்பா

**(மாதகல்)**

யாழ்ப்பாணம் மாதகலைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை சிவபுரியில் வசித்தவரும் க்னடா ஸ்காபுறோவை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவருமான கந்தையா செல்லப்பா (31.05.2011) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- இராமாத்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு-முத்துக்குட்டி தம்பதியரின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், நேசம்மா (திருகோணமலை), நாகம்மா (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அம்பலம் வேலுப்பிள்ளையின் ஆசை மருமகனும், உதயகுமார், திருக்குமார், சந்திரபிரபா, கங்காகௌரி காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் ஜெயக்குமார், அருந்தவக்குமார், கிருசாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தக்ஷினி, கலைச்செல்வி, ஜெயக்குமார், கிரிதரன், தனேஸ்குமார் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் முருகேசு (திருகோணமலை), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் அன்னரெத்தினம் மற்றும் கதிரவேலுப்பிள்ளை சிவபாக்கியம் (திருகோணமலை) ஆகியோரின் மைத்துனரும், கிந்துஷானி, சிவா, ராம்ஜி, கிருத்திகா, சுருதிகா, டிலக்ஷிகா, தர்சினி, தட்ஷாயினி, பிரதீபன், லேகாஜினி, ரோகிதா, ரமேத்தா, சருணிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 4164,Sheppard Ave East (Midland & Sheppard) என்னும் முகவரியில் அமைந்துள்ள OGDEN Funeral Home, இல் (04.06.2011) சனிக்கிழமை மாலை 5.00 மணி முதல் 9.00 மணிவரையும், இன்று (05.06.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரை அஞ்சலிகாக வைக்கப்பட்டு அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, ந.ப.1.00 மணியளவில் பூதவுடல் 256 Kingston Road, St.John's Norway Crimatorium (Woodbine & Kingston) இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
இராசலட்சுமி (மனைவி) - 647-345 6179,
உதயன் (மகன்) - 416- 258 1890.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(49,27)-(4888)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுகள் அழிக்கப்படுவது தொடருமானால் இக்கட்டுநிலையை சந்திக்க நேரிடும்...!

உலக சுற்றாடல் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 ஆம் திகதி உலகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபையில் மனிதனின் சுற்றாடல் என்பது பற்றிய மாநாடு தொடங்கிய நாள் இதுவாகும். 1972 ஆம் ஆண்டு ஜூன் 5-16 வரை இந்த மகாநாடு நடத்தப்பட்டது. இந்தத் தினமே உலக சுற்றாடல் தினமாகியது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப் பொருளுடன் இத் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ் வருடத்தின் தொனிப் பொருள் 'காடுகள்: இயற்கை உங்கள் சேவையில்' என்பதாகும்.

**உலக சுற்றாடல் தினம் இன்றாகும்**

காடுகள் பூமியின் 31 வீதமான நிலப் பகுதியை மூடியுள்ளன. இந்தக் கோளத்தின் உயிர் வாழ்வுக்கு வேண்டிய பல விதமான தொழிற்பாடுகளையும் சேவையையும் ஆற்றி வருகின்றது. 1.6 பில்லியன் மக்கள் தமது வாழ்வாதாரத்துக்கு காடுகளை நம்பி உள்ளனர். 300 மில்லியன் மக்களுக்கு காடுகள் வாழ்விடமாக அமைந்துள்ளன. காடுகள் 80 வீதமான நிலத்தில் வாழும் உயிரினங்களுக்கு வாழிடமாக இருக்கின்றன.

காடுகளை அழித்ததாலும் காடுகள் அழிந்தாலும் வளிமண்டலத்தில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. மனிதன் காட்டு மரங்களை வகை தொகையின்றி வெட்டுவதால் காடு அழிக்கப்படுகின்றது. காடுகள் தாமாகவே அழிவதுமுண்டு. மரங்களின் தரம் குறைந்துவிடுதல், காட்டுத் தீயால் எரிந்து அழிதல், பூச்சியினங்கள், பீடைகளால் அழிதல் போன்ற காரணங்களால் காடுகள் அழிகின்றன. காடுகள் இயற்கை வளங்களை எமக்குத் தருகின்றன. வெட்டு மரங்கள், எரிபொருள்கள், றப்பர், கடதாசி, மருந்துச் செடிகள் போன்றவற்றை உதாரணமாகக் குறிப் பிடலாம். காட்டிலுள்ள நீரேந்து பகுதிகளிலிருந்துதான் உலகத்துக்குத் தேவையான சுத்தமான நீரில் முக்கால் வாசிப் பங்கு கிடைக்கிறது. காடுகள் அழியும்போது நீரின் தன்மையும் குறைவடைகின்றது. இயற்கை அனர்த்தங்களான வெள்ளப்பெருக்கு மண்சரிவுகள், மண்ணரிப்பு போன்றவையும் காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படுகின்றன. மரங்களின் வேர்களும் புற்களின் வேர்களும் மண்ணை இறுக்கமாகப் பிடித்து வைத்திருக்கின்றன. மரங்கள் நிலத்தை மூடியிருப்பதால் மழை நீர் நேரடியாக நிலத்தில் வந்து விழுவதில்லை. இவற்றின் காரணமாக மண்ணரிப்பு தவிர்க்கப்படுகின்றது. காலநிலை மாற்றங்களிலும் காடுகள் பெரும் பங்கு வகிக்கின்றன. பகல்வேளைகளில் சூரிய ஒளியின் போது தாவரங்களின் பச்சை இலைகள் வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து உணவு தயாரித்தலாகிய ஒளித்தொகுப்பு என்னும் செயற்பாட்டைச் செய்கின்றது. இதன்போது ஒட்சிசன் வெளிவிடப்படும். இந்த ஒட்சிசன் உயிரினங்களின் சுவாசத்துக்கு மிகவும் பயன்படுகிறது. மரங்கள் அழிக்கப் படும்போது வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவு கூடிவிடுகிறது.



வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவு கூடுவதால் வெப்பநிலையும் அதிகரித்துச் செல்கிறது. வெப்பநிலை அதிகரிப்பதால் வடதுருவம், தென் துருவத்தில் உள்ள ஏராளமான பனிமலைகள் உருகத் தொடங்குகின்றன. இதனால் கடலில் அதிக நீர் சேர்ந்து நீர்மட்டம் உயருகிறது. இதேநிலைமை தொடருமானால் இன்னும் சில வருடங்களில் 10 அடிக்குமேல் கடல்நீர் உயர்ந்துவிடும் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். அப்போது பல சிறு தீவுகள் கடல் நீரினுள் அமிழ்ந்துவிடும். கடற்கரைகள் கடலரிப்பால் உள்வாங்கப்பட்டுவிடும்.

காடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சுற்றாடல் பாதுகாப்புதின நிகழ்வுகளில் பங்கு பற்ற வேண்டும். காடுகள் அழிக்கப்படும்போது அவை மீளவும் உண்டாக்கப்பட வேண்டும். அரிதான தாவர இனங்கள் பேணப்பட வேண்டும்.

நாம் இருக்கும் பகுதிகளைச் சோலைகளாக்குவதற்கு நல்ல மரங்களை நட வேண்டும். இரண்டு, மூன்று கோடைகளுக்குத் தொடர்ந்து நீரூற்றி வந்தால் அவை தப்பிவிடும். ஆடு மாடுகளிலிருந்து அவற்றைக் காப்பாற்ற கூடுகள் அமைக்கலாம். விறகுத் தட்டுப்பாடுள்ள இந்தக் காலத்தில் காடுகளில் உள்ள மரங்களையோ அல்லது பனை மட்டைகளையோ மனிதன் எடுத்துச் சென்று எரித்துவிடுகின்றான். மனிதனை வாழவைக்க - குழந்தைகளைக் காப்பாற்ற மரம் தயாராக இருக்கிறது ; ஆனால், வளர்ந்து வரும் இளம் மரக்கன்றுகளைக் காப்பாற்ற மனிதன் தயாராக இல்லை. எப்படியோ தப்பி வளர்ந்துவிடும் மரங்களே மனிதனுக்குத் தேவையான அனைத்தையும் வழங்குகின்றன.

வல்லைப் பகுதியில் வீசுகின்ற காற்று, வயல் வெளிகளிலுள்ள மேல்மண்ணை எடுத்துச் சென்று வேறு இடங்களில் வீசிவிடுகிறது. இந்த மண்ணரிப்பைத் தவிர்ப்பதற்கும் வாகனங்களில் செல்வோர் காற்றின் தாக்கமின்றிச் செல்வதற்குமாக காற்றுத் தடுப்பு வலயம் ஒன்றை மரங்களை வரிசையாக நடுவதன் மூலம் அமைக்க வேண்டும். இவ்விடயம் சில வருடங்களின் முன்னர் தீர்மானிக்கப்பட்டது. வீதியின் அருகே எருக்கலை, அதற்கடுத்து சவுக்கு, அடுத்து மரமுந்திரிகை என வரிசையாக நடுவதற்கு ஆரம்பித்து 465 எருக்கலைக் கன்று களும் 175 சவுக்கு கன்றுகளும் நடப்பட்டு. பக்கத்துக் கிராமத்து மக்கள் சிலரின் உதவியுடன் பாதுகாத்து வளர்க்கப்பட்டது. எருக்கலை ஏதோ சும்மா நிற்கிறதென்று யாரோ வெட்டி அழித்துவிட்டார்கள். சவுக்கு வளரவளர இன்றும் யாரோ வெட்டிக் கொண்டேயிருக்கிறார்கள்.

கோயில்களுக்கு ஒவ்வொரு தலவிருட்சம் இருக்கிறது. வேம்பு, ஆல், அரசு, இலுப்பை, மருதமரம் போன்ற மரங்கள் ஸ்தலவிருட்சங்களாக கோயிலைச் சுற்றி நிற்கின்றன. நாம் பல இடங்களை மரங்களின் பெயரோடு சேர்த்துச் சொல்கிறோம். ஆலடிப்பிள்ளையார் கோயில், அரசடி அம்மன் கோயில் இலுப்பையடிச் சந்தி, வேம்படிப் பள்ளிக்கூடம், அந்த மரங்கள் முன்னர் நின்று இன்றில்லாவிட்டாலும் அவற்றின் பெயர்கள் நிலைத்துவிட்டன.

**இர.சந்திரசேகரசர்மா**

முன்னாள் சுற்றாடல் பாதுகாப்பு ஆலோசகர், போருட்

இன்றைய உலக சுற்றாடல் தினத்திலிருந்து நாம் ஒவ்வொருவரும் மரங்களை வெட்டி அழிப்பதை விட்டுவிட வேண்டும். மரங்களை நடுவதில் ஈடுபடவேண்டும். மற்றவருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களையும் மரங்களை நட ஊக்குவிக்க வேண்டும்.

மதிப்பிட முடியாத பொருளாதார சமூக, சுகாதார, வளங்களைக் குறைவின்றி வழங்கும் காடுகளை மனிதர்கள் அழிக்கின்றனர். பூமியில் காடுகளை அழித்தல் மிக வேகமாக நடைபெறுகின்றது. ஒவ்வொரு வருடமும் 13 மில்லியன் ஹெக்ரெயர்ஸ் காடுகள் அழிக்கப்படுகின்றன.

*"நாம் உலகளாவிய ரீதியில் சிந்திக்க வேண்டும்; நாம் இருக்கும் இடத்திலேயே செயற்பட வேண்டும்"*

# தாதியத்தின் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும்

ஒவ்வொரு பூவுக்கும் ஒவ்வொரு வாசம் இருக்கிறது. அதுபோலவே ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு மகிமை இருக்கின்றது. அந்தநாள் எந்தநாள், எதனால் என்று எண்ணிப்பார்க்கின்றேன்.

வைகாசி மாதம் 12 ஆம் திகதி சர்வதேச தாதியர் தினம். தாதியம் என்றால் தமிழில் தொண்டு என்று பொருள். இறைவனுக்கு மக்கள் பல தொண்டுகளைப் புரிந்தனர். இதனால் தொண்டு செய்தவர்களை இறைவனின் தொண்டர்கள் என்று மக்கள் அழைக்கலாயினர்.

காலங்கள் கடந்து செல்ல உலகப் போர்களும் தொடங்கின. இதனால் முதலாம் உலகப் போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியானதோடு குற்றுயிராக்கப்பட்டும் காயப்பட்டும் நோய் வாய்ப்பட்டும் இருந்தார்கள். இந்த நிலையில் இந்த மக்களுக்கு தாதியம் என்ற சேவை அன்று தேவைப்பட்டது.

இதனை உணர்ந்த 'புளோரன்ஸ் நைற்றிங்கேள்' ''மக்களைக் காப்பாற்றும் பொருட்டு மக்களுக்கு உதவ தாதியருக்கு அனுமதியுங்கள்'' என்று அரசிடம் வேண்டினார். இவருடைய வேண்டுதலை அரசு ஏற்று தாதியப் பணி சிறப்புற நடந்தேறியது. இதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் காப்பாற்றப்பட்டதோடு, உலகெங்கும் தாதியர் ஊழியம் பரவத்தொடங்கியது.

தாதியம் தொடர்பாகப் பலதரப்பட்டோரிடம் பல்வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

வைத்தியர் மலற்பிள்ளை இது குறித்துக் கூறுகையில்:

ஒருதாய் தன்னுடைய பிள்ளைக்கு கரிசனையையும் அன்பையும் கொடுப்பது போல் தாதியர்களும் நோயாளர்கள் மட்டில் அன்பையும் கரிசனையும் கொடுத்து அவர்களைப் பராமரிக்கின்றனர்.

தாதியர்கள் நோயாளர்கள் பற்றி விழிப்புடன் இருந்து அவர்களின் சுய நலத்தை அறிந்து கொள்வதோடு அவர்களின் குடும்பப் பின்னணிகளையும் அறிந்திருப்பர்.

வைத்தியருக்கு நோயாளர் தொடர்பாகத் தெரியாத விடயங்கள் யாவற்றையும் தாதியர்கள் அறிந்து இருப்பர். தாதியர்கள் இரவு, பகல் பாராது தமது ஊழியத்தைச் செய்வார்கள். வைத்தியர் நாம் பரிசோதிப்பது மட்டும்தான். ஆனால், தாதியர்களோ பரிசோதிப்பின் பின்னால் வரும் பணிகளை தாதியர்களே செய்கிறார்கள். சொல்லப்போனால் ஒரு குடும்பத்தின் தந்தைபோல் வைத்தியர்களும் குடும்பத்தின் தாயைப் போல் தாதியர்களும் இருக்கிறார்கள். இவர்களுடைய பணி மிகவும் போற்றத்தக்கது. அதனாலேயே உலகம் அவர்களுக்காக மே 12 ஆம் திகதியை ஒதுக்கி உலக தாதியர் தினத்தைக் கொண்டாடி அவர்களை மகிழ்விக்கிறது என்று அவர் தனது கருத்தில் குறிப்பிட்டார்.

தாதியப் பயிற்சிக் கல்லூரி அதிபர் செல்வி ர.வல்லிபுரநாதன் கூறுகையில்:

இங்கு தாதியப் பயிற்சிக் கல்வியைக் கற்கும் மாணவர்கள் ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும் யாழ்ப்பாணக் கலாசாரத்தைப் பேணுகின்றவர்களர்கவும் இருக்கிறார்கள்.

இங்கு கற்று வெளியேறிய மாணவர்கள் பலர் இந்தத் துறையில் நற்பிரஜையுடையவர்களாக இருக்கிறார்கள். தாதியத்தின் புனிதத்துவத்தை உணர்ந்து இவர்கள் ஒவ்வொருவரும் செயற்படுகிறார்கள்.

தாதியற் பயிற்சிக் கல்லூரி மாணவன் அ.ற.அ.ஷிபான் கருத்துத் தெரிவிக்கையில்:

இன, மத, மொழி, தேசங்களைக் கடந்து ஒரேயொரு குறிக்கோளை மட்டும் மையமாகக் கொண்டு செயற்படுபவர்களே தாதியர்கள்.

சுகாதாரத் துறையில் தாதியரின் பங்கு இன்றைய நிலையில் அளப்பரிய ஒன்றாகக் காணப்படுகிறது. ஒரு நோயாளியானவர் அந்த நோய் நிலையிலிருந்து குணமடைய வைத்தியருடன் இணைந்து செயற்படும் தாதியர்கள் அந்த நோயாளியின் சுய தேவைகளுக்கும் உதவுவது மட்டுமன்றி மருந்துகள் வழங்குவது முதல் அவரது உளநிலையை அறிந்து ஆறுதல் வழங்கி உறவினர்களையும் நோய் நிலை தொடர்பாகத் தெளிவுபடுத்தி நிம்மதிப்படுத்துகின்றனர். நோயாளியானவர் எவ்வாறான சந்தர்ப்பத்திலும் ஒரு சமூக அந்தஸ்துடைய தனிமனிதராகவே தாதியர்களால் கருதப்படுகிறார். எவ்வாறான நெருக்கடியான நிலைகளிலும் அதாவது இரவு அதிக நோயாளிகள் அவசரநிலை, நோயாளியின் உடல் நிலை, தொற்றுக்கள் தொடர்பாக நுண்ணிய கவனங்களுடனேயே தாதியர்கள் செயற்படுகின்றனர்.

நோயாளர்களை மையமாகக் கொண்டியங்கும் சுகாதாரக் குழுவில் தாதியர்களே நோயாளர்களுடன் சிகிச்சை ரீதியான மிக நெருங்கிய உறவுமுறையைப் பேணுகின்றவர்களாவர்.

**ஜெயம் ஜெகன்**

யாழ்.பல்கலைக்கழகம்

தாதிய சேவையே மிக உயர்ந்த சேவையாகும். ''தாதியரே இறைவன் எழுதிய ஏடு. இதற்கில்லை உலகில் ஈடு'' என்று அந்த மாணவன் கூறினார்.

இந்த நிலையில் தாதியம் தொடர்பாக அனைத்து மட்டங்களிலும் விழிப்புணர்வு அவசியம். மக்கள் சேவையில் ஈடுபடும் தாதியர்களின் வளர்ச்சி நிலை குறித்து அனைவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 05.06.2011 முதல் 11.06.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஊக்கம், உற்சாகமாகவும், பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். இழுபறியாக இருந்த வேலைகள் எல்லாம் முடிவுக்கு வரும். பல நாள்களாக எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருடன் கருத்து மோதல்கள் உருவாகலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். நீண்ட நாள்களாகத் தள்ளிவைத்த வெளியூர் பயணம் செல்லலாம். செலவுகள் அதிகரித்தாலும், அதற்கேற்ற வரவுகள் வந்து சேரும். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை மேம்படும். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடைவீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். மற்றவர் பாராட்டும் வகையில் எதையும் செய்ய முற்படுவீர்கள். இருந்தாலும், அவ்வப்போது ஏதோ ஒரு விதமான அலுப்பு, சலிப்பு ஆள்கொள்ளும். தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற விடயங்களில் முன்னேற்றம் காணப்படும். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு. இனிமையான அனுபவம் உண்டு.

### இடபம்

திட்டமிட்டதை விட, சில காரியங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். நீங்கள் எதிர்பாராத சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். குடும்பத்தினருடன் சிறிய விடயங்களுக்காகப் பெரிய அளவில் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். எதிர்பாராத சில நல்ல விடயங்கள் நடக்கலாம். அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். பெரிய மனிதர்கள் வழியில் உதவி கிடைக்கும். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். அவசரப்பட்டு சிலருக்கு வாக்குக் கொடுத்து விட்டும் அவதிப்படலாம். கடந்த காலத் தவறுகளை நினைத்து குழப்பம், வருத்தம் அடைவீர்கள். நீங்கள் செய்த உதவியை நினைத்துப் பார்க்காமல் சிலர் நன்றி மறந்து நடந்து கொள்ளலாம். உடல்நலம் தொடர்பான வகையிலும் அதிக அக்கறை அவசியம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் தொடர்பான விடயங்களிலும் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். வழக்கமாகச் செய்யும் சில வேலைகளை செய்யாமல் விட்டு விடலாம்

### மிதுனம்

ஆதாயகரமான, பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். அடமானமாக வைத்த பொருள்களை மீட்கலாம். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால், விருந்து, விசேஷங்களால் மகிழ்ச்சி அடைவீர்கள். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். சில வேலைகளைச் செய்யத் திட்டமிட்டு, வேறு வேலை காரணமாக செய்ய முடியாமல் போகலாம். மறதியால் அவதிப்படலாம். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக தள்ளிக் கொண்டே வந்த சுபகாரிய விடயங்கள் நடக்கலாம். பிள்ளைகளின் கல்விக்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி காணலாம். கடந்த காலத்தில் கேட்ட போது கிடைக்காத உதவிகள் எல்லாம் இப்போது கிடைக்கலாம். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள், ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். கடன் பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளிப்பீர்கள். தந்தையுடன் கருத்து வேறுபாடு வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லவும். ஊக்கம், உற்சாகம் கூடும். பணம் வரும்.

### கடகம்

மனதிற்கு உற்சாகம் தரும், சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். மற்றவர்களிடம் உங்களைப் பற்றி பெருமையாகப் பேசுவீர்கள். தம்பதியர் இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் எளிதில் வசூலாகும். நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பணிபுரிவோர் திறமையாக வேலைகளைச் செய்து, அதிகாரிகள், நிர்வாகத்தினரின் பாராட்டுகளைப் பெறுவர். மாமன், மைத்துனர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாகத் தள்ளிப்போன பத்திரப்பதிவுகள் நடக்கலாம். முகவர் தொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். வாகனங்கள் திடீரெனச் செலவு வைத்து, கணிசமான பணத்தைக் கரைக்கலாம். பிள்ளைகளால் தொல்லையுண்டு. எதிர்பாராத செலவுகளால் பிறரிடம் கைமாத்து வாங்கலாம். ஒரு வேலைக்கு பலமுறை அலைய நேரிடலாம்.

### சிங்கம்

ஆன்மிக விடயங்களில், ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உடல் உபாதைகளால் மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்கலாம். நீண்ட நாள்களாக வராமல் இழுத்தடித்த பணவரவுகள் வரலாம். சில வேலைகளை நீண்ட நேரம் காத்திருந்தாவது முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் கூடும். இழுபறியாக இருந்த காரியங்கள் சுலபமாக முடிவுக்கு வரும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத பால்ய நண்பர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பொன், பொருள்கள் சேரும். நீங்கள் கேட்காமலேயே சில தரப்பில் உதவி கிடைக்கலாம். கடந்த காலத்தில் இழுபறியாக இருந்த சில வேலைகள் எல்லாம் சுலபமாக முடிவுக்கு வரும். அண்டை, அயலார், உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். அலைச்சல் குறைந்து ஓய்வு எடுக்கும் நாள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

### கன்னி

மந்தம், மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு போன்றவற்றால் அவதிப்படலாம். பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர், அற்பத்தனமாக நடந்து கொள்வதால் எரிச்சல் அடையலாம். வாக்குவாதங்களால் பிரச்சினை ஏற்படலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். திட்டமிட்ட வேலைகளில் மாற்றம் செய்யலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வெளியூர் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பிள்ளைகள், சகோதரர்கள், நிலம், பூமி தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். வண்டி வாகனங்களில் செல்லும் போது அதிக வேகத்தைத் தவிர்க்க வேண்டும். ஆடம்பரச் செலவுகளாலும் பணம் கரையலாம். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு வேலைப்பளு அதிகரிக்கும். எந்த விடயத்திலும் அவசரப்பட்டு முடிவு எடுத்து விட்டு அவதிப்படலாம் அல்லது முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். அரசியல்வாதிகள் வீண் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். எதிர்பார்த்த நல்ல செய்தி வருவது தள்ளிப் போகலாம். காரிய வெற்றி உண்டு. பணம் வரும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.

### துலாம்

ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சோர்வின்றி, நாள் முழுவதும் சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள். தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். சிறிய வேலை ஒன்றுக்குப் பலமுறை அலைய நேரிடலாம். பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். ஒரு செலவைச் சரிக்கட்டி விட்டோம் என திருப்தி அடையும் நேரத்தில், மற்றொரு செலவு புதிதாக உருவாகி விடும். கடன் விவகாரங்களாலும் கவலை அடையலாம். நிலைமையைச் சமாளிக்கும் வல்லமை அதிகரிக்கும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், சந்தோசமான செயற்பாடுகள் போன்றவற்றால் சிரமம் உண்டு. கொடுக்கல் வாங்கல்களில் நாணயத்தைக் காப்பாற்றுவதும் சிக்கலே. கலகலப்பான அனுபவம் உண்டு. பக்தி நாட்டம் அதிகரிக்கும்

### விருச்சிகம்

எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். பல மணி நேரமாகும் என நினைத்த காரியங்கள் எல்லாம் சுலபமாக முடிவுக்கு வரும். போட்டி, எதிர்ப்பு குறையும். சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் முட்டுக்கட்டை நிலைமை உருவாகலாம். உறவுப் பெண்கள், சகோதரிகள், தாயார் வழியிலும் செலவுகள், சிரமங்கள் நேரிடலாம். வாகனங்கள், வீட்டு உபயோகப் பொருள்கள் பழுதாகி செலவு வைக்கலாம். கணவன் மனைவி உறவில் அவ்வப்போது, சிறு சிறு சலப்புகள் ஏற்பட்டுப் பின்னர் சரியாகும். அரசியல் தொடர்புடையவர்கள் நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். எதிலும் பொறுமை, நிதானம் அவசியம்.

### தனுசு

சில பிரச்சினைகளில் முடிவுகள் எடுக்க முடியாமல், ஒன்றுக்கும் மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். சில பொருள்களை மறதியாக வைத்து விட்டுத் தேடலாம். புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் சேர்ப்பீர்கள். போட்டிகள், எதிர்ப்புகள் இல்லாமல் சில வேலைகளை சுலபமாக முடிப்பீர்கள். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள். பணவரவு களைப் பெறலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம், அனு கூலம் பெறலாம். மாற்று மதத்தினர் வழியில் எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கும். போட் டிகள், எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளின் கல்வி முயற்சிகளில் நினைத்தது நடக்கலாம். பெரிய மனிதர்கள் சிலர் உங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்வர். உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமைப்பட வைக்கும். பூர்வீக சொத்துக்களாலும் ஆதாயம் பெறலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். நண்பர்கள் வட்டம் விரிவடையும்.

### மகரம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கி விட்டுப் பின்னர் அவதிப்படலாம். உறவினர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவு செய்யலாம். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தி கேட்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல் அதை நீங்களே செய்ய நேரிடலாம். தொழில் ரீதியாக அடிக்கடி பரபரப்பாகச் செயற்படும் சூழ்நிலை உருவாகும். உங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி மற்றவர்கள் காரியம் சாதிக்கலாம். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் வரும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றாலும் சந்தோஷம் அடைவீர்கள். சிலர் வீடு மாற்றத்தை எதிர்கொள்ளலாம். சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். தேக ஆரோக்கியமும் தெம்பு, உற்சாகம் தரும். மற்றவர்களை நம்பி எதையும் செய்ய வேண்டாம். பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷமான செய்தி கேட்கலாம்.

### கும்பம்

புத்துணர்ச்சி, தெம்புடன் செயற்படுவீர்கள். பல நாள்களாக மனதில் நினைத்திருந்த ஆசை ஒன்று நிறைவுக்கு வரும். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். புதிய இடங்கள் சிலவற்றுக்கு செல்லும் சூழ்நிலை உருவாகும். பணவரவுகளைப் பெறலாம். உடன் பணிபுரிவோர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். உறவினர்கள் வழியில் செலவு நேரும். உடன் பிறப்புகளுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். அவர்களுக்காகச் சில நல்ல காரியங்களைச் செய்ய நேரிடலாம். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. எந்த காரியத்தையும் திட்டமிட்டபடி செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். புதிய விடயங்களில் ஈடுபடுவதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். பணப்புழக்கமும் திருப்திகரமாக இருக்காது. பல நேரங்களில் நீங்கள் எதிர்பாராத சிலரே உங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கலாம். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கும் ஆள்படலாம்.

### மீனம்

திட்டமிட்டதை விடச் சில காரியங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். விருந்தினர்கள் வருகையால் உங்களின் வழக்கமான வேலைகளை மாற்றி அமைக்கலாம். சில பொருள்களை கடனுக்கு வாங்கலாம். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்தலாம். சிலரை கேலி, கிண்டல் பேசி அவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். மனதில் இனம்புரியாத உற்சாகம், சந்தோஷம் குடிகொள்ளும். தம்பதியர் இடையே பாசம் மேலிடும். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். உறவினர், நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளின் கல்விக்காக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். விலை உயர்ந்த பொருள்கள் சேரும். நெடுநாள்களாக வராமல் இழுத்தடித்த பணவரவு வரலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மாற்று மதத்தினரால் அனுகூலம் பெறலாம். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு. வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபையின் செயற்பாடுகளில் ஒட்டுசுட்டான் மக்கள் அதிருப்தி

முல்லைத்தீவு, ஜூன் 5

பொதுமக்களிடமிருந்து வரியை ஒழுங்காக அறவிடும் ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் எந்த ஒரு பணியையும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேற்கொள்வதில்லையெனப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கற்சிலைமடு பிரதான சந்தியில் வர்த்தக நிலையங்கள், கூட்டுறவுச் சங்கம், ஆயுர்வேத சிகிச்சை நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன இயங்கி வருகின்றன.

அத்துடன் பஸ் தரிப்பு நிலையமும் இங்கேதான் அமைந்துள்ளது. இதனால் அதிகமான மக்கள் தினமும் இந்த இடத்தில் கூடி வருகின்றனர். ஆனால் இவர்களுக்கென மலசலகூடமொன்று இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் கிராம அபிவிருத்திச் சங்க வளாகம் கழிப்பறையாக மாறியுள்ளது. இதனால் இந்தப் பகுதியில் பெரும் சுகாதாரக் குறைபாடு தோன்றியுள்ளது. பல்வேறு தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாய நிலையும் உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு இந்தப் பகுதியில் மலசலகூடமொன்று அமைக்குமாறு பொதுமக்களால். பிரதேச சபையினரிடம் பலமுறை வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் இதுவரை கவனத்தில் கொள்ளப்படவில்லை.

பிரதேச மக்களின் சேவைக்கென உள்ள பிரதேச சபையினர் தமது வேண்டுகோளை நிறைவேற்றித் தராமை தமக்கு வேதனையைத் தந்துள்ளதாக இந்தப் பகுதி மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

(க-500)

# பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் விநியோகம்

மன்னார், ஜூன் 5

பூநகரி பிரதேச செயலகத்திலுள்ள சிறிய உழவு இயந்திர பவுசர் மூலமாக பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

பிரதேச செயலகத்திலிருந்து ஆறு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தெளிகரை எனுமிடத்திலுள்ள கிணற்றிலிருந்து நன்னீரைப் பெற்று இவ்வாறு விநியோகித்து வருகின்றனர்.

தற்போது கடுமையான வறட்சிக் காலமாகையால் குடிதண்ணீருக்கான தேவை பெருமளவில் எழுந்துள்ளது.

பெரிய பவுசர்கள் பிரதேச செயலகத்திடம் இருக்குமாயின் பொதுமக்களுக்குச் சிறந்த குடிதண்ணீர் சேவையை வழங்க முடியுமென சமூக ஆர்வலர்களால் கூறப்படுகிறது.

முட்கொம்பன் என்னுமிடத்தில் சிறந்த நன்னீர்க் கிணறு இருக்கின்ற போதும் பெரிய பவுசர் வசதி இல்லாத காரணத்தால் பிரதேச செயலகத்தால் குடிதண்ணீரைச் சிறப்பாக வழங்க முடியாதுள்ளது.

பூநகரி மக்களின் நீண்டநாள் பிரச்சினைகளில் ஒன்றாகிய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரச அரசசார்பற்ற துறைகள் உதவ வேண்டுமென இந்தப் பிரதேசத்தின் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-121)

# விளையாட்டு மைதானங்களை பயன்படுத்த முடியாத நிலை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விளையாட்டு மைதானங்களை இளைஞர், யுவதிகள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

இராணுவத்தினர் இந்த விளையாட்டு மைதானங்களைத் தமது விளையாட்டு மைதானங்களாக பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாகவே மாலை வேளைகளிலும் கூட இந்தப் பகுதி விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் இந்த மைதானங்களை பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானம், கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம், வட்டக்கச்சி மகாவித்தியாலய விளையாட்டு மைதானம் ஆகிய பாடசாலைகளுக்குரிய விளையாட்டு மைதானங்களையும் படையினர் மாலை நேரங்களில் பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக இளைஞர், யுவதிகள் விளையாட்டு மைதானங்களின்றிப் பெரிதும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த மாவட்டத்தில் பெருமளவு மக்கள் மீள்குடியமர்ந்த நிலையில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால் போதிய மைதானங்கள் இல்லாத காரணத்தால் வீரர்கள் உரிய பயிற்சிகளைப் பெற முடியாத நிலை காணப்படுவது அவர்களின் மனங்களில் வேதனையைத் தோற்றுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-426)

# யுத்த சூழலில் விளையாட்டில் இருந்த ஆர்வம் சமாதான சூழ்நிலையில் காணப்படவில்லை

## நானாட்டான் பிரதேச சபைச் செயலாளர் கூறுகிறார்

மன்னார், ஜூன் 5

யுத்த சூழ்நிலையில் விளையாட்டின் மீது இருந்த ஆர்வம் தற்போது சமாதான சூழ்நிலையில் இல்லை எனக் கூறியிருக்கிறார் நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் எ.ரி. அன்புராஜ் லம்பேட்.

நானாட்டான் பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி நிகழ்வுகள் அண்மையில் நானாட்டான் பிரதேச சபை பொது மைதானத்தில் இடம்பெற்றது. இதன் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்த சூழ்நிலையில் விளையாட்டின் மீது எமது இளைஞர்கள் கொண்ட ஆர்வம் தற்போது சமாதான சூழ்நிலையில் இல்லை. இந்நிலையை மாற்ற வேண்டுமாயின் விளையாட்டுக் கழகங்கள் மீள் புனரமைப்புச் செய்யப்படல் வேண்டும்.

இளைஞர்களின் விளையாட்டுத் தொடர்பான விடயங்களுக்கு எமது பிரதேச சபையின் எதிர்காலத் திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படும். எமது பிரதேச வீரர்கள், வீராங்கனைகள் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பதக்கங்களை வெல்ல வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார். வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. மேலும் 2010 ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு பரிசில்கள் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோநோகராதலிங்கம் ஆகியோரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(க-601)

## பெருமையான சாதனை...



செம்பு நடனம்: கரைச்சி கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதலிடத்தையும், கிளிநொச்சி வலய மட்டத்தில் இரண்டாவது இடத்தையும் பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரியின் செம்பு நடனக் குழுவினர் கல்லூரி அதிபர் மற்றும் பெறுப்பாசிரியர்களுடன் காணப்படுகின்றனர்.

(405)

# மாயவனூர் ரங்கநாதர் ஆலய சங்காபிஷேகம்

வட்டக்கச்சி, ஜூன் 5

மாயவனூர் ரங்கனாதர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் சங்காபிஷேக நிகழ்வு ஆரம்பமாகி மாலை வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நண்பகல் சங்காபிஷேகமும் ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீரங்கநாதர் உற்சவ மூர்த்திகளுக்கு சிறப்பு பிரதிஷ்டா அபிஷேகமும் இடம்பெறும். நண்பகல் அன்னதான வைபவம் இடம்பெற இருக்கிறது.

மாலை எம்பெருமானுக்கு திருக்கல்யாண வைபவம் இடம்பெற்று பூந்தண்டிகையில் வெளிவீதி வலம் வருகின்ற அதி உன்னத அருட்காட்சி இடம்பெறவுள்ளது.

எனவே அடியார்கள் ஆலயத்துக்கு வருகை தந்து எம்பெருமானின் திருவருளைப் பெற்றேகுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

( 450)

# நிக்கொட் திட்டத்தின் கீழ் பல கட்டுமானங்கள் முல்லைத்தீவில்

முல்லைத்தீவு, ஜூன் 5

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நிக்கொட் II திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் பலவித கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியினதும், இலங்கை அரசினதும் நிதியுதவியுடன் கீழ் வரும் கட்டுமானங்கள் இவ்வாறாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் விசுவமடு மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதி மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

மற்றும் துணுக்காய் மகாவித்தியாலயம், ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் ஆசிரியர் விடுதிகள் மீளமைப்புச் செய்யப்படவுள்ளன.

அத்துடன் கரைதுறைப்பற்று பிரதேச செயல[illegible]வில் உத்தியோகத்தர் விடுதியில் தொகுதி I, II என்பன மீள் கட்டுமானம் செய்யப்படவுள்ளன. இவற்றுக்கான கேள்விப் பத்திரங்களை ஜூன் 17 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வன்னிப் பிரதேசத்தில் அரச துறைக் கட்டுமானங்கள் மீளமைக்கப்பட்டும், புதிதாக நிர்மாணிக்கப்[illegible] தக்கது.

(க-121)

# மன்னாரில் சுருக்கு வலை பயன்படுத்துவதற்கு அனுமதி

மன்னார், ஜூன் 5

மன்னார் மாவட்டத்தில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை தற்போது நீக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட உதவிக் கடற்றொழில் பணிப்பாளர் பி.எஸ்.மிராண்டா தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்துக்கு அமைவாக வெளிச்சம் பயன்படுத்தப்படாது பகல் வேளைகளில் மட்டும் சுருக்கு வலையினைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே சுருக்கு வலையைப் பயன்படுத்த முடியும். அத்துடன் கரையில் இருந்து 10 மைலுக்கு அப்பால் குறித்த வலையைப் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட முடியும். இந்த வலையில் வலைக் கண்ணளவு ஒன்றரை அங்குலத்துக்கும் அதிகமாக இருத்தல் வேண்டும் போன்ற நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இதனை மீறிச் சுருக்கு வலையைப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரியாலை நாவலடியில், 19 ஏக்கர் மேட்டுக் காணி விற்பனைக்குண்டு. A - 9 வீதிக்கு 1 KM தூரத்தில் வீதி வசதிகளோடு, தொழிற்சாலை, களஞ்சியசாலை, குடியிருப்பு தென்னைப் பயிர்ச் செய்கை என்பவற்றுக்கு உகந்தது.

தொடர்பு: 0112584797

## VISA - வீசா
### Consultancy Service

**UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,**

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

SIC, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

## தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள எமது ஸ்தாபனத்துக்கு SALES BOY தேவை. ஓரளவு முன்னனுபவம் விரும்பத்தக்கது திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
வி.இல.4149
C/o உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி:
suren@metrohomes.lk

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgவுக்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய NO.1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 08.06.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

- றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ஜென்ஸி பாம், பருத்தித்துறை. (0773541771)
- துர்க்கா பாம், சுன்னாகம்.
- P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

தொ.பே:- 021 222 2867, 0776090926.

## இந்தியாவில் உயர்கல்வி
## STUDY IN INDIA

**Anna University (SSM Eng.College)**
**Bangalore University (Indo Asian Academy)**
**Periyar University (SSM Arts & Sci.College)**

**Available DEGREE / ENGINEERING Courses**

Mechanical Engineering, Electrical, Electronics, Communication Engineering, Computer Science, Information Technology, Textile Technology & Chemistry, Bio Technology, Microbiology, BBA, B.com, Computer Applications, BBM, Bsc

மேற்கூறப்பட்ட பாடநெறிகள் யாவும் Sri Lanka University Grant Commission இனால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் இவற்றை பூர்த்தி செய்யும் மாணவர்கள் எதிர்காலத்தில் Canada, Australia, New Zealand, UK, USA, ஆகிய நாடுகளில் குடும்ப சகிதம் வதிவுரிமை (PR) பெற வாய்ப்புண்டு.

- IELTS தேவையில்லை
- Bank Sponsor தேவையில்லை
- தகமை : G.C.E A/L - 3 Passes

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் 3 வருட Govt. Diploma (Engineering, Bio, Management) பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

**Call : 0777 767818 / 0776 209887**

SIC CENTER, 101/35, STANLY ROAD, JAFFNA

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் Londan PR வயது 34, திருவோணம், 8 இல் செவ்வாய், மொத்த பாவம் 69 உயரம் 5'11'' கொண்ட மணமகனுக்கு அழகிய சிவந்த மணமகள் தேவை. தொடர்பு : 0724439769

## German swiss மொழிகள்

German swiss மொழிகள் தமிழ். மொழி பெயர்ப்புடன் Embassy யால் கேட்கப்படும் exam இற்கு ஏற்றவாறு நடைபெறுகிறது. தங்குமிட வசதிகளும் ஏற்படுத்தித்தரப்படும்.

10, palaly Road, Jaffna T.P: 0771604823

## காணி விற்பனைக்குண்டு

யாழ்.நகரில் சுபாஸ் Hotel இற்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் 2பரப்புக் காணி உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்க: 0777556244

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## கடைகள் வாடகைக்கு

பிறவுண் வீதி, ஆடியபாதம் வீதி ஆகியவைகள் சந்திக்கும் இடத்தில் நல்லூர் பிரதேச சபையின் உப அலுவலகத்துக்குப் பின்னால் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கு அருகில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் 300 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0770759874, 0773502612.

## விற்பனைக்கு

அண்மையில் புதிதாக வாங்கிய 'ஜமாட்டோ' 100 CC பெண்களுக்கான மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

தொடர்பு: 021 321 7122

## VACANCY

**CIVIL ENGINEER:** B .Sc (ENG).
2 வருடத்துக்குக் குறையாத அனுபவம்

**MECHANICAL FOREMAN:**
J TO / NCT (MECHANICAL)
3வருடத்துக்குக் குறையாத அனுபவம்

**ACCOUNT CLERK:** 2 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.
கொம்பியூட்டர், ஆங்கில அறிவு அவசியம்.

**FOUNDRY TRAINEES:**
வார்ப்பு, கடைச்சல் வேலைக்கு பயிலுனர்கள் தேவை.

கட்டட உப- ஒப்பந்தகாரர்கள், தச்சு வேலையாள்கள் மேசன், உதவியாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
28, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.
T.P: 021 2226781

## கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட சிறந்த வேலையாள்கள் மூலம் மாபிள் பதித்தல்

**Plumbing, Pantry, Cupboard, Electric work, Colour Washing, மேசன், தச்சுவேலை**

மிகத் தரமான முறையில் குறித்த காலத்தில் மலிவாகச் செய்துகொடுக்கப்படும்.
0777556244

## பதவி வெற்றிடம்

பனிக்கட்டி ஆலைக்கு உதவியாளர்கள் தேவை. சுயவிவரங்களோடு கிழமை நாள்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நேரில் வரவும்.

பனிக்கட்டி ஆலை,
651/2, கடற்கரை வீதி,
குருநகர்.
(5 மாடிக் கட்டடத்துக்கு முன்பாக)

## மணமகள் தேவை

1980 புனர்பூசம் 2 இல் பிறந்த பட்டதாரி ஆசிரியருக்கு படித்த தொழில் புரியும் ஆண்டு 1984 ம் அதன் பின்பும் பிறந்த பெண் தேவை. கிரக- நவாம்ச நிலையுடன் மகா திசை இருப்பு அடங்கிய குறிப்புடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: [illegible]

## செயற்திட்ட வளங்கள்
## PROJECT RESOURCES

உங்கள் சமூக நலச் செயற்திட்டங்களுக்கான கீழ்வரும் வளங்களைப் பெறுவதற்கு எமது ஆலோசனைச் சேவையை நாடுங்கள்.

- செயற்திட்ட நிதி வளங்கள்
- செயற்திட்ட மூலதன வளங்கள்
- செயற்திட்ட காரியாலய வளங்கள்
- கல்விசார் செயற்திட்ட வளங்கள்
- சமூக நல செயற்திட்ட வளங்கள்
- முன்பள்ளி கல்விசார் வளங்கள்

பழைய சமூக நல நிறுவனங்கள் மாத்திரமன்றி புதிய நிறுவனங்களும் புதிதாக நிறு வனங்களை அமைக்க விரும்புவர்களும் பயனடையலாம். மேலதிக விபரங்களுக்கு:

**UNIFEC Consultants,**
No.6/2/5, Sri Ratnapala Mw,
Katugastota. Tel: 081 4989736

### கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல விடுதியுள்ள தனியார் வைத்தியசாலை உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே விடுதியுள்ள தனியார் வைத்தியாசலை உரிமையாளர்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## மரண அறிவித்தல்கள்



### நவரத்தினம் சிவம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் இல.10/2, நடுத்தெருலேன், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் சிவம் நேற்று (04.06.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்- நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், விமலராணி (யாழ்.கட்டடத் திணைக்களம்) அவர்களின் பாசமிகு கணவரும், சத்தியேந்திரா (யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி), டர்சிகா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான குணபாலசிங்கம், நல்லைநாயகி, விமலாதேவி மற்றும் குகமூர்த்தி சண்முகராசா (பாபு), தவபாலன், தயாநிதி, ஸ்ரீகௌரி, லீலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திலகராணி, மகேந்திரன், தெய்வேந்திரன், கமலாம்பிகை காலஞ்சென்ற ஜெயராணி மற்றும் சறோஜினிதேவி, யோகராசா, பத்மினி, செல்வமலர், சண்முகலிங்கம், ரயனி, பாபு, சிங்கராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.06.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 4.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10/2, நடுத்தெருலேன்,
அரியாலை. (4884) (49,27)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு



கந்தர்மடம், அன்னசத்திர ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி. திருநாவுக்கரசு (03.06.2011) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தட்சணாமூர்த்தி -பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற லிகிதர், கச்சேரி, யாழ்.) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், பரமேஸ்வரி, பாலசுந்தரம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் சத்தியபாமா (ஆசிரியை, யா/ முத்துத்தம்பி ம.வி.), சத்தியரூபி (உப அதிபர், யாழ். இந்துக் கல்லூரி), சத்தியகலா (ஆசிரியை, யா/ ஆனைப்பந்தி மெ.மி.வி.) ஆகியோரின் அருமைத் தாயும், சிவகுமாரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் பௌதிகவியல் துறை யாழ்.பல்கலைக்கழகம்), Rtn.சுரேந்திரன் (தொழில் நுட்ப உத்தி யோகத்தர், யாழ். மாநகர சபை), அருணகிரிநாதன் (ஆங்கிலப் போதனாசிரியர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியும், திவாகரன் (மணியம் இம்பெக்ஸ்), அபிரா (தொழில் உத்தியோகத்தர், தொழில் திணைக்களம்), சிவஜா (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), டிலானி (கொமர்ஷல் வங்கி, நெல்லியடி), மகிழினி (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஆதித்யா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி, ஆருத்ரன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.06.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 9.30 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46, அன்ன சத்திர ஒழுங்கை,
கந்தர் மடம், யாழ்ப்பாணம். (4585)

தகவல்:
குடும்பத்தினர்

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் 09.06.2011 காலை விநியோகிக்கப்படும் முன் பதிவு செய்யவும்.

- ★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர் சென்ற ஆறே



பண்டைய தமிழர்களுடைய போக்குவரத்துச் சாதனங்களைப் பற்றிய குறிப்புகள் சங்கப்பாடல்களிலே உள்ளன. பல்வேறு காரணங்களுக்காகப் பயணிக்க வேண்டியிருந்தமையால் அவை பற்றிய செய்திகளும் குறிப்புகளும் பாடல்களிலே இணைக்கப்பட்டுள்ளன. சிறப்பாகப் பாலை நிலம் பற்றிய பாடல்களில் ஆண்கள் பயணம் மேற்கொள்ளும்போது கால் நடையாகவோ அல்லது தேரிலோ செல்வதாகப் பாடல்களில் குறிப்பு உண்டு. கால்நடையாகச் செல்வதைக் 'காடிறந்தோரே' என்ற தொடரால் பல பாடல்கள் குறிப்பிட்டுள்ளன. 'இறத்தல்' என்ற சொல் தற்போது உயிர் விடுதல் என்ற பொருள் தருவதாக உள்ளது. அதாவது இவ்வுலக வாழ்விலிருந்து மேலுலகம் செல்லல் எனவும் கருதப்படுகிறது. ஆனால் 'இறத்தல்' என்ற சொல் 'கடந்து செல்லுதல்' என்னும் பொருளில் சங்க அகப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கால்நடையாகப் பயணம் மேற்கொள்ளும் போது மலை, காடு, ஆறு என்பவற்றைக் கடந்து செல்வது மிகக் கடினமாக இருக்கும். சிலவேளைகளில் போனவர் உயிருடன் திரும்பி வராத நிலையும் ஏற்பட்டிருக்கலாம். எனவே 'இறத்தல்' என்ற சொற்பயன்பாடு அத்தகைய பொருளையும் உட்கிடையாகக் கொண்டமைந்ததெனலாம். இதே போன்று பயணிக்கும்போது தேர் பயன்படுத்தப்பட்டதையும் பாடல்கள் குறிப்பிடுகின்றன. குதிரைகள் பூட்டிய தேரில் ஆண் பயணிக்கும் பாடல் ஒன்று பின்வருமாறு அமைந்துள்ளது.

*''எறும்பி யளையிற் குறும்பல் சுனைய*
*உலைக் கல் அன்ன பாறை ஏறிக்*
*கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்*
*கவலைத் தென்பவர் தேர் சென்ற ஆறே*
*அது மற்றவலங் கொள்ளாது*
*நொதுமற் கழறுமிங் வழங்க லூரே''*

*[குறுந்தொகை: 12]*

இந்தப் பாடலில் இரு செய்திகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. ஒன்று ஆண் சென்ற வழி. மற்றது ஊர் அலர். பயணிக்கும் செயற்பாட்டைச் 'செலவு' எனக் குறிப்பிடுவது சங்கச் செய்யுள் மரபாகும். இந்தப் பாடலில் ஆண் தேரிற் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர் செல்லும் வழி 'ஆறு' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக 'ஆறு' என்ற சொல் நீரோட்டத்தைக் குறிக்கும். ஆனால் 'வழி' என்பதற்கு அச்சொல் பொருள் தருவதற்கு ஒரு காரணம் உண்டு. மலையிலிருந்து ஊற்றெடுத்து ஓடிவரும் நீரோட்டம் தனக்கென ஒரு வழியை அமைத்துக் கொண்டு ஓடிவரும். அதே போல மனிதனும் தன்னுடைய போக்குவரவுக்கென ஒரு நீண்டதொரு வழியை ஏற்படுத்தியபோது அதுவும் ஆறென அழைக்கப்பட்டது. இந்தப் பாடல் தேர் செல்லும் வழியை முதலில் காட்சிப்படுத்து கிறது.

**இலக்கியக் காட்சி – 88**

எறும்புப் புற்றுப் போல அமைந்த சிறிய குன்றுகளில் பல நீர்ச்சுனைகள் உள்ளன. அந்த விடத்திலே கொல்லனுடைய மிகச் சூடான உலைக்கல் போன்ற பாறையின் மேல் ஏறியிருந்து கொடிய வில்லையுடைய எயினர் தங்களுடைய கூரான அம்புகளால் வழிப்போக்கரைக் கொலை செய்வர். அந்த வழியிலே பல கிளைகளாக மேலும் பல வழிகள் உண்டென்று சொல்கின்றனர். அந்த வழியிலே என் காதலருடைய தேரும் செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறு தேர் செல்லும் வழிபற்றி அவள் கேள்வியுற்ற செய்திகளை எண்ணித் துன்பப்படுகிறாள்.

இயற்கையான தோற்றங்களைப் பற்றி அவள் கூறும் செய்திகள் பயணத்தின் கடினமான நிலையை உணர்த்துகின்றன. அக்காலத்தில் வழிபோக்குவரத்தில் ஆறலைத்தலும் சூறையாடலும் பாலை நிலத்திலே நடைபெற்றுள்ளன. எனவே தனது காதலனுக்கும் அவர்களால் ஏதாவது ஊறு நேரிடுமோ என அஞ்சுகிறாள்.

அடுத்த காட்சி அயலவர்களுடைய அலராகும். பெண்ணோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ஆண் பலநாள்களாக அவளைக் காண்பதற்கு வரவில்லை. இதனால் அயலவர்கள் அவனைப் பற்றியும் அவளைப் பற்றியும் பலவாறு தூற்றிப் பேசுகின்றனர். அதை அவளால் பொறுக்க முடியவில்லை. எல்லோரும் அதைப்பற்றியே பேசிக் கொண்டிருக்க அவள் அவன் சென்ற வழிகளிடையே உள்ள உயிராபத்தான நிலைமை பற்றி எண்ணிக் கவலைப்படுகிறாள். கழறும் 'இவ் வழங்கல் ஊரே' என்ற தொடர் ஊரவர்கள் எல்லோரும் கூடிப் பேசுவதைக் குறிக்கிறது. 'கழறல்' என்பது பேரொலியுடன் பேசுவதைக் குறிக்கும். 'அழங்கல்' என்பது துன்பப்படுத்தலாம். தன்னைப் பிரிந்து பாலை நிலத்தினூடாகப் பயணித்தவனுடைய நிலையை எண்ணி அவள் கவலைப்படும்போது அவள் கவலையைப் போக்க ஆறுதல் மொழிகளைக் கூறாமல் அவனைப் பற்றிக் குறை கூறும்போது மேலும் அவளுடைய துன்பம் அதிகரிக்கின்றது. 'அவலங்கொள்ளாது' என்ற தொடர் இதனை நன்கு புலப்படுத்துகின்றது. 'அவலம்' என்பது செய்வதறியாத திக்கற்ற நிலையாகும். இதன் மூலம் அவளுக்கும் அவனுக்குமிடையேயுள்ள தொடர்பு அவளுடைய பெற்றோர் அறியாத நிலையிலே உள்ளமை புலப்படுகின்றது.

பாலை நிலத்தில் வாழ்வோரது வாழ்வியல் இந்தப் பாடலினூடாகப் புலப்படுத்தப்பட்டுள்ளது. பாலை நிலமென்பது வரண்ட நிலமாகும். தரைத் தோற்றத்தைப் பற்றிய உவமை, தோற்றத்தைத் தெளிவாக விளக்குகிறது. மலைப்பாதையாக அல்லாமல் சிறிய குன்றுகளின் தோற்றம் தொலைநோக்கில் எறும்புப்புற்று போலத் தோன்றுகிறது. வெப்பமான பாறையின் தோற்றமும் உவமை மூலம் விளக்கப்பட்டுள்ளது. இரும்பை நெருப்பிலே காய்ச்சிப்பதப்படுத்துவதற்கு அதை ஒரு கல்லிலே வைத்து அடிப்பர். அப்போது அந்தக் கல்லும் சூடேறும். அத்தகைய அளவு வெப்பமுள்ள பாறைகளே பால நிலத்திலிருக்கின்றனவாம். பாலை நிலத்தின் வெப்ப நிலை இதனால் புலப்படுத்தப்படுகிறது. பாலை நிலத்து வாழ்வோர் எயினர் என அழைக்கப்பட்டனர். வேட்டையாடுகின்ற அவர்களுடைய வில்லின் திறமை பற்றிய குறிப்பும் அவர்களது கொலைத் தொழில் வல்லமையை நன்கு விளக்கிக் காட்டப்படுகிறது. 'மாய்த்தல்' என்ற சொல் தவறாது கொலை செய்தல் எனப் பொருள்படும். மறைந்து நின்று வழிப்போக்கரை அம்பினால் கொன்று பொருள் பறிப்பது அவர்களுடைய தொழிலாகும்.

பாடலின் மொழிநடை பெண்ணின் உள்ளத்து உணர்வுகளைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது. பிரிவு நிலையில் பிறர் மீது ஏற்படும் சினம் 'ஊர்' என ஆகுபெயராக மக்கள் எல்லோரையும் அடக்கி நிற்கிறது. பெண்ணின் தனிமையும் பிரிவும் பிறர் அறியாதது என்பதைப் புலவர் நுட்பமாகப் புலப்படுத்தியுள்ளார். காதலன் பிரிந்து சென்ற காலத்தை வெம்மையைப் புலப்படுத்த உலைக்கல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. வழியருமையையும் பருவத்தையும் நினைத் துப் பெண் வருந்துகிறாள். வீட்டில் இருக்கும் பெண் பிரிந்து போனவன் திரும்பி வரும் காலத்தை எண்ணிக் காத்தி ருக்கிறாள். அவளைப் போலவே ஊர் மக்களும் அவள் வரவை எதிர்நோக்கியிருந்துள்ளனர். தேரிலே வந்து செல்லும் ஆண் நீண்ட நாள்களாக வராதபோது எல்லோருக்கும் அவன் மேல் ஐயம் ஏற்படுகிறது.

எனவே அதைப் பற்றியே எல்லோரும் பேசுகின்றனர். ஊரைப் பொறுத்தவரையில் ஒழுக்கம் பேணப்பட வேண்டுமென்பதே முதன்மையாக உள்ளது. ஆணும் பெண்ணும் நட்புப் பூண்டால் அது திருமணத்தில் நிறைவு பெறவேண்டும். இல்லாவிடில் பெண் காலமெல்லாம் தனியே வாழநேரிடும்.

இதனாலேயே பாலைப் பாடல்களில் பிரிவு பெரும் துன்பமாகக் காட்சிப்படுத்தப்படுகிறது எனலாம். இந்தப் பாடலை இயற்றியவர் ஓதலாந்தையார் என்னும் புலவராவார். அவருடைய உள்ளத்தில் ஆண், பெண் உறவு பற்றிய தொடர்பு ஊர் முழுவதும் கண்காணிக்கும் ஒரு விடயமாகவே இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தே நிலவியுள்ளது.



**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

---

# வெல்லும் உணர்வுகள்




**நெடுந்தீவு மகேஷ்**

மனம் கலங்கி உடல் கூனி வாத்தியார் உட்கார்ந்திருந்தார். அப்புவும் தன்னால் ஆனவரை எல்லா முயற்சிகளையும் செய்து பார்த்தும் இயலாநிலையில் சோர்ந்து சுருங்கிப் போனார். மகள் தாமரைக்கும் அது தெரிந்தது. மானம் மரியாதை எல்லாமே போய்விட்டது என்று எண்ணும் போதெல்லாம் வெளியே தலைகாட்ட வெட்கமாக இருந்தது.

வீட்டில் எல்லோரிடத்திலும் ஏதோ பெறுமதி மிக்க பொருள் ஒன்றினைத் தொலைத்து விட்டதான இழப்பின் ஏக்கம். தாமரையின் அண்ணனும் இரண்டு தங்கைகளும் இந்தச் செய்தியை அறிந்த நேரம் தொடக்கம் மௌனமாகத் தம் துக்கத்தையும் துயரத்தையும் தமக்குள்ளாகவே அட்க்கிக்கொண்டு வெதும்பினர்.

தாமரையின் முகத்தைப் பார்ப்பதும் அவளது துயரக்கோடுகள் கிழித்த வதனத்தில் விரியும் சொல்ல இயலாத வேதனையைக் காண்பதும் அவர்களுக்கு இயலாமல் போயிற்று. அவள் அவர்கள் முன்னே தோன்றும் துணிவற்று ஓர் ஓரத்தில் ஒதுங்கிக் கிடந்தனர்.

காதலென்றும் நட்பென்றும் தாமரையின் பின்னால் அலைந்து திரிந்த ராகவன் எந்தப் பதிலும் சொல்லாமல் தனக்கும் தாமரைக்கும் இருந்த தொடர்புகள் ஏதும் அறியாதவன்போல் மணியம் வாத்தியாரிடம் தனது மறுப்பைத் தெரிவித்திருந்தான்.

அவனோ தன் தவறை உணர்ந்து கொண்டு அவளை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லை என்பது வாத்தியாருக்குத் தெரிந்தது. இதுபற்றி ராகவனின் குடும்பத்தினரிடம் எடுத்துக்கூறி நியாயம் கேட்கும் துணிவும் வாத்தியாரிடம் இல்லை.

அவனோ தான் ஓர் ஆண்மகன் என்றும் ஆண்மகன் என்பவன் இப்படித்தான் ஆணவம் கொண்ட நினைப்போடு பதில் சொல்ல வேண்டும் என்றும் எண்ணினானோ தெரியவில்லை. வாத்தியார் தனது மகளின் நிலையைச் சொல்லி ராகவனிடத்தில் கெஞ்சி நின்றபோதும் அவன் சிறிதும் வாத்தியாரின் வேண்டுதலுக்கு இணங்கவில்லை.

முள்ளில் சிக்கிய துணியென- துணியைச் சிக்குறவைத்த முள்ளென இருவர் நிலையிலும் ஒற்றுமை இருப்பினும் பாதிப்புக்கு உள்ளானதென்னவோ துணிதான். தனது மகள்தான். தவறு மகளுடையதே என்பது அவரது திடமான முடிவு. மகள் தாமரையோ அவனை நம்பித் தன்னையே அவனிடம் இழந்த செயலை எண்ணி வருந்தினாள். வாத்தியாரின் குடும்பமோ வெட்கத்தால், அவமானத்தால் சமூகத்தின் முன்னே தலைகாட்ட இயலாமல் தவித்தது.

இந்த நிலையில் தாமரையின் வீட்டில் ஒவ்வொருவருமே தம்மைப்பற்றி மாத்திரமல்ல, மற்றவர் பற்றியும் சிந்தித்துத் துயருற்றனர். ஒவ்வொருவரும் அதனைத் தமக்கேற்பட்ட அவமானமாக எடுத்துக் கொண்டு ஏதாவது தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு விடுவார்களோ என்றதொரு பயம் அனைவரையும் பற்றிக் கொண்டது. ஒருவரை ஒருவர் ஏசுவதையோ குற்றம் சொல்வதையோ தவிர்த்துக் கொண்டனர். அமைதியாகத் தமக்குள்ளேயே புளுங்கினர்.

செய்தியோ மிக வேகமாக இரகசியமாகப் பரவி வாலும் கொம்பும் வைத்து வலம்வர ஆரம்பித்தது. நீதியின் வாய்களோ திறத்திருந்தும் வேறு வேறாகி நின்று தத்தமது நியாயங்களைப் பேசின, தர்க்கித்தன, போட்டியிட்டன.

தாமரையின் அழகும் அறிவும் அவளை இந்த விடயத்தில் ஏமாளி ஆக்கிவிட்டதாகவே எண்ணத் தோன்றியது. ஊரெல்லாம் இந்தக் கதைகள் பரவித் தமது மதிப்பையும் மரியாதையையும் குலைத்துவிடப் போகிறதே என்ற பதைபதைப்பு. இத்தனைக்கும் மேலாகத் தாமரையின் செய்கையால் அவளது சகோதரிகள் இருவரினதும் திருமணங்கள் தடைப்பட்டுப் போகலாம் என்ற நினைப்பு வாத்தியாரை மேலும் துயர ஆலைக்குள் இட்டு அரைத்தெடுத்தது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய
05 ஜூன் 2011 ஞாய

# நெடுந்தீவு மக்களை ஆட்டிப் படைக்கும் நெடுந்தீவு-குறிகாட்டுவான் அரச படகுச் சேவை

**லக்ஸ்மன்**

நெடுந்தீவு குறிகாட்டுவான் பயணிகளுக்கான அரச படகுச் சேவையில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தீர்வு காண முடியாத ஒன்று அல்ல. ஆனால் இந்தப் பிரச்சினை இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை போன்று சம்பந்தப்பட்டவர்களால் தீர்வுகாண விரும்பாத ஒன்றாக மாறியுள்ளது என்பதே உண்மை. அண்மையில்தான் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் சுதாகர் குமுதினிப் படகு நல்ல முறையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இனி மேல் சேவையில் தடைகள் இருக்காது என்ற கருத்துப்படத் தகவல் தெரிவித்திருந்தார்.

ஆனால் தற்போதும் குமுதினிப் படகு தனது சேவையைத் திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியாத நிலையே உள்ளது.

இப்போது கடல்வற்றைக் காரணம் காட்டிச் சேவையில் தடங்கல்கள் ஏற்படுத்தப்படுகிறது. இயந்திரக் கோளாறு அல்லது துறைமுகத்தில் கடல்வற்று என்ற காரணங்களால் இந்தச் சேவை பாதிப்படைவதும் துண்டிக்கப்படுவதும் நெடுந்தீவு மக்களுக்கான வருடாந்தப் பண்டிகைத் தினங்கள் போலாகிவிட்டது. கடற்வற்று ஒன்றும் நேற்று அல்லது அதற்கு முதல்நாள் ஆரம்பித்த விடயமல்ல. காலம் காலமாக அது தொடர்ந்து கொண்டு வருகின்றது. கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் ஒவ்வொரு வருடமும் துறைமுகப் பகுதியிலுள்ள சேறு தோண்டும் பணிகளைப் பகிரங்க வேலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதற்கென கூலி ஆள்களைப் பயன்படுத்திவந்துள்ளனர். அந்த நிலை முழுமையாக நின்றுவிட்ட பின்னர் படகுகள் பயணிப்பதில் ஏற்படக் கூடிய சிரமங்களைத் தவிர்க்கக் கூடியதாகத் துறைமுகத்தில் இருந்து சில யார்கள் தூரத்துக்கு அப்பால் படகுகள் நிறுத்தப்படும் துறைமுகத்தின் கிழக்குக் கரையோரமாகப் பயணிகள் வரவழைக்கப்பட்டுப் படகில் ஏற்றப்பட்டு பயணம் தொடரும். இதனால் பயணிகள் படகு வழமையாகப் புறப்படவேண்டிய நேரத்தை விட ½ மணி நேரம் மட்டுமே தாமதமாகிறது. இதில் பயணிகளுக்குப் பெரிய சிரமங்கள் எதுவும் இருந்ததாகக் கூற முடியாது.

முன்னர் இருந்த இந்த நடைமுறை தற்போது செயற்படுத்தப்படுவதில்லை. வற்றிய கடல் மீண்டும் ஊறும்வரை படகு ஊழியர்கள் காத்திருந்தார்கள். அன்று படகில் பணியாற்றியவர்கள் தமது வாழ்க்கையைக் கடலோடு ஆரம்பித்தவர்கள். ஆனால் இன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதிகளில் பணியாற்றியவர்களைப் படகு ஊழியர்களாக நியமித்தால் அவர்களால் படகுச் சேவையைச் சீராகக் கொண்டு நடத்த முடியுமா? எனக் கேட்கிறார்கள் நெடுந்தீவு மக்கள். படகு ஓட்டிகளுக்கான அனுமதிப் பத்திரம்கூட இல்லாதவர்களாக இந்த ஊழியர்கள் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

கடல்வற்று என்பதால் அரச படகு தனது சேவையை வழங்குவதில் சிரமங்கள் உண்டு என்பதற்காகத் திணைக்களம் மௌன விரதம் இருக்க முடியுமா? பயணம் செய்வது நெடுந்தீவு மக்க ளின் உரிமை. அதற்கு மாற்று வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமை. இந்தக் கடமையை வீதி அபிவிருத்தி அதிகார சபை உரிய முறையில் நிறைவேற்றவில்லை. உதாசீனம் செய்கிறது என்பது தான் யதார்த்தம்.

படகுச்சேவை பாதிக்கப்படும் போதும் மக்கள் போக்குவரத்தும் பாதிக்காத வகையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தனது கடமையை நிறைவேற்ற வேண்டும். நெடுந்தீவு பல.நோ.கூ, சங்கப் படகு, அக்குவாட்டி நிறுவனத்தின் படகுகள் நெடுந்தீவில் உள்ளன. இந்தப் படகுகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை பயன்படுத்த வேண்டும்.

இந்தப் படகுகளைச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுவது இன்றியமையாதது. 7 ஆயிரத்து 500 தொடக்கம் 8 ஆயிரம் ரூபா வரை வழங்கினால் இந்தப் படகுகள், அரச படகுக்குப் பதிலாகச் சேவையை வழங்கத் தயாராகவே உள்ளன.

நெடுந்தீவு மக்கள் சிரமின்றித் தமது கடல்பயணத்தை மேற்கொண்டு யாழ். நகரில் முக்கிய அலுவல்களை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

எனவே இங்கு ஒரு சீரான பயணச் சேவை தேவை என்பதை எவரும் மறுக்க முடியாது. சில சந்தர்ப்பங்களில் படகு ஊழியர்களைத் தேடிப் பிடித்துவந்து படகுப் போக்குவரத்து இடம்பெறுவதற்குக் கடற்படையினர் உதவுகிறார்கள். படகுச் சேவைக்குப் பொறுப்பானவர்கள் கண்டுகொள்ளாத இந்த மக்களின் கஷ்டங்களைப் போக்கக் கடற்படையினர் முடிந்தவரை உதவுகிறார்கள்.

பாதுகாப்பு என்ற தங்களது பணிக்கு மேலாக மனிதாபிமான நடவடிக்கையாக இது அமைகிறது. இந்தப் படகுச் சேவையைச் சீரமைக்க முதலில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் நெடுந்தீவில் நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும். குறிகாட்டுவானில் ஒரு அலுவலகம் உள்ளது. அதனால் இது அவசியமில்லை எனக் கூறினால் அது ஏற்புடையதல்ல. நெடுந்தீவிலேயே இவ்வாறான ஒரு பணிமனை அமைய வேண்டும்.

கடலை ஆழமாக்குவது குறித்து அடிக்கடி பேசப்படுகிறதே [illegible]றி அதனைச் செயற்படுத்துவதற்குரிய காலத்தைத் தவறவிட்டுக் கொண்டே வருகின்றோம். கடலை ஆழப்படுத்தவும் படகுச் சேவையைச் சீர்செய்து நெடுந்தீவு மக்களுக்கான போக்குவரத்து உரிமையைப் பேணவும் உடனடி நடவடிக்கை தேவை. காலத்தை இழுத்தடித்துச் சிரமத்தை வளர்ப்பது என்பது அபிவிருத்திக்கு முரணானது. இதை உரியவர்கள் உணரவேண்டும்.

அரைநூற்றாண்டுக்கு மேலாக நம் நாட்டு விவசாயத் துறையின் பெருமைக்குரிய முன்னோடி. எமது விவசாயத்தின் உற்பத்தித் திறனை ஊக்கப்படுத்தி விவசாய பொருளாதார வலிமையில் உலகை வென்று நம் விவசாய மக்கள் தன்னிறைவு பெற்றிட, புதியதோர் வேளாண்மை புரட்சியை தோற்றுவித்தமையை இத்தால் கௌரவமாய் தெரியப்படுத்துகின்றோம்.

இற்றைவரை உலகின் முன்னணி விவசாய ஆய்வு நிறுவனங்கள், மற்றும் உணவு உற்பத்தி நிறுவனங்கள் என்பனவற்றுடன் இணைந்து இம்மண்ணின் விவசாய வரலாற்றில் இடம் பிடித்துள்ள 10 உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து புதிய தொழில்நுட்பம், புதிய வேளாண்மை அறிவு, புதிய தயாரிப்புகள், புதிய ஈடுபாடுகள் முதலிய மாபெரும் 10 சக்தித்திறன்களை ஒன்றிணைத்து இன்று முதல், **ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ்** எனும் புதிய வலிமையும் வளமும் நிறைந்த தன்நிகரற்ற நிறுவனமாக தோற்றுவிக்கப்படுவதை இலங்கை மக்கள் சகலருக்கும் இத்தால் அன்புடன் அறியத்தருகின்றோம்.

வாழ்வின் செழுமையை நலமாய் பெற்றிட
**ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ்** எனும் மாபெரும் சக்தியுடன் இன்றே இணைந்திடுங்கள்.

- அரைநூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக விவசாய மக்களின் உயர் நம்பிக்கையை வென்ற ஹேஸ்பிறே தெளிகருவிகள், ட்ரக்டர்கள், சூடடிக்கும் இயந்திரங்கள், நுண்நீர்பாசன முறைகள், பச்சை வீடுகள், நிழல் வலைகள் முதலிய விவசாய உபகரணங்கள்
- உலகின் முன்னணி ஆய்வுகள் மற்றும் உயர் தொழில்நுட்பங்கள் கொண்ட தரம் வாய்ந்த விவசாய இரசாயனங்கள்
- விலங்கு வேளாண்மை நல மற்றும் கால்நடை சுகாதார தயாரிப்புக்கள்
- உயரிய தரநியமங்களுடனான ஹேலீஸ் உரம்
- ஹேலீஸ் விதை நெல், கலப்பின சோள விதைகள், மரக்கறி விதைகள் மற்றும் விதை உருளைக்கிழங்கு - கிரனோலா
- உயிரியல் தொழில்நுட்பத்தில் இளையவளர்ப்பு முறைகளின் மூலம் பழங்கள் மற்றும் பூத்தாவர உற்பத்திகளின் ஏற்றுமதி
- நாடு பூராகவும் 12,000 விவசாயிகளை உள்ளடக்கிய மரக்கறி மற்றும் பழங்களின் உற்பத்திகளுக்கான வலைப்பின்னல்
- பொதியிடப்பட்ட பழங்கள் மற்றும் மரக்கறி எற்றுமதியின் முன்னோடி
- 20 வருடங்களுக்கு மேலாக ஹேலீஸ் விவசாய செயற்பாடுகள் வெளிநாடுகளிலும் வியாபித்துள்ளது.

ஹேலீஸ் அக்ரோ Bayer CropScience HAYLEYS FARMTRAC Hayspray Kubota
Agrotech Dow AgroSciences MONSANTO Bayer HealthCare Animal Health DEN HARTIGH
Sunfrost Hayleys Agro Bio-tech Quality Seed Company Haychem (Pvt) Ltd Haychem Bangladesh Limited

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீக்கத்தை ஆற்றவல்லது நல்வேளை விதை



### நல்வேளை

**தாவரவியற் பெயர்** - Cleome gynandra

**குடும்பம்** - Cleomaceae

வேளை என்பது நல்வேளை/ தயிர்வேளை (தைவேளை) நாய்வேளை, காய்வேளை, முட்பாவேளை என்று பலவகைப்படும். வேளை என்றால் காலம். நல்வேளை/ தயிர்வேளை என்பன முக்கியமாகக் கார் காலத்தில் (மழைகாலத்தில்) மாலைநேரத்தில் மலர்கின்றன. எனவே மாலை வேளை வந்துவிட்டதை இதன் பூக்கள் மலர்வதைக் கொண்டு அறியக்கூடியதாக இருந்ததால் வேளை என்ற பெயர் இந்தச் சிறுபூண்டுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். இதன் இலையைத் தயிருடன் சேர்த்துக் கறி சமைப்பதால் இது தயிர்வேளை என அழைக்கப் படுகிறது.

தனி இலைகள், அங்கை வடிவானவை. பூக்கள் வெண்மை நிறம், கட்டிகள் சீழ்ப்பிடியாதிருக்க இதன் இலையைக் கசக்கிக் கட்டலாம்.

பூவை வதக்கிச் சாறு பிழிந்து 5-10 துளியளவில் முலைப்பாலுடன் கலந்து குழந்தைகளுக்குண்டாகும் கணமாந்தம், மார்புச் சளி, மாந்த சுரம், தடிமன் என்பவற்றுக்குக் கொடுக்கலாம்.

பூவை நெய்யில் வதக்கித் துவையல் செய்து சோற்றுடன் கலந்து சாப்பிட்டு வர வளிநோய்கள் நீங்கும். இலையையும் கறி சமைத்து உண்பதால் வளிநோய்கள் நீங்கும்.

விதையைத் தேசிப்புளி விட்டரைத்து வீக்கங்களின் மீது வைத்துக் கட்ட வீக்கம் வற்றும்.

இலைச்சாற்றுடன் பசுப்பாலும் சீனியும் கலந்து பருகிவர இரத்த பீனிசம் நீங்கும்.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

### நாய்வேளை

**வேறுபெயர்:** காட்டுக்கடுகு, நாய்க்கடுகு, பெருவேளை


**தாவரவியற் பெயர்** - Cleome viscosa (கிளியோம் விஸ்கோசா)

**குடும்பம்** - Capparidae (கப்பாரிடே)

**சிங்களப் பெயர்:** வொல்வெலா, ரம்மனிஸ்ஸ

**சமஸ்கிருதப் பெயர்:** பீத புஷ்ப

நிமிர்ந்த சிறு பூண்டு. கூட்டிலை, முச்சிற்றிலைகள், அங்கையுருவானவை. பூக்கள் மஞ்சள் நிறம். இதன் இலையை வெந்நீர் விட்டரைத்து வீக்கங்களின் மேல் வைத்துக் கட்டிவர வீக்கம் வற்றும்.



இலையை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி அந்த எண்ணெயைப் புண்கள் மீது பூசி வர புண் விரைவில் ஆறும். புழுக்களும் உண்டாகமாட்டாது.


விதையைப் பொடி செய்து தண்ணீரில் ஊறவைத்து அந்தத் தண்ணீரால் புழுப்பிடித்த புண்களைக் கழுவிவர புழுக்கள் விழும். புண்ணும் ஆறும்.

### முட்காய்வேளை

**வேறுபெயர்:** முக்காவிளை, காவிளை, முக்காவேளை

**தாவரவியற் பெயர்** - Tephrosia Spinosa (ரே:ப்ரோசியா ஸ்லைனோசா)

**குடும்பம்** - Leguminosae (லெகுமினோசே)



சிறு செடி, வைரஸ் செறிந்த தண்டு, முட்களுண்டு. இலைகள் வெட்டுண்டு காணப் படும். பூக்கள் சிறியவை. ஊதா அல்லது சிவப்பு நிறம்.

இதன் இலைக்கு ½ பங்கு மிளகு சேர்த்தரைத்து தயிரிற் கலந்து குடித்துவர வெள்ளை சாய்தல் நீங்கும். வேரை மஞ்சளுடன் சேர்த்துப் பசுப்பால் விட்டரைத்து வீக்கம், கட்டிகளுக்குப் பூசி வர மாறும்.

வேர்ப்பட்டையை மிளகுடன் சேர்த்தரைத்து வயிற்றுப் பொருமல், அசீரணம், வயிற்று வலிக்கும் கொடுக்கலாம்.

(தொடரும்...)



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

நமது விவசாய
பாரம்பரிய வரலாற்றை
ஒரே பக்கத்தில்
எழுதும் திருநாள்
இதுவே!


அதி கூடிய சக்திமிகு சேவைக்கு - புதியதோர் தோற்றத்தில் புதியதோர் வலிமை

Hayleys
AGRICULTURE

ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்
இல. 25, பொஸ்டர் லேன், கொழும்பு -10
தொலைபேசி 011 2 688 960 - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்ந்து பார்



வாழ்வு நிலைமாறும்
வசந்தம் பறி போகும்
வந்த சுகம் விலையாகும்
வாசல் தோறும் வேதனை நீளும்
வாழ்ந்து பார்... பார்...

இரவு துயில் மறக்கும்
இனிமைகள் தங்க மறுக்கும்
இளமைகள் நீளத் துடிக்கும்
இம்சைகள் உன்னை அணைக்கும்
வாழ்ந்து... பார்...

காலம் கை நழுவிப் போகும்
கனவுகள் கரைசேரத் துடிக்கும்
நனவுகள் நாள்கிடப்பில் நகரும்
நப்பாசைகள் உனக்காகக்
காத்திருக்கும்
வாழ்ந்து... பார்...

சொந்தம் உரிமை கோரும்
சோதனை வந்திட விலகிப்போகும்
பந்தம் பாசத்தை விலை பேசும்
வந்த வலி கண்டு விலகி நிற்கும்
வாழ்ந்து... பார்...

சபையும் உன்னை வாழ்த்திடும்
சான்றோன் எனப் போற்றிடும்
நிலைமை கொஞ்சம் மாறினால்
நிழலும் உன்னை மிதித்திடும்
வாழ்ந்து... பார்...



நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

## நீள்கிறது நினைவு....!



வலி சுமந்த
எம் வாழ்வின்
விதி
இனி எப்போது முடிந்து போகும்?
விதியை வரைந்தவனே!
உன்னைத்தான் கேட்கிறோம்
வீடும் வாசலும்
மனையாளும் பிள்ளைகளும்
பெற்றோர், உடன் பிறப்புக்கள்
எனக் கூடி நின்று
மகிழ்வதுதான் எப்போது???
தொழிற்றுறையும்
வளமான எம் வாழ்வும்
மீள்வதுதான் எப்போது???
முற்றத்து வேம்பில்
ஊஞ்சல் கட்டியாடிய
அந்த இனிமையான நாள்களை
மீட்டுப் பார்க்கிறேன்.....
நண்பர்களுடன் கூடி நின்று
விளையாடிய திடல் - இப்போ
செடி மண்டிக் கிடக்கிறதாம்...!
இவையெல்லாம் மீண்டும்
பார்க்கும் பாக்கியம் கிடைக்குமா?
இல்லை அதற்கு முன்
முட்கம்பி வேலிகளுள்- எம்
விதி முடிந்து போகுமா?
எல்லையில்லாத கனவுகளாய்
நீள்கிறது மனத்திரையில்
தினமும் நினைவுகள்...!

து.திலகு,
யாழ்ப்பாணம்.

## இது காதலா...



ஆரம்ப அவதானிப்பு
அர்ச்சனையாய் நிகழ்ந்தது
துணிவாக நீ அனுப்பிய தூதும்
தணியாத உன் தூதுக்கு
துவளாத என் துணிந்த மனசும்
தூது போற்றப் போகத்
தோற்றுப் போகாத - உன்
பார்வைக் கனல்கள்

தாகத்தோடு உன் உதடு வரைந்த
காதல் ஓவியத்தை - இரசித்து
அப்பாவியாய்,வெறுமையாய்
அடிக்கடி அன்பாய்ப் பார்க்கும்
உன் பார்வையிலும் பச்சாதாபப்பட்டு
பச்சைக் கொடி காட்டி
என் காதலைப் பறைசாற்றினேன்

உறைந்த என் உள்ளமும்
உரிமையுடன் உன்னுடன்
உறவாடியது
பொழுதை மயக்கும் உன்
விந்தைமிக்க மாய வார்த்தைகள்
உறவாக மாறிய என் உணர்வுகள்
என்றுமே என் அழகை மட்டும்
ரசிக்கும் உன் அலங்கார அக்கறை
ஒவ்வொரு நாளும் விடை பெறும்
போது
விடைபெறாத உன் ஈர விழிகள்

என் எதிர்கால வாழ்வில்
உனக்கிருந்த கண்டிப்பு
உன்னைப் போல் நான்
வர வேண்டுமென்ற
உதிராத உன் ஊக்குவிப்புக்கள்
நம் எதிர்காலம் பற்றிய - உன்
எண்ணற்ற கற்பனைகள்

கட்டுப்பாடில்லா உன்
எண்ணங்களை
கட்டவிழ்த்து விடச் சொன்னாலும்
அதையே கட்டியணைக்கும்
உன் கபடமற்ற காதல்

என் விழி கலங்கினால் அடுத்த
கணம்
கலங்கும் உன் கருவிழிகள்
இத்தனை இன்னும் எத்தனை
ஆயிரம் கனவுகளையும்
கண் முன்னே சிதைத்த
உன் பிரிவின் நிரந்தரம்
காரணம் தேடி கணக்கற்றுக்
கரை புரண்டோடும்
என் கண்ணீர்
மாசற்ற என் மனதில்
ஒரு மாசி மாதம் ஆரம்பித்த
நம் காதல் மார்கழி வரும் முன்
மாறினாலும் இனி எந்த
மன்மதன் வந்தாலும் ஆற்ற
முடியாது

சு.சக்தினா,
வேரவில்.

## மனிதனின் பாதை



மனிதனின் பாதைகள்....
நீண்டு செல்லும் இந்த
நீள் தூரப் பயணங்கள்
முடிவிலிகளல்ல .... அவை
நீளங்களாய் இருந்தாலும் எங்கோ ஒர் அறையில்
நிரந்தரமாய் சமாதியாக வேண்டியனவதான்
- கல் அறைகளில்

வழிக்கு வழி,
சந்திக்கு சந்தி
இரத்தப் பொட்டுக்கள் - அதுவும்
நியாயங்களின் உண்மைகளின் நேர்மைகளின்
புனிதமான உடலிலிருந்து....
...... சிந்தப்பட்டவையல்ல
மனிதனால் குத்திக் கிழிக்கப்பட்டுச் சிந்தச் செய்யப்பட்டவை


மனப்பூவின் வாசனைகள் மட்டுமே
வீசிச் சென்ற இந்தப் பாதைகளில்
இன்று மரணங்களின் வாடைதான்
வாழ்ந்து கொள்கின்றது
பொய்களும் பொறாமைகளும் மட்டுமே
குவியல் குவியல்களாகக்
குழிகளில் நிரம்பி வழிகின்றன
கானல் நீர்தான் இந்தப் பாதைகள் காட்டும்
கண்ணாடித் துண்டங்கள்
உரிக்கப்பட்ட சருகுகள்தான் இதன்
பாதை விரிப்புக்கள்
இப்படியாய் நேசங்கள் மறந்து
தேய்கின்றது இந்தப் பாதை.

தொடுவானம் உரசி நிற்கும்
தொலைவில்தான் இருந்தது
மனிதனின் பாதைக்கும்
கடவுளின் பாதைக்குமான
தொடுபாலம்

உண்மைகள் அனைத்தும் மனிதனின்
மாசுபட்ட பாதைகளிலிருந்து
புனிதப்பட்ட கடவுளின் பாதைக்கு
துரத்தப்பட்ட பின்
யாருக்கு வேண்டும் இந்த தொடுபாலம்?
அதுதான், அது தொலைந்தே போய்விட்டது
மறுவற்ற மாசற்ற மனங்களுடன்
இன்றும் கூட யாராவது வாழ்ந்தால் - அதைத்
தேடிக் கண்டுபிடித்துத் தொடுத்து விடுங்கள்
கடவுளின் பாதையையும்
மனிதர்களின் பாதையையும்
மனிதர்களுக்காக அல்ல...
துரத்தப்பட்ட நியாயங்களை
திருப்பி அழைத்து
புனிதப்படுத்துவதற்காக இந்த பூமியை....

ஜெ.தாரணி, கோப்பாய்.

## கண்ணீரில் எழுதி ஒரு கவி



அழகிய இராப் பொழுதில்
என் நினைவலைகள் ஊசலாட
என்வாழ்வின் விருட்சங்கள்
விடியாத பொழுதாய்
இருட்டிய மழை மேகம்
இருட்டினில் திண்டாட
என் வாழ்வின் வரலாறு
நினைவில் சிதற
கருவிழிகளில் ஆராய்கின்றது
கண்ணீர் எனும் ரத்தம்
தந்தையின் அன்பை இழந்தேன்
என் சகோதரத்தை
என் தாயை பிரிந்து
தொலை தூரத்தில் வாழ்ந்தேன்
தனிமையில் என் வாழ்வு
கேள்விக்குறியானது
இல்லாத குற்றத்துக்கும்
குற்றவாளி ஆனேன்
சிறைபடும் வாழ்வும்
வாழ்ந்தேன்
சிறையில் இருந்தும் மீண்டேன்
இழந்தவையெல்லாம்
மீண்டும் வருமா என
அடிமனதில் எழும்
கேள்விக்கும் பதில் கூற
எவனும் இல்லை
காரணம் எதுவும் தெரியவும் இல்லை
மீண்டும் வருமா
என் வாழ்வில் வசந்தம்

சீ.சக்தி,
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
05 ஜூன் 2011 ஞாயிற்றுக்கிழமை


# மாயைகளுக்குள் சிக்கிவிடாத போராட்டம்



சந்திரசேகர ஆசாத்

ஒரு பெரிய கோட்டுக்கு அருகில் அதை விடப் பெரிய கோடு ஒன்றைப் போட்டு விட்டாலே முன்னைய பெரிய கோடு சிறிய கோடாகிவிடும். இது ஒரு சிறு பிள்ளைகூட விளங்கிக் கொள்ளக்கூடிய சாதாரண விடயம். ஆனால் இலங்கை அரசியலில் இம்முறை பல அசாதாரண விடயங்களுக்கு இப்போது பயன்படுத்தபட்டு வருகிறது. சின்னக் கோட்டுக்கு அருகில் பெரிய கோட்டை வரைவது, ஏற்கனவே இருக்கும் பெரிய கோட்டுக்கு வர்ணம் தீட்டுவதன் மூலம் சிறிய கோட்டைக் கண்ணுக்குப் புலப்படா வண்ணம் மங்கவைப்பது, பெரிய கோட்டுக்கு உள்ளேயே சில சிறிய கோடுகளை வரைந்து விடுவது என மக்களை ஏமாற்றும் தந்திரங்கள் நிறையவே மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. பல சந்தர்ப்பங்களில் சிங்களப் பொதுமக்களும் சில சமயங்களில் சில எதிர்க்கட் சிகளும்கூட இந்தக் கோடு போடும் விளையாட்டில் மாட்டுப்பட்டு இழுபடும் நிலையும் ஏற்பட்டு விடுகிறது.

### மக்களை நெருக்கடிக்குள் கொண்டு செல்லும் செயற்பாடு

வாழ்க்கைச் செலவு உயர்வு, கோதுமை, எரி பொருள் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருள் களின் விலையேற்றம், வாக்களிக்கப்பட்ட சம்பள உயர்வு வழங்கப்படாமை, வேலையில்லாப் பிரச் சினை, வறுமை, இயற்கை அனர்த்தங்கள், வெளி நாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக மக்கள் நீண்ட காலம் குடியிருந்த இடங்களை விட்டு வெளியேற்றப்படல், கல்வி, மருத்துவச் சேவை களின் நலிவு போன்ற ஏராளமான பிரச்சினைகள் பொதுமக்களின் இயல்பு வாழ்வைச் சீரழித்து அவர்களை மேலும் மேலும் நெருக்கடிகளுக்குள் தள்ளிக் கொண்டிருக்கின்றன.

போரின் வெற்றி, பயங்கரவாத ஒழிப்பு, வெசாக் உட்படப் பெரும் பெரும் விழாக்கள் இப்படியாகச் சில பெரிய கோடுகளைப் போட்டு மக்கள் முகம் கொடுக்கும் நெருக்கடிகளிலிருந்து அவர்களின் கவனத்தைத் திருப்பும் கைங்கரியங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இன்று போரின் இறுதி நாள்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கை அரசுக்குச் சர்வதேச அளவில் பெரும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது. இலங்கை அரசோ நாட்டின் இறைமை, அந்நியத் தலையீடுகளுக்கு எதிர்ப்பு, ஏகாதிபத்தியச் சதி போன்ற வார்த்தைப் பிரயோகங் களால் அந்த அறிக்கையை உள்ளூரில் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகிறது.

அரசு ஏகாதிபத்தியச் சதி எனவும் நாட்டின் இறை மையைக் காப்பது பற்றியும் உரக்கக் கூவியவாறே எரிபொருள் விலையேற்றத்தையும் கோதுமை மா விலையேற்றத்தையும் கனகச்சிதமாக மேற்கொண்டு விட்டது. அதுமட்டுமன்றி இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து தனியார் துறையினருக்கு ஓய்வூதியம் என்ற பேரில் ஊழியர்கள் இதுவரை சேமித்த சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றின் நிதியையும் அரசு மேற்கொள்ளத் தயாராகிவிட்டது.

### இரும்புக் கரங்களால் நசுக்கப்படும் போராட்டம்

அரசு மேற்கொள்ளும் இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்பலைகளோ, போராட்டங்களோ எழுச்சி பெறவில்லை என்று சொல்லிவிட முடியாது. ஆனால் அவை இரும்புக் கரம் கொண்டு ஆரம்பத்திலேயே நசுக்கப்பட்டு விடுகின்றன. உதாரணமாகப் பல பல்கலைக்கழகங் களில் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக மாணவர் களின் போராட்டங்கள் வெடித்தன. ஆனால் அவர்கள் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பொலிஸாரதும் குண்டர்களதும் வன்முறைகள் மூலம் அடக்கப் பட்டன. தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் என்பன மாணவர்கள் மேல் நடத்தப் பட்டன. இவற்றில் முன்னணியில் நின்ற மாணவர் கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப் பட்டனர். பலர் பல்கலைக்கழகங்களிலிருந்து இடை நிறுத்தப்பட்டனர்.

இந்த மாணவர்கள் ஜே.வி.பியினரால் பிழையான வழியில் வழி நடத்தப்படுகின்றனர் எனவும் மாணவர் களின் ஒழுக்கம் பாதிக்கப்படுகிறது எனவும் பிரசாரம் செய்யப்பட்டு அரசு மேற்கொண்ட அடக்குமுறை களுக்கு நியாயம் கற்பிக்கப்பட்டது. இங்கு மாணவர் களின் நலன்கள், உரிமைகள் என்பன ஒழுக்கம், அமைதி என்ற பெரிய கோடுகளால் மறைக்கப்பட்டன.

இவ்வாறே விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொழிலா ளர் நடத்திய போராட்டத் தின்மீதும் பொலிஸார் முன்னி லையிலேயே குண்டர் கூட்டத்தால் தாக்குதல் நடத்தப்பட்டது. பொலிஸார் அதைத் தடுக்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் நாட்டின் அபிவிருத்தியை விரும்பாத ஐக்கிய தேசியக் கட்சித் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு நாட்டின் அபிவிருத்தியைக் குழப்ப முயல்வதாகப் பிரசாரம் செய்யப்பட்டது.




இவ்வாறு சுகாதாரப் பிரிவு, ரயில்வே பகுதி போன்றவற்றில் தங்கள் உரிமைகளுக்காகப் பணியா ளர்கள் நடத்திய வெவ்வேறு போராட்டங்களும் முறி யடிக்கப்பட்டன. எனினும் அபிவிருத்தி, போர் வெற்றி விழாக்கள் போன்ற விம்பங்களால் அந்தப் போராட் டங்களின் முக்கியத்துவம் மறைக்கப்பட்டு அவை மழுங்கடிக்கப்பட்டன.

### ஊடகங்களுக்கு அழுத்தங்கள்

இத்தகைய போராட்டங்களை வெளியே சரியான முறையில் கொண்டு வர முடியாதபடி ஊடகங்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அரச ஊடகங் களோ இந்தப் போராட்டங்களைச் சிறுமைப்படுத்தும் பேனாக்களைப் பலமுனைகளிலும் மேற்கொண்டு வந்தன. ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதி ரான பரப்புரைகளுக்குள் அனைத்தும் மறைக்கப்பட்டன.

ஆனால் இப்படியாகப் பெரிய கோடு போடும் தந்திரம் நெடுநாள்களுக்கு நிலைக்கப் போவதில்லை என்பதற்கான அறிகுறிகள் அண்மையில் தோன்ற ஆரம்பித்துள்ளன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதன உயர்வு கோரி நடத்தப்படும் போராட்டம் எவ்வித மாயைகளுக்கும் மடங்கிவிடாமல் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. அதுமட்டுமன்றி அவர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களைக் கொடுத்ததன் மூலம் போராட்டத்தை மேலும் வலி மைப்படுத்தியுள்ளனர். அண்மையில் தனியார் துறை ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிராகக் கட்டுநாயக்கவில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் குறிப்பிடத்தக்கதாகும்.

### பேரணி மீது தாக்குதல்

பெரும் திரளான தொழிலாளர்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸாரும் அரச சார்புக் குண்டர்களும் இணைந்து பெரும் தாக்குதலை நடத்தினர். இதில் ஒரு தொழிலாளி உயிரிழந்தார். 240 தொழிலாளர்கள் காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய காடையர் கூட்டம் தொழிற்சாலைகளுக்குள் புகுந்து அங்கும் சேதங்களை விளைவித்தனர்.

இதன் விளைவாக கட்டுநாயக்கவில் அமைந்துள்ள சுதந்திர வர்த்தக வலயம் தொடர்ந்து மூன்று நாள்க ளாக மூடப்பட வேண்டிய நிலை எழுந்தது.

உடனடியாகவே தொழிலாளர்களின் இந்த ஆர்ப் பாட்டத்துக்கு எதிராகத் தேசிய சுதந்திர முன்னணி யினரால் விமல் வீரவன்ச தலைமை யில் கொழும்புக் கோட்டையில் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கட்டு நாயக்க ஆர்ப்பாட்டம் நாட்டின் பொரு ளாதார அபிவிருத்தியை விரும்பாத வெளிநாட்டுச் சக்திகளின் சதி எனவும் ஜே.வி. பியால் அரசியல் நோக்கத்துடன் நடத்தப்பட்டது எனவும் பிரசாரம் செய்யப்பட்டது.

இப்படி ஒரு பெரிய கோடு போடும் முயற்சி அரச தரப்பினரால் மேற்கொள்ளப் பட்டபோதும் அது இம் முறை பயனளிக்கவில்லை. மாறாகத் தாக்குதலை மேற்கொண்ட இரு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். பொலிஸாரின் அத்துமீறல் களுக்குப் பொறுப்பேற்று பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய தனது பதவியை இராஜனாமா செய்துள்ளார்.

இவை தொழிலாளர்களின் கோபாவேசத்தைத் தணிக்க மேற்கொள்ளப்பட்ட ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்ற போதிலும் பெரிய கோடு போட்டு ஏமாற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து செல்லுபடியா காது என்பது நிதர்சனமாகியுள்ளது.

### தொடரும் மக்கள் விரோத நடவடிக்கை

இலங்கை அரசு மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட நாடா ளுமன்றப் பலத்தை வைத்துக் கொண்டு தொடர்ச்சி யாக மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இவற்றை மூடி மறைக்கும் கவசமாக ஏகா திபத்திய எதிர்ப்பு, நாட்டின் இறைமை, அபிவிருத்தி போன்ற சுலோகங்கள் பாவிக் கப்படுகின்றன.

ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது தமது குற்றங்களி லிருந்து தப்பப் பிரயோகிக்கும் ஒரு சொல்லாட லாகவே பயன்படுகிறது. ஆனால் நடைமுறையில் ஏகாதிபத்திய நலன்களை நிறைவு செய்ய அரசு மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற வற்றின் கட்டளைகளுக்கு அமைய கல்வி, மருத்து வம் போன்ற துறைகளில் தனியாரின் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. இலவசக் வி, இலவச மருத்துவம் என்பன பெயரளவிலேயே இருக்கு மளவுக்கு நலிந்துவிட்டன. அதேபோன்று தொழிலா ளர் களின் ஊதிய உயர்வு மறுக்கப்படுகிறது. உணவுப் பொருள்களின் விலைகள் உட்பட வாழ்க் கைச் செலவு வேதனமாக அதிகரித்துவிட்டது.

அதேபோல் நாடும், நாட்டு வளங்களும் துண்டு துண்டாகப் பல்தேசிய நிறுவனங்களுக்கு விற்கப் பட்டு வருகிறது. பொருளாதாரம் என்பது முற்று முழுதாகவே ஏகாதிபத்திய நாடுகளின் ஏற்றுமதி, இறக்குமதியில் தங்கி நிற்குமளவுக்கு ஒரு தங்கு நிலைக்கு மாற்றப்பட்டுவிட்டது. சுற்றுலா விடுதி களை அமைப்பதும் நெடுஞ் சாலைகளை அமைப் பதுமே அபிவிருத்தி எனக் காட்டப்படுகிறது. ஆனால் தேசிய உற்பத்தியை மேம்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப் படுவதில்லை.

இதுதான் இன்று நிலவும் யதார்த்தம்.

இப்படிச் சில பெரிய கோடுகளைக் காட்டிக் கொண்டு மக்கள் விரோத ஏகாதிபத்திய நலன்கள் பேணும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற் கொள்ள முடியாது என்பதற்கு கட்டுநாயக்க சம்பவம் நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

எனவே சிங்கள மக்கள் விழிப்படைந்து உண்மை நிலையைப் புரிந்து கொள்ளும் நாள்கள் வெகு தொலைவில் இல்லை. அப்படியான ஒரு நிலை ஏற்படும்போது, இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வ மான தீர்வு எட்டப்படுவதற்கான சூழ்நிலைகள் ஏற்படும் என்பதை நம்பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோண்டாவில் நெட்டிலை
# மகா கும்பாபிஷேகச் சி

## அனைவரும் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக...



கோண்டாவில் நெட்டிலம் பதியில் எழுந்தருளி இருந்து அருள் ஆட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு நடைபெறும் கும்பாபிஷேகத்தைச் சிறப்புச் செய்து மலர் வெளியிடுவதை இட்டு மகிழ்வடைகின்றோம். நடைபெறும் கும்பாபிஷேகம் ஊருக்கும் ஆலயத்துக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாகும்.

இந்த ஆலயத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுவது மகா கும்பாபிஷேகம். இதனுடைய செயற்பாடு மனித மனத்தை ஒரு முகப்படுத்தி ஆன்ம ஈடேற்றத்தைத் தருவதாகும். எதிலும் நிறைந்திருக்கும் இறைவன் அக்கினி ஊடாக வெளிப்பட்டு உலக சஞ்சாரத்தைத் தன்வசப்படுத்துகின்றான். இதனை உணர்த்துவது யாகத்தில் அக்கினியை உருவாக்கி நீரினால் நிறைக்கப்பட்ட கும்பத்தில் ஒரு திருவுருவை உருவேத்தி மூலத்தில் எழுந்தருளியிருக்கும் உருவத்தின் மேல் அபிஷேகம் செய்வது பொருட்டு உருவத்தில் திரு ஏறுகின்றன. இப்புண்ணிய வழிபாடு ஆலயத்தில் நடைபெறுவது ஊடாக மனிதன் மனித நேயத்தோடு வாழ வழிவகுக்கின்றன. பழமையான நீண்ட ஆலயங்களைக் கொண்ட இப்பிரதேசத்தில் வேண்டுவார் வேண்டுவதை இட்டு விநாயக் பெருமான் எழுந்தருளி உள்ளார். விநாயக வழிபாடு இன்மைக்கும் மறுமைக்கும் புண்ணியத்தைத் தரக்கூடியதாகும். இப்புண்ணிய செயலை செய்யும். ஆலய பரிபாலன சபையினருக்கும் சைவமக்களுக்கும் இறை இன்பம் கிடைப்பதால் இக்கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக...

என்றும் வேண்டும் இன்ப அன்பு
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை ஆதீனம்.

## எடுத்த மானிடப் பிறவியின் பயனை எய்துவர் அவர்க்கு மறுமையும் இனிதே

ஆலயச் சிறப்பும் அருங்கலைச் சிறப்பும்
ஆகமம் வேதம் அறிந்த அந்தணர்
வாழும் சிறப்பும் அடியவர் சிறப்பும்
கொண்டே விளங்கும் நற்பதியாய்
கோண்டாவில் எனும் நற்பதி தன்னில்
நெட்டிலைப் பிள்ளையார்கோயில் உள்ளது
நோயினை நீக்கியும் பக்தர் வேண்டும்
வரங்களை அருளியும் விளங்கும் தெய்வம்
அற்புதத் தெய்வம் ஆய பிள்ளையார்
பொற்பதம் போற்றின் நற்கதி ஆமே
பதினெட்டாம் நூற்றாண்டு முற்பகுதியில்
சைவத் திருநாகேந்திரப் பெரியார்
தாபித்த ஆலயம் குன்றென உயர்ந்தே
நின்றே விளங்கல் யாவரும் காண்கின்றோம்
கும்பாபிஷேகம் நிகழ்த்தும் பணியில்
தம்மை இணைத்துக் கொண்டவர் தாமும்
கும்பாபிஷேகக் காட்சி காணும்
பேறுதன்னைப் பெற்றோர் தாமும்
எடுத்தமானிடப் பிறவியின் பயனை
எய்துவர் அவர்க்கு மறுமையும் இனிதே!

புலவர் மகாலிங்கசிவம் பார்வதிநாதசிவம்

## ஆசியுரை



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியாக எல்லா இடத்தும் பிரகாசமாக ஆனந்த ஜோதியாக அருள் ஒளி வீசி அனைத்து அடியார்களையும் காப்பாற்றி வருபவரும் எந் நாட்டவர்க்கும் இறைவனும், ஈசானம், தத் புருஷம், அகோரம் வாமதேவம், சத்யோ ஜாதம் ஆகிய ஐந்து முகங்களையுடையவரும் சிவபெருமானது வேறுபட்ட தன்மை அல்லாதவருமாகிய விநாயகப்பெருமான் யாழ்ப்பாணம்,கோண்டாவில் நெட்டிலைப்பாய் திருவருள் ஒளி வீசும் கிராமத்திலே கோயில் கொண்டு எழுந்தருளி அனைத்து ஜீவராசிகளுக்கும் அருள் பொழிந்து கொண்டிருக்கிறார்.

அத்தகைய திருவருள்மிகு விநாயகப் பெருமானுக்கும் பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும் விஸ்வநாத ஸ்வாமி விசாலாக்ஷி அம்பாள், மூலாதார கணபதி, மூஷிகம் பலிபீடம், தெட்ஷணா மூர்த்தி, மகாலக்ஷ்மி, சந்தான கோபாலர், முருகன், துர்க்கை அம்மன், நவக்கிரகம், நடேசர், வைரவர், சண்டேஸ்வரர் கிழக்கு, தெற்கு இராஜகோபுரங்கள் ஆகியவற்றிற்கு சர்வமங்கள கரவருஷம், வைகாசி மாதம் இன்று (05.06.2011) ஞாயிற்றுக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

நாம் பிறவி எடுத்தது இறைவனுடைய பாதார விந்தங்களை அடைவதற்காகவே என்பதனால் ஆலய வழிபாடு எல்லா ஜீவராசிகளுக்கும் முக்கியமாக மனிதப் பிறவி எடுத்தவர்களுக்கும் முக்கியமானதாகும்.

சர்வயக்ஞ தீமதான தீர்த்த யாத்ராபலம் தத்பலம் கோடி குனிதம் சிவதர்சநாத் பலம் எத்தகைய, எந்தவிதமான யாகம் தீர்த்த யாத்திரை ஆகியவற்றினால் வரும் பலன் சிவ தர்சனத்தால் விநாயகப் பெருமான் தர்சனத்தினால் உண்டாகிறது என்பது ஆன்றோர் வாக்கு. எமது நெட்டிலைப்பாய் ஆலயம் 1976 ஆம் ஆண்டளவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1980ஆம் ஆண்டளவில் கும்பாபிஷேகம் நிறைவெய்தியது. அதற்குமுன் மூலாலய விநாயகர் முருகன் நடேசர் வைரவர் ஆகிய ஆலயங்களே இருந்தன. 1980 இல் புதிதாக மகாலக்ஷ்மி அம்பாள் சந்தான கோபலர் ஆகியவற்றிற்கு புதிதாக ஆலயங்கள் அமைக்கப்பட்டன. கோயில் முழுவதும் சுண்ணாம்புக் கட்டடங்களாகவே இருந்தன. 1976ஆம் ஆண்டு திருப்பணியில் கர்ப்பகக் கிரகம் பொழிகல்லினாலும் மகாமண்டபம் நிர்தமண்டபம் என்பன சீமெந்து உபயோ கித்தும் உருவாக்கப்பட்டன.

பின் 1999ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்திலும் அதற்குப் பின்பும் துர்க்கை அம்மன் கோயில் நவக்கிரகம் கோயில், தெட்சணாமூர்த்தி கோயில், சண்டேஸ்வரர் கோயில், மணிக்கோபுரம் கிழக்கு, தெற்கு இராஜகோபுரங்கள் அடியார்களுடைய பெரும்பொருட் செலவுடன் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகங்கள் இனிதே நிறைவெய்தியது இறைவனின் அளப்பரிய கருணையினாலேயே ஆகும். மேலும் காலத்துக்கு காலம் சித்திரத்தேர் கைலாச வாகனம் மஞ்சம் என்பனவும் இறையருளினாலும் அடியார்களுடைய பெரும் பொருள் செலவாலும் உருவாக்கப்பட்டு ஆலயத்துக்கு அன்பளிக்கப்பட்டன.

இத்தகைய பேரருள் கொண்ட விநாயகப் பெருமானின் ஆலய நித்திய அர்ச்சகராக அடியேன் கடந்த 50 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருகிறேன். இக்காலங்களில் எத்தனையோ சோதனைகள் வந்தபோதும் என்னை விநாயகப்பெருமான் அவற்றிலிருந்து காப்பாற்றி அடியேன் விநாயகப் பெருமானை சிக்கெனப் பிடிப்பதை விடுத்து விநாயகப் பெருமான் என்னை சிக்கனப்பிடித்து வைத்துக்கொண்டார்.

அத்துடன் அவ்வக் காலங்களில் இருந்த பரிபாலன சபையார், இளைஞர்கள், தொண்டர்கள், கிராம அடியார்கள், புலம்பெயர் அடியார்கள் 1976ஆம் ஆண்டு மாவிட் புரத்திலே இருந்த மகாவித்வான் ஸ்தபதிகள் பெரியசாமி ஆசாரியார் அளித்த விதிமுறை தவறாது ஆலய நிர்மாண ஆலோசனைகள், விதிமுறைப்படி ஆலயத்தை அமைத்துத் தந்த ஸ்தபதிகள் உற்சவ விக்கிரகங்களை விதிமுறைப்படி அமைத்துத் தந்த மதிப்புக்குரிய ஆசாரியார் ஆகிய எல்லோருடைய இதயங்களிலும் விநாயகப்பெருமான் நிறைந்திருந்து கும்பாபிஷேகம் நிறைவுற அருள்புரிந்திருக்கிறார்.

புதிதாக ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்யும் பலனை விட பழைய ஆலயங்களைப் புதுப்பித்து திருப்பணிகள் செய்து பிரதிஷ்டை செய்வது பன் மடங்கு புண்ணிய பலன்களைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை கும்பாபிஷேக தரிசனம் புண்யப் பேறுடையோர்க்கே காணக்கிடைக்கும் திருக்காட்சியாகும். கும்பாபிஷேகக் கிரியைகளை ஆரம்பம் முதல் கும்பாபிஷேகம் வரை தரிசித்தவர்களும் பொருளுதவி செய்தவர்களும் சரீர உதவி செய்தவர்களும், பொருளுதவியை யாசித்துப் பெற்று கும்பாபிஷேகத்தை நடத்தியவர்களும் பரிபாலனசபையோரும் ஸ்தபதியாரும் வர்ணம் அழகுற தீட்டியவர்களும் ஆசாரிமாரும் கிராம மக்களும் புலம் பெயர்ந்து வெளிநாட்டில் வசிக்கும் அடியார்களும் உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து 100 வருஷம் சகல சௌபாக்கியங்களோடும் வாழ்ந்து இறைவனுடைய திருவடிகளை அடைந்து ஆனந்த முக்தியடைவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

''சர்வே ஜநா சுகினோ பவந்து''

சிவஸ்ரீ தா.ஹரிஹர சுப்ரமணியக் குருக்கள்.

## மஹாகும்பாபிஷேகப் பிரார்த்தனை




ஸ்வாமின் சர்வ ஜகன்னாத யாவத் சந்திர திவாகரள தாவத் துவம் பிரீதினா வெந பிம்பேஸ்மின் சந்நிதிர்பவ

கும்பாபிஷேகம் நிறை வெய்தியவுடன் விநாயகப் பெருமானிடம் மேற்கூறிய பிரார்த்தனையை முன்வைக்கிறார் சிவாச்சாரியார்.

இதன்பொருள் எல்லா உலகத்திற்கும் தலைவனாக விளங்குகின்ற விநாயகப்பெருமானே சந்திர சூரியர் முதல் இந்த உலகம் உள்ளளவும் தாங்கள் இந்த பிம்பத்தில் சான்னித்தியமாக இருந்து அருளவேண்டும். நெட்டிலைப்பாய் விநாயகப்பெருமானும் கும்பாபிஷேகத்தின் பயனாக பிம்பத்தில் சான்னியத்தியமாக இருந்து இந்த உலகம் உள்ளளவும் பக்தர்களை ரட்சிப்பாராக.

சர்வபோதகர் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்



'ஓம் எனும் பிரணவ ரூபா விநாயகா... உ

## நெட்டி லைப்பாய் திருத்தல

நெட்டிலைப்பாய்த் திருத்தலத்தில் எங்களுடைய காலத்தில் கடந்த நாற்பது வருடங்களுக்குள் மூன்றாவது நூதனம் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று நடைபெறுகின்றது. இவ் வேளையில் நெட்டிலைப்பாயானின் பண்டைய சிறப்புக்களை உற்று நோக்குதல் மிகமிக அவசியமானதாகும்.

### தாபிதம்

நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் திருக்கோயிலைத் தாபித்தவர் சைவத்திரு நாகேந்திரர் எனும் பெரியவர் என்பது அனைவரும் அறிந்ததே. இவர் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் காலத்தவர். சிறந்த சிவபக்தர், ஆசாரசீலர், தூய சைவ வாழ்வு வாழ்ந்தவர். இவருடைய காலத்தில் இவரது சகோதரி முறையான ஒருவர் இன்றைய கோயிலின் வடபால் வாழ்ந்துள்ளார். அக்காலத்தில் இப்பகுதி எங்கும் ஒற்றையடிப் பாதைகளே மிகுந்திருந்தன. குறித்த மாதரசி குறுகலான பாதையால் நடந்து வரும் வேளைகளில் இன்றைய ஆதிமூலம் இருக்கும் இடத்தை [illegible]ண மித்ததும் மயக்கமடைவதும் வழக்கமாம். இதனை அறிந்தவரான நாகேந்திரரோ அந்த இடத்தின் அருமைப்பாட்டையும் தெய்வீகத் தன்மையையும் உணர்ந்தவராகி அந்த இடத்திலேயே விநாயக மூர்த்தியைத் தாபனம் பண்ணி சந்நிதி அமைத்துக் கொட்டிலுங்கட்டிக் கும்பிடலானார். ஆரம்ப காலத்தில் விக்னேஸ்வரப் பெருமானின் அம்சங்களையுடைய ஒரு சாப்பைக் கல்லை வைத்தே வழிபாடுகள் இயற்றப்பட்டதே வரலாறென அமரர் விசுவலிங்கம் இராசமணி ஆசிரியர் அவர்கள் என்னிடம் கூறியுள்ளார்.

நெட்டிலைப்பாய்ப் பிள்ளையாரென எங்கள் குலதெய்வத்தின் பெயர் விளங்கக் காரணம் என்பது இன்று ஒரு கேள்வி. நெடிய இலுப்பை மரத்தடியில் வீற்றிருந்த காரணத்தால் அவ்விநாயகப் பெருமான் நெட்டிலுப்பை விநாயகர் என அழைக்கப்பட்டுக் காலப் போக்கில் நெட்டிலைப்பாய் பிள்ளையாரானார் போலும்."

அண்மையில் யான் பார்வையிட்ட தரும சாதன உறுதி ஒன்றின் படி இன்றைய ஆதிமூலம் கட்டப்பட்டிருக்கும் குறிச்சியின் பெயரும் நெட்டிலைப்பாய் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. நெட்டிலைப்பாய் பதியில் அமர்ந்து அருள்பாலிக்கத் தொடங்கிய பிள்ளையார் நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் என அழைக்கப்பட்டு வந்ததிலும் ஒரு நியாயம் இருப்பதனைக் காண்கிறோம்.

நெட்டிலைப்பாய் பிள்யையார் கோயில் நாளடைவில் வழிபாட்டுச் சிறப்பினாலும் தலச் சிறப்பினாலும், பூசை புனஸ்காரங்களின் பெருமைகளினாலும் கிராமத்தில் முக்கியமானதோர் இடத்தைப் பிடிக்கலா

வடக அனுசரணையாளர்கள்



ஆலய வேலைகள் யாவும் உரிய ஆகம விதிப்படி அமைப்பதற்கும் இராஜகோபுரம், ஸ்தூபி, சிற்பங்கள், கருங்கல் விக்கிரகங்கள், ஆசனங்கள், தீர்த்தக் கோமுகை போன்றவற்றின் சிறந்த உருவாக்கத்திற்கும் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய ஸ்தாபனம்.

நாகலிங்கம் சிற்பாலயம்
Nagalingam Sitpalayam

அராலியூர் சிற்பாசாரியார்
கந்தசாமி கோபாலசிங்கம்
(கட்டட ஒப்பந்தகாரரர்)
நாகம்மாள் கோயிலடி,
அராலி மத்தி, வட்டுக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

Araliyoor Sitpasariyar
Kandasamy Gopalasingam
(Buliding Contractor)
Nagamal Kovilady,
Araly Centre, Vaddukoddai, Jaffna.
Tel: 0777111121, 0217900511.



Multilac
Sakthivel Hardware

கட்டடத்திற்குத் தேவையான
அனைத்துப்பொருள்களையும்
(பெயின்ற் வகைகள் உட்பட)
ஒரே கூரையின் கீழ்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

சக்திவேல் ஹாட்வெயர்

கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (இணுவில்)
தொலை: 021 3006130, 0214921213

கோண்டாவில் திருவருள்
திருக்கோயில் புனராவர்த்
பெருவிழா அதி சிறப்பா
நிறைவுபெற எல்லாம் வ
அருளை இறைஞ்சி நிற்கி

டிஜிற்றல் கட்டவுட், டிஜிற்றல் 
டினெக்ஸ் பனர்கள், டினெக்ஸ் 
விசிற்றிங் காட் வகைகள் திருமண
அழைப்பிதழ்கள், கலண்டர்கள்,
லேபிள்கள், விளம்பர அட்டைகள்
ஸ்ரிக்கர்கள் ஆகியவற்றினை மிக
குறைந்த விலையில் சிறந்த முறை
குறைந்த நேரத்தில் மிகச் சிறப்ப
முறையில் செய்து கொடுக்கப்படு

ANDRA
DIGITAL PRINTING

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...லைப்பாய் பிள்ளையார் திருக்கோயில்
## ...ச சிறப்புமலர் - 05.06.2011



...யகா... உமையவளின் பாலனே விநாயகா...'



### பரிபாலனசபைத் தலைவரின் உள்ளத்திலிருந்து

நாம்முதலில் எக்காரியத்தை செய்வதாயினும் விநாயகரை வணங்கியே செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும் காரியங்கள் யாவும் எவ்வித தடைகளுமின்றி இனிதே நிறைவு பெறும் என்பது திண்ணம்.

'திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகந் தானை
காதலாற் கூப்புவர் தங்கை'

எல்லாம் வல்ல விநாயகரை முதற்கண் வணங்கிப் பணிவோமாக.

சைவ சமயமானது பழமையும் பெருமையும் வாய்ந்த சிறப்புடையது. வேற்றுமையில் ஒற்றுமை. முரண்பாட்டில் நல்லிணக்கம் போன்ற உன்னதமான பண்பாட்டுக் கோலங்களை உள்ளடக்கியதாகத் திகழ்கின்றது.

மாறிவரும் உலகில் சைவ சமயத்தின் அர்த்தமுள்ள கோட்பாடுகளை மென்மேலும் வளர்த்தெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. இதனை அடிப்படையாகக்கொண்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆலயத்தை புனருத்தாரணஞ்செய்து கும்பாபிஷேகம் செய்வது நியதியாகும். அந்தவகையில் இறைவன் திருவருளினால் 13.06.2010 அன்று கோயில் பாலஸ்தானம் செய்யப்பட்டு புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இக்கைங்கரியத்துக்கு நிதி உதவி புரிந்த உள்ளூர், வெளியூர் அடியவர்கள் கோண்டாவில் நலன்புரிச்சங்கம் - கனடா, கோண்டாவில் நலன்புரிச் சங்கம் - லண்டன் மற்றும் புதிதாக பஞ்சமுக விநாயகருக்கு ஆலயம், பரிவார மூர்த்தியாகிய முருகனின் இருப்பிடத்தை முற்று முழுவதும்மாக புதிதாக அமைக்க உதவிய அடியவர்கள், இளைஞர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், கும்பாபிஷேக மலர் வெளியிடுவதற்கு உதவியவர்கள் மற்றும் சமய ஆர்வலர்கள் எல்லோருக்கும் மனமார்ந்த நன்றிகளை பரிபாலனசபையின் சார்பில் தெரிவித்துக்கொள்வதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

இச் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேன்மேலும் விரிவடைந்து கோயில் பெரும் விருட்சமாய் மாறவேண்டும் என நெட்டிலைப்பாய் பிள்ளையாரின் திருவருளை வேண்டுகின்றேன்.

சங்கரப்பிள்ளை ஞானகணேசன் - தலைவர்,
பரிபாலன சபை, நெட்டிலைப்பாய் பிள்ளையார் திருக்கோயில்.

### 'எங்கள் கடன் பணிசெய்து கிடப்பதே'

நெட்டிலைப்பாய்த் திருத்தலத்தில் திருத்தொண்டுகள் பலவற்றையும் செய்யும் பாக்கியம் பெற்றவர்கள் நாங்கள். எம்பெருமானது அருள்இல்லாமல் அவருக்குவேண்டிய திருத்தொண்டுகளை நாம் செய்ய முடியாது.

எங்கள் பிள்ளையார் கோயிலைப் பொறுத்த அளவில் தினசரி பூசை வழிபாடுகளோ வருடாந்த மஹோற்சவங்களோ அல்லது வேறு எந்த உபயமாக இருந்தாலும் நேரம் தவறாது அனைத்தும் நடைபெறுவது வழமை. குறிப்பாக வருடாந்த மஹோற்சவ காலங்களில் காலையிலிருந்து மாலையில் உற்சவம் பூர்த்தியாகும்வரை அந்தந்த நேரத்திற்கு அந்த அந்தக் கருமம் நடைபெறுவது அனைவராலும் பாராட்டப்படும் ஒரு விடயமாகும். குறிப்பிட்ட ஒரு நேரத்திற்குச் சுவாமி எழுந்தருளுவதும் மீண்டும் அதே மாதிரிச் சொல்லப்பட்ட அந்த நேரத்திற்கு சுவாமி தமது இருப்பிடத்தை அடைவதும் கடந்த பல வருடங்களாக நடைமுறையிலுள்ள ஒரு விடயமாகும். இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தாக்களாக நின்று செயற்படுபவர்கள் நெட்டிலைப்பாய் திருத்தலத்தைச் சேர்ந்த இளைஞர்கள் என்றால் மிகையாகாது.

நெட்டிலைப்பாய்த் திருத்தலத்தில் எந்த வேலையாக இருந்தாலும் எவரும் அவர்களுக்கு இப்படிச் செய்யுங்கள் அப்படிச் செய்யாதீர்கள் என்று சொல்வதில்லை. அவர்கள் தாமாக உணர்ந்தே தங்களது சகல கடமைகளையும் கவனிக்கிறார்கள். இது நெட்டிலைப்பாய்த் திருத்தலத்தில் உள்ள ஒரு தனிச்சிறப்பாகும். இது நெட்டிலைப்பாய் விநாயகரின் அருளே எனலாம்.

#### அன்னதானப் பணி

விசேடமாக மஹோற்சவ காலங்களில் கோயிற் பிரதேசம் முழுவதிலும் சுத்தம் சுகாதாரத்தைப் பேணுகிறார்கள். கடந்த பல வருடங்களாக மஹோற்சவ காலத்தில் பத்து நாள்களுமே அன்னதானப் பணி நடைபெற்று வருகிறது. முன்னர் இப்பணி பிராயச்சித்த அபிஷேகத்திலிருந்து தொடங்கி தேர்த் திருவிழா அன்றும் நடைபெறும் ஒரு பணியாகவே இருந்து வந்துள்ளது. இந்தத் திருத் தொண்டைப் பத்து நாள்களுக்கும் விஸ்தரித்த பெருமை இளைஞர்களுக்கே உரியதாகும். இன்று நெட்டிலைப்பாய்த் திருத்தலத்தில் அன்னதானப் பணியானது மிகுந்த தூய்மையுடனும் அர்ப்பணிப்புடனும் நடைபெறுவதற்கு இளைஞர்களே முன்னுதாரணமாக விளங்குகின்றனர். இது நெட்டிலிப்பாயான் இளைஞர்களுக்கு அளித்துள்ள வரப்பிரசாதமேயாகும்.

#### புதுப்பொலிவு

இன்று நெட்டிலைப்பாய்த் திருத்தலம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும் புனராவர்த்தன கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மிக மிக அழகாகப் புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கின்றது. கிழக்கு தெற்கு வாசல், இராஜகோபுரங்கள் இரண்டும் அழகுக்கு அழகாக அள்ளிச் சொரியும் வண்ணம் கனகம்பீரமாகக் காட்சி அளிக்கின்றன. இவை எல்லாம் எம்மைப் பரவசத்தில் ஆழ்த்தியுள்ளன.

#### சங்கமம்

ஒரு திருத்தலமானது வழிபாடு செய்வதற்கு மட்டும் உரிய ஒரு இடமன்று அது கிராமத்து மக்கள் அனைவரும் சங்கமிக்கும் ஒரு இடமாகவும் திகழ்கின்றது. இந்த உண்மையையும் இளைஞர்களாகிய நாம் உணர்ந்துள்ளோம். அதற்கேற்பவும் எமது செயற்பாடுகளும் அமைந்துள்ளன என்றால் அது மிகையானதொரு கூற்றாக இருக்க முடியாது.

மேலும் திருக்கோயில்களே சிற்பம், ஓவியம், நாதஸ்வரம் முதலிய கலைகளையும் வளர்க்கும் இடங்களாகவும் விளங்குகின்றன. இந்த வகையிலும் நெட்டிலைப்பாயத் திருத்தலம் சிறப்புற்று விளங்குகின்றது எனலாம். இவற்றை எல்லாம் உணர்ந்துள்ள நெட்டிலைப்பாய்த் திருத்தலத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு அதை வருடம் முழுவதும் பேணும் கடமையும் பொறுப்பும் இருக்கிறது. தமது கடமையிலிருந்து இளைஞர்கள் ஒருபோதுமே தவறமாட்டார்கள். இதற்கு நெட்டிலைப்பாயானது திருவருள் பொலிந்து விளங்குவதாக

'நல்லதோர் வீணை செய்தே
அதை நலங் கெட புழுதியில் எறிவதுண்டோ '- பாரதி

இன்றைய கும்பாபிஷேகப் பெருவிழா பெருஞ் சாந்தியாகச் சிறப்புற நடைபெற எம்பெருமானைப் பணிந்து வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் கடன் பணி செய்து கிடப்பதே

நெட்டிலைப்பாய் திருத்தலத் தொண்டில் இளைஞர்கள்

## ...ருத்தல வரலாற்றுச் சுருக்கம்

...யிற்று. காலஞ்செல்லச் செல்ல சிறிய கொட்டிலில் அமைந்த கோயில் பெரிய விசாலமான கோயிலாக மாற்றம் பெறலாயிற்று.

#### முருகேசர் காலம்

சைவப் பெரியார் நாகேந்திரரின் ஒருமகன். முருகேசர் என்பவர் இவரது காலத்தில் கிராம மக்கள் அளிந்த பேராதரவினால் கோயில் முழுமையானதோர் அமைப்பைப் பெற்றுக் கொண்டது. பெரிய எடுப்பில் ஒன்றன் பின் ஒன்றாக இரு தடவைகள் சுண்ணாம்புக் கல் சுளைகளை வைத்து அவைமூலம் பெறப்பட்ட சுண்ணாம்பைக் கொண்டு சாந்துக் கட்டடமாகக் எழுப்பப்பட்ட பெரிய கோயிலிலேயே 1976ஆம் ஆண்டுவரையும் வழிபாடியற்றி இன்று அதனைப் புனருத்தாரணம் செய்துள்ளோம்.

#### புராண படனம்

பெரியார் நாகேந்திரர் காலத்திலிருந்து கோயிலில் புராண படனங்கள் நடைபெற்றுள்ளன. புராணங்களைப் படிப்போரும் அவற்றுப் பயன் சொல்வோரும் அவ்வாறான புராண படனங்களை விரும்பி நயந்து கேட்போரும் நெட்டிலைப்பாய் கோயிற் பற்றில் நிறைய இருந்துள்ளனர். இவர்களுள் வேலுப்பிள்ளை சட்டம்பியார் முக்கியமானவர்.

#### உபகரிப்பு

நெட்டிலைப்பாய் கோயிற்பற்று மக்கள் அனைவரும் அன்று கமக்காரர்களாகவே இருந்துள்ளனர். இவர்களது விளை பொருள்களில் சாமி, குரக்கன் பிரதானமானவை. இவை அறுவடையாகும் காலங்களில் அறுவடையில் ஒரு பகுதியை நெட்டிலைப்பாயான் அடியார்கள் கோயிற் திருப்பணிக்கென உபகரிப்பது வழக்கம்.

#### வள்ளிப்பிள்ளை

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வள்ளிப்பிள்ளை எனும் மூதாட்டி பிடி அரிசித் தொண்டுமூலம் நெட்டிலைப்பாய்த் திருத்தலத்தில் திருவிளக்கேற்றும் பணியைச் செய்து வந்துள்ளார்.

#### ஐயனார்

வரலாற்றில் நெட்டிலைப்பாயானுக்கு மிக நீண்ட காலம் பூசகராக இருந்தவர் எனப் பேசப்படுபவர் ஐயனார் எனும் பிராமணப் பெருந்தகையே ஆவார்.

1932 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பின்படி கோயில் பொதுக்கோயிலாயிற்று. வழிபடுவோர்களும் பூரணமான நிம்மதியைப் பெற்றுக் கொண்டனர். நீதிமன்றத் தீர்ப்பில் கோயில் எவ்வாறு பரிபாலிக்கப்பட வேண்டுமென்று நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. ஆவ்வாண்டில் புதிய பரிபாலன் சபையும் தாபிக்கப் பட்டது.

1932 ஆம் ஆண்டிலிருந்தே நெட்டிலைப்பாய்த் திருத்தலத்தில் அலங்கார உற்சவம் ஆரம்பமாயிற்று. 1936 ஆம் ஆண்டுமுதல் வருடாந்த மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. வருடாந்த மகோற்சவகாரர்கள் அனைவரும் தொன்றுதொட்டு வழி பாடியற்றி வந்த நெட்டிலைப்பாயானின் அடியார்களேயாவார்.

#### தலவிருட்சம் வில்வை

ஆதி நாள்களில் நெட்டிலைப்பாயானின் திருமஞ்சக் கிணறு இன்றைய நவக்கிரக கோயில் உள்ள இடத்தில் அமைந்திருந்தது. அதன் மருங்கில் நூற்றாண்டுகாலப் பழைமை வாய்ந்த பாரிய வில்வை மரம் ஒன்றும் இருந்துள்ளது. வில்வை மரமே நெட்டிலைப்பாயானின் தலவிருட்சமாகும்.

1952 ஆம் ஆண்டுவரை சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் சேவை நீடித்தது அவருக்குப்பின் கோயிற் பூசகர்களாகப் பதின்மர் வருவதும் போவதுமாக இருந்துள்ளனர். 1960 ஆம் ஆண்டுக்கும் பிற்பட்ட காலத்தில் பிரம்மஸ்ரீ ஹரிஹர ஐயர் என்பவர் கோயிற் பூசைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். இவருடைய பெருமகனே இன்றைய பிரதம பூசகர் மணிஐயா அவர்கள்.

#### கனகசபை உபாத்தியாயர்

தமது தந்தை பூசாரியார் செல்லப்பாவின் வழியில் அவரது மகன் செ.கனகசபை உபாத்தியாயர் அவர்களும் கோயிலைப் பராமரித்த சிறப்புக்குரியவர்.

நெட்டிலைப்பாய்த் திருத்தல வரலாற்றில் நிறைவாக ஒன்றைக் கூற வேண்டும். அதாவது ஆங்கிலேயர்கள் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த அக்காலத்தில் யாழ்ப்பாணத்துத் திருக் கோயில்களில் பதிவேடொன்றினைத் தயாரித்துள்ளனர். 1854ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட இப்பதிவேட்டில் நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் திருக்கோயிலும் இடம்பெற்றிருக்கின்றது என்பதனைக் கூறிக்கொள்கிறேன். யான் இங்கு கூறியவை கோயில் பற்றிய சில குறிப்புக்களே யன்றி முழுமையான வரலாறாகாது.



செல்லப்பா நடராசா

### கும்பாபிஷேக மலர் வெளியீடு

சிறப்புரைகள்:
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா (MA)
சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் (MA)
வைத்திரு எஸ்.லலீசன் (MA)
(விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

...ல் திருவருள்மிகு நெட்டிலைப்பாய் பிள்ளையார்
...ல் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகப்
...அதி சிறப்பாகவும் மங்களகரமாகவும்
... எல்லாம் வல்ல விநாயகப் பெருமானது
...றைஞ்சி நிற்கின்றோம்.



...டிஜிற்றல் போட்,
...பிளெக்ஸ் போர்ட்,
...கள் திருமண
...ண்டர்கள்,
... அட்டைகள்,
...றினை மிகக்
...சிறந்த முறையில்
...மிகச் சிறப்பான
...டுக்கப்படும்.

...NTING

கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி,
யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ்.வீதி, உப்புமடச் சந்தி,
கோண்டாவில்.

ஆயிரமாய்த் தொல்லை வரும்போது
கூட அனைத்தையும் களைந்தருளல்
வேண்டும் அப்பா!
வாய்மை வழி தூய்மை வழி
வாழவேண்டும் வன்செயல்கள்,
கெடுபிடிகள் ஒழியவேண்டும் தீயவரின்
அடாதுடிகள் தீரவேண்டும்
செம்மை நலம் அறிவுடைமை
பெருகவேண்டும், நெட்டிலைப்பாய்
நின்மலரே போற்றி! போற்றி!!

மூதறிஞர் கவிஞர்
கலாநிதி இ.முருகையன்

இத்திருப்பணி சிறப்புற வழி சமைத்து
எம்போன்ற அடியவர்களின் மனதின்
கண்மாசினைப் போக்க அருள்பாலிக்கும்
நெட்டிலிப்பாயானே போற்றி! போற்றி!!

பூச்சாடிப் பிரியர்களுக்கு...
அழகுத் தோட்டம் அமைத்திட
DSI இன்
பூச்சாடிகள்



விரும்பிய
அளவுகளில்
பெற்றுக்கொள்ளலாம்

DIAHSRI
காட்சியறை

இல.220,
...
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 1378



நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயில்
மகாகும்பாபிஷேக விழாச் சிறப்புற
நடைபெற வாழ்த்துகின்றோம்.

Vigneswara
Paints & Electricals
170, பலாலி வீதி, கோண்டாவில்.

V.M.K. Brothers
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 165

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | | 16 |
| | ■ | 17 | 18 | | ■ | 19 | |
| ■ | 20 | | | | 21 | ■ | |
| 22 | | | | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. வசிட்டன் மனைவி
5. கணவன்/ இல்லம்
7.புசித்தால் போய்விடும்
8.பிதுக்குதல்
9.சைவர்களின் முழுமுதற் கடவுள்
10.இது அறுபத்தினான்காம்
11.கூடுதல்
13.கிணற்றில் தண்ணீர் அள்ள உதவும்
14.கொடுக்கும்
15.சிவாஜி கணேசனுக்கு கை வந்த கலை
17.இரவு அல்ல
19. மண்ணுக்குள் மறை
20.கைகூப்பு
22.மேனி
23.மைதானம்

### மேலிருந்து கீழ்

1.அளவுக்கு அதிகம்
2.நாக்கு அறியும் சுவை இது.
3.செய்தி/ புதினம்
4. வலு
5. பதறுகை
6.சிவ திருத்தலமொன்று
9.தில்லைப்பதிக்கு மறுபெயரொன்று
12.சிஷ்யன் கற்பது இவரிடம்
13.மீனவர் கடற்கரையில் அமைப்பது
15.வழங்கு
16.நிலத்துக்குக் கீழிருந்து கிடைக்கும் திரவியம்
18.தடி
20.தாண்டு
21. ஏற்கனவே எழுதப்பட்டு விட்டது.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 163 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)ஸ்தாபகர் (5)துவை (7)வரலாறு. (8)விவர (9)ரம். (10)வாராவாரம். (13) மகம் (14)பலவான் (16)பதி. (18) ஆக்கல். (19)தரும் (20)மோதல் (21) அரப்பு (22)தின் (23)கொழும்பு

**மேலிருந்து கீழ்**

(1) ஸ்வரம் (2)தாரம். (3)பலா. (4)கறுவா (5)துவரம் பருப்பு (6)வைரம்(8)விவாக. (11)ராமன் (12)விலகல் (14)பக்தன் (15)வால் (17)திம்பு (18)ஆமோதி (19)தரம் (21) அழு.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 163 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** கா.தவராஜசுந்தரம், கிளி/அக்கராயன் அ.த.க.பாடசாலை, கோணாவில், கிளிநொச்சி

**2 ஆம் பரிசு** இ.தனரூபன், பிரதேச செயலகம், கோப்பாய்.

**3 ஆம் பரிசு** திருமதி த.நாகரத்தினம், மாப்பாணவூரி, காரைநகர்.

**4 ஆம் பரிசு** இரா.ஸ்ரீதரன், வற்றாப்பளை, முல்லைத்தீவு.

**5 ஆம் பரிசு** மு.சாந்தி, இல 550/3 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

**எஸ்.எஸ்.எம்.நேசன்,**
இல.54 6/6 சென்.லோறன்ஸ் றோட், வெள்ளவத்தை.

**செல்வி.சதீஸ் சாம்பவி**
உடுவில் பெண்கள் கல்லூரி, உடுவில், சுன்னாகம்.

**தே.அகுலப்பிரியன்,**
இல.336 குறோசர் லேன், கச்சேரி நல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் . கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 165**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 15.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில்ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.
7. சொற்சிலம்பம் போட்டி இல.165 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 19.06.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக் கப்படும்.

# வெல்லும்....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராகவனின் விருப்பத்தை இரகசியமாகப் பெற்றுக் கொண்டு ராகவனின் அப்பாவின் சம்மதத்தையும் பின்னர் பெறலாம் என்று எண்ணிய வாத்தியாரின் எண்ணத்தில் ராகவனின் மறுப்புப் பேரிடியாக வீழ்ந்தது. எண்ணங்கள் விரிய எதுவும் செய்ய இயலாமையால் தூக்கம் தொலைத்து விடிய விடிய விழித்திருந்தார்.

தாமரையின் தங்கைகளின் கல்யாணங்களும் கேவலமான இந்தச் செய்தியைத் தொட்டிழுத்தே தடைக் கற்களாய் எழுந்துயரப் போகிறதே என்ற கொடுமை தான் அவரை இப்பொழுது பெரிதாக வாட்டியது.

முகத்தில் அப்பிய கவலைகள் கலையாமலே விழித்தபடி இருக்க அன்றைய காலைப்பொழுது விடிந்தது. மனத்தால் அழுதார். வாத்தியார் வீடோ மரண வீடாகி மௌனத்தில் உறைந்திருந்தது.

''மாஸ்ரர் மாஸ்ரர்'' என்று அழைத்தவாறே படலையைத் திறந்து கொண்டு முற்றத்தில் காலடி வைத்த ராகவனின் தந்தை சிவநாதனைக் கண்ட வாத்தியாரின் மனத்தில் பயம் படர்ந்தது. பெண்கள் மீதில் குற்றம் காணும் உலகமே தம்மைச் சூழ்ந்திருக்கிறது. பெண்ணான தாமரை மீதிலேதான் எல்லாப் பாவங்களையும் சுமத்தித் தங்கள் நியாயத்தைச் சொல்ல வந்திருக்கிறார்கள் என்பதாய் அவரின் வருகை வாத்தியாருக்குத் தெரிந்தது.

இந்த விடயத்தில் யார் மீது குற்றம் என்று தீர்மானிக்க முடியாவிட்டாலும் பெண்களைப் பெற்றவர்கள் மீதிலேதான் குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. தலையைக் குனிந்து கொண்டே வீட்டுக்கு வெளியே வந்த மாஸ்ரர் முற்றத்துக்கு வந்துவிட்ட சிவநாதனை சோகத்துடனே நிமிர்ந்து பார்த்தார்.

சிவநாதனோ 'மாஸ்ரர்' எனக்கு எல்லாம் தெரியும். இந்தக் காலத்துப் பிள்ளைகள் இப்படித் தான். பெற்றோராகிய நாமும் பல வேளைகளில் இது விடயத்தில் மனந்திறந்து பேசுவதில்லை. எல்லோருமே தங்களின் வித்துவச் செருக்கால் ஒவ்வொருவரும் தாமே பெரியவர் என எண்ணிக் கொண்டு வளரும் பிள்ளைகளின் மன தில் நஞ்சை விதைத்து விடுகின்றோம். காதலைப் போற்றிப் புகழுகின்ற மனம் வாழ்க்கையிலே அதனை வெற்றி பெற அனுமதிப்பதில்லை. இதுதான் இன்றைய நிலை. வாருங்கள் உள்ளே இருந்து ஆறதலாகக் கதைப்பம்'' என்றவாறு வாத்தியாரின் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தார் சிவநாதன்.

தாமரையும் ராகவனும் கொண்டிருந்த இரகசிய உறவால் கசிந்த அந்தச் செய்திகளை மாஸ்ரர் ஒரு போதும் சிவநாதன் குடும்பத்துடன் பேசிப் பெரிதாக்க விரும்பியதில்லை. அந்தக் கதையை ஊர் வாய் கொண்டோடி அவர் காதுக்கும் சேர்த்தபோதுதான் ராகவனை இது குறித்து விசாரித்து அறிந்தார்.

உண்மை தெரிந்தபோது தாமரையைத் தனது மகளாகப் பார்த்தார். மகனின் செயற்பாட்டினால் தாமரை அடையப் போகும் வேதனை குறித்த விசுவரூபமே அவருக்குத் தெரிந்தது. அது பற்றியே சிந்தித்தார்.

ஏனெனில் அவருக்கும் பருவமடைந்த ஒரு பெண் பிள்ளை இருந்தாள். இவ்வாறான நிலை தனக்கும் வந்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் பரிதவிப்பையும் எண்ணியவர் தாமரையின் வேதனையைத் தன் மகளின் வேதனையாகக் கண்டார். அதனால் உருவாகிய நீதி அவரை நல்லெண்ணத்துக்குள் சிறைவைத்தது.

இப்பொழுது சிவநாதன் ஏதோ ஒரு நல்ல முடிவோடு வந்திருப்பது தெரிந்தது. காயமோ அல்லது நோயோ தனக்கு வரும்போதுதான் அதன் வேதனையை உணரமுடிகிறது. அடுத்தவனைத் துயர உணர்வுகள் வருத்தும் போது அவை பற்றி உணர இயலாத மனிதம் வாழ்வது சமூகத்துக்குக் கேடு எனச் சிவநாதன் எண்ணினார்.

அயலவர் ஒவ்வொருவரினதும் இன்ப துன்பங்கள் தமக்கு வந்ததாக உணரும்போதுதான் சமூகத்தின் ஒற்றுமைக்கும் நல்வாழ்வுக்கும் சிறந்ததொரு வழி பிறக்கின்றது.

அயலவனின் இன்பத்தில் மாத்திரமல்ல துன்பத்திலும் பங்கேற்க முந்தும் மனத்திலேயே மனிதம் வாழ்கிறது. வாத்தியாரின் குடும்பத்தில் தாமரைக்கு ஏற்பட்ட அவமானம் தன் மகளுக்கு ஏற்பட்டதாக எண்ணிய சிவநாதனின் பரந்த உள்ளம் வாத்தியாரின் குடும்பத்தை மாத்திரமல்ல அந்தச் சமூகத்தின் மானத்தையும் காத்ததைக் கண்டு அந்த ஊரே மகிழ்ந்தது.

வாத்தியாரின் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளியது. வீட்டினுள்ளே இருந்த தாமரையின் முகத்திலும் ஓர் ஆனந்தக் குதிப்பு. மாஸ்ரர் வீடே மகிழ்வில் குதூகலித்தது. ஒரு சமூகத்தின் இன்பமும் துன்பமும் அந்தச் சமூகத்தின் வெற்றி தோல்விகளோடு பிணைந்தே செயற்படுமெனில் ஐக்கியம் அங்கே ஆட்சி செய்யும். ✱

# எஸ்.பொவுக்கு இயல் விருது

கனடாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் இலக்கியத் தோட்டம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் இலக்கிய சாதனையாளருக்கான விருதுகளை வழங்கி வருகிறது. அந்தவகையில் 2010 ஆம் ஆண்டு சாதனையாளர் விருதுக்கு எஸ்.பொவை தேர்ந்தெடுத்தமை ஈழத்துக்குப் பெருமை சேர்க்கும் விடயமாக அமைகிறது.

எஸ்.பொ. தனது 79 ஆவது வயதில் எழுத்து மற்றும் இலக்கியப் பணிகளில் சுறுசுறுப்புடன் செயற்பட்டு வருகிறார்.

இவரது இலக்கிய வாழ்வு அறுபதாண்டு காலத்தையும் தாண்டியது. 1932 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் தனது பல்கலைக்கழகப் படிப்பைச் சென்னையில் முடித்தார். பின் மட்டக்களப்பில் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றியிருந்தார். 1981 ஆம் ஆண்டில் ஆபிரிக்காவில் நைஜீரிய நாட்டில் பணியாற்றி ஓய்வுபெற்றார். இலங்கைக்கு வந்து கல்வி அமைச்சின் பாடத் திட்டக் குழுவிலும் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநர் குழுவிலும் பங்கேற்றார். 1950 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு அறிந்த ஈழத்துப் படைப்பாளியாகத் திகழ்ந்தார்.

அந்தக் காலத்தில் இவரது எழுத்துக்கள் பிரசண்ட விகடன், கலைமகள், கல்கி, சரஸ்வதி ஆகிய இதழ்களில் இடம்பெற்றுள்ளன.

ஈழத்தில் சிறந்த சிறுகதையாளராகக் கணிக்கப்படும் இவர் நாவல், கவிதை, நாடகம், விமர்சனம், மொழி பெயர்ப்பு, ஊடகம் எனப் பல தளங்களில் செயற்பட்டார்.

புத்தகக் குப்பைக்குள் இருந்து கொண்டு குண்டுமணி தேடும் - இவர் வரலாறு ஈழத்துக்கு ஒரு பெறுமதி வாய்ந்த பொக்கிஷமாக இருக்கும். விமர்சனப் பார்வையில் அவரின் எழுத்துக்களைப் படித்தவர்கள் கண்டதையும் எழுகின்றார் என்று சொல்லுவார்கள். ஆமா அப்படித்தான் என்று இயல்பாகச் சொல்லும் எஸ்.பொவின் கண்டதை எழுதும் எழுத்துக்களை யாராலும் எழுத முடியாது என்பது உண்மைதான். தமிழ் நாட்டில் உள்ள எழுத்தாளர்கள் பலபேர் எஸ்.பொவின் தமிழைக் காதால் கேட்பதற்காகவே அடிக்கடி தொலைபேசி இணைப்பை ஏற்படுத்திக் கொண்டு இருப்பார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 22

# உடற்பயிற்சி கட்டாய தேவை

இன்றைய நவீன,நாகரீக உலகில் வாழும் நாம் உடற்பயிற்சியின் தேவையை அத்தியாவசியமாக உணர வேண்டிய காலம் வந்துள்ளது. இன்று நம்மில் பெரும்பாலானோர் ஒரு கதிரையில் இருந்து கொண்டே பல வேலைகளை, பல சாதனைகளை, கணினிகள், இலத்திரனியல், மின் இயந்திர சாதனங்கள் மூலம் செய்து முடிக்கின்றனர். இதனால் வேகமாக உழைப்புக்காகச் சுழன்று கொண்டிருக்கிறோம். இந்த முன்னேற்றம் வேறொரு வழியில் மனிதனின் உடல் தொழிலியலைப் பாதித்துக் கொண்டிருப்பதை எம்மால் உணர முடிவதில்லை. தொடர்ந்து ஒரே இடத்தில் இருந்து பல மணி நேரம் வேலை செய்வதால் அவனது உடலுக்குப் போதிய அப்பியாசம் கிடைப்பதில்லை. இதனால் அவன் உடற்பருமனடைகிறான். இதனால் பல நோய்களுக்கு ஆளாகின்றான். நீரிழிவு, இதய நோய் கள்,உயர்குருதிஅமுக்கம், மூட்டுவாதம், நாரி நோ, மூட்டு நோ போன்றவற்றால் துன்பப்படுகிறான்.

அன்றைய காலகட்டத்தில் உடல் அப்பியாசம் என்பது எமது வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்திருந்தது. சாதாரணமாக கிணற்றில் அள்ளிக் குளிப்பது முதல், வீட்டு வேலைகள், உரலில் இடித்தல், அம்மியில் அரைத்தல், விவசாய நடவடிக்கைகளான தண்ணீர் பாய்ச்சுதல், உழுதல், கொத்துதல்,பாரம் தூக்குதல், நடத்தல், ஓடுதல் என்பன சாதாரண வாழ்வியலுடன் சேர்ந்து பின்னிப்பிணைந்திருந்தன. இதனால் அவர்கள் போதிய உடல் அப்பியாசத்தை பெற்றுக்கொண்டார்கள். உடல் சுறுசுறுப்பாக இயங்கியது. அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்தார்கள். இன்றோ எல்லாம் இயந்திரமயமாகியதால் நாம் உடல் உழைப்பின்றி சோம்பேறிகளாக மாறிக் கொண்டிருக்கின்றோம்.

இன்றைய சிறுவர் முதல் பெரியோர்வரை தொலைக்காட்சி பார்த்தல், கணினியில் விளையாட்டுகள் விளையாடுவதில் கூடிய நேரத்தைச் செலவிடுகிறார்கள். தொடர்ந்து ஒரே இடத்தில் இருப்பதால் அவர்களால் சுறுசுறுப்பாக இயங்க முடிவதில்லை.

இவற்றைக் குறைத்து ஒரு நாளில் சில மணி நேரங்களையாவது வீட்டுக்கு வெளியே வந்து ஓடுதல், நடத்தல், பாரம் தூக்குதல், போன்ற நம் அன்றாட வாழ்வில் செய்யக்கூடிய சில வேலைகளைச் செய்தும் உடல் அப்பியாசத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சிறுவர்களைச் சிறிது நேரமாவது வெளியே சென்று விளையாட அனுமதியுங்கள், அருகில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்கு நடந்து சென்று வாருங்கள். அப்போது உங்கள் மன அழுத்தம் குறைவடைவதுடன், உடல் புத்துணர்ச்சியும் அடைகின்றது. புதிய உற்சாகம் ஒன்று நமக்குக் கிடைக்கும். இதனால் தீய எண்ணங்களிலிருந்தும், செயல்களிலிருந்தும் நாம் விடுபட முடியும். நமக்குள் நன்றாக வாழ முடியும் என்ற உத்வேகமும் பிறக்கின்றது.

உடல் அப்பியாசமானது நமக்கு பல நன்மைகளைத் தருகின்றது. அது உடலியல் ரீதியாவும், ஆத்ம ரீதியாகவும் கிடைக்கின்றது. உடற்பருமனைக் குறைக்கின்றது, குருதிச் சுற்றோட்டத்தைக் கூட்டுகின்றது. தசை நார்கள், மூட்டுகளை வலுவடையச் செய்கின்றது. நாரி நோ, இடுப்பு வலி போன்றவற்றை நீக்குகின்றது. அத்துடன் ஆத்ம ரீதியாகவும் மனம் ஆறுதலடைய உதவுகின்றது. உடலுக்குப் புத்துணர்ச்சி (Relaxation) கிடைக்கின்றது.

இதனால் நிம்மதியான, சாந்தியான ஒரு வாழ்வு கிட்டுகிறது. எனவே இன்றே நாம் எம் வாழ்வியலுடன் கூடிய சில அப்பியாசங்களைச் செய்து ஆரோக்கியமானவர்களாக வாழ்ந்து , எமது பிள்ளைகளையும் வாழ வைப்போம்.

**செ.தவச்செல்வம்,** தாதியஉத்தியோகத்தர்,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம் .

# கட்டுப்பாடற்ற நீரிழிவால் ஏற்படும் பாதிப்புக்கள்

நீரிழிவு நோயாளிகள் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டியது அவசியம். அக்கட்டுப்பாடு இழக்கப்படுமிடத்து பாதிப்புகள் அதிகம் ஏற்படும்.

**1. குருதிக் குழாய்களில் ஏற்படும் பாதிப்புகள்**

ஒரு வாகனம் சரியாக இயங்குவதற்கு அதற்குரிய எரிபொருள் விநியோகம் சரியான முறையில் இருக்க வேண்டும். அதேபோன்று எமது கால்களும் சரியாக இயங்க அதற்குரிய குருதி விநியோகம் சிறப்பாக அமைதல் வேண்டும்.

நீரிழிவு நோயாளிகளின் நாள்பட்ட நிலை மையில் அவர்களது நாடிகளில் கொழுப்பு படிவுகள் ஏற்படும், அந்த நாடிகளில் உட்பகுதி தடிப்படைந்து குருதி விநியோகிக்கும் அளவு குறைவடைகின்றது. குருதி விநியோகம் குறைவடையும் போது காலில் ஏற்படும் தொற்றுகளுக்கு எதிராகப் போராடும் வெண்குருதிச் சிறு துணிக்கைகள் காலைச் சென் றடையும் அளவு குறைவடைகின்றது. இதனால் தொற்று ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது. மேலும், காலில் நகத்துக்கும், தோலுக்கும் போதிய குருதி விநியோகம் கிடைக்காமலும் போகிறது.

இதனால் நகங்கள் மஞ்சள் நிறமாக மாறுவதுடன் இலகுவில் உடைந்தும் விடுகின்றன, இவ்வாறான நகங்கள் வெட்டுவதற்கும் கடினமானவையாகின்றன. கால்பாகத்தில் உள்ள தோல்பகுதி பளபளப்பானதாக மாற்றமடையும். கால்பகுதியில் காணப்படும் சிறிய குருதிக்கலனிலும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இக்குருதிக் கலனின் சுவர்ப் பகுதி பலவீனமடைவதுடன் சில சம யங்களில் உடைந்தும் விடுகின்றது. இத்தகைய சிறிய குருதிக் கலன்களும் காலின் பகுதிக்கு வேண்டிய போசனைப் பதார்த்தங்களை வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் தொற்றுக்கள் ஏற்படின் அவை இலகுவில் குணமடையாது.

**2. நரம்புத் தொகுதியில் ஏற்படும் பாதிப்புகள்**

கால்பகுதிக்கான நரம்பு விநியோகத்திலும் சில பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. சிறிய குருதிக் கலனில் ஏற்படும் பாதிப்பால் நரம்புகளுக்கான குருதி விநியோகம் குறைவடையும். இதனால் நரம்புகளுக்கு வேண்டிய போசனையும் குறைவடையும். இதனால் கலன்களில் உணர்ச்சிக் குறைவு ஏற்பட்டுக் காயங்கள் இலகுவில் ஏற்படலாம், எனவே இதில் ஏற்படும் சிறிய புண்கள் பெரிதாகப் பெரிதாக கால் விரல்களை அகற்ற வேண்டிய துர்பாக்கிய நிலையும் ஏற்படலாம்.

எனவே இவ்வாறான நோயாளிகள் தங்கள் பாதங்களை, அடிக்கடி ஒழுங்காக அவதானித்து. சரியான பராமரிப்பை வழங்குவதன் மூலமும் நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலமும், காலில் ஏற்படும் பாதிப்புகளை குறைத்து கொள்ளலாம்.

**கோ.நந்தகுமார்,** விரிவுரையாளர்,
தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

# மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் 6

நோய் ஏற்படுவதைத் தடுக்கும் மார்க்கங்கள் மட்டுமல்ல நோய்களைக் குணமாக்கும் வழிமுறைகளையும் கூட மதங்கள் வரையறுத்துக் கூறி இருக்கின்றன. இந்தக் கருத்துக்கள் வெளிச்சத்துக்கு வர வேண்டும்.

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே சைவச் சித்தர்களாலும் ஞானிகளாலும் நோயைக் குணமாக்கும் சில இரசாயனப் பதார்த்தங்களும் கனியுப்புக்களும் உலோகங்களும் பயன்படுத்தப்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. வேதகாலத்திலே தோன்றிய அதர்வன வேதத்தின் உபவேதங்களில் ஒன்றாக ஆயுர் வேத மருத்துவம் கருதப்படுகிறது. சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டுள்ள இந்த மருத்துவத்தில் பல அரிய மருத்துவக் கருத்துக்கள் காணப்படுவதுடன் நோய்களைக் குணமாக்கும் பல மார்க்கங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

சித்தமருத்துவம் திராவிடர்களின் மருத்துவமாகவும் ஆயுள்வேதம் ஆரியர்களின் மருத்துவ முறையாகவும் வளர்ச்சியடைந்து வந்த பொழுதிலும் இரண்டு மருத்துவ முறைகளுக்கும் பல ஒற்றுமை கள் இருப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

பண்டைய யுத்தங்களிலே காயமுற்றோருக்கு பல சத்திர சிகிச்சைகள் நடத்தப்பட்டதற்கான ஆதாரங்களும் கிடைத்திருக்கின்றன. இதற்கு அவர்கள் செப்புக் கத்திகளைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் இரும்புக் கத்திகளாக இருந்தால் அவற்றிலே ஏற்புவலி போன்ற கொடிய நோய்களை ஏற்படுத்துகின்ற கிருமிகள் வளரும் ஆபத்து அதிகமாகக் காணப்பட்டதால் தொற்று நீக்கும் வசதிகளற்ற அந்தக் காலத்திலே புத்திசாதுரியமாகப் பாதுகாப்பான செப்புக் கத்திகளை பாவித்திருக்கிறார்கள் அந்தச் சித்தர்கள். இந்த சத்திர சிகிச்சைகளை நடத்திய வர்கள் உண்மையில் எந்த வைத்திய முறையைக் கடைப்பிடித்தார்கள் என்பதை அறிந்து கொள்வதற்கு போதுமான சான்றுகள் இல்லை.

*மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் என்ற இந்தத் தொடர் கட்டுரையின் கருத்தோட்டங்களுடன் நீங்கள் பூரணமாக உடன்பட்டால் "A" எனவும் ஓரளவு உடன்பாட்டால் "B" எனவும் உடன்படவில்லை யாயின் "C" எனவும் இக்கருத்துக்களை எதிர்ப்பதாயின் "D" எனவும் ரைப் செய்து 0773604094 என்ற இலக்கத்துக்கு SMS செய்துவிடுங்கள்.*

அதர்வன வேதத்தின் உபவேதமாகிய ஆயுர்வேத மருத்துவத்தை சில நூல்கள் தமிழர்களின் மருத்துவமாகவும் சித்திரித்திருக்கின்றன. சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் தமிழ் மருத்துவர்களை ஆயுர்வேதர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இன்று உலகம் முழுவதும் பிரபல்யம் அடைந்து வரும் யோகாசனப் பயிற்சிமுறையைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் சைவச்சித்தர்களே. சித்த மருத்துவம் சிறந்தது என்பது முக்கியமல்ல; மனிதன் சுகப்பட வேண்டும் என்பதே முக்கியமானது. அதேபோல எந்த மதம் சிறந்தது என்பது முக்கியமல்ல; மனிதன் நல்வழிப்பட வேண்டும் என்பதே முக்கியமானது. உடல், உள்ளம் ஆகிய இரண்டும் செம்மைப் படுவதற்கு மதம், மருத்துவம் இரண்டும் இரு கண்கள் போல விளங்குகின்றன. மதக் கோட்பாடுகளும் மருத்துவ விஞ்ஞானக் கோட்பாடுகளும் இருவேறு துருவங்கள் என்ற எண்ணம் மாற்றம் பெறவேண்டும்.

மதங்கள் எவ்வாறு மனிதர்களின் பல கொடிய நோய்களை சுகப்படுத்தி வருகிறன என்பது பற்றியும் இதற்கான விஞ்ஞான அடிப்டை என்ன என்பது பற்றியும் இது சம்பந்தமாகத் தற்போதைய ஆய்வுகள் என்ன கூறுகின்றன என்பது பற்றியும் நாம் ஒவ்வொருவரும் அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும்.

இவை அணைத்தும் நடுநிலமையுடன் நோக்கப்பட்டு எமது அன்றாட மருத்துவக் கவனிப்பு முறைகளுடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும். மதக்கருத்துக்கள் சாதாரண மனிதனால் புரியக் கூடியவையாகவும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவையாகவும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(தொடரும்)

**சி.சிவன்சுதன்,** வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பின் மகத்துவத்தை உணர்வோம் 4

தமிழில் உள்ள 247 எழுத்துக்களின் வரிவடிவங்களை அறிந்த குழந்தைகளால் எழுதியதை அல்லது அச்சிட்டதைப் படிக்க முடியும். எழுத்துக் கூட்டிப் படித்தால் மட்டும் போதாது. படித்த பகுதியின் பொருள் உணர்தல் வேண்டும். நான்காம் வகுப்புப் படிக்கும் மாணவனிடத்தில் கீழ் உள்ள திருக்குறளைப் படிக்கச் சொல்லுவோம்.

*"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை"*

மாணாக்கன் படித்து முடிப்பான். ஆனால், எழுத்துக்களின் ஒலிகளை எழுப்பினானேயன்றி அவற்றின் பொருள் உணர்ந்தவன் ஆகான். எனவே, அவன் அதனைப் படித்ததால் ஒரு பயனும் இல்லை. படிப்பதில் பொருள் உணர்தல்தான் இன்றியமையாதது. "உணவு உண்பவர்க்கு உணவாக இருக்கும் உணவை உண்டாக்கி உண்பார்க்கு உணவாக இருப்பதும் மழை" எனும் தொடரைப் படிக்கும்பொழுது ஓரளவு அதன் பொருளை உணரலாம். மேலும் அதனை விளக்கமாக எழுதியிருப்பின் அதைப் படித்து நன்கு பொருள் உணரலாம். எனவே, படித்துப் பொருள் உணர்தலுக்கு மாணாக்கரின் அறிவு நிலைக்கும் சொற்களஞ்சியத்தை அதிகரிப்பதற்கும் ஏற்ற புத்தகங்களைப் படிக்கச்செய்தல்வேண்டும்.

படித்தல் என்பது வரிவடிவத்தை அறிதல், ஒலித்தல், பொருள் உணர்தல் என மூன்று கூறுகள் அடங்கிய செயலாகும். கண் பார்க்க, வாய் படிக்க, அறிவு அதன் பொருள் உணர்த்துதல் வேண்டும். இவை ஒருங்கிணைந்து தொடர்ச்சியாக நிகழ்தல் வேண்டும். படித்துக்கொண்டிருக்கும்போது கவனம் வேறு எங்கேனும் செல்லுமாயின் பொருள் உணர்தல் நிகழாது. எனவே, மனதை ஒருமுகப்படுத்தல் படித்துப் பொருள் உணர்தலுக்கு மிகவும் இன்றியமையாதது.

இவ்வாறு மனதை ஒருமுகப்படுத்திப் படிக்க படிப்பவரின் ஆர்வம் தூண்டப்பட்டிருத்தல் வேண்டும். வசதியான இருக்கையும், தகுந்த ஒளியும் இருத்தல்வேண்டும். கவனத்தைச் சிதறச்செய்யும் வேறு ஒலிகள் உள்ள சூழ்நிலை இருத்தல் கூடாது. இவ்வாறான சூழ்நிலையில்தான் தொடர்ச்சியான ஒருங்கிணைந்த கவனம் படிப்பில் ஏற்படும். படிக்கும் பகுதியின் பொருளை உணரமுடியும்.

புதிய கல்வியின் இலக்குகளான படைப்பாற்றல் திறன், துருவி ஆராயும் திறன், அணியாகச் சேர்ந்து பணியாற்றும் திறன், அறிவைப் புதுப்பிக்கவும் அதனைப் பரிசீலிக்கவும் தேவையான திறன்கள் என்பவற்றை நிறைவேற்ற வேண்டுமாயின் பாடசாலைகளில் வாசிப்புத்திறன், கிரகிப்புத் திறன்களின் அடைவுகள் உயர்த்தப்படவேண்டியது அவசியமாகும்.

வாசிப்பதற்கான அடிப்படைத் திறன்களைப் பயிற்றுவதும், அவற்றுக்கான சூழலை ஏற்படுத்துவதும் ஆசிரியர்களின் இன்றியமையாத கடமையாகும். ஒவ்வொரு மாணவனும் அவன் வாழும் சூழலுடன் தனிப்பட்ட முறையில் கூர்ந்து கவனித்து வழிகாட்டல் வழங்குவதன் மூலம் மாணவனின் அடைவுமட்டத்தை உயர்த்தமுடியும்.

ஆரம்ப வகுப்புகளில் நெகிழ்வான முறையில் கற்பித்தல் மேற்கொள்ளப்படுவதால் ஏனைய பாடங்களின்போதும் வாசித்தலுக்கான சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். வாசித்தல் அவர்களுக்கு ஒரு சுவையான செயற்பாடாக அமையத்தக்கதாக ஆசிரியரே வழிப்படுத்த வேண்டும். ஆரம்ப, மேற்பிரிவு வகுப்புகளைப் பொறுத்தவரை அதாவது, நான்காம்-ஐந்தாம் தரங்களில் கிரகித்தலுக்கு வழிப்படுத்தி வாசிக்கும் செயற்பாடுகளை வழங்கவேண்டும். இதற்கு எழுதுதலுடன் கூடிய வாசிப்புப் பயிற்சிகள் வழங்கப்படலாம்.

* வினாக்களுக்கு விடை எழுதுதல்.
* வினாக்களுக்கு விடை தெரிதல்.
* உரைநடைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்.
* பாடப்பகுதியை வாசித்து, கிரகித்து வினாக்களுக்கு விடை காணல்.

இவற்றைவிட கதைகள், உரையாடல்கள், நாடகங்கள் போன்றவற்றையும் வகுப்பில் வாசித்தலுடன் மாணவர்கள் சுயமாகவும் வாசிப்பதற்கு ஏற்ற வசதிகளை ஆசிரியர் ஏற்படுத்திக் கொடுத்தல் நன்று.


இதுவரை வாசித்தல் தொடர்பில் அறிந்துகொண்ட கருத்துப்படி மாணவர்கள் காட்சியின் புற நிலை வடிவத்தை எவ்வாறு இனம்காண்பது முக்கியமாகிறதோ, அவ்வாறே அகநிலை வடிவத்தையும் இனம்காண்பது மிகவும் அத்தியாவசியமாகிறது. வாசிப்பின்போது இருநிலை வடிவங்களையும் மேம்படுத்தும் அறிக்கை ஆட்சியை ஆசிரியர்கள் வளப்படுத்தவேண்டியது அவசியமாகிறது.

வாசிப்பு என்பது கண்வழியான ஆற்றுப்படுத்தலுடன் தொடர்பான சிந்தனையை வளர்க்கின்றது. கேட்டல் காதுவழியான நெறிப்படுத்தலுடன் தொடர்பான சிந்தனையை வளர்க்கின்றது. இவை இரண்டினுக்கும் இடையே நேர்த் தொடர்புகள் உள்ளன. இரண்டும் கிரகித்தலை வளப்படுத்துகின்றன. இவ்வாறான கிரகித்தலின் வெளிப்பாடு சொல் சார்ந்ததாகவோ அல்லது எழுத்துச் சார்ந்ததாகவோ வெளிவரும். உளவியல் அடிப்படையிலே கூறுவதானால் வாசித்தல் - விளங்குதல் - கிரகித்தல் ஆகியவை ஒன்றுடன் ஒன்று பதிலீடு கொண்ட எண்ணக் கருக்களாகும். பேச்சுமொழியானது வலு வூட்டும் தூண்டிகளை உள்ளடக்கியது. குரலின் கனதி, அழுத்தம், நெகிழ்ச்சி முதலியவை தேவைக்கேற்றபடி வலுவூட்டுகின்றன. எழுத்து மொழிக்கும் இவ்வாறான அழுத்தங்களைக் கொடுக்க முடியும். தடித்த எழுத்துக்களில் அமைத்தல், கோடிடுதல், குறியீடுகளை இணைத்தல் முதலியன சில எடுத்துக்காட்டுக்களாகும்.

மேற்கூறப்பட்ட வாசித்தல் சார்ந்த திறன் விருத்தியில் மேம்பாடற்ற, குறைபாடுகளுடன் கூடிய கல்வி முறையானது வகுப்பறையில் மாணவரின் கல்வியின் தரத்தில் குறைபாடுகளை ஏற்படுத்துவதில் ஐயமில்லை. வாசிப்பு நெருக்கடிகள் மாணவர்களின் கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அத்துடன், வகுப்பில் காணப்படும் மெல்லக் கற்போரின் மிக முக்கியமான குறிகாட்டி வாசிப்பில் அவர்கள் பின்தங்கிய நிலைமையில் காணப்படுவதும், கிரகித்தலில் இடர்ப்படுவதும் ஆகும். எனவே, பாடசாலை வகுப்பறைகளில் மாணவர்களது வாசிப்பு-கிரகிப்பு அடைவு மட்டத்தை உயர்த்துதலே மெல்லக் கற்கும் மாணவர்கள் உருவாவதைத் தடுப்பதற்கான ஒரு சிறந்த நடைமுறை ஆகும். அனைவரையும் வாசிப்பில் ஈடுபடுத்துவோம். கற்றலையும், கற்பித்தலையும் மேம்படுத்த உதவுவோம்.

**மைதிலி தேவராஜா,**
**ஆசிரிய ஆலோசகர், ஆரம்பக் கல்வி, யாழ். கல்வி வலயம்.**

(முற்றும்)




# BUCKET LIST

## விமர்சனம்

சாவதற்கு நாள் குறிக்கப்பட்டுள்ள நிலையில் கிராமங்கள், நகரங்கள், பஸ் தரிப்பிடங்கள், கோயில்கள், பூங்காக்கள், கடற்கரைப் பகுதிகள் என எல்லா இடமும் சுற்றித்திரிந்து மனம் விட்டுத் தங்களின் பழைய நினைவுகளை அசைபோடும் முதுமையான இரு நண்பர்களைப் பற்றிய கதை தான் இந்தப் படத்தின் கதையாகும்.

இந்த முதியவர்கள் இருவருக்குள்ளும் தாங்கள் சாவதற்கான நாள்கள் எண்ணப்படுவது பற்றிய விழிப்புணர்வு இருந்து கொண்டே இருக்கிறது. இந்த நாள்களில் இந்த முதியவர்கள் இருவரும் ஒவ்வொரு தினத்தையும் தமக்குக் கிடைத்த பரிசுப் பொருளாக நினைக்கிறார்கள். தமது தேக ஆரோக்கியம் இப்போது போல் முன்னெப்போதும் மேன்மையாக இருந்ததில்லை என்று தங்கள் கடைசி நாள்களில் உணர்கிறார்கள். குழந்தைப் பருவத்தில் இவர்களை விட்டுத் தொலைந்துபோன தெய்வீகத்தின் பிரசன்னம் இவர்களின் இறுதி நாள்களில் தெரிகிறது. ஜாக் நிக்கல்சன், மோர்கன் ஃப்ரீமன் இணைந்து நடித்துள்ளனர். கார் மெக்கானிக்காகப் பணிபுரியும் கார்ட்டர் (மார்கன் ஃப்ரீமன்) இன்னும் மூன்று மாதங்கள்தான் உயிருடன் இருப்பார் என்று மருத்துவர் சொல்லிவிடுகிறார். அவர் அனுமதிக்கப்பட்டிருக்கும் மருத்துவமனையின் உரிமையாளர் கோடீஸ்வரர் எட்வர்ட் கோல் (ஜாக் நிக்கல்சன்) அறிமுகக் காட்சியிலேயே அவர் எப்படிப்பட்டவர் என்று காட்டி விடுகின்றார்கள். தன் மருத்துவமனையில் ஓர் அறைக்கு இரு நோயாளிகளை அனுமதித்து அவர்கள் தனிமையைப் பாதிக்கின்றார்கள் என்று அவர் மீது வழக்கொன்று நீதிமன்றத்தால் வருகிறது. தன் முடிவை மாற்றிக் கொள்ள முடியாது என்று வாதாடிக் கொண்டிருக்கும்போது இருமி இரத்த வாந்தி எடுக்கிறார். அவரது மருத்துவமனையிலேயே அவரை அனுமதிக்கிறார்கள். அவருக்குப் பக்கத்துக் கட்டிலில் கார்ட்டர். தன்னைத் தனி அறைக்குக் கொண்டு செல்ல அவர் நிர்ப்பந்திக்கும்போது நீதிமன்றத்தால் வாதாடியது நீங்கள்தான். இப் படியே இருங்கள் இல்லையெனில் தீர்ப்பு பாதகமாகிவிடும் என்கிறார்கள். எட்வர்டுக்கு மூளை அறுவைச் சிகிச்சை நடக்கிறது. சிகிச்சையின் முடிவில் அவருக்கும் நாள் குறித்துவிட்டது தெரியவருகிறது. இருப்பினும் அவர் கவலைப்பட்டது மாதிரித் தெரியவில்லை. வகைவகையான உணவுகளை உண்டு விட்டு நாள் முழுவதும் வாந்தி எடுக்கிறார். எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்ட மருத்துவருக்கு நடுவிரலைக் காட்டுகிறார். இன்னமும் தன் மேலாளரைப் பெயர் மாற்றித் தாமஸ் என்றுதான் அழைக்கிறார். இறந்து போவதற்கு ஆங்கிலத்தில் 'வாளியை உதைத்தல்' (Kicking the bucket) என்று ஒரு மரபுத் தொடர் உண்டு. ஒரு நாள் பக்கத்துக்கட்டிலில் இருக்கும் கார்டர் 'பக்கட் லிஸ்ட்' என்று தலைப்பிட்டு ஏதோ எழுதிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறார் எர்வர்ட். என்ன வென்று கேட்க ஒன்றுமில்லை என்கிறார். சாவதற்கு முன்னால் அவர் செய்ய வேண்டிய விடயங்களின் பட்டியல் அது என்று தெரியவருகிறது.

இங்கபார் எங்கிட்ட பணம் இருக்கு. சாவதற்கு முன்னால் செய்து பார்க்க நினைக்கும் விடயங்களை நாம் ஏன் செய்து பார்க்கக் கூடாது என்கிறார். கண்ணைச் சிமிட்டிய படியே முதலில் தயங்கும் கார்ட்டர் பின்பு ஒப்புக் கொள்கிறார். மனைவியின் அழுகையையும் அரற்றலையும் மீறி எர்வர்டுடன் புறப்படுகிறார் கார்ட்டர். ஊரெல்லாம் சுற்றிப் பார்க்கிறார்கள். ஆடம்பரமான சொகுசு ஹொட்டலில் தங்கி இருக்கும்போது கார்ட்டரின் மனைவி எட்வர்டைத் தொலைபேசியில் அழைத்து என் கணவனை என்னிடம் திருப்பிக்கொடு என்கிறாள். ஐம்பது வருடங்களுக்கும் மேலாக ஒரே பெண்ணுடன் வாழ்கின்ற; வேற பெண்ணுடன் தொடர்பே கொள்ளாத கார்ட்டரைப் பார்த்து வரிசையாய் மனைவிகளை விவாகரத்துச் செய்துவிட்டுத் தனியாய் வாழும் எட்வர்ட் வியக்கிறார். அவர் இரகசியமாய் ஒரு பெண்ணை கார்ட்டரிடம் அனுப்பி வைக்க அவருக்கு மனைவி குழந்தைகளின் ஞாபகம் வந்து விடுகிறது. இறக்கும்போது பிரியமானவர்கள் மத்தியில் இருப்பதை விட வேறெதுவும் தேவையில்லை. என்று கார்ட்டர் உணர்கி றார். உடனே ஊர் திரும்ப வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கிறார். அமெரிக்கா வந்ததும் கார்ட்டர் எட்வர்ட்டுக்குத் தெரியாமல் காரை அவர் மகள் வீட்டுக்குச் செலுத்தச் செய்கிறார். எட்வர்ட் மீது கோபம் கொண்டு அவரைப் பிரிந்து நீண்ட நாள்களாக வாழ்கி றாள் அவர் மகள். தன்னைப் போலவே மரணத்துக்குமுன் எட்வர்ட் தன் மகளுடன் வாழ வேண்டுமென்று நினைக்கிறார் கார்ட்டர். ஆனால், எட்வர்ட் மறுத்துக் கோபமடைந்து போய் விடுகிறார்.

கார்ட்டர் வீடு திரும்பிக் குடும்பத்தோடு இணைகிறார். அவர்களோடு உண்டு மகிழ்கிறார். எர்வர்ட் தனிமையில் புளுங்குகிறார். அடுத்தநாளே தீவிரமாய் உடல் நலம்குன்றி கார்ட்டருக்கு அறுவைச் சிகிச்சை நடைபெறுகிறது. அவர் எர்வர்ட்டுக்கு எழுதிய கடிதத்தில் அவர் தனது மகளோடு சேரவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவிக்கிறார் கார்ட்டர். தனிமையின் கொடுமையைத் தீவிரமாய் உணர்ந்திருக்கும் எர்வர்ட் நண்பனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய மகளோடு சேருகிறார். சிகிச்சை பலனின்றி கார்ட்டர் இறக்கிறார். இறுதிச் சடங்கில் கார்ட்டரின் இறுதி மாதங்கள் தன் வாழ்வின் மிகச் சிறந்த நாள்கள் என்று நினைவு கூறுகிறார் எட்வர்ட். அவர் கண்களில் துளிர்க்கும் கண்ணீரில் தூய்மையான நட்பு வழிகிறது. ஜாக்நிக்கல்சனும் மோர்கன் ஃப்ரீமனும் இணைந்து ஒரு இனிமையான அனுபவத்தைக் கொடுக்கிறார்கள். முதியவர்கள் உலகுக்குள் புகுந்து பார்த்ததுபோல் இருக்கிறது. மரணத்தை இன்பமாய் எதிர்கொள்ளும் இருவரின் மன முதிர்ச்சியும் நமக்கும் இருந்தால் நன்றாகத்தான் இருக்கும்.

சாவதற்கு முதல் எல்லாவற்றையும் அனுபவித்துவிட வேண்டும் என்று நினைக்கிற மனம் எல்லோரிடமும் உண்டு. அந்தவகையில் இளம்வயதில் தெரியாத பல விடயங்கள் வயது போய் தெரிகிறபோது அதனையும் மீதமில்லாமல் அனுபவித்துப் பூரண நிறைவடைந்தவாழ்வாக மனதிருப்தியுடன் சாவதற்கு கொடுத்து வைக்க வேண்டும். இந்தப் படத்தைப் பார்க்கிறபோது எவ்வளவு சுவார்சியமான சம்பவங்களை உதாசீனம் செய்யாமல் மனம் திருப்திபடும் அளவுக்கு வசதிக்கேற்ப மனம் ஆசைகளை நிறைவேற்றுகிறது. அதிலும்என்ன சிறப்பு என்றால் சாகின்ற நாள்கள் தெரிந்துகொண்டு மீத முள்ள தமது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வது பார்ப்பதற்கு சுவாரஸ்சியமாகச் சிந்தனையைத் தட்டிச் செல்கிறது.

- குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டியிலிருந்தால் தான் அகப்பையில் வரும்

''சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும்'' என்பது பழமொழி, சட்டியிலோ அல்லது பானையிலோ உணவு இருந்தால் தானே அகப்பையை போட்டு அள்ளமுடியும் என்பது சாதாரண கருத்து.

பலருடைய பேச்சுமொழிக்கு இக் கருத்து சுவையூட்டுவதாகவே அமைந்து வருகிறது. எனினும் சிலர் இன்று சிலர் முன்னே சென்று ''புத்தியில் இருந்தால்தானே செய்கையில் அது தென்படும்'' என்றோ; ''படித்து இருந்தால் தானே பரீட்சையின் போது விடையாய் முன்வரும்'' என்றோ அறிவின் பலத்தைச் சுட்டிக்காட்டிப் பயன்படுத்துவதுண்டு. பெட்டியிலோ மடியிலோ பணம் அல்லது பொருள் இருந்தால் தான் தேவையான போது பயன்படுத்த முடியும்'' என்ற பொருள்படவும் கூறுவதுண்டு.

'சஷ்டி' என்ற வடமொழிச்சொல்லை தமிழில் சட்டி என்று வழங்குவதுண்டு. இவ்வாறு சிறிய ஒளி வேறுபாடுகளுடன் வடசொல்லைத் தமிழில் பயன்படுத்தும் முறைக்கு 'தற் பவம்' என்று பெயர். அப்படியே வட சொல்லைத் தமிழில் வழங்கினால் அது தற்சமம் எனப்படுகிறது.

இப்போது சட்டி என்பதற்கு 6 என்று பொருள். தமிழர்களின் பாரம்பரிய விரதங்களுள் 'கந்தசட்டி' அல்லது 'கந்தசஷ்டி' தனிச்சிறப்புக் கொண்டது. நல்லது வாழ வேண்டும். உண்மை வெல்ல வேண்டும். இதற்காக களத்தில் நிற்பவருக்குப் பக்கபலமாக நிற்க வேண்டும் என்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே தீமையான அசுரனை அடக்கப் புறப்பட்ட முருகப்பெருமானுக்கு அவரது வெற்றிப்பலமாக பக்தர்கள் மனதால் 6 நாள்கள் தவமிருக்கிறார்கள். இது ஒரு பொது நல அடிப்படையிலான தியாக வேள்வி ஆகும்.

இத்தகைய தியாக வேள்வியில் ஈடுபடுபவருக்கு மனம் இயல்பாகவே நல்லெண்ணங்களால் நிரப்புகிறது. அகம் என்றால் மனம்; அகப்பை என்றால் மனப்பை; என்று கூறப்படுகின்றது. (கந்த) சட்டியில் (விரதம்) இருந்தால் அகப்பையில் பக்குவமும் நற்சிந்தனைகளும் வராமலா போகும்?

லோ.தானு.

## ஒழுக்கம்

சைவ ஒழுக்கம் பேணி நிதம்
பத்தி உடனே நடந்து
அன்பு என்ற சொல்லைப்
பண்பாய் உயர்த்தும் சிறார்கள்- நாம்
உண்மை தனை உரைத்து
ஊர் போற்ற வாழ்ந்து
நல்ல நல்ல தொழில்களில்
பாங்காய் ஓங்கி வாழ்வோமே

## சுமை

★ சிந்திக்காதவரை மூளை தலைக்கு சுமை.
★ பயன்படாத வரை பணம் பெட்டிக்கு சுமை.
★ வாசனை வீசாத வரை பூ செடிக்குச் சுமை.
★ உழைக்காத வரை மனிதன் உலகிற்கே சுமை.

யா.யாதுஷா,
தரம் 9,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## தமிழுக்கு ஆங்கிலம் (18)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

**'வீ' வரிசையில்**
வீடு : House
வீதி : Road, Street
வீணை : Lute
வீக்கம் : Swelling
வீசு : Throw
வீரன் : Hero
விளையாட்டு வீரன் : Sports man
**'வெ' வரிசையில்**
வெட்டு : Cut
வெல்லு : Win
வெல்லம் : Juggery
வெண்ணெய் : Butter
வெள்ளை : White
வெடி : Cracker
வெளியில் : Out side
வெண்டிக்காய் : Ladys finger
வெளிச்சம் : Light
வெளிச்சவீடு : Light house
வெப்பம் : Heat
வெட்கம்:Shyness
வெள்ளி:Silver, Friday
வெற்றி:Victory
வெந்தயம்:Fenugreek
வெற்றிலை: Betal
வெங்காயம்:Onion
வெறி:Drunkenness
**'வே' வரிசையில்**
வேலை:Work
வேலி:Fence
வேகம்:Speed
வேடன்:Hunter
வேம்பு:Margosa
**'வை' வரிசையில்**
வைத்தியர்:Physician
வைக்கோல்:Straw
வைதல்:Scolding
வைபவம்:Function
வைப்புச் செய்:Deposit

தொகுப்பு:ரம்யன்

## 'ஸ்கூட்டர்' கற்றுத் தந்த பாடம்

வீட்டின் முன் நின்ற தன்னுடைய ஸ்கூட்டரை இயக்க முற்பட்டார் சதாசிவம். அது இயங்க மறுத்தது. ஸ்கூட்டரில் பெற்றோல் இல்லை என்பது அவருக்குப் புரிந்தது. உடனே ஸ்கூட்டரை வீட்டின் ஓரமாக நிறுத்திவிட்டு பக்கத்து வீட்டு ஆனந்தியின் சைக்கிளை வாங்கிக் கொண்டு பெற்றோல் வாங்கப் புறப்பட்டார். அப்போது நடந்த அனைத்தையும் தன் வீட்டுப் படிக்கட்டில் அமர்ந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தாள் தரம்4 படிக்கும் சாமினி. சிறிது நேரத்தில் சதாசிவம் போத்தலில் பெற்றோல் வாங்கி வந்தார். ஸ்கூட்டரில் பெற்றோல் கொள்கலனைத் திறந்து பெற்றோலை ஊற்றினார். பின்னர் ஸ்கூட்டரை இயக்க அது உடனே இயங்கியது. அங்கிருந்த சாமினிக்கு டாட்டா காட்டியபடியே ஸ்கூட்டரை ஓட்டிச் சென்றார் சதாசிவம். பயணம் செய்வோர் முன்கூட்டியே பயணத்துக்குத் தேவையான விடயங்களில் அதிக கவனம் எடுத்துக்கொண்டால் தடையின்றிப் பயணம் செய்யலாம். ஸ்கூட்டரில் உள்ள பெற்றோல் கொள்கலனை மனித மூளையாகவும், அதில் ஊற்றப்படும் பெற்றோலை கல்வி மற்றும் பொது அறிவாகவும் கற்பனை செய்து கொண்ட சாமினி தானும் கல்வியோடு சேர்ந்து பொது அறிவையும் வளர்த்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் எனத் தீர்மானித்தாள். சாமினி தனக்கு மிகப்பெரிய போதனையைக் கற்றுக் கொடுத்த அந்த ஸ்கூட்டருக்கு நன்றி கூறினாள்.

ச.லக்சிகா, தரம் 7A,
யா. சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்.

பணிவு, ஆடம்பரமின்மை, தீமை பயக்காமை, பொறுமை, நேர்மை, [illegible] நிதானம், தன்னடக்கம் ஆகியவை எல்லாம் அறிவு[illegible]




## விடை தெரியுமா? 110

1.வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

2.ரஷ்ய நாட்டின் அதிபர் யார்?

3.பிரான்ஸ் நாட்டில் சுற்றுலாத் தளமான டெவ்விலியில் ஆரம்பமான மாநாட்டுக்கு என்ன பெயர்?

4.கடந்த 30 ஆண்டுகளில் மட்டும் இந்தியாவில் 12 மில்லியன் பெண் குழந்தைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன என அறிக்கை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

5.ஈரான் தென்மேற்குப் பகுதியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர்என்ன?

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 11.06.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 108

1.செல்வி. ஜெயலலிதா
2.2600 ஆவது
3.தமிழினப் படுகொலைகள் 1956-2008
4.கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கா.
5.எகிப்து நாட்டு முன்னாள் சிறப்புப் படை அதிகாரி பைசல் ஆதல்

### வெற்றி பெற்றவர் விவரம்

1. ஜ.சாரங்கன், தரம் 8 ஜி, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
2. த.தர்சிகா, தரம் 2, யா/சுந்தரோடை தமிழ்க் கத்தையா வித்தியாலயம்.
3. த.கீர்த்திகா, யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் காரைநகர்.

உங்களுக்கும் பரிசில்கள்

## விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்

★ அஸ்பிறின்-கோல்பே ஹெயின்ரிச்
★ ரேடியம்-மேரிக்கியூரி
★ அணுகுண்டு-ஃபிரிச், போஹா,பைரல்ஸ்
★ கேபிள்கார்-டபிள்யூரிட்டர்
★ கிரெடிட் கார்ட்-ரால்ப் ஸ்னைடர்
★ ஓசோன்-கிறிஸ்டியன் ஃப்ரெடரிக் ஸ்கொன்பின்
★ பேஸ்மேக்கர்-வில்சன் கிரேட்பச்
★ பென்சிலின்-சேர் அலெக்ஸாண்டர் பிளெமிங்
★ புரோட்டன்-எர்னஸ்ட் ரூதர் போர்டு
★ கதிரியக்கம்-ஹென்றி பெக்குரல்

இ.சஞ்சிதா, 8 F,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.







அர்த்தநாரீஸ்வரன் சோபிகன்,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.



உ.கபில சர்மா,
தரம் 3,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.



கே. இஸ்னி
தரம் 6 சி,
[illegible] அமெரிக்கன் மிஷன்? [illegible]தேச பாடசாலை, மானிப்பாய்.



அ.சோபிகன்,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் திருமண வயதை மீறுவதால் எதிர்கொள்ளும் சவால்கள்

-சோபியா



பெண்களின் திருமண வயதுகள் அதிகரித்துக் கொண்டு செல்வதற்கும், குறைந்த வயதுகளில் திருமணம் செய்து கொள்வதற்கும் அவர்களுடைய குடும்பத்தவர்களும் சமூகத்தினருமே காரணகர்த்தாக்களாக இருக்கின்றனர்.

குறிப்பாகப் பெண்களின் திருமண 24 வயது முதல் 30 எனக் குறிப்பிடுவது வழக்கம். இந்த வயதுடைய பெண்கள் திருமணத்துக்குப் பின்னரான வாழ்க்கை முறையினையும், வாழ்க்கை தொடர்பான பல் வேறுபட்ட பிரச்சினைகளையும், அதனை எதிர்கொள்வது எவ்வாறு என்பதனையும் 80 சதவீதம் அறிந்து வைத்திருக்கின்றார்கள் என்று கூறுவதோடு இந்த வயதில் திருமணம் செய்யும் பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் சற்றுக் குறைவாகவே இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் தற்போது 30 வயதைக் கடந்த நிலையில் உள்ள பெண்களில் அதிகமானோர் தமக் கான இல்லற வாழ்வை அமைத் துக் கொள்ளமுடியாமல் பிறந்த வீடே வாழ்க்கையின் முடிவிடம் என்று முதிர்கன்னி களாக வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது சில பெண்கள் இளவயதில் திருமணங்களை முடித்துவிட்டு வாழ்க்கை பற்றிய முழுமையான பூரணத்துவத்தை அறியாமல் மேலதிக வாழ்க்கையைத் தொடரவும் முடியாமல் திண்டாடிக் கொண்டிருப்பதோடு தமது உறவுகளிடம் சென்று மனம்விட்டுப் பேசவும் முடியாமல் தட்டுத்தடுமாறி வாழ்வதையும் எம் கண்ணூடாகக் காணமுடிகின்றது.

பெண்களின் திருமணவயது தொடர்பாக மருத்துவ ரீதியாகவும் உளரீதியாகவும் தெரிவித்துவரும் தற்போதைய காலத்தில் பல்வேறுபட்ட உண்மைத் தகவல்களை ஊடகங்களும் சமூகத் தொண்டு நிறுவனங்களும் வெளியிட்ட வண்ணமே இருக்கின்றன.

இவ்வாறு பல வழிகளிலும் பலதரப்பட்ட தகவல்களை வழங்கி வருகின்ற போது எமது இளம் பிள்ளைகள் காதிருந்தும் செவிடர்களாகவும், கண்ணிருந்தும் குருடர்களாகவும் வாழ்வதுதான் ஏனோ...?

இவ்வாறு பல கதைகளைக் கேட்பவர்களின் காதுகளுக்கு இதமாகவும் சுவாரசியமாகவும் இருக்கின்றன. எனவே இது தொடர்பாகப் பெற்றோர்களாகிய எல்லோரும் இதனைப்பற்றிக் கட்டாயம் சிந்தித்தே ஆகவேண்டும். அதுமட்டுமன்றிக் கூடிய கவனம் செலுத்த வேண்டியதும் அவசியமான ஒன்றாகும்.

பெண்பிள்ளைகள் பருவவயதை அடைந்த பின்னர் அவர்களின் வாழ்க்கையின் அன்றாட செயற்பாடுகளில் நிச்சயம் கவனம் செலுத்த வேண்டியதுடன் அவர்களுக்கு எதிர்கால வாழ்க்கை தொடர்பான அறிவினையும் வழங்க வேண்டியது அவசியமாகும்.

பெண்கள் தமக்கான துணையைத் தாமாகத் தேர்ந்தெடுக்கும்போது பெற்றோர்கள் போட்டி போட்டுக் கொண்டு தமது விருப்பு வெறுப்புக்களை அவர்கள் மீது திணிக்காது அவர்களின் விருப்பத்துக்கும் அக்கறையுடன் ஆலோசனைகளை வழங்கி நல் வழியில் நடத்துவது சிறந்தது. இதனையே எமது சமூகம் எதிர்பார்க்கின்றது.

# தங்கத்தின் மீது மோகம் கொள்ளாது தன்னம்பிக்கையுடன் வாழ முன்வருவோம்



''தங்கத்தின் மீதும், சொத்தின் மீதும் நாட்டமற்ற நிலைக்கு வந்துவிட்டாலே பெண்கள் தனித்து தைரியத்துடன் வாழ முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் குடும்பச் சிக்கல்களைத் தவிர எத்தனையோ சமூகப் பிரச்சினைகளைப் பெண்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அவற்றையெல்லாம் சிரித்த முகத்துடனும் தைரியத்துடனும் வெற்றி கொள்ளலாம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கும் போதுதான் எம்மைச் சுற்றி எத்தனை பெண்கள் தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது புரிகிறது. ஆனால் இவர்கள் தன்னம்பிக்கையுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்'' என்பதை நினைத்துப் பார்க்கப் பெருமிதமாக இருக்கின்றது.

''முன்னைய காலத்தில் பெண் குழந்தை பிறப்பதையே விரும்பாத சமூகத்தின் மத்தியில் எமது அன்னையர்கள் எம்மை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால் தற்போது 'பிள்ளைகள் பிறப்பதையே விரும்பாத தம்பதியர்கள், காதலித்துவிட்டு திருமணம் செய்து கொள்ள விரும்பாத இவர்கள் பெண் பிள்ளை பிறப்பதையா விரும்புவார்கள். இதற்கு ஓர் உதாரணம்:

''ஆபிரிக்க நாட்டில் ஒருவகைத் தேள் இனம் இருக்கிறது. இனவிருத் திக்கான நிகழ்வு நடைபெற்றதுமே அந்தப் பெண் தேளை ஆண் தேள் சாப்பிட்டுவிடுமாம். இதேபோலத்தான் சமூகத்தில் பலரும் இருக் கின்றார்கள்!'' இதனால்தான் குறிப்பாகக் ''குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை சமூகம் பெண்கள் மீது திணித்து இருக்கின்றது''.

எந்த விடயத்தையுமே போராடி ஜெயிக்கின்ற திறமை கொண்ட பெண்களால் இந்தப் பொறுப்புக்களையும் சரியாகச் செய்ய முடியும் என்று இயற்கையே படைத்திருக்கிறது. இப்படி இயற்கையே நமக்கு பெருமையையும் பொறுப்பையும் தேடித் தந்திருக்கும் போது அதில் இருந்து விலகுவது நம்மை நாமே தாழ்த்திக் கொள்வது போல அமைந்துவிடும்'' எனவே பெண்கள் தைரியமாகவும் துணிச்சலாகவும் இருக்கவேண்டும்.

அதற்காகப் பெண்கள் தனித்துவாழக் கணவன் தான் அல்லது ஆண்கள் தான் காரணம் என்று மொத்தக் குற்றத்தையும் அவர்கள் பக்கம் திருப்புவதில் நியாயம் இல்லை.

நாம் திருமணத்துக்கு முன் துணிச்சலாக வாழக் காரணம் எமது அப்பாவும் சகோதரர்களும் தான். திருமணத்தின் பின்னர் பெண்கள் தைரியத்துடன் வாழக் காரணம் கணவனும் பிள்ளைகளுமே! இவர்களின் எதிர்காலத்துக்காகவும் கல்வியின் வளர்ச்சிக்காகவும் எம்மை அர்ப்பணித்து உயர்வடையக் காரணம் வாழ்க்கையை வாழ்ந்துகாட்ட வேண்டும் என்ற உத்வேகம் மட்டுமே!''

-அபிநயா

# புதியுகம் படைக்கப் புறப்படு...!



புதுயுகம் உனக்காய்
வாசல் திறக்கிறது
சாதனைகள் களங்களாய்
தளங்கள் விரிகின்றன
அடுப்படிப் பதவிகள்
மூடத்தின் வெளிப்பாடு
நிமிர்ந்து நீ தடைவெல்ல
புறப்படு விரைவாக
தேடி வந்து சாதனைகள்
மகுடம் சூடப் போவதில்லை
நாடியதை சென்று நாம்
வென்றிடனும் தோழியரே
இமையம் வரை கால் பதிக்க
வலிமையுண்டு எங்களிடம்
மூலைக்குள் முடங்கி நாம்
மழுங்கடிக்கும் திறமைகளை
உலகமே வியந்து பார்க்கும்
சாதனையாய் மாற்றிடுவோம்
மண் தந்த பெருமைகளை
கண்முன்னே நினைந்து
பெண் என்ற பேதமின்றி
படைத்திடுவோம் சாதனைகள்!

-வினோவர்மன், புளியங்கூடல்.

# அறிவுக்கு விருந்து

* இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது பெண்கள் பாடசாலை - உடுவில் மகளிர் கல்லூரி
* முதன்முதல் பாலர் பாடசாலையை அறிமுகப்படுத்திய பெண் - மரியா மொண்டசூரி அம்மையார்
* ஆசியாவின் குயில் என அழைக்கப்படுபவர் - லதாம்கேஸ்கர்
* உலகின் முதலாவது பெண் பிரதமர் - திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா
* உலகின் முதலாவது பெண் ஜனாதிபதி - இஸபெல் பெரான் (அர்ஜென்டினா - 1944)

[illegible]

# பெண்களின் மதிப்புக்கு...

* அன்பு செய்யும் பெண்ணின் நெஞ்சம் எப்போதும் இளமையாக இருக்கும்.
* யார் மகிழ்ச்சியாக இருக்கின்றார்களோ அவர்கள் மற்றவர்களையும் மகிழ்ச்சிப்படுத்துகின்றார்கள்.
* ஒரு பெண்ணின் கடமை, குடும்பத்தில் நல்ல மகளாகவும் சகோதரியாகவும் மனைவியாகவும் தாயாகவும் தன் கடமைகளை முறையாகப் பண்போடு நிறைவேற்றுதல்.
* பெண்களைப் பெருமிதம் கொள்ளச்செய்வது அவர்களது அழகு. மற்றவர்கள் பாராட்ட நடப்பது அவர்களது பண்பு. ஒருவரைத் தெய்வமாக மாற்றுவது அவர்களது அடக்கம். இதுவே பெண்களின் சிறப்பு.

கறுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மக்கள் நாணயமானவர்கள்

## அமைச்சர் கஜதீர சான்றிதழ்



**அவருடான சிறப்பு நேர்காணல்**

''யாழ்ப்பாண மக்கள் நாணயமானவர்கள். போர்க் காலத்தில் கூடத் தாம் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்திச் சாதனை படைத்தவர்கள்'' என்று நற்சான்றுப் பத்திரம் வழங்கி உள்ளார் அமைச்சர் கஜதீர.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவயவங்களை இழந்தவர்களுக்கு நஷ்டஈடுகளை வழங்குவதற்காக அமைச்சர் கஜதீர யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வின் பின் 'உதயன்' செய்தியாளருக்கு அளித்த விசேட செவ்வியின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கே: போர் முடிந்து இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் தொடர்ந்தும் பெரும் எண்ணிக்கையிலான முன்னாள் போராளிகள் முகாம்களிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை எப்போது விடுதலை செய்யப் போகின்றீர்கள்?

ப: இறுதிக் கட்டப்போரின் போது சரண்அடைந்த போராளிகளும், பொதுமக்களும் உயிருடன் மீண்டும் திரும்பப் போவதில்லை; அது நடக்கக்கூடிய காரியமும் இல்லை என்று பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. சந்தேகத்துடனேயே பார்த்தனர். இன்று அதனைப் மெய்ப்பித்துவிட்டோம்.

பொதுமக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். முன்னாள் போராளிகள் 7 ஆயிரம் பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் 4 ஆயிரம் பேரை விரைவில் அவரவரது குடும்பத்தவர்களுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கே: சரண் அடைந்த முன்னாள் பெண் போராளிகள் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக அவர்களின் பெற்றோர் கூறுகின்றனரே?

ப: நான் வவுனியா புனர்வாழ்வு முகாமுக்கு நேரடியாகச் சென்று பார்த்தேன். குறைகளைக் கேட்டறிந்தேன். அங்கே 82 யுவதிகள் தையல் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். முகாம்களில் வழங்கப்படும் பயிற்சிகள் தமது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று கூறுகின்றனர். இதேபோன்றுதான் யாழ்ப்பாணத்திலும் இவர்களை தொடர்ந்தும் முகாம்களில் அடைத்து வைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. கூடிய விரைவில் பெற்றோரிடம் ஒப்படைப்போம்.

கே: பாதிக்கப்பட்டவர்களுக்கு சுயதொழில் முயற்சிக் கடன் வழங்குவதிலும், நிவாரணப் பொருள்கள் வழங்கு வதிலும் பல மோசடிகளும் ஊழல்களும் இடம் பெற்றுள்ளன. உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்காமல் அரசியல் செல்வாக்குள்ள பலருக்கு இக்கடன் வழங்கப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளது. எதிர்காலத்திலும் இப்படித்தான் நடக்குமா?

ப: நிச்சயமாக இப்படியான குற்றச் சாட்டுகளுக்கு இடமளிக்கமாட்டோம். உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களும் கடன் பெறும் தகுதியுடைய பயனாளிகளை, அந்தந்தப் பிரதேச செயலாளர்கள், இலங்கை வங்கி, புனர்வாழ்வு அதிகார சபை என்பனவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய மூவர் குழுவினரே நேரடியாகத் தெரிவுசெய்கின்றனர். விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பின்னரே தகுதியுள்ள பயனாளிகள் தெரிவு செய்யப்படுவர். தனிப்பட்டவர்களின் சிபார்சுகளுக்கு இடமில்லை. ஊழல்கள் இடம்பெற அனுமதிக்கமாட்டேன்.

கே: இப்போது வழங்கப்படும் இரண்டரை லட்சம் ரூபா எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது?

ப: இவை ஒன்றும் இலவசமாக வழங்கப்படவில்லை.

இந்த மக்களையும் சிரேஷ்ட பிரஜைகளாக அங்கீகரித்தே இந்தக்கடன் வழங்கப்படுகிறது. யாழ். மக்கள் நாணயமானவர்கள், யுத்தத்தின் முன்பும் பின்பும் வங்கிகளில் பெற்ற கடன்களை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்தி சாதனை படைத்தவர்கள். இந்த நம்பகத் தன்மையால்தான் வங்கிகள் வழங்கும் கடனுக்கு அரசே உத்தரவாதம் அளிக்கின்றது. இந்த இலகு கடன் பத்து வருடங்களின் பின் செலுத்தும் சலுகைக் கடனாகவே வழங்கப்படுகிறது.

நேர்காணல்: இரா.புத்திரசிகாமணி

கே: இறுதிக்கட்ட யுத்தத்தின்போது அரச படையினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகள் பலர் காணாமற்போயுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தவர்களிடம் புலனாய்வுப் பிரிவினர் மீண்டும் மீண்டும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இதனால் சம்பந்தப்பட்டவர்கள் உளரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக என்ன கூறுகின்றீர்கள்?

ப: இது என்னுடைய அமைச்சுக்கு அப்பாற்பட்ட விடயம். காணாமல்போனவர்கள் தொடர்பாக நான் எந்த விதமான அபிப்பிராயமும் கூறமுடியாது. சிறைச்சாலைகளிலும் நலன்புரி முகாம்களிலும் இருப்பவர்களின் பாதுகாப்புக்கும், புனர்வாழ்வுக்கும் மட்டுமே என்னால் உத்தரவாதம் அளிக்கமுடியும்.

# சொந்த ஊர் சொர்க்கம்தான்

"சொர்க்கமே என்றாலும் அது நம் ஊரைப்போல வருமா?" இந்தப் பாடல் ஒரு கடையில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இருபது வருடங்களாக இடம்பெயர்ந்து நாயாய் அலைந்து திரிந்த மக்களுக்கு இந்தப் பாடல் சற்று வலிமையை ஊட்டியது.

ஏனெனில் நண்பர்கள் வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வாழ்ந்த மக்கள் இப்போதுதான் தமது சொந்த இடங்களுக்குத் திரும் பத் தொடங்கியிருக்கின்றார்கள். இவர்களுக்கு இது வரபட்ட துன்பங்களுக்கு விடிவு கிடைப்பதால் சொந்த ஊர் சொர்க்கம்தான்.

வலி.வடக்கைச் சேர்ந்த மக்கள் 1990 ஆம் ஆண்டு முதல் இந்தப் பிரதேசங்களைவிட்டு வெளியேறினர். மக்கள் வெளியேறியதன் பின்னர் இந்தப் பகுதிகள் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. யுத்தம் என்பது இந்த இடங்களில் இடம்பெறவில்லை. இருப்பினும் காங்கேசன் துறைமுகம், மயிலிட்டி துறைமுகம், பலாலி விமான நிலையம் ஆகியவற்றை இது உள்ளடக்கியிருந்தது. இதனால் இலங்கை இராணுவத்தினர் இவற்றை விட்டு பிரியமனமில்லாமல் தமது கட்டுப்பாட்டின் கீழேயே வைத்திருந்தனர்.

கண்ணிவெடியகற்றப்படவில்லை என்ற காரணத்தைக் கூறி இந்த வளம் மிக்க வலிகாமத்தைக் கையகப்படுத்தி வைத்திருந்தனர். இருப்பினும் அழுத்தங்களால் தற்போது சில இடங்களை மக்கள் பாவனைக்கு கையளித்துவிட்டுப் பின் வாங்கியுள்ளனர். 20 வருடங்களின் பின்னரும் மக்களிடம் முழுமையாகக் கையளிப்பதற்கு இன்னும் மனம் வரவில்லையென்றே சொல்ல வேண்டும்.

மக்களை மீள்குடியமர்வு செய்வதாக அறிவிக்கப்பட்ட மே 9ஆம் திகதி நண்பகல் வலி.வடக்குப் பிரதேச வாசலில் மக்கள் அலைமோதினர். பின்னர் நிகழ்வு இடம்பெறும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மக்களின் முகத்தில் காணப்பட்ட மகிழ்ச்சி நீண்ட காலத்தின் பின்னர் தமது அயலவர்களைச் சந்தித்த சந்தோசம் என்பன அந்த இடத்தில் அலைபுரண் டோடியது. இவையனைத்தும் தமது வாழ்விடங்களுக்குத் தாம் திரும்பிவிட்டோம் என்ற வெற்றிப் புன்னகையே.

இந்தப் புன்னகை மெல்ல மெல்ல தேய்ந்து சென்று விட்டது அந்த மக்களிடம். அந்நியன் வீட்டிலிருந்து பட்ட அவஸ்தை போதும். சொந்த மண்ணில் வந்து வாழ வேண்டும் என்று வந்தவர்கள் தமது மண்ணில் எதுவுமில்லாததால் ஏதிலிகளாய் நிற்கின்றனர்.

வீடுகள் யாவும் அழிக்கப்பட்டுள்ளன.வீட்டுக் கூரைகள் பிடுங்கப்பட்டு 'பங்கருக்கு' உறையாக்கப்பட்டுள்ளன. வீட்டுக் கதவுகள், யன்னல்கள் என்பன நிலை யோடு வேரறுக்கப்பட்டிருக்கின்றன. எம்மவர்களின் விலை உயர்ந்த கதவுகள் இராணுவக் காவலரணில் காய் கின்றன. சில கதவுகள் மண் அணைக்கு மேலால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலியில் உள்ளன. இவ்வாறு எமது சொத்துக்கள் இராணுவத்துக்கு இரையாகியுள்ளன.

வலி.வடக்கில் மக்களின் கிணறுகள் பல இராணுவத்தின் பல அருவருக்கத்தக்க செயற்பாடுகளால் சீரழிந்து போயுள்ளன. வீதிகளில் வழிந்தோடும் கழிவு நீரை வாய்க்கால்கள் வெட்டி கிணற்றில் விட்டுள்ளனர். இவை போதாதென்று கிணற்றை மூடியடைத்து மலசல கூடக் குழிகளாகப் பயன்படுத்தியுள்ளனர். மாற்றான் வீட்டுச் சொத்து என்ற நினைப்பில் இராணுவத்தால் இவை சீரழிக்கப்பட்டுள்ளன.

வலி.வடக்கின் வானுயரம் வரை உயர்ந்து நின்ற பனைகள் மல்லாக்காய் இராணுவ முகாமில் படுத்துறங்குகின்றன. எவ்வாறெல்லாம் எமது வளங்களை சிதைக்க முடியுமோ அவ்வாறெல்லாம் எமது வளங்கள் சூறையாடப்பட்டுள்ளன. இருபது வருடங் களில் எமது இருப்பிடங்கள் உருத்தெரியாமல் அழிக் கப்பட்டுள்ளன.

மக்கள் மீள்குடியமர்ந்த பிரதேசங்களில் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பலரும் வாய்கிழிய அறிக்கைகள் விடுக்கின்றனர். உண்மையில் அந்தப் பிரதேசங்களில் அபிவிருத்தி எங்கு நடக்கிறது.

மக்களில்லாமல் மண்டியிருக்கும் காடுகளை வெட்டி அகற்றுவதற்கும் வீதிகளைப் புனரமைப்பதற் கும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. அத்துடன் மக்கள் இல்லாத பிரதேசங்களில் வைத்தியசாலை அமைப்பதற்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தியமைப்பதற்கும் நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

ஆனால், மக்கள் குடியமர்வதற்குத் தேவையான அடிப்படை வசதியான வீடமைப்பு வசதிகள் இன்னமும் செய்து கொடுக்கப்படவில்லை. இந்திய அரசால் வழங்கப்பட்ட 12 தகரங்கள் மட்டுமே அங்கு மீளக்குடியமரும் மக்களுக்கு வழங்கப்படுகின்றது. இதுவே இலங்கை அரசு தான் அழித்ததற்குப் பரிகாரமாகக் கொடுக்கும் வெகுமதி.

அந்தக் காலத்தில் கல்வீடுகளில் வாழ்ந்த மக்கள் கட்டாந்தரையில் கூரைத்தகடுகளைக் கொண்டு குடிசையில் வாழலாம் என்றால் அதற்கும் விஷ ஜந்துக்கள் விடுவதாய் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் அந் தப் பகுதிகளில் மக்கள் எவ்வாறு மீள்குடியேறுவார்கள்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி முதற் கட்ட மீள்குடியேற்றம் கீரிமலையில் இடம்பெற்றது. இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிகழ்வில் வைத்துச்சில பொதுமக்களுக்குச் சிமெந்து பை களை [illegible] வழங்கி வைத்தார். இதன் பின்னர் இரண்டாவது மீள்குடியேற்றம் மாவிட்டபுரத்தில் இடம் பெற்றபோது இவ்வாறு எதுவும் வழங்கப்படவில்லை.

இதுஏன் என உயர் அதிகாரிகளிடம் கேட்டபோது அந்த சிமெந்து பைகள் உண்மையில் வலி.வடக்கு மக்களுக்கு வழங்கப்பட வேண்டியவை அல்ல. இறுதி யுத்தத்தின்போது வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர்களுக்கு வழங்கியதில் எஞ்சிய சிமெந்து பைகளே குறித்த நிகழ்வில் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

எஞ்சிய சிமெந்து பைகள் மாவை கலட்டியிலுள்ள 68 குடும்பங்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஏனைய மக்களுக்கு இந்தச் சிமெந்துப் பைகள் வழங்கப்படவில்லை. மக்களை ஏமாற்றும் இந்த நடவடிக்கைகள் எதற்கு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அங்கு மீளக்குடியமர்ந்து வாழ்ந்துவரும் மக்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு அங்கத்தவருக்கு ஒன்றரைக் கிலோ அரிசி, ஒன்றரைக்கிலோ மா, ஒரு கிலோ 860 கிராம் பருப்பு, சீனி 620 கிராம், மரக்கறி எண்ணெய் 670 மில்லி லீற்றர் என்பனவுமே மாத நிவாரணமாக வழங்கப்படுகின்றது. இதனைத் தவிர இந்திய அரசின் 12 தகரம் என்பனவே தனி நபருக்கான உதவிகள்.

மக்களை அந்தப் பிரதேசத்தில் மீள்குடியமர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பொது இடங்களை மட்டும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீடமைப்புத் திட்டங்கள் இந்த மக்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது. அரச அதிகாரிகள் இந்தியன் வீடமைப்புத் திட்டத்தில் வீடுகள் கட்டித்தரப்படும் என்று மக்களுக்குச் சொல்கின்றனர்.

தில்லாலங்கடி

ஆனால் இந்திய அரசால் சொல்லப்படுகின்ற இந்தியன் வீடமைப்புத் திட்டத்துக்கு அடிக்கல் நடப்பட்டு ஆறு மாதங்கள் ஆகின்றன. இதுவரை எந்த வீடும் கட்டப்படவில்லை. அப்படியான நிலையில் எப்போது வலி.வடக்கு மக்களுக்கு வீடமைப்புத் திட்டங் கள் சாத்தியமாகும்?

அரச சார்பற்ற நிறுவனங்களிடம் வீடமைப்புத் திட்டம் தொடர்பாகக் கேட்டபோது, இந்திய அரசால் வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுவதால் எமக்கு நிதி வழங்குநர்கள் வீடமைப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கின்றார்கள் இல்லை எனத் தெரிவிக்கின்றனர்.

வைக்கோல் பட்டறை நாய்போல் இந்திய அரசால் தானும் வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்ளாமல் செய்பவனையும் தடுத்து நிறுத்தியிருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்டிருப்பது மீள்குடியமர்ந்த மக்களே.

அவர்களுக்கு எப்போது அரசு தான் அழித்த வீடுகளை அமைத்துக் கொடுக்கப்போகின்றது? அவர்கள் சொந்த மண் எப்போது சொர்க்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீசா தேவை**

UK, USA,O/L Resalt உடன் Student visiting வீசாவில் செல்வதற்கான துரிதசேவை மற்றும் Financial Sponsor Ship மற்றும் India, Malaysia, Singapore சுற்றுலாவில் செல்வதற்கான ஏற்பாடுகள். தொடர்பு: 0214910959, 077921844

**கடை வாடகைக்கு**

இலக்கம் 196, நாவலர் வீதியில் அமைந்துள்ள தேநீர்க் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்- 021 222 9387

சிவமயம்

**யாழ்ப்பாணம், கோப்பாய் தெற்கு மாந்தோப்பு**



**அருள்மிகு மாரி அம்மன் கோயில்**
**புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா**
**மகா கும்பாபிஷேகம் -2011**
**08.06.2011 புதன்கிழமை**

(39) (சி/469)

**மெய்யடியார்களே!**

சுவர்ணபூமி எனவும் சிவபூமி எனவும் வியந்து போற்றப்படும் இந்த ஈழத் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணம், கோப்பாய் தெற்கில் கோயில் கொண்டெழுந்தருளி அருள் கொடுத்து பாலித்து வரும் மாந்தோப்பு மாரியம்மாளுக்கும், விநாயகர், சந்தானகோபாலர், சுப்பிரமணியர், வைரவர்முதலிய பரிவார மூர்த்திகளுக்கும்,

நிகழும் கர வருஷம் வைகாசி மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை சப்தமி திதியும் மகநட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும், சிங்கலக்னமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் நிகழ அம்பாளின் திருவருள் பாலித்துள்ளது. ஆகவே அம்பாள் அடியார்கள் யாவரும் கீழ்க்காணும் கிரியா காலங்களிலும் மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழாவிலும் பங்குபற்றி அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

**கிரியாகால விபரங்கள்**

**வைகாசி மாதம் 23ஆம் திகதி (06.06.2011) திங்கட்கிழமை**
காலை 6.35 மணிமுதல் 7.16 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் கிரியைகள் ஆரம்பமாகும்.

**வைகாசி மாதம் 24ஆம் திகதி (07.06.2011) செவ்வாய்க்கிழமை**
காலை 8 மணி விசேட சந்தி, பூதசுத்தி, யாகபூசை, பாவனா அபிஷேகம், விசேட திரவிய ஹோமம், பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை.

**வைகாசி மாதம் 25ஆம் திகதி (08.06.2011) புதன்கிழமை**
காலை 7 மணியாக பூசை, மகா பூர்ணாகுதி, தீபாராதனை, அந்தர்பலி, பகிர்பலி, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், நாதகீத அஞ்சலி, சமர்ப்பணம், ஆசீர்வாதம், யாத்திராதானம், பிரதான கும்பங்கள் வீதி உலா, தூபிகள் அபிஷேகம், முற்பகல் 10.49 மணிமுதல் 11.45 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் தசதர்சனம், எஜமானார் அபிஷேகம், ஆசார்ய சம்பாவணை ஆசீர்வாதம், ஆசியுரை, அருளுரை.

மாலை 6 மணி விசேட பூஜை அம்பாள் வீதி உலா உற்வசம்

**சர்வபோதகம்** சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் (பிரதமகுரு சிவன் கோயில் வல்வெட்டித்துறை).

மாந்தோப்பு மாரியம்மன் கோயில்
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**நிர்வாகசபை.**

## குப்பி விளக்கு விழுந்து எரிந்து மூதாட்டி மரணம்

குப்பி விளக்கில் சுருட்டு பற்ற வைத்த மூதாட்டி விளக்கு சரிந்து தீப்பற்றிக் கொண்டதில் மரணமானார்.

இந்தச் சம்பவம் வரணி, இடைக்குறிச்சியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தர் வள்ளிப் பிள்ளை (வயது- 82) என்பவரே மரணமானவராவர்.

இந்த மரணம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்ததையடுத்து நீதிவான் ஸ்தலத்துக்கு சென்று பார்வையிட்டார். (ம-207)

## இரத்ததானம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக அனுசரனையில் நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தில் இன்று காலை 8.30 மணி முதல் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ம-100)

**சாயி விடுதிச் சேவை**

சாயி விடுதி சேவையில் அறைகள் மாத, நாள் அடிப்படையில் வாடகைக்கு வெள்ளவத்தையில் உண்டு.

தொடர்பு
0774435071
011 3443499

**காணி விற்பனை**

யாழ்.கச்சேரி நல்லூர், இல.8/3, கற்பக விநாயகர் வீதியில் பாடசாலைக்கு அருகிலுள்ள 1½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே இல: 0771591322

**UK VISA CONSULTANCY**

- STUDENT VISA
- DEPENDENT VISA
- REFUSAL VISA
- VISIT VISA

**Trusted Service 071-1614159**

GoodWin ADVT

மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் தமிழ் ஆசிரியை
காலஞ்சென்ற திருமதி **கிருபாநிதி பவசிங்கம்**
அவர்களின்
ஞாபகார்த்த தமிழ்ப் பேச்சுப் போட்டி- 2011

1 ஆவது பரிசுத் தொகை- 15,000/=
2 ஆவது பரிசுத் தொகை- 10,000/=
3 ஆவது பரிசுத் தொகை- 5,000/=
5 ஆறுதல் பரிசுகள் தலா - 1,000/=

போட்டி விதிகள்:

1.வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளே பங்குபற்றலாம்.
2.போட்டியாளர் தரம் 9 இற்கும் -க.பொ.த. (உ/தரம்) இற்கும் இடைப்பட்ட மாணவராய் இருத்தல் வேண்டும்.
3.போட்டி தினத்தன்றே பேச்சுப் போட்டிக்கான தலைப்பு வழங்கப்படும்.
4.நேரம் 10 நிமிடத்துக்கும் 12 நிமிடத்துக்கும் இடைப்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பத்தைப் போல் தயார் செய்து தங்கள் பாடசாலை அதிபரூடாக உறுதிப்படுத்திக் கீழ்க்காணும் முகவரிக்கு 16.06.2011 இற்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய்.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

01.முழுப்பெயர்: ....................
02.முகவரி: ........................
03.பிறந்த திகதி: ....................
04.கல்வி கற்கும் தரம்: ..................
05.தொலைபேசி இல: ....................
06.கல்வி கற்கும் பாடசாலை: ...............
07.பாடசாலையின் தொலைபேசி இல: ...............

...............................
அதிபரின் கையொப்பமும் பதவி முத்திரையும்

(40-23-25)(4898)

...............................
மாணவர் கையொப்பம்

**MARSHA SYSTEMS (PVT) LTD**

74 Kannathiddy Road,Jaffna. 021 222 1200 , 021 222 9418

**Desk Top PC**

| | | | | |
|---|---|---|---|---|
| Intel 2.8 Ghz (2M)<br>Biostar G31<br>1GB DDR II<br>160 GB Sata<br>16"LCD ASUS<br>Keyboard<br>Mouse<br>ATX Casing<br>27000.00 | Intel 3.0 Ghz (2M)<br>Biostar D41D3B<br>1 GB DDR III<br>160 GB Sata<br>16"LCD ASUS<br>Keyboard<br>Mouse<br>ATX Casing<br>DVD Writer LITEON<br>30000.00 | Intel 3.0 Ghz (2M)<br>Biostar D41D3B<br>1 GB DDR III<br>500 GB Sata<br>16"LCD ASUS<br>Keyboard<br>Mouse<br>ATX Casing<br>DVD Writer LITEON<br>32000.00 | Intel 3.0 Ghz (2M)<br>Biostar D41D3B<br>1 GB DDR III<br>500 GB Sata<br>19" LCD Dell<br>Keyboard<br>Mouse<br>ATX Casing<br>DVD Writer LITEON<br>33000.00 | Intel 3.2 Ghz (2M)<br>Biostar D41D3B<br>2 GB DDR III<br>500 GB Sata<br>16" LCD ASUS<br>Keyboard<br>Mouse<br>ATX Casing<br>DVD Writer LITEON<br>37250.00 |
| Intel 3.2 Ghz (2M)<br>Biostar D41D3B<br>2 GB DDR III<br>500 GB Sata<br>19" LCD Dell<br>Keyboard<br>Mouse<br>ATX Casing<br>DVD Writer LITEON<br>38250.00 | Intel 3.2 Ghz (2M)<br>ASUS P5G41T-MLX<br>2 GB DDR III<br>500 GB Sata<br>16" LCD ASUS<br>Keyboard<br>Mouse<br>ATX Casing<br>DVD Writer LITEON<br>38750.00 | Intel 3.2 Ghz (2M)<br>ASUS P5G41T-MLX<br>2 GB DDR III<br>500 GB Sata<br>19" LCD Dell<br>Keyboard<br>Mouse<br>ATX Casing<br>DVD Writer LITEON<br>39750.00 | Intel I3 3.06Ghz<br>ASUS P7H55-MLX<br>2 GB DDR III<br>500 GB Sata<br>16" LCD ASUS<br>Keyboard<br>Mouse<br>ATX Casing<br>DVD Writer LITEON<br>49000.00 | Intel I3 3.06Ghz<br>ASUS P7H55-MLX<br>2 GB DDR III<br>500 GB Sata<br>19" LCD Dell<br>Keyboard<br>Mouse<br>ATX Casing<br>DVD Writer LITEON<br>50000.00 |



**Lap Tops**

| HP G62 - 112EE | HP G62 - 453TU | Compaq 620 | DELL 1014 | Pavillion G4-1037TU | DELL Vostro 5010 |
|---|---|---|---|---|---|
| 65000.00 | 79000.00 | 55000.00 | 62000.00 | 75000.00 | 74000.00 |

**Mother Board**
Asus P5G41T-MLX (DDR-III) - 6600 /=
ASUS P7H55-MLX (I3) - 11700 /=
Biostar G31 - 5800 /=
Biostar (DDR III) - 5700 /=

**Ram**
512 MB DDR I - 2000 /=
1 DB DDR II - 4000 /=
1GB DDR II - (Corsair) - 2600 /=
1 GB DDR II (Pairiot) - 2000 /=
2GB DDR II (Corsair) - 4800 /=
1 GB DDR III (Pairiot) - 1900 /=
2GB DDR III (Corsair) - 2900 /=

**DVD Writer**
Liteon - 2400 /=
Asus - 3600 /=

**Scaner**
LIDE 110 - 5900 /=

**Monitor**
16' Asus - 9800 /=
19' Asus - 12300 /=
19' Dell - 11100 /=
19' Viewsonic (LED) - 12700 /=

**UPS**
DCP - 3750 /=
Power III - 3600 /=
1KV - 9000 /=

**Router**
Dlink - 2750 /=
TPLink - 2750 /=
4 Port wireless Dlink - 6750 /=
4 Port wireless TPLink- 6750 /=

**Printer**
Samsung ML1610 - 8500 /=
HP 1102 - 11250 /=
EPSON ML1200 - 11500 /=

**Toner**
12 A - 5100 /= 1 Month warranty
85A - 5100 /= 1 Month warranty
35A - 5100 /= 1 Month warranty
5A - 5100 /= 1 Month warranty
11A - 8100 /= 1 Month warranty
13A - 5100 /= 1 Month warranty
15A - 5100 /= 1 Month warranty
49A - 5100 /= 1 Month warranty
Canon
EP22 - 6500 /=
EP25 - 6500 /=
308 - 6500 /=
312 - 6500 /=
315 - 6500 /=
303 - 6500 /=

**HSDPA Dongle**
**3900.00**

நம்பகரமான உத்தரவாதம்

OPPORTUNITY

TOKYO SUPER

**TOKYO SUPER MIX**

NIPPON CEMENT

**READY MIXED CONCRETE PLANT**
**JAFFNA**

Tokyo Cement Company (Lanka) PLC., a prestigious public quoted company with foreign collaboration and a reputation as one of Sri Lanka's premier cement manufacturers and importers need suitably qualified individuals for the following position.

## Assistant Quality Controller

The ideal candidate for this position should possess BSc in physical science (chemistry as one subject) or equivalent with a minimum of one year experience in the similar field. Being in overall supervision, you would see to all functions of quality assurance and production of the plant. Previous exposure in a similar capacity would be an added advantage.

Age below 30 years.

The chosen candidate would be entitled to an attractive salary, along with other perquisites.

Applications with names and addresses of 2 non-related referees should be forwarded by post or e-mail to reach the under mentioned within 7 days.

Manager - HR & Administration,
**TOKYO CEMENT CO. (LANKA) PLC.**
469 1/1, Galle Road, Colombo 03.
Fax: 2945866 E-mail: supermixpegoda@tokyocement.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரின் கனவு நனவாக கிடைத்துள்ள சந்தர்ப்பம் இதுவே...!

ஈழத் தமிழரின் மூன்று தசாப்த காலப் போராட்டத்தில் அத்திபாரமாக இருந்தது இந்தியாதான் என்பது மறைக்கமுடியாத உண்மையாகும். அதாவது இந்தியாவின் முன்னாள் பிரதமராக இருந்த இந்திராகாந்தியும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சராக இருந்த எம். ஜி.ஆரும் இருந்தவரை ஈழப் பிரச்சினையில் இந்தியாவின் பங்கு பெரியதுதான். தனித் தமிழீழம் என்ற இலக்கை நோக்கியே இந்த இரு தலைவர்களும் செயற்பட்டார்கள்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுப்பதற்கு ஈழத்தமிழ் போராளிக் குழுக்களை வளர்த்து விட்டார்கள். பண,- ஆயுதப் போர்ப் பயிற்சிகளைத் தாராளமாகச் செய்தார்கள். ஆனால் இந்த உதவிகளைப் பெற்ற விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்துக்கு எதிராகப் போராட வேண்டிய சூழலை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியையே சேரும்.

### இலங்கை அரசுக்கு உற்ற தோழன்

ராஜீவ்காந்தி படுகொலையை அடுத்து ஈழப் பிரச்சினையில் சிறிதுகாலம் ஒதுங்கி இருந்த இந்தியா மீண்டும் காங்கிரஸ் ஆட்சி அமைத்ததும் ஈழத் தமிழர் போராட்டத்தை முற்றாக அழித்தொழிக்கும் இலங்கை அரசுக்கு உற்ற தோழனாக மாறியது. ஈழத் தமிழர் போராட்டத்தில் தமிழீழம் என்ற கனவின் உருவாக்கத்தில் இந்தியாவின் பங்கு பெரியது. ஆனால் அதற்கு சற்றும் குறையாத அளவுக்கு ஈழப்போராட்டத்தின் வீழ்ச்சிக்கும் இலங்கை அரசுக்கு உதவிய பங்கும் பெரியது. ஈழத்தமிழர் போராட்டத்தின்மீது இந்தியாவின் பங்கு, எவ்வளவு பெரிய தேசபக்த நாடாக இருந்தாலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. மனிதாபிமானமும், இன உணர்வும் கொண்ட ஒவ் வொரு இந்தியத் தமிழனுக்கும் இந்தக் குற்ற உணர்ச்சி கடைசிவரை இருந்துகொண்டுதான் இருக்கும். உலகில் தடை செய்யப்பட்ட அத்தனை இரசாயன ஆயுதங்களையும் ஈழத்தமிழர்களுக்கு எதிராகச் சிங்களப்படை பயன்படுத்தியது. பின்னால் இருந்து கொண்டு இந்தப் போரை இந்தியா வழிநடத்திச் சென்றது.

விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் சமாதானத்துக்கு வருவதாக உலகுக்கும் இலங்கை அரசுக்கும் தெரிவித்ததை அடுத்தும் போர் தொடர்ந்தது. சிங்களப் படைகளுடன் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மூன்று தசாப்த போரில் யார் வென்றது என்பது முக்கியமில்லை-எதற்காக இந்தப் போர் இடம் பெற்றது என்பதே முக்கியமாகும்.

30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் இந்தப் போரில் ஈடுபட்டு இறந்துள்ளார்கள். எதற்காக இத்தனை பேர் இறந்தார்கள் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். மானம் உள்ள தமிழன் ஒவ்வொருவரதும் உடலில் ஓடும் இரத்தத்தில் தமிழர் விடுதலை என்ற கனவு இருந்துகொண்டேதான் இருக்கும். போராட்டம் தோல்வி கண்ட நிலையில் அழிந்து விட்டது என எண்ணக்கூடாது. அடக்குமுறைக்குள் அடங்கிப்போய் இருக்கிறது.

### ஏன் ஆயுதம் ஏந்தினர்?

இந்தப் போராட்டத்தில் எவ்வளவு பாடத்தைத் தமிழ்ச் சமூகம் கற்றுக்கொண்டுள்ளது என்பது எல்லோருக்கும் தெரியும். முன்னாள் தமிழ் அரசியல் தலைவர்களால் சிங்கள அரசுடன் பேசி ஈழத் தமிழர்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக்கொண்டுவர முடியாத போதுதான் தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய அடுத்த கட்ட நகர்வுக்குள் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த மூன்று தசாப்த போரில் தமிழ்மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தனர். கண்மூடித்தனமாக அப்பாவிப் பொதுமக்கள்மீது சிங்களப் படைகள் தாக்குதல்களை மேற்கொண்டனர். அந்தத் தாக்குதலில் குழந்தை குஞ்சுகள், முதியவர்கள், பெண்கள் என்று பாராமல் எல்லோரையும் கொன்றனர். அப்பாவிப் பொதுமக்கள் ஆவிகள்தான் இன்று ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையாக வெளிவந்து சிங்களத் தலைமையின் கொட்டத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளுடன் சிங்களப் படைகள் முள்ளிவாய்க்காலில் மேற்கொண்ட கடைசிப் போரில் குறுகிய நாள்களுக்குள் பல ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் சிங்களப் படைகளால் படுகொலை செய்யப்பட்டமை ஒட்டுமொத்த தமிழர் பிரச்சினையில் ஒரு தீர்வாக வெளிவந்திருக்கிறது. தமிழர் போராட்டமானது தமிழர்களுக்கு ஒரு விடிவைக் கண்டிப்பாகக் கொண்டுவரும்.

சமாதானத்துக்கு உடன்படவேண்டாம் என்றும் விடுதலைப்புலிகளுடனான போரை நிறுத்தாமல் தொடர்ந்து நடத்துமாறும் இந்தியாதான் இலங்கை அரசை வற்புறுத்தியது என இந்திய ஊடகங்கள் தெரிவித்தன.

எத்தனை ஈழத் தமிழர்கள் செத்தாலும் பரவாயில்லை தொடர்ந்து போரை நடத்தும்படி இலங்கை அரசுக்குக் கட்டளை பிறப்பித்த இந்தியாவால் எப்படி ஈழத் தமிழர் பிரச்சினையில் பங்குகொள்ள முடியும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதற்கிடையில் தமிழக சட்டசபைத் தேர்தலில் பெற்ற வெற்றி அ.தி.மு.க.கூட்டணியின் வெற்றியல்ல என்று கூறிய முதலமைச்சர் ஜெயலலிதா, அந்த வெற்றி தமிழ்நாட்டு மக்களுக்கு உரியது என்று கூறினார். அடுத்தபடியாக தேர்தலில் தான் கூறிய வாக்குறுதிகள் அனைத்தையும் ஒன்றரை வருடத்துக்குள் நிறைவேற்றி வைப்பேன் என்றும் கூறியுள்ளார். முதலமைச்சராகப் பதவியேற்க முதல் போர்க் குற்றவாளி எனக் கூறப்படும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றம்முன் நிறுத்தி இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இது சர்வதேச பிரச்சினை. எனவே தமிழக அரசால் குறிப்பிட்ட அளவில் மட்டுமே செயல்பட முடியும். அதற்குமேல் செயற்படுவதானால் அது மத்திய அரசால் மட்டுமே அதாவது இந்திய அரசால் மட்டுமே முடியும்.

### இரு தீர்வுகளுடன் ஜெயலலிதா

இருப்பினும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நான் இரண்டு தீர்வுகளை முன்வைக்க விரும்புகிறேன். போர்க் குற்றம் புரிந்தார் எனத் தெரிவிக்கப்படும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச போர்க் குற்றங்களுக்காக நீதிமன்றத்தில் நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்கலாம். அதைச் செய்யுமாறு இந்திய அரசை நான் தொடர்ந்து வலியுறுத்துவேன். இரண்டாவதாக இலங்கைத் தமிழர்கள் கௌரவமான, சுதந்திரமான வாழ்க்கை வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை அரசை இந்தியா வற்புறுத்த வேண்டும். அதைச்செய்ய இலங்கை அரசு மறுத்தால் இலங்கை மீது இந்தியா மற்றும் சர்வதேசம் பொருளாதாரத் தடைகளை விதிக்கவேண்டும். அப்படிச் செய்தால் இலங்கை அரசு பணிவதைவிட வேறு வழியில்லை. இதைச் செய்யுமாறு இந்திய அரசை நான் தொடர்ந்தும் வலியுறுத்துவேன் என்றார்.

முதலமைச்சராகப் பதவி ஏற்ற பிறகு ஈழத்தமிழர் பிரச்சினை சம்பந்தமாக எந்த ஒரு வசனமும் பேசவில்லை. மாறாகக் காங்கிரஸ் தலைவி சோனியாவைச் சந்தித்திருக்கிறார். தமிழ்நாட்டு மக்கள் காங்கிரஸை தூக்கி எறிந்து விட்டார்கள். படுதோல்வி கண்ட நிலையிலும் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி மகள் கனிமொழி லஞ்ச ஊழலில் கைது செய்யப்பட்ட வேளையிலும்

**துன்னாலைச் செல்வம்**

காங்கிரஸுடனான நட்புப் பாதிக்காது என்று சொல்லி இருக்கிறார்.

### கருணாநிதியால் முடியாது

தமிழ்நாட்டுத் தமிழ் மக்கள் ஏன் இவரை தூக்கி எறிந்தார்கள் என்று ஒரு துளியும் சிந்திக்காமல் காங்கிரஸுடனான தி.மு.கவுக்கு உள்ள நட்பு பாதிக்காது என்று சொல்லியிருப்பது ஈழத்தமிழர் பிரச்சினையில் கருணாநிதியால் ஒரு துளிகூட பங்கெடுக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது.

இப்பொழுது அவதாரம் எடுத்திருக்கும் ஜெயலலிதா என்ன செய்யப் போகிறார். அடுத்த தேர்தல் வரும் வரை தி.மு.க.போல் நிதி மோசடி செய்யலாம் என நினைக்கிறாரா அல்லது காங்கிரசிடம் கூட்டுச் சேர்ந்து தமிழ்நாட்டுத் தமிழர்களைப் படுகுழியில் தள்ளப் போகிறாரா. ஈழத் தமிழர்களின் பிரச்சினையை மூடி மறைக்கப் போகிறாரா என்பது போகப் போகத்தான் தெரியும்.

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுடன் பேச்சு நடத்தி இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி வலியுறுத்தலாம் எனக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. தமிழ்மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களுடைய அரசியல் தீர்வு குறித்தும் ஆட்சிக்கு வந்துள்ள அ.தி.முகவுடன் நாங்கள் நேடியான பேச்சுக்களை நடத்துவோம். ஏனெனில் தமிழகத் தேர்தல் பிரசாரங்களின் போது ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனத் தேர்தல் வாக்குறுதிகளை அளித்தனர்.

எனவே அதன் அடிப்படையில் ஆட்சிபீடம் ஏறும் அ.தி.முகவுடன் பேச்சுக்களை நடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குச் சாதகமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி வலியுறுத்துவோம்.

### கூட்டமைப்பின் எதிர்பார்ப்புக்கள்

ஈழத்தமிழர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் வேதனைகளை விலாவாரியாக அறிந்துகொண்டுள்ள ஜெயலலிதா அரசியல் தீர்வு குறித்து இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பார் என்பதில் சந்தேகம் இல்லை எனக் கூட்டமைப்புக் கூறியுள்ளது. விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே இடம்பெற்ற சமாதான காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை வன்னியில் மேற்கொண்டார். அப்பொழுது அந்த நேர்காணலை சன்.ரீ.வி தனது அலை வரிசையில் ஒளிபரப்பியது. அந்த ஒளிபரப்பைப் பார்த்த ஜெயலலிதா சகிக்க முடியவில்லை 'என இந்திய ஊடகங்களுக்குத் தெரிவித்தார் என்பதை எவரும் மறக்க முடியாது.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பில் ஜெயலலிதாவுக்கு புலிகளுடன் தொடர்புகள் இருந்ததாகச் சுப்பிரமணியசுவாமி அன்றைய தினம் தெரிவித்தார்.

### சூட்சுமம் தெரிந்தவர்

தனது அரசியல் நடவடிக்கைகளுக்காகப் புலிகளைப் பயன்படுத்திவிட்டுப் பின்பு ஒதுங்கி விடுகிற சூட்சுமம் தெரிந்த ஜெயலலிதாவுக்கு ஈழத்தமிழர் பிரச்சினை எம்மட்டில் உள்ளது என்பது அவரின் உள்மனதில் ஒளிந்து கிடக்கிறது. ஈழத் தமிழர்களைக் கைவிட்ட காங்கிரஸுக்கு தமிழ்மக்கள் தகுந்த பாடம் கற்பித்துவிட்டனர் என்று பிரபல ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. தமிழக அரசியல் வரலாற்றில் மிகப்பெரிய தோல்விக்கு காங்கிரஸ் கட்சி தள்ளப்பட்டுள்ளது.

அ.தி.மு.க., தி.மு.கவுடன் ஓசிச் சவாரி செய்தே ஆசனங்களை அள்ளிச் சொகுசாக இருந்துவந்த காங்கிரஸுக்கு இந்தச் சட்டமன்றத் தேர்தலில் மக்கள் நல்ல பாடம் கற்றுக்கொடுத்துள்ளனர். ஈழத்தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் செய்த கபட நாடகங்கள் போர் குற்றவாளி என மஹிந்த ராஜபக்ஷவை ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிவித்த பிறகும் கூட அவரைக் காப்பாற்ற காங்கிரஸ் மேலிடம் துடிப்பது என காங்கிரஸ் கட்சிக்கு எதிரான விடயங்கள் ஒட்டுமொத்தமாக இந்தத் தேர்தலின்போதுகூட கிட்டாத ஒரு அருமையான சந்தர்ப்பம் இப்போது ஈழத் தமிழருக்குக் கிடைத்துள்ளது. ஆயுதப் போராட்டம் தராத பயனை ஐ.நா.நிபுணர் அறிக்கை மூலம் பெற்றுத்தர வாய்ப்புள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி தமிழர்களின் உற்ற தோழன் தானே என இந்தியா நிரூபிக்கவேண்டும் என்பதே உலகெங்கும் உள்ள தமிழர்களின் கனவாகும்.

போர்க்குற்றம் புரிந்துள்ள இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படும் போக்கை இந்தியா இனியாவது மாற்றிக்கொள்ள வேண்டும். ராஜீவ்காந்தி கொலைக்குப் பழிவாங்கல் போக்கை இனியும் தொடர்வது உலக அரங்கில் இனப்படுகொலையின் பங்காளி என்ற பட்டம் இந்தியாவுக்கு என்றுமே நிலைத்துவிடும். இதனை இப்போது செய்யாவிட்டால் இனிமேல் எப்போதும் செய்ய முடியாது. ஆகவே ஈழத் தமிழர்களுக்காகத் தமிழகத் தலைவர்கள் ஓரணியில் நின்று போராட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதோ ஓர் அரிய வாய்ப்பு!

வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க தத்தளிக்கிறீர்களா?
மாதாந்த வருமானம் போதாமல் இருக்கிறதா?
உங்கள் கனவுகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறதா?
இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்.
உங்கள் முயற்சிக்கு ஏற்ற ஊதியம்.
பொழுது போக்கு நேரத்தில் மேலதிக வருமானம் பெற அழையுங்கள்.

ரஞ்சனி 0777481592 ,0112586997

## சொகுசு A/C கார் வாடகைக்கு



திருமண வைபவங்களுக்கும் உல்லாசப் பிரயாணங்களுக்கும் கார், வான் மற்றும் மினி பஸ்கள் பெற்றுக் கொள்ளலாம்.

ரஜீவன் 22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 0777903090

## நீங்கள் கணினி கல்வி நிறுவனமொன்றை நடத்துபவரா?

CSS COMPUTER EDUCATION - INDIA நிறுவனத்தின் அங்கீகாரம் பெறுவதன் மூலம் உங்கள் நிறுவனத்தையும் பிரதேசத்தில் முன்னணி நிறுவனமாக உயர்த்துவதற்கான அரிய சந்தர்ப்பம்.

ISO 9001 : 2008 இனை அங்கீகாரம், விளம்பரங்கள், ஆசிரியர் பயிற்சி, சர்வதேச சான்றிதழ்கள் போன்றவற்றை வழங்கி உங்கள் வருமானம் மென்மேலும் அதிகரிக்க உதவுவோம்.

ஒரு பிரதேசத்திற்கு ஒரேயொரு அங்கீகாரம் மட்டுமே வழங்கப்படவிருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் உடன் பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு 0755 123111 www.isscs.org

## VACANCY

We are one of the pioneers in the field of Information and Communication Technology for over three decades in Sri Lanka.

We have already extended our services to Thenmaradchi. We are expect to invite qualified, social minded, retired Principals, Lecturers and Teachers who are well acquainted in Tamil, English & Sinhala, and who are capable of moving with our students in a friendly manner, to fill the Academical Management Posts in our Campus at Chavakachcheri.

Age limit: 45 to 60 years.
Attractive Remuneration will be paid after negotiation.

தகைமையுடையவர்கள் கீழ்வரும் முகவரிக்கு தங்களின் சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

IDM HRManager
No: 5, 1/1, Kandy Road, Chavakachcheri.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 1938 ★ 03 ★ 09



விண்ணில் 2011 ★ 05 ★ 06

### அமரர் வைத்திலிங்கம் சிவசுப்பிரமணியம் (கந்தசாமி)

திதி: 05.06.2011

குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எம்மை அன்புடன் அரவணைத்து நன்னெறி காட்டி வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவனின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தவர்கள் மற்றும் எமக்கு நேரிலும் தொலைபேசியிலும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபங்கள் தெரிவித்தவர்கள், மரணச்சடங்கில் பங்கு பற்றி அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (05.06.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சண்டிலிப்பாய் மத்தி,*
*சண்டிலிப்பாய்.*

(4908)(28-20-22)

- குடும்பத்தினர்.

## பிரபல விஷகடி வைத்தியர் காலமானார்

கொட்டடியைச் சேர்ந்த பிரபல விஷகடி வைத்தியர் க. சிற்றம்பலம் கனடாவில் காலமானார்.

சுமார் ஐம்பது வருடங்களுக்கு மேல் குடாநாட்டு மக்களுக்கு சிறந்த வைத்திய சேவையை வழங்கிய சிற்றம் பலம் ஆசிரியராகவும் சமூக சேவையாளராகவும் விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ-7)

## கடைகள் வாடகைக்கு

புங்குடுதீவு, குறிகாட்டுவான் துறை முகத்துக்கு அருகில் 11 அடி அகலமும் 33 அடி நீளமும் கொண்ட கடைகள் வாடகைக்கு உண்டு.

T.P: 0770556369

## கொழும்பு ஸ்ரார் பப்ளிகேஷன் வெளியீடுகள்

தற்போது யாழ்ப்பாணத்திலும்

தரம் 6-11 வரை விஞ்ஞானம், தரம் 1 - O/L வரை பரீட்சை நோக்கு , பரீட்சைப் பொதி அறிவொளித் தொகுப்பு, விஞ்ஞானஒளி, புலமைப்பரிசில் நேர்வழிகாட்டி.

இ. நிர்மலன் ஸ்ரீ ரஞ்சனி புத்தகசாலை
இல. 190, ஜம்பட்டா வீதி, கொழும்பு 13.
தொடர்பு : 011 - 4947856, 0777 413990

## உயிரூட்டுகின்றோம்

உங்களிடம் உள்ள முற்றும் பழுதடைந்து, பாவிக்க முடியாத நிலையில் உள்ள எந்தவகையிலான தொழில்சார் மின்சாரக் கருவிகளையும், சிறப்பான முறையில் இயங்கக்கூடிய வகையில் உத்தரவாதத்துடன் திருத்தித்தரப்படும்.



தொழில்சார் இயந்திர மற்றும் மின்சார கருவிகளை சிறந்த உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

GREEN HOUSE TRADING COMPANY (PVT) LTD.
இல. 05, கருவப்புலம் ஒழுங்கை,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு. (திருநெல்வேலி). 021 2226459.
(நல்லூர் பிரதேச செயலகத்திற்கு முன்பாக) .

## மரண அறிவித்தல்



### திரு சோமசுந்தரம் நாராயணசாமி
(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை கொத்தியாலைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா மெல்பேணை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நாராயணசாமி 02-06-2011 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்ற சோமசுந்தரம், தையல்நாயகி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், கனகம்மாவின் அன்புக் கணவரும், கலைநேசன், மோகன், அருள்நேசன், ஜெகதீஸ்வரி, ரஞ்சனி, ரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வான்மதி, இதயராஜ், அருட்செல்வம், ராதிகா, சத்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகா, அன்பழகன், செந்தூரன், மயூரன், கௌத்தம், கோகுலன், பிரவீன், அஸ்வின், அரவின் ஆகியோரின் அன்புப் பேரனும், அஸ்வத்மனின் அன்புப் பூட்டனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவுஸ்திரேலியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

## ஹீரோ, கென்டன் காட்சியறை




சிறியோர் முதல் பெரியோர் வரையான அனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

சிறுவர்களின் மின்சார மீள்நிரப்புக் (Recharchable) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4921672

## உடனடி வேலைவாய்ப்பு
(ஆங்கிலப் போதனாசிரியர்)

Gateway நிறுவனத்தின் சாவகச்சேரி கிளைக்கு ஆங்கிலப் போதனாசிரியர் பணிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



தகுதி, அனுபவத்தின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

முழுமையாகவோ பகுதிநேரமாக பணியாற்றலாம்.

கல்விச் சான்றிதழ்களுடன் இன்றும் நாளையும் நேரில்வரவும்.

'GATEWAY CENTRE'
UTHAYAN IT ISLAND
New Market Bulding, Chavakachcheri.
T.P: 227 0323

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உப அதிபர்
திருமதி எஸ்.சுரேந்திரன் அவர்களின அன்புத் தாய்

### திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(4909)(28-20-22)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை செல்லையா



பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லையா (01.06.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வாலாம்பிகையின் அன்புக் கணவரும், அழகேந்திரன், சுலோஜனா, சரோஜா, ஜெயக்குமார், உதயகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், வன்னியசிங்கம், புவனேஸ்வரி, உலகநாதன், சியாமளா, சுமதி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் மயூரன், கிரிசாந்தினி, அபிலாஷினி, பிரசாத், மயூரி, நிக்ஷன், லருசன், கிரிஷான், டர்ஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*66/4, இந்து மகளிர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(4911)(20-22)

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெய்னாவும் சூதாட்டத்திலா?

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான சுரேஷ் ரெய்னாவின் ஆட்டம் உலகக் கிண்ணம், ஐ.பி.எல் போட்டியில் சிறப்பாக இருந்தது. மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 20 ஓவர் போட்டி, ஒரு நாள் தொடர் ஆகியவற்றுக்கு ரெய்னா அணித் தலைவராக நிய மிக்கப்பட்டு உள்ளார்.

தற்காலிக அணித்தலைவரான அவரையும், சூதாட்ட தரகரையும் இணைத்து தகவல் வெளியாகி உள்ளது. சூதாட்டத் தரகர்களுடன் ரெய்னா இருப்பது போன்ற புகைப்படத்தை தொலைக்காட்சி அலைவரிசை ஒன்று ஒளிபரப்பு செய்துள்ளது. உலகக் கிண்ண வெற்றிக்கு பிறகு ரெய்னா சீரடி சென்றார். அப்போது எடுத்துக் கொண்ட புகைப்படத்தில் இருப்பவர்கள் சூதாட்ட தரகர்கள் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதை சுரேஷ் ரெய்னா மறுத்து உள்ளார். அவர் கூறும்போது, பலர் என்னுடன் நின்று புகைப்படம் எடுக் கிறார்கள். உண்மை யிலேயே எனக்கு அவர்கள் யார் என்று தெரியாது என்றார். (15)



# முடிவுக்கு வந்தது
## கலப்பு இரட்டையர்

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்று வரும் பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் அவுஸ்திரேலியாவின் கேஸி டெல்லாக்கா- அமெரிக்காவின் ஸ்காட் லிப்ஸ்கி ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

வியாழக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்த ஜோடி 7-6 (6), 4-6, 10-7 என்ற செட் கணக்கில் ஸ்லோவேகியாவின் கேத்தரினா ஸ்ரீபோட்னிக் - செர்பியாவின் நீனாட் ஜிம்மோன்ஜிக் ஜோடியை வீழ்த்தியது. ஆட்டத்தின் முதல் செட்டில் இரு ஜோடிகளும் அபாரமாக ஆடின. இந்த செட் சம நிலையில் முடிந்தபோதும், 'டை பிரேக்கர்' வாய்ப்பு மூலம் கேஸி-ஸ்காட் ஜோடி 7-6 என்ற கணக்கில் முதல் செட்டை வென்றது. இதைத்தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில் கேத்தரினா-நீனாட் ஜோடி 6-4 என்ற கணக்கில் வென்றது. இதன்பிறகு வெற்றியைத் தீர்மானிக்க டை பிரேக்கர் வாய்ப்பு வழங்கப் பட்டது. இதில் கேஸி-ஸ்காட் ஜோடி அபாரமாக ஆடி 10-7 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இதன்மூலம் அந்த ஜோடி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

**பிரையன் சகோதரர்கள் தோல்வி:** வியாழக்கிழமை நடைபெற்ற ஆடவர் இரட்டையர் அரையிறுதிச்சுற்றில் முன்னணி ஜோடியான அமெரிக்காவின் பாப் பிரையன் - மைக் பிரையன் சகோதரர் கள் ஜோடி 6-7, 3-6 என்ற கணக்கில் கொலம்பியாவின் ஜூலியன் செபஸ்டியான் - ஆர்ஜென்டினாவின் எட்வர்டோ ஜோடியிடம் தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறியது. (15)

கேத்தரினா

# அப்ரிடி விளையாட அனுமதி!

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் அப்ரிடிக்கு இலங்கைக் கிரிக்கெட் சபையிடமிருந்து மகிழ்ச்சியான செய்தி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை பிரீமியர் லீக்கில் விளையாட அப்ரிடி பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடமிருந்து ஆட்சேபனையற்ற சான்றிதழ் பெறத் தேவையில்லை என்று இலங்கை பிரிமியர் லீக் ஏற்பாட்டாளர்கள் அப்ரிடியிடம் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அப்ரிடிக்கு ஆட்சேபனையற்ற சான்றிதழ் தர மறுத்தாலும் அப்ரிடி இலங்கை பிரிமியர் லீக்கில் விளையாட முடியும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் அப்ரிடியிடம் தெரிவித்ததாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அப்ரிடியைத் தவிர பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தற்போதைய அணித்தலைவர் மிஸ்பா - உல் ஹக், ஓய்வு பெற்ற வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தர், அப்துல் ரசாக், உமர் குல் மற்றும் உமர் அக்மல் ஆகிய பாகிஸ்தான் வீரர்களும் இந்தப் போட்டித் தொடரில் விளையாடவுள்ளனர்.

18 நாள்களுக்கு நடைபெறவுள்ள இலங்கை பிரீமியர் லீக்கில் பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 7 அணிகள் விளையாடவுள்ளன. பாகிஸ்தான் வீரர்கள் மட்டுமன்றி மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிறிஸ் கெய்ல், கெய்ரோன் போலார்ட், நியூசிலாந்து அணியின் டானியல் வெற்றோரி, தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஹேர்ஷல் கிப்ஸ் மற்றும் அயர்லாந்தின் கெவின் ஓ பிரயன் ஆகியோரும் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (15)



## இறுதிச் சுற்றில் ஷியாவோனா

வியாழக்கிழமை நடைபெற்ற மகளிர் ஒற்றையர் அரையிறுதிச் சுற்றில் நடப்புச் சம்பியனான இத்தாலியின் பிரான்செஸ்கா ஷியாவோனே 6-3, 6-3 என்ற நேர் செட்களில் பிரான்ஸின் மரியான் பர்ட்டோலியை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். (15)

## சரிந்தார் சானியா

பிரெஞ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் இறுதிச்சுற்றில் இந்தியாவின் சானியா-ரஷ்யாவின் வெஸ்னினா ஜோடி தோல்வியடைந்து பட்டம் வெல்லும் வாய்ப்பை இழந்தது.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற மகளிர் இரட்டையர் இறுதிச்சுற்றில் செக்.குடியரசின் அண்ட்ரியா-லூசி ஜோடி 6-4, 6-3 என்ற நேர் செட்களில் சானியா-வெஸ்னினா ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. (15)



# எனது ஆட்டம் தொடரும்...

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஐந்தாவது ஐ.பி.எல் தொடரில் விளையாடுவேன், என்று முன்னாள் இந்திய அணித்தலைவர் கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நான்காவது ஐ.பி.எல் தொடர் சமீபத்தில் இந்தியாவில் நடந்தது. இதற்கான வீரர்கள் ஏலத்தில், முதல் மூன்று தொடர்களில் கொல்கத்தா அணிக்காக விளையாடிய கங்குலி புறக்கணிக்கப்பட்டார். பின் ஆஷிஸ் நெஹ்ரா காயம் காரணமாக விலகியதால், கடைசிக் கட்டத்தில் புதிதாக இடம்பெற்ற புனே வாரியர்ஸ் அணியில் வாய்ப்புப் பெற்றார். இதில் மூன்று போட்டிகளில் பங்கேற்ற இவர், மொத்தம் 50 ஓட்டங்கள் எடுத்தார்.

இதுகுறித்து கங்குலி கூறியதாவது:

**நான்காவது ஐ.பி.எல் தொடருக்கான ஏலத்தில் என்னை எந்த அணியும் ஒப்பந்தம் செய்யாதது ஏமாற்றமாக இருந்தது. கடைசி நேரத்தில் புனே வாரியர்ஸ் அணிக்காக விளையாடியது மகிழ்ச்சியாக இருந்தது. அடுத்த ஆண்டு நடக்கவுள்ள ஐந்தாவது ஐ.பி.எல் தொடரில் நிச்சயம் விளையாடுவேன். முதல் மூன்று தொடர்களில் கொல்கத்தா அணிக்காக விளையாடிய நான், இந்தமுறை புனே அணியில் ஒப்பந்தம் செய்யப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஏனெனில் இந்த முறை நிறைய வீரர்கள், பழைய அணியில் இடம்பெறாமல் வேறு அணிகளில் ஒப்பந்தம் செய்யப்பட்டனர்.** (15)

# சரிவிலிருந்து மீண்டது இங்கிலாந்து

இலங்கைக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில் அலிஸ்டர் குக், இயன் பெல், இயன் மோர்கன், மட் பிரையர் உள்ளிட்டோர் அரைசதம் அடித்து கைகொடுக்க இங்கிலாந்து அணி சரிவிலிருந்து மீண்டது.

இங்கிலாந்து சென்றுள்ள டில்ஷான் தலைமையிலான இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட பயிற்சி தொடரில் பங்கேற்கின்றது. சமீபத்தில் கார்டிப் நகரில் நடந்த முதல் பயிற்சி போட்டியில் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 1-0 என்று தொடரில் முன்னிலை வகிக்கின்றது.

இந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் லண்டனில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் டில்ஷான் களத் தடுப்பை தேர்வு செய்தார்.

முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணிக்கு அணித் தலைவர் ஸ்ரோரஸ்(4 ஓட்டங்கள்) வெலகெதர வேகத்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஜொனாதன் ரொராட்(2 ஓட்டங்கள்), கெவின் பீட்டர்சன்(2 ஓட்டங்கள்) இருவரும் சுரங்க லக்மலின் வேகத்தில் நடையைக் கட்டினர். இதனால் இங்கிலாந்து அணி 22 ஓட்டங்களுக்கு மூன்று முன்வரிசை விக்கெட்டை இழந்து திணறியது.

பின் இணைந்த அலெஸ்டர் குக், இயன் பெல் ஜோடி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை சரிவிலிருந்து மீட்டது. பொறுப்புடன் ஆடிய இவர்கள் இருவரும் அரைசதம் கடந்து அணியின் 'ஸ்கோரை' உயர்த்தினர். நான்காவது விக்கெட்டுக்கு 108 ஓட்டங்கள் சேர்த்த போது இயன் பெல்(52 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய இயன் மோர்கனுடன் இணைந்த குக், அபார ஆட்டத்தை தொடர்ந்தார். இவர் 164 பந்தில் 15 பவுண்டரிகள் உட்பட 96 ஓட்டங்கள் எடுத்த போது, பெர்னாண்டோ வேகத்தில் மகரூப்பிடம் பிடி கொடுத்து சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

பின் இயன் மோர்கன், மட் பிரையர் ஜோடி ஆட்டத்தை கையில் எடுத்துக் கொண்டது. பொறுப்புடன் ஆடிய மோர்கன், பிரையர் இருவரும் அரைசதம் அடித்தனர். இங்கிலாந்து அணி தேநீர் இடைவேளைக்கு பின்னர் 5 விக்கெட்டுக்கு 302 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மோர்கன்(79 ஓட்டங்கள்), பிரையர்(50 ஓட்டங்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தேநீர் இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமான சிறிது நேரத்தில் மோர்கன் (79 ஓட்டங்களுடன்) லக்மல் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். இறுதியில் முதலாம் ஆட்ட நேரமுடிவில் 342 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்தது. இலங்கை சார்பில் வெலகெதர 2 விக்கெட்டுக்கள், லக்மல் 3 விக்கெட்டுக்களையும், பெர்னாண்டோ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பந்தாட்ட இறுதியாட்டம் இன்று

வலி.வடக்கு, ஜூன் 5

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் யாழ். மாவட்ட கழகங்களுக்கிடையே நடத்தும் ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள கரப்பந்தாட்ட மைதானத்தில் கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் க.ஏகாம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திருமதி எஸ். அனந்தசயனனும் சிறப்பு விருந் தினர்களாக ஈழமக்கள் ஜன நாயக கட்டசியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், வலிகாமம் அமைப்பாளர் சி.பால கிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய இறுதிப் போட் டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

*பெண்கள்:*

* காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் பன்னாலை கணேசர் விளையாட்டுக்கழகம்.

*ஆண்கள்:*

* யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டுக் கழகம் எதிர் சங்கானையுத் விளையாட்டுக் கழகம். (த-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். உதைப்பந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் லீக் முறையிலான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை உரும் பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்வுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

*பிற்பகல் 3:45 மணி*

* உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் எதிர் வளர்மதி விளையாட்டுக் கழகம்.

*மாலை 5 மணி*

* அரியாலை விளையாட்டுக்கழகம் எதிர் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம். (த-23)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5

கிளிநொச்சி உதைபந் தாட்ட லீக்கினால் அங்கத்தவர் கழகங்களுக்கு இடையே நடத் தப்பட இருந்த உதைபந்தாட்டச் சுற்றப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளது.

இந்தப் போட்டிக்கான திகதி பின்னர் அறியத்தரப்படும் என கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ஜோய் பிய சீலன் அறிவித்துள்ளார். (த-23)


### வேலையாள்கள் தேவை

பல சரக்குக் கடை அனுபவம் உள்ள வேலையாள்களும் இரவு நேர காவலாளியும் தேவை. தொடர்புகொள்ளவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு - ரூபன் பல்பொருள் வாணிபம், (KR) அளவெட்டி

### கார் விற்பனைக்கு

TOYOTA CARINA AT- 150, 15 SRI இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 0772514186

### விற்பனைக்கு

27 சிறி XXXX தொடரிலக்க LD லொறி வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0772395775

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Mitsubishi Lancer Car, மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. குறைந்த விலையில் குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள் (Japan) என்பன உடன் விற்பனைக்குண்டு.
0771727241, 0770711751, 0778693332

### மணமகள் தேவை

யாழ். இந்துகௌரவ அரச சேவை புரியும் மணமகனுக்கு 35-39 வயதுக் குட்பட்ட மணமகள் தேவை.
தொடர்பு:M.Bavan 521/3, Galle Road, Wellawatte, Colombo-06 T.P- 0758090467

### வேலை ஆள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் உதிரிப்பாக விற்பனை நிலையத்துக்கும், திருநெல்வேலியில் அமைந்த உணவகத்துக்கும் வேலை ஆள்கள் தேவை.
தொடர்பு: 0777448475
satymh@gmil.com.

### காணி விற்பனைக்கு

திக்கம் சாராய வடிசாலைக்கு முன்பாகவுள்ள RDA றோட்டில் நல்ல சூழலில் ½ பரப்பு, 2½ பரப்பு, 4½ பரப்புக் காணிகள் விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தனிப்பாதையுடன்.
தொடர்பு: 0776425354, 0771513387

### விற்பனையாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும்
ஆர்க் என்ரப்பிறைசஸ்
நிறுவனத்துக்கு விற்பனையாற்றல் மிக்க இளைஞர்கள் தேவை. சுயவிவரக்கோவை யுடன் 30.05.2011 திங்கட்கிழமை நேரில் சமுகமளிக்கவும். O/L, A/L படித்தவர்கள் நல்ல பேச்சாற்றல் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:-
ஆர்க் என்ரப் பிறைஸ்,
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

### வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள்ளும் கொக்குவில், கோண்டாவில் எல்லைக்குள்ளும் வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு - 0772229285, 0772292681

### அறைகள் வாடகைக்கு

யாழ். மருத்துவபீடத்துக்கு மிக அருகில் நான்கு அறைகள் சகல வசதிகளுடன் யாழ். மருத் துவபீட மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்படும்.
தொடர்பு - 0718565662

### விற்பனைக்கு

கீழ் குறிப்பிடப்படும் வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.
325-XXXX கன்ரர் அரை பொடி,
27 - XXXX டவுண் A/C அரை பொடி,
LK - XXXX எல்வ்.
தொடர்புகளுக்கு:
தொ.பே. இல. 021 222 5688
இல. 205 ஆஸ்பத்திரி வீதி, யாழ்.

### வீடு குத்தகைக்கு / வாடகைக்கு

சுண்டுக்குளி, கொழும்புத்துறை றோட்டுக்கு அருகில் சென். ஆன்ஸ் சேர்ச்சுக்கு அண்மித்த ஆறு பரப்பில் அமைந்துள்ள ஐந்து விசாலமான படுக்கை அறைகள் இரண்டு மலசல கூடம், குளியலறை, சமையலறை, வேலையாள்களுக்குப் புறம்பான அறை, தண்ணீர்த் தாங்கி, நீர் வசதி ஆகியன அடங்கிய பெரிய வீடு பல நிறங்களில் வர்ணம் பூசப்பட்டு முடிவடையும் நிலையில் வாடகைக்கு / குத்தகைக்கு உண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மாத்திரம் கொடுக்கப் படும். தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 0776154279

### தவறிவிட்டது

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி சிவானுஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (945192097V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ''சர்மிலன் மரக்காலை'', நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

### வீடு விற்பனைக்கு

கோப்பாய் பூதர் மடச்சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் 4½ பரப்புடன் கூடிய வீடு ஒன்று சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0754515512

### தேவை

COCA COLA குளிர்பான விற்பனை விநியோக வாகனங்கள் செலுத்துவதற்கு சாரதி களும், வேலையாள்களும் தேவை.
தொடர்புகளுக்கு -
COCA COLA விநியோகஸ்தர்கள்
சிவா பிரதர்ஸ்
இல. 205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.
தொ.பே. 021 222 5688, 021 222 5497

### பாடநெறி புதிய பிரிவு

கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி புதிய பிரிவுகள் ஆரம்பம் - June 13ஆம் திகதி பதிவுகளுக்கு முந்துங்கள்
ELITE COLLEGE
1/5, மடம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0770584658, 0750445070

### WANTED

Sales & Medical Representative
Male Below 30 for Jaffna.
Email : apexpharma@sltnet.lk
0777906430, 0773544840

### காணி விற்பனைக்கு

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் ஆஸ்பத்திரி வீதிப் பக்கமாக 4 பரப்புக்காணி விற்பனைக்கு. வாகனப் போக்குவரத்துக்கேற்ற ஒழுங்கையில் காணி அமைந்துள்ளது. தொடர்பு - 0712 299178.

### வீடு விற்பனைக்கு

ஆஸாத் வீதி (மானிப்பாய் வீதி), யாழ்ப்பாணத்தில் 1½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0777707088, 0772344377.

### தேவை

மருந்து விற்பனை அனுபவமுள்ள பெண்கள் தேவை.
தொடர்பு - லண்டன் பார்மசி
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
தொ.பே. 0777132949

### உடனடி வேலை வாய்ப்பு

I. OFFICE STAFF
II. CASHIER
III. SALESMAN
IV. COMPUTER TECHNICIAN
V. COMPUTER TYPIST

ஆண், பெண் இருபாலாரும் தேவை. குறைந்தது 2 வருட முன்அனுபவம். யாழ்ப்பாணம், நெல்லியடி, கிளிநொச்சி, கொழும்பு ஆகிய இடங்களில் வேலை செய்யக்கூடியவர்கள், நிபந்தனைக்குட்பட்டது.
தொடர்பு -
விளம்பர இல. 4150
மே/பா. உதயன்

### காணி விற்பனைக்கு

மருதங்கேணி-பருத்தித்துறை பிரதான வீதிக்கு அருகில், குடத்தனையில் 10Km தூரத்தில் 100 பரப்பு வயல் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
ஆர்வமுடையவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:- இராஜா- 0771298201
0777561341

### காணி விற்பனைக்கு

கந்தர்மடம், பலாலி வீதி, இந்து மகளிர் வீதியில் அமைந்துள்ள 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0773906158

### COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpac, M.Y.O.B
Diploma in **Video Editing** — Premiere Pro CS4, particleillusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,
Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling
Adv. Dip. in **Hardware & Networking**
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் Tel. : 021-222 ...403
நெல்லியடி. Tel. : 021-226 2470
சாவகச்சேரி. Tel. :021-227 0243

### ஆங்கில இலக்கிய, இலக்கண பிரெஞ்ச் வகுப்புகள்

ஆங்கில, பிரெஞ்ச் ஆகிய பாடங்களை கற்பிப்பதில் 45 ஆண்டுகள் அனுபவம் மிக்க ஆசிரியரால் இல: 10, செங்குந்தா வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடத்தப்படுகிறது. இங்கு ஆங்கில இலக்கியம் மற்றும் இலக்கணம் ஆகியன மிகச் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகிறது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அரச பணியில் உள்ளவர்கள் ஆகியோருக்கு அவரவர் தேவைக்கேற்ப மிகச்சிறந்த முறையில் ஆங்கிலம் கற்பிக்கப் படுகிறது. தரம் 6 தொடக்கம் A/L வரையான மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் சுயமாக எழுதப் பேசப் பழக செழுமையான இலக்கணத் தோடும் மிகச்சிறந்த சொல்வளத்தோடும் சிறப்பாக கற்பிக்கப் படுகின்றது. நல்லாசிரியரை நாடுவது மாணவர் களினதும் பெற்றோர் களினதும் பொறுப்பாகும். 45 ஆண்டு கால கல்விப் பணியின் போது கற்றுத்தேறியவர்கள் சிறந்த வழக்கறிஞர்களாகவும் மருத்துவர்களாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும் மற்றும் அரச உயர் பணி புரிபவர்களாகவும் இருக்கின்றார்கள். எனவே நல்லாசிரியரை நாடி சிறந்த முறையில் ஆங்கிலம் பயின்று பயன் பெறவாரீர்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
K.C. சிவசுப்பிரமணியம் இல. 10, செங்குந்தா வீதி, நல்லூர். T.P. 0212228125


## ஈராண்டு கழிந்தபின்னும் ஈரமாய் உங்கள் நினைவில்



### மாணிக்கம் தில்லைவிநாயகம்

மலர்வு 07.07.1941 — உதிர்வு 27. 05. 2009

திதி
05. 06. 2011

பல கோடி இன்பங்கள் இருந்தென்ன
பல நூறு உறவுகள் இருந்தென்ன
அப்பா நீங்கள் பிரிந்த இடைவெளியை
யார்தான் நிரப்புவரோ!
பிரிந்தும் பிரியாமல் எம்மோடு இருக்கும்
உங்கள்
ஆத்மாசாந்திபடைய பிரார்த்திக்கின்றோம்.

பொன் இல்லம்,
சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய். (4929)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கதிரவேலு சிற்றம்பலம்

(பிரபல விஷக்கடி வைத்தியரும் ஓய்வுபெற்ற அதிபரும்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ். கொட்டடியை வதிவிடமாகவும் தற்போது கனடா ஸ்காபரோவில் வசித்து வந்தவருமாகிய கதிரவேலு சிற்றம்பலம் கடந்த 31.05.2011 செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியபாலதேவியின் பாசமிகு கணவரும் விஷகடி வைத்தியர்களான அனுஷம்மா, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சிவபாதலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவக்தி (கனடா), சிவகுமார் (கனடா), கதிரவேலு (லண்டன்), சிவானி (லண்டன்), சிவநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலகிருஷ்ணன் (கனடா), கருணாம்பிகை (கனடா), தாட்சாயினி (லண்டன்), சக்திவேல் (லண்டன்), தயாளினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் தமிழினி, யோதினி, கார்த்திகாயினி, சாயீசன், அனுஜா, அபினயா, வைஸ்ணவன் (ஜேம்ஸ்), பவத்திரா, அபிராமி, திபோதினி, சயந்தன், கரிசா ஆகியோரின் அன்புப் பேரனும் பிரணவன், யனுஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கனடாவில் உள்ள சைலண்ட் மண்ட பத்தில் 04.06.2011 தொடக்கம் 05.06.2011 வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 06.06.2011 திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை இறுதிக் கிரியைகள் நடைபெற்று, 11.30 மணியள வில் தகனக்கிரியைக்காக Woodline மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
இ. சற்குருநாதன் (அன்பு - மருமகன்)
(விஷகடி வைத்தியர்),
இ. அனுஷம்மா (அக்கா)
(விஷகடி வைத்தியர்)

தொடர்புகளுக்கு
1. சத்தியபாலதேவி (மனைவி- கனடா) 416-431, 6229
2. சிவகுமார் (மகன் - கனடா) 416 889 3191
3. கதிரவேலு (மகன் - லண்டன்) 4479610355 2784
4. சிவநாதன் (மகன் - லண்டன்) 447956855982

(4922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் ஆலயத்தில் இன்று மகா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

இன்று காலை 9 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 11.32 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறும்.

(சிறப்பிதழ் 18 ஆம் 19 ஆம் பக்கங்களில்)

## ஈழத்துச்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெறவுள்ளது.

நேற்றுக்காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய எண்ணெய்க் காப்பு இன்று மாலை 4.30 மணி வரை இடம்பெறும். கும்பாபிஷேகத்தில் பக்தர்கள் கலந்து கொள்ள வசதியாக யாழ். நகரில் இருந்து விசேட பஸ்சேவையும் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

சிறப்பிதழ் நான்கு வர்ணங்களில் இன்றைய உதயனில் இருபக்கங்களில் வெளியாகியுள்ளது. (ஒ-ஐ-250)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரிடர் முகாமைத்துவ அமைச்சின் இயற்கை வள அலகு மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சின் மனித உரிமைகள் பிரிவு என்பன இணைந்து இந்த ஆய்வை மேற் கொண்டன.

இந்த ஆய்வின் முடிவிலேயே இன்னும் ஓரிரு வருடங்களில் குடாநாட்டில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

''யாழ். குடாநாட்டு மக்கள் நூறு சதவீதம் நிலத்தடி நீரையே நம்பி இருக்கின்றனர். ஆற்று நீரோ குளத்து நீரோ பாசன வசதிகளோ இங்கு கிடையாது. அத்துடன் மக்கள் எண்ணிக்கை வேறு அதிகரித்து வருகிறது. எனவே குடிதண்ணீருக்கு மாற்று வழிகள் காணப்பட வேண்டியது அவசியம். இதனை நிறைவேற்றுவது பெரும் சவால்தான்'' என்கிறார் பிராந்திய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு பிராந்திய முகாமையாளர்.

குடாநாட்டுக்கு குடிதண்ணீரை வழங்குவதற்கான பெரியளவிலான மாற்றுத் திட்டங்கள் விரைவாக உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

''யாழ்ப்பாணத்தில் குடிதண்ணீர், அன்றாட வீட்டுத் தேவை, விவசாயம் மற்றும் தற்போது அதிகரித்துள்ள கட்டட நிர்மாணப் பணிகள், அபிவிருத்திப் பணிகள் என அனைத்துக்கும் நிலத்தடி நீர்தான் பயன்படுத்தப்படுகிறது. இவ்வளவு தேவைகளையும் பூர்த்தி செய்ய நிலத்தடி நீர்வளம் நீண்ட நாளைக்குப் போதாது'' என்றார் குடிதண்ணீர் மற்றும் இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்கள யாழ். மாவட்டப் பொறுப்பாளர்.

''சட்டம் வழிகாட்டல்களைப் பின்பற்றாமல் தாறுமாறாக அமைக்கப்பட்டுள்ள மலசலகூடக் குழிகளாலும் குடிதண்ணீர்க் கிணறுகள் நாசமாகின்றன. பல இடங்களில் மலக் கழிவுகள் கிணறுகளில் கலந்து அவை பயன்படுத்த முடியாத அளவுக்கு மோசமாகி விட்டன என்ற புகார்கள் கிடைக்கின்றன'' என்றார் அவர்.

நீர்வழங்கல் அதிகார சபையின் அனுமதியின்றி குழாய்க் கிணறுகளை அமைத்து அவற்றிலிருந்து மோட்டர் மூலம் தண்ணீரை இறைப்பது, வீட்டுக்கு வீடு கிணறுகளில் மோட்டர் போட்டு தண்ணீரை இறைப்பது என்பன அதிகரிப்பதால் அளவுக்கு மீறி நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு அந்த இடங்களுக்கு கடல் நீர் உட்புகும் அபாயமும் இருப்பதாக அவர் எச்சரித்தார்.

விவசாய நடவடிக்கைகளுக்காக நிலத்தடி நீர் அளவுக்கு அதிகமாக இறைக்கப்படுவதும், இரசாயன உரப்பாவனை மற்றும் கிருமிநாசினிப் பாவனை என்பனவும் நிலத்தடி நீரை நச்சுத்தன்மையாக்குகின்றன என்றும் நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த ஆபத்தை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள் என்று, அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் கமநல சேவைகள் அபிவிருத்தி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவிடம் கேட்டதற்கு, ''யாழ்ப்பாண மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இதன் ஒரு கட்டமாகத்தான் இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது'' என்று தெரிவித்தார். (உ-02)


## மரண அறிவித்தல்

### நமசிவாயம் பரமேஸ்வரி

நாரந்தனை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 521/5, பருத்தித்துறை வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் பரமேஸ்வரி நேற்று (04.06.2011) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, சிவானந்தன், செல்வரட்ணம், புவனேஸ்வரி (நிர்வாக உத்தியோகத்தர், சமூக சேவைகள் திணைக்களம்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுப்பையா, மயில்வாகனம் மற்றும் கமலா, புவனேஸ்வரி, சிவலிங்கம் (ஓய்வுபெற்ற முன்னாள் உத்தியோகத்தர், தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பற்குணதாசன் மற்றும் மகேஸ்வரன், பத்மாவதி, இந்திரா, தனபாலசிங்கம், ரமணி, ஜெயானந்தன், நாகேஸ்வரி, சஞ்சயன், ஜனகன் ஆகியோரின் பெரிய தாயும் தர்சிகா, விஷ்ணுகாந், தாரணி, பிரசாந் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பி.ப. 4 மணியளவில் பூதவுடல் செம்மணி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*521/5, பருத்தித்துறை வீதி, நல்லூர்.* (4930) **தகவல்: கே.ஆர். சிவலிங்கம் (மைத்துனர்).**


## கோட்டைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யூடாக கோட்டைக் கல்லா றுக்குத் திரும்பிக் கொண்டி ருந்த சமயம் வள்ளம் திடீரென கவிழ்ந்ததில் ஐவர் காணாமற் போயிருந்தனர்.

நேற்றுக் காலை மேற்கொள் ளப்பட்ட தேடுதலின் போது அவர்கள் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கோட்டைக்கல்லாறு நடேசபதி வீதியைச் சேர்ந்த தங்கராசா பிரேமரஞ்சன் (21வயது) ரமேஸ் பாவனா(3வயது) கோட்டைக்கல்லாறைச் சேர்ந்தவர்களும் தற்போது மட்டக்களப்பு திராய்க்கேணியில் வசித்து வந்தவர்களுமான கிருஷ்ணபிள்ளை திருச்செல் வராசா (43 வயது) திருச்செல்வராசா நிசாந்த் (19 வயது), திருச் செல்வராசா தவித்தா (12 வயது) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐந்து பேரின் சடலங்கள் நீரோடையில் இருந்து மீட்கப் பட்டன.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலங்கள் நேற்றுக் காலை மரண விசாரணை அதிகாரி பேரின்பராசா சண்முகத்தின் விசாரணையை அடுத்து நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதேவேளை, களுவாஞ் சிக்குடி வைத்தியசாலைக்கு சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வா ராசா உயிரிழந்தவர்களின் சடலங்களை பார்வையிட்டதுடன் உயிரிழந்தவர்களின் உறவினர் களுக்கு ஆறுதல் கூறினார்.

(ஒ-ஐ-21)

## இலங்கைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வப் பகிர்வு மாநாட்டில் அமெரிக்கத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் வெளியிட்ட கருத்துக்கும் அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்கும் இடையில் அதிக வேறுபாடு இருப்பதாகவும் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது

''தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் வெளியிட்ட கருத்து தனிப்பட்ட ரீதியானது. அது அமெரிக்காவின் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை'' என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் மார்க் ரோனர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அனுபவப் பகிர்வு மாநாட்டின் கேள்வி பதில் நேரத்தில் அமெரிக்கத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் லெப். கேணல் லோறன்ஸ் சிமித், ''போரின் இறுதி மணித்தியாலங்களில், விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சரணடைய முன்வந்தனர் என்ற தகவல் நம்பகத்தன்மை குறைந்தது. எனவே இறுதியான தீர்மானங்களுக்கு வரமுன்னர் இதுபற்றிக் கவனமாக ஆராய வேண்டிய தேவையுள்ளது'' என்று தெரிவித்திருந்தார். இதனையே பேச்சாளர் மறுத்தார்.

''அனுபவப் பகிர்வு மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு இலங்கை விடுத்த அழைப்பை அமெரிக்கா நிராகரித்து விட்டது. எமது தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் தனது வழக்கமான பணிகளின் அடிப்படையில், ஓர் அவதானிப்பாளராக மட்டுமே மாநாட்டில் பங்கேற்றார்.

இலங்கை தொடர்பான அமெரிக்காவின் கொள்கைகளில் எந்த மாற்றமும் இல்லை.

ஐ.நா. பொதுச் செயலர் நியமித்த நிபுணர்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அமெரிக்கா மீண்டும் வலியுறுத்துகிறது. அதுபற்றி ஆழமான கவலை கொண்டுள்ளது. போர்க் குற்றங்கள் குறித்து ஆராய ஒரு நம்பகமான விசாரணை, மற்றும் பொறுப்புக் கூறும் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஜனநாயகம், அமைதி நிறைந்த, ஒற்றுமைப்பட்ட நாட்டைக் கட்டியமைக்க இலங்கை அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்று அமெரிக்கா நம்புகிறது'' இவ்வாறு ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (உ)

## போர்க்குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடவை இரண்டு தடவைகள் அல்ல. 65 தடவைகள் நடத்தப்பட்டுள்ளன'' என்றார்.

ஆவணப்படத்தைப் பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவித்த மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்கா தூதர் எலீன் டொனாகோ, ''போர்க் குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அவசியத்தை மீண்டும் ஒரு தடவை இது நிரூபித்துள்ளது'' - என்றார்.

''ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆக்கபூர்வமான வகையில் பதிலளிக்குமாறு இலங்கை அரசிடம் நாம் வலியுறுத்துகிறோம். இலங்கை மக்களின் நல்லிணக்கத்துக்கும் குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்குமான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கொழும்பு சிந்திக்க வேண்டும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நல்லிணக்கம் பற்றி அரசு கூறிவருகின்ற போதும், வடக்கு மக்களின் சார்பில் பேசவல்லவர்களிடம் கேட்டால் அங்கு '' எதுவுமே நடக்கவில்லை'' என்பதை அறிய முடியும் என்று காட்டமாகத் தெரிவித்தார் அனைத்துலக மன்னிப்புச் சபையைச் சேர்ந்த பீற்றர் பிலின்டர். (உ)

## அரசு பக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பு உறுப்பினர் சுவீகரன் நிஷாந்தனுக்கு எதிரான தீர்மானத்திலும் கையெழுத்திட்டார்.

யாழ். மாநகர சபையின் ஆளும் தரப்பு உறுப்பினராக சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சு.நிஷாந்தன், மாநகர முதல்வருக்கும் அரச தரப்புக்கும் எதிராகச் செயற்படுகிறார் என்று குற்றஞ்சாட்டி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்படி கோரும் தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இதற்காக யாழ். மாநகர சபையின் விசேட கூட்டம் நேற்றுக் கூட்டப்பட்டதாக நேற்றிரவு 10 மணியளவில் ஊடகங்களுக்கு ஓர் அறிக்கை அனுப்பப்பட்டது. எனினும் சபையின் விசேட கூட்டம் எதுவும் கூட்டப்படுவதாக மாநகர சபை உறுப்பினர்கள் என்ற வகையில் தமக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் க.விந்தன் தெரிவித்தார். ''முன்னறிவித்தல் எதுவும் தராமலும் சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிக்காமலும் விசேட கூட்டம் எதனையும் முதல்வர் கூட்டமுடியாது. அப்படிக் கூட்டியதாக அறிவிக்கப்பட்டால், சபையை அவர்கள் தமது வீட்டுநிர்வாகமாகவே நினைக்கிறார்கள் என்று அர்த்தப்படும்'' என்றார் அவர்.

நேற்றைய கூட்டத்தில் ரெமீடியஸ் தவிர ஏனைய அனைவரும் ஆளும் தரப்பு மாநகர சபை உறுப்பினர்களாவர். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை யாழ். மாவட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஈ.பி.டி.பி, இலங்கை மக்கள் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் அமைப்பாளர்களும் அதில் கலந்து கொண்டிருந்தனர். முன்னணியின் முக்கிய கட்சியான சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் எவரும் பங்குபற்றியிருக்கவில்லை.

''மாநகர சபைக் கூட்டத்தில் எப்படி உறுப்பினர்கள் அல்லாத பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டது?'' என்று கேள்வி எழுப்பினார் விந்தன். எனவே இதனை சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர்களது கூட்டமாகவே கருத வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநகர சபையால் நேற்றிரவு அனுப்பப்பட்ட தொலைநகலில், ''04.06.2001 அன்று நடைபெற்ற யாழ். மாநகர சபையின் விசேட கூட்டத் தீர்மானம்'' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட ஒரேயொரு தீர்மானம், ஆளுங்கட்சி உறுப்பினர் சு.நிஷாந்தனுக்கு எதிராக பொது மக்கள் சுதந்திர முன்னணி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவரை கட்சியில் இருந்தும் சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் விலக்க வேண்டும் என்பதுதான். இது தொடர்பான கடிதம் ஒன்று முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் உறுப்பினர் முடியப்பு ரெமீடியஸ், அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் ஆளும் தரப்பு உறுப்பினர்களுடன் சேர்ந்து கையெழுத்திட்டுள்ளார்.

இது குறித்து கூட்டமைப்பின் இணைச் செயலாளர் மாவை சேனாதிராசாவிடம் கேட்டதற்கு, ''சபை உறுப்பினர்கள் அனைவருக்குமான கூட்டம் ஒன்று இன்று மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது. அதற்கு ரெமீடியஸுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது'' என்று தெரிவித்தார். (உ-ஐ)


ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

மஹோற்சவம் - 2011

05.06.2011 ஞாயிற்றுக்கிழமை



தீர்த்தத் திருவிழா

மாலை 04.00 மணி

சுவாமி வீதியுலா இடம்பெறும்

தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்

www.inuvilinfo.com இணுவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்நகரில் City and Guilds (UK) EC(UK) பொறியியல் வகுப்புக்கள்

## APSS Engineering (Pvt) Limited

College of Engineering Studies

06/06/2011 நாளை காலை 9.30 மணியளவில்

# கோலாகல திறப்பு விழா

பிரதம விருந்தினர்கள்

**Prof. P. Balasundrampillai**
B.A.Hons(Cey), Ph.D(Durham)
Doctor of Letters (Jaffna) (Honoris Causa)
Former vice Chancellor University of Jaffna

**Prof. Dr. N. Yogarajan**
Director, College of Technology
Jaffna

**Mr. K. Kanthavel**
B.A. (Hons) M.A., Dip. in Education.
Co-ordinator open University
Regional centre, Jaffna

EC U.K

City & Guilds

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**Prof. K. Chandirabose**
Chairman/Managing Director
APSS Engineering (Pvt) Limited

திறப்பு விழா அன்று அனுமதி பெறுவோருக்கு பாடக் கட்டணத்தில் 10% கழிவு வழங்கப்படும்

APSS Engineering (Pvt) Limited
No 242 Dr. Subramanium Road
Chunnakam, Jaffna
Tel: 021 4923045
Hotline: 077 2306642, 077 3867695


### சங்காபிஷேகம்

வட்டுக்கோட்டை, ஜூன், 5

வட்டுக்கோட்டை, சங்கரத்தை பிட்டியம்பதி பத்திர காளி அம்பாளுக்கு இன்று மு.ப. 10 மணிக்கு சங்காபி ஷேகம் நடைபெற வுள்ளது. (ஒ)


**BANKING**
கணக்கீடு
AP.பகீரதன்
B.B.A. (FM Spl.)
CBF
Mon, Wed, Fri 6.30 - 8.30 pm
DBF
Sat, Sun 6.30 - 8.30 pm
நாவலர்
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Diploma Courses
Free
Upto 90% Discount
Dip. in English
ICDL DTP
Ms Office - Rs. 4000
Multimedia - Rs. 30000
Accounting - Rs. 6000
AutoCAD-2&3D - Rs. 6000
Web Development - Rs. 3000
MCS
Closing Date 06.06.2011
SMS your name & course to 0774395895 & Get Schol.
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction

STUDY IN UK & CANADA

அரச மற்றும் Embassy சட்ட திட்டங்களுக்கு அமைவாக சிறந்த சட்ட வல்லுனர்களின் வழிகாட்டலின் கீழ் சட்டரீதியான முறையில் Student Visa செய்து தரப்படும். UK & Canada சென்று உயர்கல்வியை தொடர 100% உத்தரவாதம் மற்றும் நம்பிக்கையான சேவை

உங்கள் CV மற்றும் சான்றிதழ்களை உடனடியாக எமக்கு EMAIL அல்லது FAX மூலம் அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலக தொலைபேசி இலக்கத்தை இன்றே தொடர்பு கொள்ளவும்.

Free IELTS Classes



LIC Immigration (Pvt) Limited
134 A 1/1, Galle Road, Dehiwala South
Tel: 0117588288, Fax: 0112724459
E-mail: info@licimmigration.com
Web: www.licimmigration.com

V-talk English!
இலக்கண இம்சை இன்றி
ஆங்கிலம்!
ஆரம்பம் 07-06-11
புதிய பிரிவு
3 மாத துரித தொடர் பயிற்சி
Tuesday & Wednesday 4.00pm - 6.00pm
உயர்தர, பல்கலை மாணவர்கள்
மற்றும் ஆசிரியர்களுக்கும் உகந்தது
சலுகைக் கட்டணம் 3000/= மட்டுமே!
Lectured by
Mr.T.Kuna.M.Sc., Dip. in English
0777363797
Studiwel Institute
கொக்குவில் இந்துக் கல்லூரி அருகில்

புதிய முதலீடு
50,000/- க்கு மேல்
மாத வருமானம்

வின்ரிச்
ஐஸ் கிறீம்
இயந்திரம்



கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை


BRAND NEW
Rs.99,000/- upwards

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
Hotlines: 077 3918870 / 077 1066902

யாழ்ப்பாணம்
இயேசு விடுவிக்கிறார்
விடுதலைப் பெருவிழா 2011
ஜூன் 2,3,4,5
தினமும் மாலை 4 மணிக்கு
இடம்:
மாநகர சபை மைதானம்
சுப்பிரமணியம் பூங்கா எதிரில்,
கண்டி ரோட், யாழ்ப்பாணம்.



சகோ. மோகன் சி. லாசரஸ்
சகோ. A. அப்பாத்துரை



அனுமதி இலவசம்
பாவம், வியாதி, கவலை, கண்ணீரிலிருந்து
விடுதலை பெற வாருங்கள்
(48,19,50)

DHL
உத்தரவு பெற்ற முகவர்
உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான
துரித கடிதங்கள் பொதிகள் சேவை
10Kg மேற்பட்ட பொதிகளுக்கு
விசேட விலைக்கழிவு
24 மணி நேரத்தில்
உள்நாட்டிற்கான துரித கடிதங்கள்
பொதிகள் சேவையினை பெற்றுக்கொள்ளலாம்
London - Rs750
Canada, U.S.A, France, Denmark, Germany, Italy, Norway, Swiss
Rs.900
உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு
கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, CD போன்ற
பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட



திருமுருகன் கொம்நெற்
TCN Express,
2B, Nelsan place, COlombo-06.
Customer service No.021 222 7835
இல.259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். இல.18 பிரதானவீதி நெல்லியடி. இல.05 திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி இல.46 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

மஹாராஜா
GTV நிறுவனத்தினர்
யாழ் நகரில்
உள்நாட்டு வெளிநாட்டு துரித கடிதங்கள்
பொதிகள் பரிமாற்ற சேவை
Our Agents DHL aramex SriLankan Cargo ups



உங்கள் வெளிநாட்டில் உள்ள உறவுகளுக்கு பொருட்களையும் ஆவணங்களையும்
குறைந்த செலவில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும்
அனுப்பி உறவை வலுப்படுத்த நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்
G.T.V Enterprises (PVT) Ltd
10Kg இற்கு அதிகமான பொதிகளிற்கு விசேட கட்டண சலுகை



உங்கள் வெளிநாட்டு உள்நாட்டு உறவுகள் அனுப்பும் பொதிகளை எமது யாழ் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்
உள்நாட்டிற்கான பொதிகள் நாட்டின் எப்பாகத்திலும் ஒப்படைத்த அடுத்த நாளில் விநியோகிக்கப்படும்
தொலைபேசி:- யாழ்ப்பாணம்: 0212224348 கொழும்பு: 0112360926
யாழ்ப்பாணம்: #225, kasthuriyar Road, Jaffna #272, KKs Road, Jaffna கொழும்பு: #18/3, Dr.E.A Cooray Mawatha, Wellawatte


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அதிக சலுகைகள் வழங்கும்
நிலையான வைப்பு

அதிக நம்பிக்கை
அதிக சலுகைகள்
அதிக பாதுகாப்பு




லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட்
இல: 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
ராஜகிரிய, ஸ்ரீலங்கா
தொலைபேசி: 5880880
தொலைநகல்: 2865602
ஈ-மெயில்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு
0773815602

# கல்சியம், யூரியா போன்ற உப்புக்கள் அதிகரிப்பதால் சிறுநீர்க் கல் தோன்றும் அபாயம்

சிறுநீரில் கற்களை உருவாக்கக் கூடிய கல்சியம், ஒக்ஸலேட், பொஸ்பேற், யூரியா போன்ற உப்புகள் அதிக அளவு தேங்கிவிடும் போது அவை கற்களாக மாறி, சிறுநீரகத்தில் சேர்ந்து விடுகின்றன. ஒரு சில நேரங்களில் சிறுநீருடன் இரத்தம் கலந்து வருவதற்கு இந்த கற்களே காரணமாகும்.

அதிகளவான தண்ணீர் குடித்தால் சிறுநீரகக் கல் சிறுநீருடன் சேர்ந்து வெளியேறி விடும். சில நேரங்களில் அறுவைச் சிகிச்சையின் மூலம் அகற்ற வேண்டியிருக்கும். இதற்கு நவீன சிகிச்சை முறைகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

சிறுநீர் மூலம் வெளியேற வேண்டிய உப்புக்கள் அளவுக்கு அதிகமாகி விடும்போது வெளியேறத் தடை ஏற்படும். சிறுநீரகம், சிறுநீர்ப்பை மற்றும் இணைப்புக் குழாய்களில் அந்த உப்புக்கள் படிந்து, சிறுகச் சிறுக சேர்ந்து கல் போல் மாறிவிடும்.

நெய், வெண்ணை, தக்காளி, முள்ளங்கி, பசளிக் கீரை, பட்டாணி, முந்திரி போன்றவற்றை அதிகம் உட்கொண்டால், சிறுநீரகக் கற்கள் தோன்றலாம்.

ஆண்களுக்கு சிறுநீர்ப் பையில் இருக்கும் புராஸ்டேட் சுரப்பி வயதான காலத்தில் வீங்கி விடும். சிலருக்கு சிறுநீர் இணைப்புக்குழாய்களில் சுருக்கம் உண்டாகும். இதனால் சிறுநீர் வெளியேற முடியாமல், சிறுநீரகத்திலும், சிறுநீர் பையிலும் தேங்கிக் கற்கள் உண்டாகி விடும். சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் நோய்த் தொற்றும் கற்கள் உண்டாக காரணமாகும்.

* வயிற்றுவலி, இடுப்புவலி, சிறுநீரில் இரத்தம் கலந்து போதல், சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல், சிலநேரங்களில் குளிர் காய்ச்சல் போன்றவை அறிகுறிகளாகும்.
* சிறுநீரகத்தில் கற்கள் இருந்தால் பக்க முதுகில் விலா எலும்புகளுக்குக் கீழ், திடீரென கடுமையான வலி உண்டாகி முன்வயிறுக்குப் பரவும்.
* சிறுநீர்ப்பை இணைப்புக் குழாய்களில் கல் இருந்தால் அடி வயிற்றில் வலி தோன்றி பிறப்பு உறுப்புக்குப் பரவும். சிறுநீர்ப்பையில் கல் இருந்தால் தொப்புளுக்கு கீழே வலி தொடங்கி சிறுநீர்ப்புற நுனி வரை பரவும்.
* சிறுநீர் கழிப்பதில் சிரமம், வலி, எரிச்சல், அடிக்கடி சிறுநீர் வருவது போன்ற உணர்வும் இருக்கும்.

**சிறுநீரகக் கற்கள் வராது தடுக்கச் சில வழிகள்...**

* ஒரு நாளைக்கு மூன்று லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். கோடை காலத்தில் இளநீர், மோர் அதிகமாகக் குடிக்கலாம்.
* தினமும் குறைந்தது 30 நிமிடங்களாவது, உடற்பயிற்சி செய்யுங்கள். அதன் மூலம் இரத்தத்தில் உள்ள கல்சியச் சத்து எலும்புகளுக்குச் சென்றடையும்.
* பால், வெண்ணை, பூண்டு, கருணைக்கிழங்கு, பசலைக் கீரை, முள்ளங்கி போன்றவற்றைச் சாப்பிடக் கூடாது.
* உப்பைக் குறைத்தால் சிறு நீரகத்தில் கல்சியத்தின் அளவு குறையும். ஒரு நாளைக்கு 2 - 3 கிராமிற்கு மேல் உப்புச் சேர்க்கக் கூடாது. பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் சிப்ஸ் வகைகளைக் குறைவாகச் சாப்பிட வேண்டும்.
* மக்னீசிய சத்துள்ள உணவு சாப்பிடுவது சிறந்தது. விற்றமின் பி6 சிறுநீரில் உள்ள கற்களைக் குறைக்க உதவும்.
* நார்ச்சத்து மிகுந்த உணவை அதிகம் சாப்பிட வேண்டும்.
* தேநீர் மற்றும் ஐஸ்கிரீம் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

# தூரியன் பழம்

பலாப்பழத்துக்கு ஈடு இணையாகக் கூறப்படுகின்ற துரியன் பழம் பலாப் பழத்தைப் போல் இருப்பதோடு இவை பலாப் பழத்தை விடச் சற்றுச் சிறியதாகவும், சுளைகளைக் கொண்டும் இருக்கும். வெளிப்புறத்தில் கூர்மையான முள்கள் இருக்கும். இந்தப் பழங்கள் மலைப்பாங்கான பகுதிகளில் அதிகம் காணப்படும்.

இது அதிக மருத்துவத்தன்மை கொண்ட பழங்களுள் ஒன்று. இதன் மணம் ஒருவித வெறுக்கத்தக்கதாக இருந்தாலும் சாப்பிட ஆரம்பித்தால் ஒருவர் முழுப் பழத்தையும் சாப்பிடும் அளவுக்கு சுவை கொண்டது.

ஏப்ரல் மாதம் தொடக்கம் ஜூன் மாதம்வரை இந்தப் பழத்துக்கு ஏற்ற காலமாகக் காணப்படுகின்றது.

சீனர்கள் சாப்பிடும் முக்கிய பழங்களில் தூரியன் பழமும் ஒன்று. அதுமட்டுமன்றி எமது நாட்டைப் பொறுத்தவரையில் சிங்கள மக்கள் இதனை அதிகம் விரும்பி உண்ணுவார்கள்.

**உடல் வலுவடைய**


சிலருடைய உடல் சத்து குறைவினாலும், மது, புகை போதைப் பொருள் பாவித்தல் போன்ற தீய பழக்கங்களினாலும் உடல் வலு விழந்து இருக்கும் போது வாரம் இரு முறை இவர்கள் தூரியன் பழம் சாப்பிட்டு வந்தால் உடல் வலுவடையும். நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

**இரத்தம் சுத்தமடைய**

இரத்தத்தில் அதிக கொழுப்புப் பொருள்கள் படிவதால் இரத்த அடைப்பு ஏற்பட்டு இரத்தம் அசுத்தமாகிறது. இந்த கொழுப்புச் சத்தை கரைத்து கலோரிகளாக மாற்றி இரத்தத்தைச் சுத்தப்படுத்துவதுடன் இருதயம் சம்பந்தப் பட்ட ... நோய்களை ... மாற்றும்.

LANKA SSL

Sri Kumaran Hardware
Authorized Distributor for "TATA Wiron"
Galvanized Wires & Barbed Wires




Distributor
Sri Kumaran Hardware
No. 83 Stanley Road, Jaffna.
Tel: 021-2228304, 021-5677500
Fax: 021-2222798

Manufacturer
Lanka Special Steels Limited.
(A subsidiary of TATA Steel Ltd.)
No. 53 A, Ward Place, Colombo 07
Tel: 011-4932416, 011-7715300
Fax: 011-2696140
E-mail: sales@lankassl.com



INSURANCE ASSISTANTS / INSURANCE EXECUTIVES

Due to our expansion of operations, we need the service of Insurance Assistants / Insurance Executives for Office work to take up responsibilities in the following branches:

JAFFNA, KILLINOCHCHI, NELLIYADI, CHUNNAKAM, VAVUNIYA, VALACHCHENA, BATTICALOA

Prospective applicants should meet the following criteria :-
- Passed G C E O/L Examination with Credit for English and Mathematics
- Passed G C E A/L Examination with a minimum of 3 passes
- Experience in the Industry will be an added qualification
- Computer Literate.

Please forward your detailed Curriculum Vitae together with the names and contact details of two non-related referees within 07 working days of this advertisement.

Please indicate the post applied on the top left corner of the envelope/or on the subject line of the email.

Senior Manager - Human Resources Management
JANASHAKTHI INSURANCE PLC
55/72, Vauxhall Lane, Colombo 02.
careers@janashakthi.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
5 ஜுன் 2011 ஞாயிற்றுக்கிழமை

# இரகசியங்களை அறிய முடியும்

மனித மூளையை விஞ்ஞானிகள் படிக்க முடியும் என்ற தகவல் புதிய ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. குறிப்பாக மூளையில் வார்த்தைகள் எவ்விதம் படிகின்றன என்பதை ஆய்வாளர்கள் அறிய முடியும்.

மூளையில் படியும் வார்த்தை களைக் கண்டறிய விஞ்ஞானிகள் மின்கடத்தி எனப்படும் எலக்ட் ரோடுகளைப் பயன்படுத்தினர். இதன் மூலம் எழுப்பப்படும் ஒலிகள் மூலம் மூளையில் பதிவாகும் மொழி வார்த்தைகளை அறிய முடிகிறது.

மனம் எனப்படும் மூளையில் உள்ள தகவல்களை வேறு யாருமே அறிய முடியாது. மனதில் உள்ள இரகசியம் சம்பந்தப்பட்ட நபரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்ற காலம் மலையேறி வருகிறது.

மூளையில் உள்ள வார்த்தைப் பதிவுகளைக் கண்டறியும் ஆராய்ச்சியை வோஷிங்டன் பல்கலை க்கழகத்தின் நரம்பு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினர் மேற் கொண்டனர். இந்த ஆய்வு இத்துறையின் இயக்குனர் எரிக் லெதார்ட் தலைமையில் நடத்தப்பட்டது.

சிந்திப்பதில் தடுமாற்றம் உள்ள நரம்புக் குறைபாடுகள் உள்ளவர் களுக்கு 64 எலக்ட்ரோடுகளை மூளைப் பகுதியில் பதித்து ஆய்வு செய்யப்பட்டது. மூளை நரம்புப் பகுதியில் எதனால் குறைபாடு ஏற்படுகிறது என்பதைக் கண்டறிய அதிகளவான எலக்ட்ரோடுகளை ஆய்வாளர்கள் பயன்படுத்தினர்.

ஒலிகளைப் பற்றி சிந்திக்கும் மூளை ஒருவித சமிஞ்ஞைகளை உற்பத்தி செய்கிறது. அதே நேரத்தில் அவர்கள் பேசும்போது வேறுவித நிலை காணப்படுகிறது. சத்திர சிகிச்சை செய்யாமலே மூளை விவரங்களை இந்தப் புதிய ஆய்வின் மூலம் அறிய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




STUDY IN UK,CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & SINGAPORE

| | |
|---|---|
| UK | → தவணைக்கட்டண அடிப்படையில் பணம் செலுத்தலாம் மற்றும் பகுதிநேர தொழில்வாய்ப்பு |
| USA | → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. |
| CANADA | → IELTS, Sponsor, வயதெல்லை ஆகியன இல்லாமல் PR |
| POLAND | → Tuition Fee After Visa மற்றும் பகுதிநேர தொழில்வாய்ப்பு |
| SINGAPORE | → புதிவுக்கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும். தொழில்வாய்ப்பு உத்தரவாதம். |
| CYPRUS | → Tuition Fee After Visa மற்றும் பகுதிநேர தொழில்வாய்ப்பு |
| New Zealand | → IELTS - 5.0 + Work Permit |

எமது பிரதிநிதி எதிர்வரும் ஜுன் 12ம், 13ம் திகதிகளில் யாழ்ப்பாணம் City Inn ஹோட்டலில் இருப்பதால் அவரை சந்தித்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: அல்சரா - 0778339943, பஸ்னா - 0778 438403

READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB )




# கைத்தொலைபேசிப் பயன்பாட்டால் புற்றுநோய் ஏற்படும் அபாயம்

கையடக்கத்தொலைபேசி பயன்படுத்தாதவர்கள் யாராவது இருக்கிறார்களா என்றால் இல்லை என்று சொல்லும் அளவுக்கு இன்று சர்வதேச சமுதாயத்தில் கையடக் கத்தொலைபேசியின் பயன்பாடு ஊடுருவி இருக்கிறது.

இன்றியமையாத அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றாகக் கருதப்படும் கையடக்கத்தொலைபேசிகளைக் காலம், நேரம் பார்க்காமல் உபயோகப் படுத்துவதால் உடலில் புற்றுநோய் ஆபத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கை ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் கையடக்கத்தொலை பேசிகளின் பயன்பாட்டால் புற்று நோய் ஏற்படும் என்பது அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்படவில்லை என்ற வாதமும் நிலவி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தான் கையடக்கத் தொலைபேசிகளின் பயன்பாட்டால் புற்றுநோய் அபாயம் அதிகம் இருப்பதாக உலக சுகாதார மையம் அண்மையில் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார மையத்தின் ஓர் அங்கமான சர்வதேச புற்றுநோய் சிகிச்சை ஆராய்ச்சி மையம் நடத்திய ஆய்வில் இது தெரியவந்துள்ளது. கையடக்கத்தொலைபேசிகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட அந்தக் குழுவில் 14 நாடுகளைச் சேர்ந்த 31 விஞ்ஞானிகள் இடம்பெற்றிருந்தனர்.

குழுவுக்குத் தலைவராக அமெரிக் காவின் தேசிய புற்றுநோய் ஆலோச னைக் குழுவின் உறுப்பினரான டாக்டர் ஜொனாதான் சாமெட் இருந்தார்.

கையடக்கத் தொலைபேசிகள் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடும் என்றும் எனவே அதனை அபாயக ரமான பூச்சிக்கொல்லி, சவர்க்காரங்கள் ஆகிய இரசாயனப் பொருள் களுக்கு நிகராகப் பட்டியலிட வேண்டும் என்றும் அந்த ஆராய்ச்சிக் குழு பரிந்துரைத்துள்ளது.

கையடக்கத்தொலைபேசிகளில் இருந்து வெளியேறும் கதிர்வீச்சு தான் புற்றுநோயை ஏற்படுத்தும் என்பது விஞ்ஞானிகளின் கருத்து. வெளி நாட்டில் கையடக்கத்தொலைபேசிகள் வாங்குபவர்கள், அந்த போனில் இருந்து வெளியேறக்கூடிய கதிர்வீச்சு அளவு ஆகியனவற்றை அறிந்து கொண்டு பின்னர்தான் கையடக்கத் தொலை பேசியை வாங்குகின்றனர்.


ஆனால் இந்தியா போன்ற மற்ற ஆசிய நாடுகளில் நுகர்வோர் மத்தியில் இந்த விழிப்புணர்வு இல்லை என்று பரவலாகக் கூறப்படுகிறது. இத்தகைய விழிப்புணர்வோடு கையடக்கத் தொலைபேசிகளை வாங்கினால் புற்றுநோய் அபாயத்தில் இருந்து ஓரளவுக்கு நாம் எம்மை தற்காத்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊட்டச்சத்து நிறைந்த திராட்சை

பழங்காலத்தில் இருந்து உலகம் முழுவதும் பயிரிடப்படும் திராட்சைப் பழத்தில் எண்ணற்ற சத்துக்கள் அடங் கியுள்ளன.

ஊட்டச்சத்து நிறைந்த பழங்களுள் ஒன்றான திராட்சையில் விற்றமின்கள் பி1, பி2,பி6, பி12 மற்றும் விற்றமின் சி சத்துக்கள் உள்ளன. இவற்றைத் தவிர பொஸ்பரஸ், இரும்புச்சத்தும் அதிகளவில் காணப்படுகின்றன.



### மூளை, இதயம் வலுவடையும்

இந்தப்பழத்தை சாப்பிட்டால் பித்தம் தணியும், உடல் வரட்சியை நீக்கும். இரத்தத்தை சுத்தப்படுத்தி, புதிய ரத்தத்தை ஊறவைக்கும் ஆற்றல் இதற்கு உண்டு. நரம்புகளுக்கு வலுவூட்டுகிறது. அதனால் மூளையும், இதயமும் வலிமை பெறும்.

கல்லீரலின் பலவீனத்தால் உணவு செரிமானமாகாத தொல்லையை நீக்கும். உஷ்ணத்தால் உடலில் ஏற்படும் நமைச்சலைக் குணப்படுத்துகிறது.

### குழந்தைகளுக்கு திராட்சை

சிறுகுழந்தைகளுக்கு பல் முளைக்கும் காலங்களில் மலச்சிக்கல் உண்டாகும். ஒரு சிலகுழந்தைகளுக்கு வலிப்பு நோயும், உண்டாகும். இதற்கு திராட்சைச் சாறு அருமருந்தாகிறது.

சளித்தன்மையால் ஏற்படும் நீர்வடிதல், இருமல், தும்மல் போன்றவற்றை திராட்சை பழச்சாறு குணப்



படுத்துகிறது. மார்புச்சளியை நீக்க வல்லது. நுரையீரலைப் பாதுகாக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.

இரத்த சோகைக்கும் காமாலை நோய்க்கும் கூட இது சிறந்த மருந்தாகிறது. குடல் மற்றும் உடல்புண்ணையும் மாற்றும் தன்மை கொண்டது. களைப்பைப் போக்கி ஆழ்ந்த உறக்கத்தைக் கொடுக்கும். சமிபாட்டுக் குறைபாடு, பசியின்மை, வயிற்றுப் பொருமல் போன்றவற்றுக்கு திராட்சை சிறந்த மருந்து.

### பெண்களுக்கு சிறந்த மருந்து

சீரற்ற மாதவிடாய் சீரடைகிறது. மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிற்று வலியைப் போக்குகிறது. இதயபலவீனமானவர்களுக்கு இது சிறந்த மருந்தாவதோடு தலைவலி, வலிப்பு போன்றவற்றைக் குணப்படுத்துகிறது.

### புற்றுநோயைக் கட்டுப்படுத்தும்

சிறிய அளவில் எடுத்துக்கொள்ளப்படும் சிவப்பு திராட்சை இரசத்துக்கு புற்றுநோயை எதிர்க்கும் ஆற்றலும், இதயத்தை வலுப்படுத்தும் ஆற்றலும் உண்டு. திராட்சைப்பழத்தின் தோலில் இருந்து பெறப்படும் resveratrol என்னும் வேதிப்பொருள் சிவப்பு திராட்சை இரசத்தில் அடர்ந்து காணப்படுகிறது.

MRF

"நான் MRF டயரினால்
75,000 கி.மீ.
பயணம் செய்தேன்"



"நான் பஜாஜ் மோட்டார் சைக்கிளை வாங்கும் போது அதற்கு இரு MRF டயர்களே பொருத்தப்பட்டிருந்தது. அதில் பிற்பக்க டயரை 55,000 கி.மீ. ஓட்டிய பிறகே மாற்றினேன். அதே போன்று மோட்டார் சைக்கிளை வாங்கும் போது பொருத்தப்பட்டு வந்த முன்பக்க டயரில் கிட்டத்தட்ட 75,000 கி.மீ. பயணம் செய்தேன். உண்மையாகவே ஆசுகு டயர் சக்தியில் மிகவும் உயர்ந்தது. இலகுவில் டயரில் "பச்" ஏற்படாது. நான் உத்தரவாதத்துடன் கூறுவது அதிக நாட்கள் அதிக தூரம் பயணிக்க வேண்டுமாயின் MRF டயரை பொருத்திக்கொள்ளுங்கள்."

ராஜா பாலசூரிய
இல.70,
டி.எஸ். சேனாநாயக்க மாவத்தை,
புவக்பிட்டிய.



மேலும் இலட்சக் கணக்கான திருப்தியடைந்த வாடிக்கையாளர்கள் MRF முச்சக்கர வண்டி டயர் மற்றும் MRF மோட்டார் சைக்கிள் டயர் பற்றி இவ்வாறு தெரிவிப்பது
MRF டயரிலுள்ள உலகில் வேறேந்த டயரிற்கும் சளைக்காத சிறப்பியல்பினாலே ஆகும்.

MRF
மோட்டார் சைக்கிள் டயர் மற்றும் முச்சக்கரவண்டி டயர்

சாதாரண டயரை விட
3 மடங்கு தூரம்!

விலை: ரூபா 1750/- இலிருந்து

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட்பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677

Holcim
சங்ஸ்தா சீமெந்து

ஹொல்சிம் சங்ஸ்தா சுபிரி!
கொங்கிறீற்றுக்காகவே விசேடமாக தயாரிக்கப்பட்ட சீமெந்து



SLS 1253
BS EN 197-1:2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் ஈ...

# மகா கும்பாபிஷே...



## ஆசிச்செய்தி



ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படுகின்ற காரைநகர் திண்ணபுரம் ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் இன்று மஹா கும்பாபிஷேகம்.

திருவருள் மிகுந்த இந்த ஆலயத்தில் எம் பெருமானுக்கு நடைபெறுகின்ற பெருஞ்சாந்தி வைபவமான குடமுழுக்கு விழா எமது ஈழம் வாழ்கின்ற அனைத்து அடியார்களுக்கும் மங்களகரமான சுபீட்ச வாழ்வை அளிக்கவேண்டுமென்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானை வணங்கி வாழ்த்தி எமது குருநாதர் நல்லைக் குருமணியின் திருவடிகளையும் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகளை வழங்கி மகிழ்கின்றோம்.

இன்று நிகழ்கின்ற இக்கும்பாபிஷேகமானது எல்லோருக்கும் நல்வாழ்வு கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று ஸ்ரீ சௌந்தாரம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரரையும் வினை தீர்க்கும் விநாயகரையும் பகை விரட்டும் பால சுப்பிரமணியரையும் மனமொழி மெய்களால்வணங்கி வாழ்த்தி ஆசிகள் நல்கி இறும்பூதெய்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், இரண்டாவது குருமஹாசந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,

## அருளாட்சிபுரியும் சுந்தரேசன்



காரைநகர் திண்ணபுரம் பதியிலே எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் சௌந்தராம்பிகை உடன் உறையும் சுந்த ரேஸ்வரப் பெருமானுக்கு நாளைய தினம் திங்கட்கிழமை மகா கும்பாபிஷேகம் நடை பெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் தில்லைநடராஜப் பெருமானும் பூரணை புட்கலை சமேத ஆண்டிகேணி ஐயனாரும் இந்த ஆலயத்திலே எழுந்தருளி யிருந்து அனைத்து வரங்களையும் அருளிக் கொண்டிருக்கின்றார்கள் .

சைவமும் தமிழும் வாழ்ந்து வளம் பெற்றிருக்கும் பூமி காரைநகர், இலங்கையின் காரைநகரில் முதன் முதலில் 33 குண்டபட்ஷ மகாகும்பாபி ஷேகமாக இந்தத் தலத்தில் நடைபெறுவது மகிழ்வைத் தருவதாகும். இந்த ஆலயத்தில் உள்ள பக்ததிகளே ஈழத்தில் ஏனைய ஆலயங்களிலும் இவ்வாறான கும்பாபிஷேகங்கள் நடைபெறுவதற்கு ஏதுவாக அமைந்தன.

மனித வாழ்வை மேன்மையடையச் செய்வது இறைவழிபாடு. எங்கும் பரந்து விரிந்து இருக்கும் இறைவன் ஆல்யங் களில் பிரசன்னமாகி காட்சி தருகின்றார். இதனால் நம் சமயத்தில் ஆலய வழி பாட்டை முதன்மைப்படுத்தி கிராமங்கள், நகரங்கள் தோறும் ஆலயத்தை அமைத்தனர்.

ஈழத்திலே சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தைப் பிரதம குருவாக இருந்து செய்யும் பெரும் பாக்கியத்தை நடராஜப் பெருமானின் அஞ்ஞையினால் பெற்றிருக்கின்றேன். அனைத்து மக்களுக்கும் இறைவனின் அருளும் கும்பாபிஷேகப் பலன்களும் சகல சௌபாக்கியங்களும் நீண்ட வாழ்வும் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல சௌந்த ராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானையும் ஆண்டி கேணி ஐயனாரையும் வேண்டி ஆசிகள் பல கூறி அமைகின்றேன்.

பிரதிஷ்டா திலகம் சிவஸ்ரீ க.ச.சோமஸ்கந்தக்குருக்கள்
கும்பாபிஷேக பிரதமகுரு.

## தில்லைக்கூத்தனின் திருவருள் கிட்டுவதாக

காரைநகரில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் சௌந்தராம்பிகை உடன் உறை சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு குடமுழுக்கு விழா நடைபெற இருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அன்பர்களால் இந்த ஆலயம் புனர மைக்கப்பட்டு நாளை குடமுழுக்கு விழா நடைபெற இருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் நிகழ்வாகும். பெருஞ்சாந்தி எனப்படும் இவ்வழிபாடு ஆலய வழிபாட்டில் மிகவும் தலையாயது ஆகும். அதனால் இவ்விழா நடைபெறும் இடங்களுக்குச் சென்று மக்கள் வழிபாடாற்றுவது இன்றியமையாத கடனாகும்.

''மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அன்னலார் தமை அமுது செய்வித்தல்

கண்ணினால் அவர் நல்விழா பொழிவு கண்டார்ந்தல்''

என்னும் பாடல் மூலம் திருஞானசம் பந்தப் பெருமான் இவ்விழாவின் சிறப்பை எடுத்துக்காட்டி உள்ளார். இதனால் இந்தச் சிறப்பு மிக்க வழிபாட்டை[illegible]ன்று [illegible]டு வணங்குதல் மக்கட் பிறப்பு எடுத்ததன் பயனாகும் என்பது தெளிவாகின்றது. எனவே, சௌந்தராம்பிகை சமேத சுந்த ரேஸ்வரப் பெருமானினதும் பூரணை புட் கலை சமேத ஐயனாரினதும் குடமுழுக்கு விழா இனிதே நிறைவு பெறவும் இந்த விழாவைத் தரிசிக்கின்ற அடியவர்கள் அனைவருக்கும் தில்லைக்கூத்தனின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

தத்துவக் கலாநிதி சிவத்தமிழ் வித்தகர்,
சிவத்திரு.க. வைத்தீசுவரக்குருக்கள்.

RUPA
Versatile Trades
No.104 A, Stanley Road,
Jaffna. T.P: 8330

ஸ்ரீ றங்கன்
என்ரப்பிறைஸ்
பல்பொருள் வணிகம்
370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2027

S.T.பரமேஸ்வரன்
அன் கொம்பனி
79, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

V.M.
ரெக்ஸ்ரை...
251, 1/10 மெயின் சிற்றி ...
கொழும்பு - 11

ESWARRAN
EXPRESS
Genuine Passenger Services
COLOMBO JAFFNA SPEED
Colombo: Eswarram Transport : 2018, Dam street, Colombo - 12.— Tel : 0112 433 889 / 0776 136 911
Wellawata : SENTOSA: 457, Galle Road, Wellawata.— Tel : 0114 888 888 / 0777 911 998 / 0777 3100 97
Jaffna: Eswarram Transport : 69, 115 Kasthuriyar Road, Jaffna — Tel : 021 222 2813 / 0773 865 439
Kottehena : Nallaikkumaran : B1, S1, Jorch RD Silva Mawatte, Colombo-13 — Tel : 0115 232 334
(Front of HNB - Kottehena Branch)
Nelliady: Marutham, M.M.V. Road, Nelliady.

ESWARRAN
Traders, Transport Service & Courier Service
கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமான
தபால் மற்றும் பொதிகள் சேவை
Courier and Parcel Services



ஈசா றேடர்ஸ்
180, C - 20 கேசியார் வீதி,
கொழும்பு - 11

பிள்ளையார் பல்பொருள் வாணிபம்
யோகபுரம், மல்லாவி.
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
ஏ-9 வீதி, கிளிநொச்சி.
முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை
யோகபுரம், மல்லாவி, ஏ-9 வீதி, கிளிநொச்சி.

கணே...
ஸ்ரோர்...
கே.கே.எஸ்...
யாழ்ப்பா...

புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு...
சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம்.
TP :021 222 1723.
770, 772, கே.கே.எஸ்.வீதி,
[illegible], யாழ்ப்பாணம்.
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிதம்பரம்

# ஷேக சிறப்புமலர் - 05.06.2011

படுகின்ற
ாம்பிகா
ஸ்தானத்தில்

ல் எம்
நஞ்சாந்தி
ற அனைத்து

ந்தப்
லைக்
ரார்த்தித்து

லாருக்கும்

ன தீர்க்கும்
ரயும்

பரமாசாரிய
ஓம், நல்லை
நதர் ஆதீனம்,

### பதாக

ட்டன் உறை
பது குறித்து

ழுக்கு விழா
பெருஞ்சாந்தி
ஆகும். அத
ாடாற்றுவது

மை அமுது

ாவின் சிறப்பை
ன்று டு
கின்றது. எனவே,
புட் கலை
இந்த
த்தனின்

த்தமிழ் வித்தகர்,
ஈஸ்வரக்குருக்கள்.

**கிரியா கால விவரம் :**
எண்ணெய்க் காப்பு 04.06.2011
சனிக்கிழமை காலை 7 மணி முதல்
ஞாயிற்றுக்கிழமை
மாலை 4.30 மணிவரை

## அதிசயம் நிறைந்த கோயில்

ஈழத்து சிதம்பரத்தில்
இனிய கும்பாபிஷேக
நாளினில் அனைவருக்கும்
நல்லருள் கிடைக்க நேர்ந்தோம்!
ஈசனை, ஐயனாரை
இணைந்துள தேவிமாரைப்
பாடினோம்! பரவிப் போற்றிப்
பணிகிறோம்! வரங்கள் கேட்டோம்!

வானுயர் கோபுரத்தில்
வண்ணத்தின் புதிய ஜாலம்!
சூழ்... பிரகாரம் 'சிற்பச்
சுவர்க்கமாய்' நிமிர்ந்த கோலம்!
ஆம்... குடமுழுக்கில் இன்று
அற்புதம் விளையும்... வேத
நாதமும் இசையும்... காரை
நகரையே புனிதமாக்கும்

அதிசயம் நிறைந்த கோயில்
அறம், பொருள் குவியும் கோயில்
கதியற்று அழுத நெஞ்சின்
காயங்கள் ஆற்றும் கோயில்
பதும்பொலிவுடனே...ஞானம்
பொழிகின்ற கோயில்...ஈழச்
சிதம்பரம்; இதனை வந்து
சேவித்துப் உயர்க வாழ்வில்

இ.த.ஜெயசீலன்
உதவி அரச அதிபர், காரைநகர்.

## அழகுமிகு ஆலயமாக மிளிரும் ஈழத்துச் சிதம்பரம்




காரைநகர் மண்ணை அணி செய்யும் திருக்கோயில்களில் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்குவது ஈழத்துச் சிதம்பரம் என அடியவர்களால் போற்றப்படும் திண்ணபுரம் சிவன் ஆலயமாகும். இவ்வாலயத்தில் பல வருட கால பூசையை சிறப்பாக மேற்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றவன் நான். தில்லை நடராஜரின் அருள் நிழலில் அமைதியும் ஆனந்தமும் அடைந்தவர்கள் பலர்.

பல நூற்றாண்டு பழைமை வாய்ந்த இந்த ஆலயம் காலத்திற்குக் காலம் பல்வேறு திருப்பணிகள் இடம்பெற்று கும்பாபிஷேகம் இடம்பெற்றாலும் இம்முறை நிறைவான திருப்பணிகள் இடம்பெற்று அழகுமிகு ஆலயமாக மிளிர்கின்றது. இந்த திருப்பணிக் கைங்கரியத்தில் ஈடுபட்ட அனைவரும் போற்றுவதற்கு உரியவர்கள்.

இவ்வாலயத்தில் நடைபெறுகின்ற மகாகும்பாபிஷேகம் நடராஜாப் பெருமானின் அருளை நிறைவாக்கிக் கொள்ளவும் மக்கள் எல்லோரும் சந்தோசமாக வாழ வழி வகுக்கின்றது. கும்பாபிஷேக நிகழ்வை தரிசித்த மக்கள் எல்லோரும் தர்மம் உள்ளவர்களாகவும் அமைதியாக வாழவும் கும்பாபிஷேகம் செய்யும் அடியவர்களும் காரைநகர் வாழ் சைவ மக்களும் சொந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுடையதும் பூரணை புட்கலை சமேத ஆண்டி கேணி ஐயனாரினதும் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ வி.ஈஸ்வரக் குருக்கள்,
பிரதம குரு, ஈழத்துச் சிதம்பரம்



## ஆதீனகர்த்தாக்களின் ஆனந்தம்

சைவமும் தமிழும் உயர்ந்து விளங்கும் காரைநகரில் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயிலில் நடைபெறும் பெருஞ்சாந்தி பெருவிழாவையிட்டு அளவில்லா ஆனந்தம் அடைக்கின்றோம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று, வடமொழி வேதசிவாகம நெறி தவறாது பூசை வழி பாடுகள் நடைபெறும் இந்த ஆலயம் எமது முன்னோரால் தோற்றுவிக்கப்பட்டதும் பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்ததும் ஆகும்.

இந்த ஆலயத்தில் காலத்துக்குக் காலம் பல திருப்பணிகள் இடம்பெற்று கும்பாபி ஷேகம் இடம்பெற்றாலும் நாளை நடைபெறுகின்ற கும்பாபிஷேக நிகழ்வு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். திருப்பணிச் சபையினரால் ஆலயத்தின் முதலாம் வீதி மண்டபங்கள் அனைத்தும் முற்றுமுழுதாகப் புதிதாக நிர்மாணிக்கப் பட்டு ஆலயச்சுற்று மண்டபங்களில் நடராஜப் பெருமானின் 108 தாண்டவங்கள் அமைக்கப்பட்டதுடன், அழகிய சிற்ப வேலைப்பாடுகளும் மேற்கொண்டு ஐயனார், அம்மன் வாசல்களில் மொட்டைக் கோபுரங்களும் மற்றும் யாகசாலை என்பன பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்டு தேரோடும் மூன்றாம் வீதியும் செப்பனிடப்பட்டு, பல்வேறு திருப்பணிக் கைங்கரியங்கள் இடம்பெற்றன. தொடர்ந்து அடியார் சபையும், திருப்பணிச் சபையும் ஒன்றிணைந்து மேலும் பல திருப்பணி வேலைகளை மேற்கொண்டு எழில்மிகு ஆலயமாக சௌந்தராம்பிகை உடன் உறையும் சுந்தரேஸ்வரப் பெருமான் ஆலயம் மாற்றியமைக்கப்பட்டு இன்று ஈழத்து இந்தியச் சிவாச்சாரியார்கள் வரவழைக்கப்பட்டு புனராவர்த்தன சம்புரோக்ஷண கிரியத்திரிம்றுத் (33) குண்டபக்ஷ உத்தம மகாயாக பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகமாக இன்றைய குடமுழுக்கு விழா இடம்பெறுகின்றது.

மகா கும்பாபிஷேகம் சிறப்புறப் பிரார்த்திப்பதுடன், இந்தத் திருப்பணிக் கைங்கரியங்களில் ஈடுபட்ட அனைத்து அடியவர்களுக்கும், கும்பாபிஷேகத்தைத் தரிசித்த மெய்யடியார்கள் அனைவருக்கும் தில்லைக் கூத்தனினதும் பூரணை புட்கலை சமேத ஆண்டிகேணி ஐயனாரினதும் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம் (ஆதீனகர்த்தாக்கள்)

V.M.
ஸ்ரைல்ஸ்
மெயின் சிறீ மாக்கற்,
கொழும்பு - 11

கண்டி
பற்றிக் சென்ரர்
261/1, பிரதான வீதி,
கொழும்பு -11.

அற்புதா ரேடிங் கொம்பனி
மல்ரிப் பிளேஸ்
பல்பொருள் வாணிபம்
198, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

செல்லமுத்து
புடைவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி

கணேசன்
ஸ்ரோர்ஸ்
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்

தனம்ஸ்
ரெக்ஸ் ரைல்ஸ்
22/A பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்

சிங்கப்பூர்
ஜுவல்லறி
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஏகாம்பரம்
புடைவை மாளிகை
72(9), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

UNI
Travels and Tours
Colombo - Jaffna
162, Hospital Road,
Jaffna.

சிவன்
மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
சிவகுமரன் என்ரப்பிறைஸ்
75, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்து வகையான அளவுகளிலும்
காலணிவகைகளை பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
Super Shoes
154, Navalar Road, Jaffna.
Tel: 021 222 6809



www.karainews.com
காரைநகரில் இருந்து கிடைக்கப் பெறும் செய்திகள் உடனுக்குடன் தினம் தினம் புகைப்படங் களுடன் www.karainews.com என்ற இணை யத்தள முகவரியில் பார்த்து அறிந்து கொள்ளலாம். தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்ட உலகளா விய இணையத்தள வாசகர் களைக் கொண்டு கடந்த மூன்றாண்டுக ளாக விளங்குகின்றது.
www.karainews.com

இளவரசி
சேலைச் சோலை
பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்யம்
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ : 021 222 2503
தொ.நகல்: 021 222 8441

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரையின் மகத்துவம்

உங்களது உணவில் கட்டாயம் கீரையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று மருத்துவர்கள் முதல் ஊட்டச் சத்து நிபுணர்கள் வரை வலியுறுத்தி வருகிறார்கள்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலோ அல்லது புத்தகத்திலோ கீரையின் மகத்துவத்தைப் பற்றிப் படிக்கையில் மட்டும் உணர்ச்சி வசப்பட்டுக் கீரையை உணவில் கட்டாயம் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொள்பவர்களில் அதனை நடைமுறைப்படுத்துவர்கள் மிகச் சிலரே.

எம்மில் பெரும்பாலானோருக்கு கீரையை உணவில் எடுத்துக் கொள்வது என்றால் அதிக ஈடுபாடு இல்லை. ஆனால் கீரையின் மகத்துவத் தைப் பற்றி மருத்துவர்களைக் காட்டிலும் ஆர்வத்துடன் மற்றவர்களுக்குப் பரிந்துரைப்பார்கள்.

இவ்வாறு பரிந்துரைப்பதைக் காட்டிலும் அதனைக் கடைப்பிடிப்போமானால் ஆரோக்கிய வாழ்வு நிச்சயம். ஊட்டச்சத்துக்களும், விற்றமின்களும் நிறைந்த கீரைகள், குறைந்த கலோரி கொண்டவை என்பதோடு மட்டுமல்லாது கொழுப்புச் சத்தும் இல்லை.

அதுமட்டுமல்லாது கீரை வகைகள் உடலுக்கு எந்தவிதமான பயன்களை அளிக்கின்றது என்று பார்க்கலாம்.

கீரைகளைப் பச்சையாக உண்டால் அவற்றின் ஊட்டச்சத்துக்கள் முழுமையாக அப்படியே கிடைக்குமாம். ஆனால் சமைத்த கீரையைச் சாப்பிடுவதே அதிகமானோருக்கு மிகச் சிரமமாக இருக்கின்றது. எனினும் பச்சைக் கீரை இல்லாவிட்டாலும் சமைத்த கீரையையாவது சாப்பிடலாம்.

கீரையில் விற்றமின்கள் பி, சி, ஈ, போமிக் அமிலம், மக்னீசியம், குரோமியம் போன்ற தாதுக்கள் உள்ளன.

தலைமுடி நன்றாக வளராதவர்கள் கூடக் கீரையை அன்றாட உணவில் சேர்த்துக் கொண்டால் நல்ல பலன் கிடைக்கும் என்கின்றனர்.

புதினாவில் ஏராளமான மருத்துவக் குணங்கள் உள்ளன. தலைவலி, மைக்ரேன் மற்றும் வயிற்று வலி போன்றவற்றுக்கு சிறிதளவு புதினா இலைகளை வாயில் மெல்ல நிவாரணம் கிடைக்கும். புதினாவை வழக்கமாக சாப்பிட்டு வர உடலில் உள்ள நச்சுப் பொருள்கள் வெளியேறிவிடும்.

துளசி இலை வளர்சிதை மாற்றத்துக்கு உதவுவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியையும் கொண்டுள்ளது. மேலும் புதினாவில் விற்றமின் சி, கல்சியம், பொஸ்பரஸ் மற்றும் புரோட்டின் ஆகியவை உள்ளதால் அது தோலுக்கு மிகவும் நல்லது.

கொத்தமல்லிக் கீரையில் விற்றமின்கள் ஏ, பி, கல்சியம், சோடியம் மற்றும் இரும்புச் சத்துக்கள் நிறைந்துள்ளன. கொத்தமல்லிக் கீரை கலோரி இல்லாதது என்பதோடு அது உடலில் உள்ள கலோரிகளையும் எரிக்கக்கூடியது. எனவே உடல் எடையை குறைக்க விரும்புவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.


நாயகர்களின் நாயகன்
ரூ. 99,000/- வுக்கு
சென்றல் பினான்ஸ் மூலம்*




WORDS

விசேட லீசிங் வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்

25 குதிரை வலு கொண்ட சக்தி மிக்க டீசல் எஞ்ஜின்
விலை ரூபா 855,000/- (அனைத்து வரிகள் அடங்கலாக)
சுமக்கக்கூடிய மொத்த எடை 850 கி.கி
ஒரு வருட / 40,000 கி.மீ உத்தரவாதம்*

CF
சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சீ
நேரடி தொலைபேசி இல. 011 2315315
*நிபந்தனைகளும் அடங்கும்

டீசல்

அயிடியல் வாகனம் - CF லீசிங் சக்தி - வெற்றிக்கு வழி

MAXXIMO
Mahindra Rise.

அயிடியல் மோட்டர்ஸ் தனியார் நிறுவனம்
271, காலி வீதி, கொழும்பு 3
IDEAL Motors 011 7755555


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நாடெங்கிலுமுள்ள சுப்பர் மார்க்கட்களிலும் பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம் | A Baur & Co. Ltd. 1897ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org